# பகட்டுச் சந்தை



153/1-13
NDC
O111,3M9C1,V N12
110343

கழக வெளியீடு

கழக வெளியீடு : ககOஎ

பதிப்பாளர் :

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிட்.,
1/140, பிராட்வே, சென்னை - 1.

தலைமை நிலையம் :

98, கீழைத் தேர்த்தெரு, திருநெல்வேலி-6.

விலை ரூ. 4-75.

அப்பர் அச்சகம், சென்னை - 1.




MADRAS

கழக வெளியீடு, ௧௧0௭

# பகட்டுச் சந்தை

# பகட்டுச் சந்தை

ஆங்கில மூலம்:

W M தேக்கரே

தமிழ்ச் சுருக்கம்:

கு பரமசிவன், எம் ஏ

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி - 6. சென்னை - 1.
1962

குமாரசாமி பிள்ளை பரமசிவன் (1933)

© THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,

Ed 1 Oct 1962

O111,3M1C1,V
N62

O111, 3M11, 3
8LK2

110343

# PAHATTUCH CHANTHAI

## (VANITY FAIR)

Appar Achakam, Madras - 1.

# பதிப்புரை

மக்கள் நன்மையினையும் தீமையினையும் நன்குணர்ந்து தீமையினை விலக்கி நன்மையினைக் கைக்கொண்டொழுகுவதற்கு அறநூல்கள் மட்டும்போதா. கதைநூல்களும் வேண்டத்தக்கன. கதைகள் மெய்வரலாறுகளாகவும், புனைந்துரைகளாகவும் அமையலாம். உண்மை விருந்தினுக்கு அமைக்கப் படவேண்டிய அறுசுவையுண்டி முதலியனவற்றையே புனைவுவிருந்தினும் புனைவரன்றோ? அதுபோல் வாழ்க்கைமுறை, நல்லொழுக்கம், அன்பு, நண்பு, உதவி, மனமாற்றம், காதல், கற்பு, மக்கள் வளர்ப்பு, உண்மையுணர்ந்து உவகை பூத்தல், கடவுள்நினைவு, தக்கோரிணக்கம், படைத் திறன், உயர்நிலை பெறுதல் முதலிய பலவும் வரலாற்றிற் போலவே புனைவிலும் காணப்பெறும். எனவே புனைவும் பயன்தருவதொன்றேயாம்.

அம்முறையில் இப்'பகட்டுச்சந்தை' என்னும் நூலும் அமைந்திருக்கிறது. இது தேக்கரே என்னும் ஆசிரியர் எழுதிய ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பாகும். இதன்வாயிலாக ஆங்கில மக்களின் பழக்கவழக்கங்களும், பெண்களின் உயர் பண்புகளும், பெண்களும் ஆண்களும் வாழும் பகட்டு வாழ்க்கைகளும், அவற்றால் ஏற்படும் அளவிலாத் துன்பங்களும், நட்புரிமைப் பண்புகளும் பிறவும் நன்குணரலாம். இந்நூலைப்

பயில்வார் ஆங்கிலமுதனூலை எளிதாகப் புரிந்து கொள்ளும் வாய்ப்பினைப் பெறுவர். இந்நூலைக் கழகத்தார் விருப்பப்படி செவ்வியமுறையில் ஆக்கித்தந்த இதன் ஆசிரியர் திரு. கு. பரமசிவன் எம். ஏ. அவர்கட்குக் கழகத்தார் நன்றி உரித்தாகுக.

இதற்குமுன் பல மொழிபெயர்ப்பு நூல்களை ஆசிரியர் ஆக்கித்தந்துள்ளார். முன்னூல்களைப் போலவே இதனையும் ஆசிரிய மாணவர்களும் செந்தமிழன்பர்களும் வாங்கிக் கற்று நன்மை எய்துவார்களாக.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்

# உள்ளுறை

பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | சிஸ்லிக் மால் | 1 |
| 2. | வாழ்க்கையின் தொடக்கம் | 12 |
| 3. | எதிரியின் முன் இளம்பெண் | 16 |
| 4. | வாக்ஸால் இன்பமும் பின்பும் | 35 |
| 5. | அரசியார் க்ராலியும் க்ராலி குடும்பமும் | 48 |
| 6. | க்ராலி இல்லத்தில் க்ராலி அம்மையார் | 61 |
| 7. | காதற் படலம் | 68 |
| 8. | க்ராலி அம்மையாரின் இல்லம் | 80 |
| 9. | துண்டுக் கடிதம் | 98 |
| 10. | டாபின் தொண்டு | 104 |
| 11. | நோயாளியின் துன்பம் | 110 |
| 12. | தந்தையும் மகனும் | 113 |
| 13. | திருமணம் | 121 |
| 14. | முதியவர் முரண்டு | 124 |
| 15. | பிரைட்டான் நகரம் | 129 |
| 16. | இலண்டன் மாநகரில் | 141 |
| 17. | பிரஸ்ஸல்ஸ் | 144 |
| 18. | அம்மையார் எடுத்த முடிவு | 166 |
| 19. | சொன்ன சொல் தவறாதவர் | 169 |
| 20. | இளந்தாயும் நண்பனும் | 172 |

21. வருவாயின்றியே வளமாய் வாழுவது எப்படி? 174
22. மூதாதையர் இல்லம் 183
23. எளிய குடும்பம் 188
24. உறவினர் கூடல் 199
25. முயற்சியின் வெற்றி 204
26. வீழ்ச்சி 215
27. நண்பர் 226
28. புதிய சூழ்நிலை 232
29. ஊர் சுற்றி 237
30. பண்டைத் தோழி 241
31. கூடலும் ஊடலும் 245
32. பிறப்புக்கள், திருமணங்கள் இறப்புக்கள் 267

# பகட்டுச் சந்தை

## 1. சிஸ்விக் மால்

கதிரோன் ஒளி திகழ்ந்த காலைப் பொழுது, சிஸ்விக் மால் என்னுமிடத்தில் பிங்கர்டன் அம்மையார் இளம் பெண்களுக்கென நடாத்திய கலைக்கழகத்தின் வாயிலில் பெரிய பெட்டிவண்டி மணிக்கு நான்கு கல் விரைவொடு போந்து நின்றது.

"செட்லி வீட்டு வண்டி, அக்கா" என்றாள் ஜெமீமா.

"எமீலியா புறப்படுதற்குத் தேவையான ஏற்பாடுகளையெல்லாம் முடித்தனையோ?" எனப் பிங்கர்டன் அம்மையாரே தம் திருவாய் திறந்து வினவினர்.

"அந்தப் பெண்கள் காலை நான்குமணிக்கே எழுந்து மூட்டைகட்டத் தொடங்கிவிட்டார்கள்"

"எமீலியாவின் பற்றுவரவுக் கணக்கிற்கு ஒரு 'படி' எடுத்தாயா?...ஓ! இதுதானா அது? நல்லது. தொண்ணூற்றுமூன்று பவுன் நான்கு ஷில்லிங்....சரி, இதன் மீது ஜான் செட்லி அவர்கள் சமூகத்துக்கு என்று எழுது."

ஜெமீமா அவ்வாறே எழுதலானாள். அதே நேரத்தில் பிங்கர்டன் அம்மையார் தம் கைப்பட எமீலியாவின்

தாயாருக்கு ஒரு கடிதம் எழுதினார். (கல்விக்கூடத்தினின்று மாணவியர் வெளியேறும் போதோ, கடிமணம் அவர்க்கு நிகழவிருக்கையிலோதான் அம்மையார் தம் கைப்படப் பெற்றோருக்கு எழுதுவார்.) இப்போது அவர் எழுதிய கடிதத்தின் பிற்குறிப்பினில், "குமாரி ரெபக்கா ஷார்ப்பும் குமாரி எமீலியாவுடன் போதருகின்றாள். ரஸ்ஸல் சதுக்கத்தில் முன்னவளைப் பத்து நாட்களுக்குமேல் வைத்திருக்க வேண்டா எனக் கேட்டுக்கொள்கிறேன். அவளை வேலைக்கமர்த்த முற்பட்டுள்ள உயர்குடும்பத்தார் இயன்ற அளவும் விரைவில் அவளுடைய தொண்டினை எதிர்பார்க்கிறார்கள்" என்று குறித்தார். பின் அறிஞர் ஜான்சன் இயற்றிய அகரவரிசையில் ஒரு படி கொணருமாறு ஜெமீமாவை ஏவினார். கல்வி முடித்துச் செல்லும் கன்னியர் அனைவர்க்கும் அச் சுவையான நூலையே அம்மையார் வழங்குவர். ஏனெனில் ஜான்சன் ஒரு முறை இக் கல்வி நிலையத்துக் கெழுந்தருளினார்; அதன் பிறகே அம்மையார்க்குப் புகழும் பொருளும் பெருகின. ஆதலின் அவ்வறிஞர் தம் பெயர் அம்மையாரது நாவில் எப்போதும் தவழும்.

ஜெமீமா அகரவரிசையின் இரு படிகளை எடுத்து வைத்தாள். முதற்படியில் அம்மையார் கைச் சாத்திட்டனர். ஐயமும் அச்சமும் மிக்கவளாய் ஜெமீமா இரண்டாம் படியை நீட்டினாள். அம்மையார் கடுங் குரலில் பேசினார்: "இஃது யாருக்கு, ஜெமீமா?"

"பெக்கி ஷார்ப்புக்கு" என்றபோது ஜெமீமாவின் வாடித்திரைத்த முகத்தில் நாணமும், வற்றி மெலிந்த உடலில் நடுக்கமும் பரவின. அவள் முகத்தை



வேறுபுறம் திருப்பிக்கொண்டு மேலுஞ் சொன்னாள்: "அவளும் செல்கிறாளே!"

"ஜெமீமா" என்று ஒவ்வோர் எழுத்திற்கும் அழுத்தங் கொடுத்து விளித்து அம்மையார் மொழிந்தார்: "உணர்ந்துதான் பேசுகிறாயா? அகரவரிசையை எடுத்த இடத்தில் வைத்துவிடு. இனிமேல் இப்படித் துணிச்சலாக நடக்காதே."

"என்ன அக்கா! இதன் விலை இரண்டே முக்கால் 'ஷில்லிங்கு' தான். இந்நூலைப் பெறாவிட்டால் அவ் வேழைப் பெண்ணின்நிலை இரங்கத்தக்கதாகி விடும்."

"இக்கணமே எமீலியாவை என்னிடம் அனுப்பு, போ."

மறித்தொரு சொல்லும் பேசத் துணிச்சலற்றவளாய் ஜெமீமா தள்ளாடி நடந்து வெளியேறினாள்.

எமீலியாவின் தந்தை ஜான் செட்லி லண்டன்மா நகரில் ஒரு வணிகர்; ஓரளவு செல்வம் படைத்தவர். ரெபக்காவோ தன் கல்விச் செலவை ஊழியத்தால் ஈடுகட்ட வேண்டுமென்னும் உடன்படிக்கைக்கு உட்பட்ட மாணவி. அவளுக்கு அவர் ஏற்கெனவே செய்த நன்மைகள் போதாவா? ஜான்சனின் அகரவரிசையை வழங்குவதாகிய பெருமை வேறு கொடுக்க வேண்டுமா?

### விடை பெறுதல்

எமீலியாவைப் பற்றி அம்மையார் தம் கடிதத்தில் எழுதிய புகழுரையெல்லாம் உண்மையே. மேலும் அவர் தம் உயர் நிலையும் முதுபருவமும் காரணமாக அறிந்துகொள்ள முடியாத அரும்பண்புகள் பலவும் அவளிடம் உண்டு. அப்பெண்ணின் உடைமைகளும்

தோழியர் அவளுக்கு வழங்கிய பரிசுப்பொருள்களும் வண்டிக்குப் போய்ச்சேர்ந்தன. பிரியும் நேரம் வந்தது. பிங்கர்டன் அம்மையார் நிகழ்த்திய ஒப்பற்ற பேருரையால் மாணவியின் பிரிவுத்துன்பங்கூட ஓரளவு குறைந்தது.

ரெபக்காவைப் பொருட்படுத்தியவர் எவருமிலர். அவள் தன் பெட்டியைச் சுமந்தவாறு மாடிப்படிகளில் இறங்கி வந்தாள். ஜெமீமா எதிர்ப்பட்டு, "பெக்கி! அம்மையாரது அறைக்குச் சென்று விடைபெற்றுக் கொள்" என்றாள்.

"அப்படித்தான் நானும் நினைக்கிறேன்" என்று ரெபக்கா அமைதியாகச் சொன்னாள். அவரது அறைக் கதவைத் தட்டி இணக்கம் பெற்றபின் அவள் அசட்டையாக உட்புகுந்தாள். சிறிதளவும் பிழையற்ற முறையில் அம்மையாரிடம் ஃபிரெஞ்சுமொழியிற் பேசலானாள். அவர் ஃபிரெஞ்சுமொழியறிந்தோரை ஆட்டிப் படைப்பாரே தவிரத் தாம் ஒரு சிறிதும் அம்மொழி அறியார். ஆகவே உதட்டைக் கடித்தார். உயரே தலையை நிமிர்த்தார். ரெபக்காவுக்கு ஆசி கூறி ஒரு கையை ஆட்டினார். அது வழியனுப்புவதாகவும் அமையும்; அவள் பற்றிக்குலுக்கவென்றே ஒற்றை விரலை நீட்டியதாகவும் இருக்கும் என்பதுதான் அவரது கருத்து.

ரெபக்காவோ கைகளை மடக்கி முன்புறம் கட்டிக் கொண்டு முறுவலித்தவாறே தலைதாழ்த்தாள். அம்மையார் முன்னிலும் பெருகிய சீற்றத்தோடு பாகை சுற்றிய தலையை உயர்த்துக், "குழந்தாய்! கடவுள் உனக்கு அருள்வாராக" என்றவாறே எமிலியாவைத்



தழுவினார்; அழல் உமிழும் பார்வையை ரெபக்காமீது வீசினார். நல்ல வேளையாக ஜெமீமா அங்குத் தோன்றி ரெபக்காவை தன்கையாலிறுகப்பற்றி இழுத்துக் கொண்டு விரைவாகச் சென்றாள்.

தழுவுதல்கள் எல்லாம் ஓய்ந்தன. அவர்கள் பிரிந்தனர். அஃதாவது எமிலியா தன் தோழியரிடமிருந்து பிரிந்தாள். தன்னை நாடுவார் இல்லாமையால் முன்னதாகவே பெக்கி அடக்கத்தோடு வெளிச் சென்று வண்டியிலேறிக்கொண்டாள்.

அழுதவாறே எமிலியா போந்து வண்டியிலமர்ந்தாள். வண்டி புறப்பட ஆயத்தமாயிற்று. "நில்லுங்கள்" என்று இரைந்தவாறே ஜெமீமா ஒரு பொட்டலத்தோடு பாய்ந்தோடி வந்தாள். எமிலியாவிடம், "வழியில் பசியெடுக்குமே, கண்ணே! இதனை வைத்துக் கொள்" என்றுரைத்துப் பொட்டலத்தைக் கொடுத்தாள். பிறகு, "பெக்கி! இதோ, உனக்கு ஒரு புத்தகம். என் அக்கா... இல்லை, நான்....ஜான்சனின் அகரவரிசை....நீதான் அறிவாயே? இதனைப் பெறாமல் நீ எங்களைப் பிரிந்து செல்லலாகாது. போய்வாருங்கள். வண்டிக்காரரே! ஓட்டும். கடவுள் உங்கட்கு அருள் பொழிவாராக" என்றாள்.

உணர்ச்சிப் பெருக்கினில் மூழ்கிய அவ் அன்பின் உருவம் பள்ளித்தோட்டத்துக்குள் புகுந்தது. ஐயகோ! கிளம்பிய வண்டியின் சாளரம்வழியே ரெபக்காவின் வெளிறிய முகம் எட்டிப்பார்த்தது. ஜெமீமாவின் காலடியில் அந்தப் புத்தகம் வந்து விழுந்தது. ஆமாம். அவள் மெய்யாகவே அறிஞர் ஜான்சனின் அகரவரிசைப் படியைத் தோட்டத்துக்குள் வீசி எறிந்து விட்டாள்!




காலடியில் புத்தகம் வந்து விழுந்தது



ஜெமீமா திகைப்பும் மயக்கமும் அடைந்தாள். "இப்படி நடக்குமென்று நான்........" "எத்துணைச் செருக்கு......." இரு சொற்றொடரைச் சொல்லத் தொடங்கிய ஜெமீமா உணர்ச்சி மேலீட்டினால் ஒன்றினையேனும் முடிக்க இயலாதவளாகி விட்டாள்.

அவ் எதிர்நடவடிக்கை கண்டு ஜெமீமாவைப் போலவே எமீலியாவும் பதைபதைத்துப் போனாள். பள்ளியை விட்டுக் கிளம்பி ஒரு நிமிடம் ஆகவில்லை. ஆறாண்டுகள் அங்குப்பெற்ற அனுபவத்தை அவ்வளவு குறுகிய காலத்துக்குள் மறப்பது நடக்கக்கூடிய செயலா ?

"எப்படித்தான் உனக்கு மனம் வந்ததோ ரெபக்கா ?" என்றாள் அவள்.

"ஏன்? பிங்கர்டன் அம்மையார் வெளிப்பட்டு என்னை அவ்விருட்டறைக்குத் திரும்புமாறு கட்டளையிடுவாரென்று அஞ்சுகிறாயா ?"

"இல்லை....இருந்தாலும்...."

"நான் அந்த விடுதியையே வெறுக்கிறேன். இதனை மீண்டும் பார்க்கிற வாய்ப்புக் கிட்டாமலிருக்க வேண்டும். ஜேம்ஸ் ஆற்றின் நீருள் அது முழுகிவிடாதா? பிங்கர்டன் அம்மையாரும் மூழ்க வேண்டும். அவரும் அவர் தலைப்பாகையும் நீண்ட குஞ்சமும், படகொத்த வளைந்த மூக்கும் தண்ணீரில் மிதப்பது கண்கொள்ளாக் காட்சியாயிருக்கும்."

"உஸ்."

"ஏன் வண்டிப்பணியாள் கோள் சொல்லுவான் என்று அஞ்சுகிறாயா ? சொன்னால் என்ன ? நான்

அம்மையாரை அறவே வெறுக்கிறேன் என்று போய்ச் சொல்வாளுகை. அவ் வெறுப்பினை நிறுவிக்காட்டும் வழிவகை கிடையாதா' என்றுதான் ஏங்குகிறேன். இரண்டாண்டுகளாக அவரிடமிருந்து அவமதிப்பும் வரன்முறையற்ற பழிப்பும் தவிரப் பிறிதொன்றும் பெற்றறியேன். பழிவாங்குதல் என்பது கொடியதாக லாம். ஆயினும் அஃது இயற்கையே. நான் ஒன்றும் தேவமகள் இல்லையே."

**பெக்கியின் பிள்ளைமை**

உண்மையில் அவள் தேவமகள் அல்லள்தான். உலகம் ஒரு முகம் பார்க்கும் கண்ணுடி. ஒவ்வொரு மனிதனுக்கும் அவனவன் முகத்தோற்றத்தையே அஃது எடுத்துக்காட்டுகிறது. நீ புருவத்தைச் சுளி. பதிலுக்கு அதுவும் கசப்பொடு பார்க்கும். அதனைப் பார்த்து அதனெடு சிரி. அது களிப்பூட்டும் தோழனுக  விளங்கும். உலகம் ரெபக்காவைப் புறக்கணித்தது உண்மையெனில் அவளுந்தான் எவர்பொருட்டும் எப் போதும் நற்செயல் செய்தறியாள் என்பதும் உறுதி.

ரெபக்காவின் தந்தை ஓர் ஓவியர். அத்தகுதி யினுல் பிங்கர்டன் அம்மையாரின் பள்ளியில் ஓவிய ஆசிரியராகச் சிலகாலம் விளங்கினுர். கூர்த்த அறிவி னர்; இனியவர்; கடன்படுதலில் பெருத்த ஈடுபாடும், கள்ளுக்கடைமீது தனித்த அன்பும் உடையவர். குடி மயக்கத்தில் மனைவியையும் மகளையும் அடிப்பார். மறு நாட் காலை தலைவலியோடெழுந்து, உலகம் தம்மைப் புறக்கணிக்கிறதென்று வசைபாடுவார். தன்னைக் காப்பது இயலாமல், ஒருகல் சுற்றுவட்டத்திலெல்லாம் கடன்பட்ட நிலையில்தான் தன்னிலையை உயர்த்திக்



கொள்ள அவர் ஒரு பிரெஞ்சுக்காரியை மணந்தார். தொழிலால் அவள் கூத்தாடி. தாயைப்பற்றி ரெபக்கா எவரிடமும் வாய்திறக்கமாட்டாள். எப்போதேனும் குறிப்பிட நேர்ந்தாலும் பெருந்தக்க குடும்பமொன்றில் பிறந்தவளாகவே தன் தாயைப்பற்றிச் சொல்லுவாள். அவள் தன் வாழ்க்கையில் முன்னேற முன்னேற, அவ ளுடைய தாய்க்குடியின் தரமும் மதிப்பும் பெருகிக் கொண்டே சென்றது வியப்புக்குரியதுதான்.

தாயார் எப்படியோ ஓரளவு கல்விபயின்றவர். எனவே ரெபக்கா பிரெஞ்சு மொழியைப் பிழையின்றிப் பேச அறிந்திருந்தாள். அத்தகுதிதான் அவளைப் பழமையிலூறிய பிங்கர்டன் வேலைக்கேற்படுத்திக் கொள்ள வைத்தது.

**பெக்கியும் பள்ளியும்**

தாயார் இறந்துவிட்டார். தந்தையாரோ நோயி லிருந்து தாம் பிழைத்துத் தேறலரிது என்றுணர்ந்த நிலையில் பிங்கர்டன் அம்மையார்க்கு உருக்கமாக ஒரு கடிதம் எழுதினுர். அநாதைக் குழந்தையை அம்மை யார் பாதுகாப்பினில் ஒப்படைத்துவிட்டுக் கல்லறை போய்ச் சேர்ந்தார். சிஸ்விக் மாலில் சேர்ந்தபோது ரெபக்காவுக்குப் பதினேழு வயது. அவள் இளம் மாணவியருக்குப் பிரெஞ்சு மொழி கற்பிக்கவேண்டும். அதற்குக் கைம்மாருக அவள் அங்குக் காசில்லாமல் உணவும் உறைவிடமும் பெறலாம். அன்றியும் அப் பள்ளியிற் பங்குபெற்ற பேராசிரியர்களிடமிருந்து அறிவுத்துளிகளைச் சேர்த்துக் கொள்வதற்காக ஆண் டொன்றுக்குச் சில 'கினி'களும் அவளுக்கு வழங்கப் படும். இத்திட்டப்படியே அவள் அங்குச் சேர்ந்தாள்.

உருவத்தில் சிறுத்து மெலிந்தவள் அவள். அவளுடைய கண்களோ மிகப் பெரியவை; புதுமையான ஒரு கவர்ச்சியுடையவை; ஆக்ஸ்ஃபோர்டிலிருந்து புதிதாகப் போந்த மறைத்திரு கிரிஸ்ப்பையே கவர்ந்துவிட்டன. தேவாலயத்தில் ஒரு முறை அவள் அவரை நோக்கினாள். அவ்வளவிலேயே அவர் மயங்கினார். அவளை மணக்க முன்வந்து ஒற்றைக்கண் பழக்காரியொருத்தியிடம் கடிதத்தைக் கொடுத்தனுப்பினார். அது வேறொருவர் கையில் சிக்கியது. அவருடைய தாயார் தம்மூரிலிருந்து ஓடோடி வந்து அருமை மகனைத் "தூக்கிக் கொண்டு" போய்விட்டார். சிஸ்விக் புருக்கூண்டில் இப்படியொரு கழுகு இருப்பது கண்டு, பிங்கர்டன் அம்மையாருள்ளமும் ஆட்டங்கண்டுவிட்டது. அப்போதே அவளை வெளியேற்றியிருப்பார்; ஆயினும் உடன்படிக்கை அவரைத் தடுத்தது.

பள்ளியில் உயர்ந்து வளர்ந்த இளம் பெண்களின் நடுவே ரெபக்கா பார்ப்பதற்கு ஒரு குழந்தையாகவே தோற்றமளித்தாள். ஆயினும் இளமையிலேயே வறுமையின் கொடுமையைக் கண்டவள் அவள். தன் தந்தையார்க்குக் கடன் கொடுத்தவருள் எத்தனையோ விடாக்கண்டர்களை அவள் நயமாகப் பேசியனுப்பியவள். எத்தனையோ வணிகரிடம் குழைந்து பேசி அடுத்த வேளையுணவுக்கு வழி செய்தவள். தந்தையோடு ஒருங்கிருந்து அவருடைய தோழர்கள் பேசும் முரட்டுத்தனமான உரைகளையெல்லாம்—ஒரு சிறுமி செவி மடுக்கத் தகாதவை எனினும்—கேட்டிருக்கிறாள். தான் எப்போதுமே சிறுமியாயிருந்ததில்லை என்பாள் அவள். எட்டாவது வயதிலிருந்தே பெண்ணாகத்தான் விளங்கினாள் என்பாள்.



குடும்பத்தில் நேர்ந்த பேரிடருக்குப்பின் ரெபக்கா சிஸ்விக் மாலில் குடி புகுந்தாள். பள்ளியின் கடுமையான சட்ட திட்டங்களினால் அவளது மூச்சுத் திணறியது. கன்யா குலத்து ஒழுங்கு முறையில் வரையறுக்கப்பட்ட தொழுகையும், உண்டியும், பாடமும், நடையும் பொறுக்க வியலாத அளவு அவளை அடக்கி வருத்தின. பள்ளித் தலைவியாய முதியவளின் ஆடம்பரப் பகட்டும் அவள் தங்கையின் அறிவிலா நற்பாங்கும், மாணவியருள் மூத்தவர்களின் பொருளற்ற வம்புப் பேச்சுக்களும் அவளைத் துன்புறுத்தின. அவளுள்ளத்தில் மெல்லியல்புமில்லை; தாய்மைப் பண்புமில்லை. இருந்திருப்பின் அவள் பொறுப்பில் விடப்பட்ட இளம் பெண்களின் மழலைப் பேச்சுக்கள் அவளுக்கு ஆறுதலும் ஆர்வமும் அளித்திருக்கும்; இரண்டாண்டுகள் அக்குழந்தைகளுடன் வாழ்ந்த பின்னும் அவள் வெளியேறியது குறித்து ஒருவரும் வருந்தினரல்லர். இளகிய உள்ளத்தினளாய எமீலியா ஒருத்தியொடுதான் அவள் உறவு கொண்டாள்.

இப்படியாக, இவ் விளம்பெண்கள் இருவருக்கும் உலக வாழ்க்கை தொடங்கியது. எமீலியாவுக்குப் புதிய—ஒளிபடைத்த—மலர்ச்சியுடைய உலகமாய்த் தோன்றியது. ரெபக்காவைப் பொறுத்த மட்டில் முற்றிலும் புதிய உலகம் எனலியலாது. (கிரிஸ்ப் விவகாரம் பற்றிப் பலர் பலவாறு பேசினர். 'வெளிவராத செய்திகளே பல' என்றனர். 'அவரெழுதிய கடிதம் அவளது கடிதத்திற்கு விடையே' என்றனர். எவரே உண்மையறிவார்!) அவள் புது வாழ்க்கை தொடங்கினாள் என்பது பொருந்தும்.

## உ. வாழ்க்கையின் தொடக்கம்

ஜான் செட்லியின் இல்லத்துக்கு முன் வண்டி நின்றது. எமீலியாவின் பெற்றோரும், பணியாட்களும் வாயிலில் கூடிநின்று அவளை மகிழ்ச்சியோடு வரவேற்றனர். லண்டன் மாநகரத்து இளம் பெண்களுள் எவருக்கும் எமீலியா அழகிற் குறைந்தவளல்லள் என்று அவர்களெல்லாரும் ஒரு முகமாய்ச் சொன்னார்கள். அவள் தன் தோழியை அழைத்துச் சென்று இல்லத்தின் ஒவ்வோர் அறையினையும், தனக்குரிய ஒவ்வொரு பொருளையும் காட்டினாள். ரெபக்காவுக்குப் பரிசாக வைரக் கணையாழியும் வெண்பட்டாடையும் வழங்கினாள். அவ்வுடை அவளுக்குச் சிறிதாகி விட்டது. ஆயினும் தோழியுடலுக்கு அழகாகப் பொருந்திற்று. அவளுடைய அண்ணன் ஜோஸப் இந்தியாவிலிருந்து புதியனவாகக் காஷ்மீர் சால்வை இரண்டு கொண்டு வந்திருந்தான். அதனால் பழைய காஷ்மீர் சால்வையைத் தாயாரின் ஒப்புதல் பெற்று ரெபக்காவுக்கு வழங்க விரும்பினாள்.

புதிய காஷ்மீர் சால்வைகளிரண்டினையும் கண்ணுற்ற ரெபக்கா அண்ணனொருவனைப் பெற்றிருப்பது எவ்வளவு மகிழ்ச்சி தருவதென்றாள். சுற்றமும் நட்புமில்லாமல் தன்னந்தனியாயிருக்கும் அவள் எளிதாக எமீலியாவின் உள்ளத்தின் இரக்கத்தைத் தோற்றுவித்தாள்.

"தனியாக இருக்கமாட்டாய், ரெபக்கா. நான் என்றென்றும் உன் தோழியாய் விளங்குவேன். உடன்பிறந்தவளை யொப்பவே உன்னிடம் அன்பு செலுத்துவேன்."



"ஆயினும்....உன் பெற்றோரைப் போல் அன்பும் செல்வமும் பெற்றோர் வாய்ப்பரோ? நீ வேண்டுவனவெல்லாம் வழங்குகின்றனரே! என் தந்தை எனக்கு எதுவும் கொடுத்தாரல்லர். என்னிடமிருந்தனவெல்லாம் இரண்டே இரண்டு சிற்றுடைகள் தாம். மேலும் உனக்கு அண்ணன் இருக்கிறார்....அருமையண்ணன்! அவர் மீது உயிரையே வைத்திருப்பாய், இல்லையா?"

எமீலியா நகைத்தாள்.

"என்ன! எல்லோரிடத்தும் அன்பு செய்வேனென்று சொல்லிக் கொள்கிறாய், உன் அண்ணனை விரும்புவதில்லையா?"

"எனக்கு அண்ணனிடம் அன்புண்டு. ஆனால் அவன்தான் என் அன்பு பற்றிக் கவலைப்படுவதில்லை. அவன் வெளிநாடு சென்றபோது எனக்கு ஐந்து வயது."

"அவர் பெருஞ் செல்வராயிருப்பாரே! இந்திய நவாபுகளெல்லாரும் கொள்ளைச் செல்வமுடையவர்கள் என்பார்களே!"

"அவனது வருவாய் மிகப் பெரிதென்றுதான் நினைக்கிறேன்"

"உன் அண்ணி அழகாயிருப்பார்களா? நல்லவர்களா?"

"அண்ணியா! அண்ணன் இன்னும் திருமணமே செய்து கொள்ளவில்லையே."

முன்பே ஒருகால் இவ்வுண்மையை அவள் ரெபக்காவிடம் சொல்லியிருக்கிறாள். ரெபக்கா அதனை மறந்து

விட்டனள் போலும். எமீலியாவின் மருமக்கள் பலரைக் காணலாமென்று எதிர்பார்த்ததாகவும் ஏமாற்றம் அடைந்ததாகவும் திரும்பத் திரும்பச் சொன்னாள்.

"ஏன்! சிஸ்விக் மாலிலேயே குழந்தைகளோடு உனக்குப் போதும் போதும் என்றாகியிருக்குமே!" என்றாள் எமீலியா. தோழிக்குக் குழந்தைகள் மீது பிறந்த திடீர்ப்பற்று அவளுக்கு வியப்பளித்தது.

பிற்காலத்தில் எல்லாம், பொய்ம்மை உடனடியாய் எளிதில் வெளிப்பட்டுவிடக் கூடிய எந்தக் கருத்தையும் ரெபக்கா ஒரு போதும் சொல்லமாட்டாள். இப்போது பத்தொன்பது வயதினள்தானே! ஏமாற்றுக்கலை கை வரப்பெறாத 'அறியாச் சிறுமி' தானே! இத்தனை உரையாடலூடும் அறிவுக் கூர்மையுடைய இவளது உள்ளக் கருத்தினை எடுத்தெழுதுவதாயின் இவ்வாறு தான் அமையும்:—"செல்வராய ஜோஸப் இன்னும் மணமாகாதவரெனில் நான் ஏன் அவரை மணத்தலாகாது! பத்துப் பதினைந்து நாட்கள் தாம் உள்ளன, முயன்று பார்ப்பதில் தீங்கொன்றுமில்லை." கொண்டாடத் தகும் இம் முயற்சியில் ஈடுபட முடிவு செய்தவளாய், அவள் எமீலியாவுடன் முன்னிலும் இரு மடங்கு கொஞ்சிப் பேசினாள். அவள் தனக்கு வழங்கிய முத்தாரத்தை முத்தாடி அணிந்துகொண்டாள். அதை எப்போதும் கழற்றுவதில்லை எனச் சூளுரைத்தாள்.

சாப்பாட்டு மணியடித்த போது, அந்நாளைய இளம் பெண்களின் வழக்கப்படி எமீலியாவின் இடுப்பைத் தன் கையால் சுற்றியபடியே மாடிப் படிகளில் இறங்கினாள்.



அறைக்குள் புகுவதற்குத் துணிச்சலில்லாதவளாய்த் தோழியிடம் "என் நெஞ்சைத் தொட்டுப்பார். எப்படித் துடிக்கிறது!" என்றாள்.

"அஃதெல்லாம் ஒன்றுமில்லை. அஞ்சாமல் வா. அப்பா உனக்கொரு தீங்கும் செய்யமாட்டார்" என்றாள் எமீலியா.

# 3. எதிரியின்முன் இளம்பெண்

### அண்ணனும் தங்கையும்

உடல் பெரிதும் ஊதிப்பருத்த மனிதன் ஒருவன் தணலருகே அன்றைய செய்தித்தாளைப் படித்தவாறு அமர்ந்திருந்தான். எமீலியாவும் ரெபக்காவும் அவ்வறையினுட் புகுந்த உடன் அவன் நாற்காலியிலிருந்து துள்ளியெழுந்தான். அளவுமீறிய நாணத்தால் தன் முகம் முழுமையையும் கழுத்தைச் சுற்றிக் கட்டியிருந்த துணிகளுள் மறைத்துக் கொண்டான்.

“உன் தங்கைதான், ஜோஸப்” என்றாள் எமீலியா. அவன் நீட்டிய இரு விரல்களைச் சிரித்துக் கொண்டே பற்றிக் குலுக்கினாள். தொடர்ந்து “இவள் என்தோழி, ரெபக்கா. இவளைப் பற்றித்தான் உன்னிடம் அடிக்கடி சொல்லியிருக்கிறேனே!”

கழுத்துத் துணிக்குள் புதைந்த தலை பலமாக ஆடியது. “இல்லவே இல்லை. மெய்யாகவே சொல்கிறேன். நீ சொன்னதே இல்லை.....அதாவது....ஆமாம் சொல்லியிருக்கிறாய். என்ன கடுமையான குளிர்!” என்றவாறே அவன் தன் முழுவலிமையுடன் தணலைக் கிளறலானான். இவ்வளவுக்கும் அது வேனிற் காலத்தின் நடுப்பகுதிதான்.

ரெபக்கா எமீலியாவிடம் தணிந்த குரலில் (அறை முழுவதும் கேட்கும்படி) “அவர் மிகவும் அழகாயிருக்கிறாரே” என்றாள்.

“அப்படியா? அண்ணாவிடம் சொல்கிறேன்.”

இளமானைப்போல் திடுக்கிட்டவளாய் ரெபக்கா, “அப்படியெல்லாம் செய்துவிடாதே” என்றாள்.



ஏற்கெனவே உயர்குடும்பத்துக் கன்னிப் பெண்ணுக்கொப்பவே அவள் அவ்வாடவனுக்கு வணக்கஞ் செலுத்தினாள். அதன்பின் அவளுடைய அடக்கம் சான்ற கண்களோ தரைமேற் பரப்பிய கம்பளத்தையே உறுத்து நோக்கின. எப்படித்தான் அவள் அவனைக் கண்ணுற் காணும் வாய்ப்புப் பெற்றனளோ?

ஜோஸப் தனக்குப் பரிசாக வழங்கிய காஷ்மீர் சால்வைகளுக்கு நன்றி தெரிவித்தபின் எமீலியா, “இத்தகு அழகுடைப் பொருள்களை உனக்குப் பரிசளிக்க இயலாதவளாயுள்ளேன். ஆயினும் பள்ளியிற் பயின்ற காலத்து உனக்கென அழகிய இரண்டு, உள்ளங்கி பின்னி வந்தேன்” என்றாள்.

திடுக்கிட்ட ஜோஸப் “அட கடவுளே! என்ன சொல்கிறாய்!” என்றவாறே மணியின் கயிற்றைத் தன் வலிமையெலாம் கூட்டி இழுத்தான். அது கையோடு வந்துவிடவே அந்த ‘அப்பாவி’யின் கலக்கம் அதிகமாயிற்று. “என் சிற்றூர்தி வாயிலில் நிற்கிறதா, பாரேன். உனக்கு மிகவும் புண்ணியமுண்டு. இனியும் தங்குதல் இயலாது. போகவேண்டும்.”

அக்கணத்தில் தந்தையார் ஜான் செட்லி அங்குத் தோன்றி, “என்ன செய்தி, எம்மி?” என்றார்.

“சிற்றூர்தி நிற்கிறதா என்று அண்ணன் பார்க்கச் சொன்னான். ஏன் அப்பா சிற்றூர்தி என்றால் என்ன?”

“ஒற்றைக் குதிரைப் பல்லக்கு” என விளக்கஞ் சொன்னார் அக்குறும்புக்காரக் கிழவர்.

இதனைக் கேட்ட அளவில் ஜோஸப் விழுந்து விழுந்து சிரித்தான். ரெபக்காவின் கண்களோடு அவன்

கண்கள் கலந்த அளவில், சுடப்பட்டவனைப் போல் உடனடியாய்ச் சிரிப்பினை நிறுத்திவிட்டான்.

"இவ்விளம்பெண்தான் உன் தோழியா? ரெபக்கா, உன்னைக் கண்டது மிக்க மகிழ்ச்சி. ஏற்கெனவே எம்மியோடு சேர்ந்துகொண்டு ஜோஸப்புடன் சண்டை போடத் தொடங்கிவிட்டாயா? அவன் குழம்பித் துடிக்கிறானே?'' என்றார் முதியவர்.

"நண்பனொருவனோடு இன்றிரவு உண்ண வருவதாகச் சொல்லியிருக்கிறேன்.''

"இன்றிரவு இங்கு உண்பதாக உன் அம்மாவிடம் சொன்னாயே?''

"இந்தக் கோலத்தோடு எப்படி முடியும்?''

"அவனைப் பார், ரெபக்கா. எத்தகைய இடத்திலும் விருந்தாடுதற்கேற்ற அழகில்லையா அவனிடம்?''

ரெபக்கா தன் தோழியைத்தான் பார்த்தாள். இருவரும் அடக்க முடியாமல் சிரித்தனர். பெரியவர்க்கு அது பெருமையாயிருந்தது.

"உனக்குப் பிடித்தமான முறையில் புலவு வைத்திருக்கிறேன்" என்றார் தாயார்.

"சரி. ரெபக்காவை அழைத்துக் கொண்டு கீழே இறங்கு. நான் இவ்விரு இளம் பெண்களோடும் வருகிறேன்" என்றவாறு தந்தையார் தம் மனைவி கையையும் மகள் கையையும் பற்றிக் கொண்டார்.

**ஜோஸப்பின் அலுவல்**

ஜோஸப் தன் தங்கையைவிடப் பன்னிரண்டாண்டுகள் மூத்தவன். கிழக்கிந்தியக் கம்பெனியின் சிவில் ஊழியனாய் இருந்தான். வங்காளப் பகுதியில் போக்ளீவாலா என்னுமிடத்துக்குத் தண்டல் நாயகமாக விளங்கினான்.



போக்ளீவாலா அருமையான மாவட்டத்தில் அமைந்தது. அம்மாவட்டம் தனிக்காடு; சதுப்பு நிலவெளி; புலிநடமாட்டம் மிகவுடையது. இவ்வழகிய ஊரில்தான் எட்டாண்டுகளாக அவன் தனிமையில் வாழ்ந்தான். ஆண்டுக்கு இருமுறை அவன் வசூலித்த வரிப் பணத்தைக் கல்கத்தா கொண்டு செல்லப் படையணியொன்று வரும். அப்போதுதான் ஐரோப்பியர் முகத்தைக் காணும் வாய்ப்பு அவனுக்கு உண்டு.

நல்ல காலமாக ஈரல்குலையில் ஏதோ தொல்லையேற்படவே அவன் ஐரோப்பாவுக்குத் திரும்பினான். இலண்டனில் அவன் தன் குடும்பத்தாரோடு தங்குவதில்லை. மணமாகாத இளைஞனுக் கேற்றபடி 'தனக்கெனத்' தங்குமிடம் ஏற்படுத்திக் கொண்டான். இங்கும் போக்ளீவாலா காட்டிற் போலவே அவன் தனிமையிலேயே இருந்தான். இலண்டன் மாநகரில் ஓர் ஈ காக்கை கூட அவனுக்குப் பழக்கமில்லை. நோயும் மாத்திரையும் மருத்துவரும் இல்லையெனில் அவன் தனிமை காரணமாகவே உயிர் விட்டிருப்பான். அவன் சோம்பேறி; 'பயந்தாங்கொள்ளி'; சாப்பாட்டு ராமன்; ஒரு பெண்ணைக் கண்டால் அளவிலா நடுக்கங் கொள்வான். அன்றியும் தந்தையின் பகடிப் பேச்சுக்களோ அவனது 'சுயமரியாதை'யை வாட்டின. தன் சுயமரியாதைக் கொள்கை குடும்பத்தாருக்குப் பொருந்தாது என்று கருதினான். அதனாலேயே குடும்பத்தாருடன் கலந்து கொள்வதையும் குறைத்தான்.

### பெக்கியின் திட்டம்

பொதுவாக மணமகன் வேட்டையை இளம் பெண்கள் தமக்குரிய நாணத்தால் தத்தம் தாயாரிடம் விட்டுவிடுவார்கள். ஆயின் ரெபக்காவைப் பொறுத்த வரை இத்தகைய நாசூக்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு அன்புடைப் பெற்றோரில்லை. அவளாக ஒருவனைத் தெரிந்தெடுக்காவிட்டால், அப்பொறுப்பினை ஏற்றுக்கொள்ள இப்பரந்த உலகில் எவர்தாம் இருக்கிறார்கள்? எமீலியாவின் திருமணத்தைப் பற்றி அவள் அன்னை தம் உள்ளத்தின் ஆழத்தே எத்தனை எத்தனை திட்டங்கள் போட்டிருப்பார்? அவ்வாறே ரெபக்காவும் ஒரு கணவனையடைய முயல்வதென்று முடிவு செய்தாள். அவளுக்கு வளமான கற்பனைத் திறம் இருந்தது. தவிர அரபுக் கதைகள் முதலிய நூல்களையும் படித்திருந்தாள்.

முதல் அடியே அவள் திறமையைக் காட்டிற்று. ஜோஸப்பை மிகவும் அழகானவன் என்று சொல்லிய போதே அவள் உள்ளுக்குள் அதன் விளைவினைக் கருதினாள். எமீலியா அதனைத் தன் தாய்க்குச் சொல்லுவாள். அவ்வம்மையார் ஜோஸப்பிடம் சொல்லுவார். ஒருகால் சொல்லாவிடினும் புகழ்ச்சியால் தாமே மகிழ்ந்து போவார் (தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட எந்தத் தாய்தான் உவக்காமல் இருப்பாள்!) அல்லது ஜோஸப்பே தான் கூறியதனைக் கேட்டல் கூடும். அவள் அறை முழுவதும் ஒலிப்பதுபோல் தணிந்த குரலில் தானே சொன்னாள்? உண்மையில் அவனும் அதைக் கேட்டான். அவனது பேருடலின் நரம்புகளிலெல்லாம் அப்புகழ்ச்சி துளைத்துச் சென்று மகிழ்ச்சி யூட்டியது. தொடர்ந்து ஒருகால் அவள்



பகடி செய்கிறாளோ எனும் ஐயமும் எழுந்தது. அதனாலேயே முன் குறித்தவாறு மணியின் கயிறே கையோடு வரும்படி அவன் பற்றியிழுத்தான். தந்தையின் பகடி மொழியும் தாயாரின் வேண்டுகோளுமே அவனை வெளியேறாமல் தடுத்தன.

### நடிப்பினால் வந்த வினை

நாணத்தால் சிவந்த முகத்தோற்றத்தொடு ஜோஸப்பும் அடக்கமே உருவாக நிலத்தில் பதிந்த பசுங்கண்களுடன் ரெபக்காவும், மாடிப் படிகளில் இறங்கினர். "மிகவும் அமைதியாயிருத்தல் வேண்டும். இந்தியாவைப்பற்றி யறிய வேட்கை காட்டுதல் வேண்டும்" என நினைத்தாள் அவள்.

ஜோஸப்புக்குப் பிடித்தமான முறையில் புலவு வைத்திருந்ததாக முன்பே கண்டோம். சிறிது ரெபக்காவுக்கும் வேண்டுமா என வினவினார்கள். அவள் ஜோஸப்பை ஆர்வத்தோடு நோக்கி, "இஃது என்ன?" என்றாள்.

"அமுதம்" என்றான் அவன். வாய் புலவால் நிறைந்திருந்தது. கண்களை உருட்டி உருட்டி விழித்தான். முகமெல்லாம் சிவந்தது. "இந்தியாவிலுண்பதனைப் போலவே சுவையாயிருக்கிறது."

ரெபக்கா சொன்னாள்: "இந்திய உணவு வகையா! நானும் சாப்பிட்டுப் பார்க்கிறேன். அங்கிருந்து வருவது எதுவுமே நன்றாயிருக்குமே."

செட்லி அவளுக்கும் சிறிது படைக்குமாறு பணித்தார். அவள் அவ்வகை உணவினை முன் கண்டறியாள். "என்ன? இந்தியாவிலிருந்துவரும் எதனையும் போலவே இதுவும் நன்றாயிருக்கிறதா?" என்றார் அவர்.

"ஓ....அருமை" என்றாள் அவள். கறியிற் கலந்த மிளகு அவளைச் சித்திரவதை செய்தது.

ஜோஸப்புக்கு உற்சாகம் பிறந்தது. "அதனோடு ஒரு மிளகாயும் தின்றுபாருங்கள்" என்றான் அவன்.

ரெபக்கா திக்கித் திணறிக்கொண்டு "மிளகாயா! ஓ! சரி" என்றாள். 'மிளகுக் காய்தானே! மிளகு போன்றுதான் இருக்கும்' என்று எண்ணினாள். மிளகாய் வந்தது. "அட! எவ்வளவு பசுமையாயிருக்கின்றன" என்றவாறே ஒன்றினை எடுத்து வாயில் போட்டாள். கறியைவிடக் காரமாயிருந்தது. மேலும் தாங்க முடியாதவளாய் "தண்ணீர்! அட கடவுளே! தண்ணீர் கொடுங்கள்" என்றலறினாள். ஜான் செட்லியிடமிருந்து சிரிப்பு வெடித்தது. அவர் முரட்டு ஆசாமி. பகடியைச் செயலில் காண்பது அவர்க்கு மிகவும் விருப்பமானது. "அவை உண்மையிலேயே இந்தியச் சரக்குகள் தாம்" என்றவாறே தண்ணீர் கொணரப் பணித்தார். ஒருவழியாகத் தாகம் தணிந்தவுடன் ரெபக்கா நற்குண முடையாளைப் போல் பகடியாய்ச் சொன்னாள். "அரபுக் கதைகளில் பாரசீக இளவரசி பழக்கலவையில் மிளகாய் போடுகிறாளே, அதனை மறந்தே போனேன்."

முதியவர் நகைக்கலானார். ரெபக்காவை நல்லியல்புடையவளென்றே நினைத்தார். "இனிமேல் இந்தியாவிலிருந்து வருகிற எல்லாம் நல்லவை என்றுசொல்ல மாட்டாயே?" என்றார். உண்டி முடிந்து மகளிரெல்லாம் சென்றபின் அந்தப் பொல்லாத கிழவர் மகனிடம் சொன்னார்: "விழிப்பாயிரு. அந்தப் பெண் உனக்கு வலை விரிக்கிறாள்."



அவர்தம் முகமனுரை கேட்ட ஜோஸப் இந்திய நிகழ்ச்சியொன்றினைச் சொல்லத் தலைப்பட்டான். முதியவர் குறட்டை யொலிதான் கேட்டது.

ஜோஸப்பின் நினைவு மாடியிலிருந்த பெண்பாற் சென்றது. "அருமையான இளம்பெண்! துருதுருவென்றிருக்கிறாளே! உண்டியின்போது கீழே விழுந்த அவளது கைக்குட்டையை எடுத்துக் கொடுத்தேன். அப்போது எப்படி என்னைப் பார்த்தாள்! கைக்குட்டையை இருமுறை நழுவவிட்டாள். அட! மேலே பாடிக் கொண்டிருப்பவர் எவர்! போய்ப் பார்க்கலாம்."

அவனது அடக்கமே வென்றது. தந்தையை எழுப்பாது ஓசைப்படாமல் நழுவி வீட்டினின்று வெளியேறினான்.

**விடா முயற்சி**

தொடர்ந்து இரண்டு மூன்று நாட்கள் வரை அவன் வீட்டினை எட்டிப் பார்த்திலன். அந் நாட்களில் ரெபக்கா அவன் பெயரைக்கூட வாய்விட்டுச் சொன்னாளல்லள். எமீலியாவின் தாயிடம் பணிவோடும் நன்றியுணர்வோடும் ஒழுகினாள். தந்தை யுரைத்த பகடிமொழிக்கெல்லாம் உள்ளன்போடும் ஊக்கத்தோடும் சிரித்தாள். நல்லியல்பினராய அம் முதியவர் அதனால் பெரிதும் மகிழ்ந்தார். பணி மக்களிடங்கூடப் பணிவோடு நடந்து நற்பெயரைத் தேடிக் கொண்டாள்.

மீண்டொருநாள் உணவருந்த மாடிப்படிகளில் இறங்கும்போது ரெபக்கா ஜோஸப்பிடம் சொன்னாள்: "இனிமேல் எனக்காகக் கறிவகை தேர்ந்தெடுக்க உங்களை விடமாட்டேன். அப்பாவிப் பெண்களை

இப்படி வருத்துவதில் ஆண்களுக்கு விருப்பமுண்டாகக் கூடாது''

"அட கடவுளே! உலகமே கிடைப்பதாயினும் உனக்குத் தீங்கு செய்ய மாட்டேன்."

"மாட்டீர்களென்பது எனக்குத் தெரியும்" என்றாள். அவளது சின்னஞ்சிறு கை மெல்ல அவன் கையை அழுத்தியது. உடனேயே அவன் திடுக்கிட்டு நடுங்கியவனாய்க் கையை இழுத்துக் கொண்டான். ஒரு கணம் அவள் முகத்தை ஏறிட்டு நோக்கினான். மறு கணமே பார்வை நிலத்திற் பதிந்தது. அவ் வெளிய பெண்ணின் இவ் எதேச்சையான செயல் கண்டு ஜோஸப்பின் உள்ளம் படபடத்தது பற்றி நாம் விளக்கத் தேவையில்லை.

உயர்குடிப் பெண்கள் சிலர் அவளது செயலை வெட்கங் கெட்டது எனப் பழிக்கலாம். என் செய்வது! வேலைக்காரனை அமர்த்திக் கொள்ள இயலாத ஏழையென்றால் அவனேதான் தன் வீட்டினைப் பெருக்கிக் கொள்ளவேண்டும். இளைஞனோடு பேசி மணமுடிக்க அருமைத் தாயார் இல்லாத சிறுபெண் என்செய்வாள்! அவள் தானே அதனைச் செய்தல் வேண்டும்?

ரெபக்காவின் திட்டங்களை ஒவ்வொரு வழியிலும் ஊக்குவிக்க நினைத்தவளைப்போல எமீலியாவும் விளங்கினாள். கடந்த 'ஈஸ்டர்' விடுமுறையின்போது தமையன் தன்னை வாக்ஸாலுக்கு அழைத்துச் செல்வதாயுரைத்த உறுதி மொழியை நினைவு படுத்தினாள்: "ரெபக்காவும் இப்போது நம்மோடிருக்கிறாள். இதுதான் வாக்ஸால் செல்வதற்குத் தகுந்த காலம்" என்றாள்.



"மெத்த மகிழ்ச்சி" என்றாள் ரெபக்கா. கைதட்டியிருப்பாள். தன் நிலையுணர்ந்து அடக்க முடையவளாதற்கொப்ப நிறுத்திக் கொண்டாள்.

ஜோஸப் சொன்னான்: "இன்றிரவு நன்றாகாது."

எமீலியா விடாமல் "சரி. நாளை" என்றாள்.

தாயார், "குழந்தைகளோடு பெரியவர் எவராவது போகவேண்டும்" என்றார். தந்தை சிரித்துக்கொண்டே, "ஜோஸப்தான் போகிறானே. அவன் பெரியவன், இல்லையா?" என்றார். தன் பருத்த உடல் பகடிக்குள்ளாவது பற்றி ஜோஸப் வெகுண்டான். ஒரு புட்டி மது உட்சென்ற பிறகே அவனது சீற்றம் வெளியேறியது.

"பெண்களிருவருக்கும், ஆளுக்கோர் ஆண் துணை வேண்டும். ஜோஸப் ரெபக்காவை விட்டு அப்புறம் இப்புறம் நகரமாட்டான். எம்மியைக் கூட்டத்தில் திண்டாட விட்டு விடுவான். ஆளனுப்பி ஜார்ஜ் வருவானா என்று கேள்" என்றார் முதியவர்.

அவ்வளவில் ஏனோ கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்தனர். எமீலியா கள்ளமற்ற இளம் பெண்களுக்கேயுரிய முறையில் நாணித் தலை கவிழ்ந்தாள்.

நல்லவளாய அம் மெல்லியலாளுக்கு (ரெபக்காவுக்கு) உதவுவதென்று திட்டமிட்டவை போல ஐம்பெரும் பூதங்கள்கூட முன்வந்தன. வாக்ஸால் செல்ல விருந்த அந்நாள் மாலை ஜார்ஜ் போந்து விட்டான். பெற்றோர்கள் வெளியிடத்தே ஒரு விருந்துக்குச் சென்று விட்டனர். அப்போதென்று இடியும் மழையும் காற்றும்

சேர்ந்திடவே இளைஞர் வேறு வழியின்றி வீட்டிலேயே தங்கினர்.

எமீலியாவின் காதலன்

ஜார்ஜ், செட்லியின் 'ஞானக்குழந்தை' கடந்த இருபத்து மூன்று ஆண்டுகளாக அவர் குடும்பத்தில் ஒருவனாகவே விளங்கினான். அவன் எமீலியாவிடம் ''இசையாவது கேட்போம்'' என்றான். எங்கும் போலவே அவ்வறையிலும் பிற்பாதியில்தான் பியானோ வைக்கப்பட்டிருந்தது. அவ்விடம் இருண்டிருந்தமை யால் எமீலியா ஜார்ஜின் கையைப் பற்றியவாறு அங்குச் சென்றாள். இதன் விளைவாய் ஜோஸப்பும் ரெபக்காவும் தனித்திருக்க நேர்ந்தது. அவள் பச்சை நிறப் பட்டு நூலால் பணப் பையொன்று பின்னுதலில் ஈடுபட்டிருந்தாள். அவள் 'அவ்விருவர்' பற்றிப் பேச் சினைத் தொடங்கினாள்.

பட்டுப் பணப்பை

தன் வாழ்க்கையில் முதன் முதலாய் ஜோஸப் ஒரு பெண்ணுடன் தயக்கமோ தடுமாற்றமோ இன்றி உரையாடலானான். இந்தியாவைப் பற்றி அவள் பற் பலவற்றை வினவினாள். அந்நாடு பற்றியும் தன்னைப் பற்றியும் அவன் ஆயிரம் முறை ஏற்கெனவே பலரிடம் கூறிய கதைகளை மீண்டும் சொல்வதற்கு வாய்ப்புப் பெற்றதனால் மகிழ்ந்தான். பேசத் தெம்பு பிறந்தது. 'யாருக்காக அவள் பணப்பை பின்னுகிறாள்' என்று கேட்கவும் துணிச்சல் பெற்றான். அவனுடைய துணிச் சலும் இயற்கையாக அவளோடு பேசும் முறையும் அவனுக்கே வியப்பளித்தன.



அவனைக் கவரும் முறையில் அழகாகப் பார்த்த படியே ரெபக்கா மறுமொழி புகன்றாள்: "யாருக்கு வேண்டுமோ அவருக்கு."

ஜோஸப் தன் நாவன்மையை எடுத்துக் காட்டும் அரிய காதலுரை நிகழ்த்தியிருப்பான். "ரெபக்கா நான் எப்படி....'' என்று தொடங்கியும் விட்டான். அப்போதுதானா மறுபக்கத் தரையில் இசை நிற்க வேண்டும்? தன் குரலைத் தெளிவாகக் கேட்டு வெட்கி யவனாய் அவன் வாயை மூடிக்கொண்டான். ஜார்ஜ் எமீலியாவிடம் "உன் அண்ணனது சொல்வன்மையைப் பார்த்தாயா? உன் தோழி கெட்டிக்காரிதான். பெரிய அற்புதங்களை யெல்லாம் நிகழ்த்திவிட்டாளே!" என்றான்.

"நல்லதுதானே" என்றாள் எமீலியா. எல்லாப் பெண்களைப் போல அவளும் உள்ளத்துள் முடி போட்டுப் பார்த்தலில் வல்லவள். ஜோஸப் ஒரு மனைவி யோடு இந்தியாவுக்குத் திரும்புவனாயின் அவள் மகிழ மாட்டாளா?

அவள் தானறிந்த பாடல்களை யெல்லாம் பாடி முடித்தாள். நெடுநேரம் பக்கத்தறையிலும் தங்கியா யிற்று. இனி, தோழியைப் பாடுமாறு வேண்டுவது பொருத்தமாகவே தோன்றிற்று. அவள் ஜார்ஜிடம் "முதலில் ரெபக்காவின் பாட்டினைக் கேட்டிருந்தால் என் பாடலுக்குச் செவிசாய்த்திருக்கவே மாட்டீர்கள்" என்றாள். அது பொய் எனவும் அவளே யுணர்ந்தாள்.

"நான் இப்போதே ரெபக்காவை எச்சரிக்கிறேன். எமீலியா தான் உலகிலேயே தலைசிறந்த பாடினி என மதிக்கிறேன்."

"கேட்ட பிறகு சொல்லுங்கள்" என்ருள் எமீலியா. ஜோஸப் விளக்கேந்தி ரெபக்காவைப் பியானேவினருகே அழைத்துச் சென்ருன். ஜார்ஜ் தான் இருளிலேயே இருக்க விரும்புவதாய்க் கூறினன். எமீலியா நகைத்துக் கொண்டே அவனுக்குத் துணையிருக்க மறுத்து விட்டாள். வேறு வழியின்றி இவ்விருவரும் ஜோஸப்பின் பின் சென்றனர்.

**இசையும் இசைவும்**

ஜார்ஜின் கருத்து யாதாயிருப்பினும் ரெபக்கா தன் தோழியைவிட மிக அருமையாகவே பாடினள். ஜோஸப் இசையில் ஈடுபாடும் இளகிய மனமுங் கொண்டவன். அவனுக்குத் துணிச்சலும் பிறந்தது. முதலில் ஜார்ஜ் சொன்னபடியே மற்றை யிருவரும் மறுகோடியில் தங்கி யிருந்திருந்தால் அவனது பிரமச்சரியம் அன்றே முற்றுப் பெற்றிருக்கும். இந்த நூலும் எழுதப்பட்டிராது. இரண்டும் நிகழாமற் போகவே பாடி முடித்து ரெபக்கா தன் தோழியின் கையைப் பிடித்துக் கொண்டு வரவேற்பறைக்குச் சென்ருள்.

பெற்ருேர் திரும்பி வந்ததுகூட உணராமல் இளைஞர் உரையாடிக் கொண்டிருந்தனர். ஜோஸப், "ரெபக்கா, பழச்சாறு ஒரு சிறு ஸ்பூனவது சாப்பிடு. பாடிய களைப்பு நீங்கும்" என்ருன். அப்போது அங்குத் தோன்றிய செட்லி, "அப்படிச் சொல்" என்ருர். பழக்கப்பட்ட குரலைக் கேட்டுத் திகைத்த ஜோஸப் வாய் வாளாமை மேற்கொண்டதோடு விரைவிலேயே புறப்படவுஞ் செய்தான். அன்றிரவு முழுதும் அவனென்றும் காதலைப் பற்றி எண்ணி எண்ணி உறங்காதிருந்தானல்லன். காதலுணர்வு ஒரு போதும் அவனது



பசியிலோ உறக்கத்திலோ குறுக்கிட்டதில்லை. மறுநாள் அவன் வருவானு, வாரானு என்றெண்ணியவளாய் ரெபக்கா இரவெல்லாம் உறங்காதிருந்த தெவ்வாறு என்று சொல்லத் தேவையில்லை. மறுநாளும் வந்தது. ஜோஸப்பும் பகலுணவுக்கு முன்னரே அவ்வீட்டில் காட்சியளித்தான். அவனுக்குப் பின்னே பணிமகன் அழகிய மலர்ச் செண்டுகளிரண்டினை ஏந்திநடந்தான். ஜோஸப்தான் துணிச்சலொடு கடைத்தெரு சென்று வாங்கி வந்திருந்தான். கன்னியர் இருவருக்கும் ஆளுக் கொன்ருய் அவன் வழங்கியபோது அவர்கள் மிகவும் பணிவுடன் ஏற்றுக் கொண்டனர்.

ரெபக்கா மலர்ச் செண்டினை மெல்ல மோந்தாள். மார்பொடு சேர்த்தினள். விழிகள் உயரே பதிந்தன. செண்டின் மலர்களூடே துண்டுக் கடிதம் ஏதாவது மறைந்துளதா என்று பார்த்தாளோ என்னவோ? கடிதமே இல்லை. ஏதோ 'சாக்கு'க் கூறி ஜார்ஜும் எமீலியாவும் அவ்வறையின் நீங்கினர். ரெபக்காவும் ஜோஸப்புமே எஞ்சியிருந்தனர். ரெபக்காவின் சிறு வெண் விரல்களில் ஒளபளக்கும் பின்னலூசியும் பச்சைப் பட்டுநூலும் பசுமுன்றன.

தண்டல் நாயகம் திருவாய் மலர்ந்தார்: "நேற்றிரவு நீ பாடிய பாட்டு எவ்வளவு அழகாயிருந்தது தெரியுமா? அஃது இரவு முழுதும் என்னைத் தூங்கவிடவில்லை. இன்று காலையிலும் படுக்கையிற் கிடந்தவாறே அதனை முணுமுணுத்துக் கொண்டிருந்தேன்."

"அப்படியா! அந்தப் பாட்டைப் பாடுங்கள், கேட்போம்"



……பச்சைப் பட்டுநூல் பிணைத்திருந்தது



“நானா! இல்லை, நீ பாடு, ரெபக்கா. நீ பாடத் தான் வேண்டும்.”

“இப்போது வேண்டாம்; மனமும் இடந்தராது. இவ்வேலையையும் முடிக்க வேண்டும். எனக்குக் கொஞ்சம் உதவுவீர்களா?”

எப்படியென்று கேட்டுத் தெரிந்து கொள்வதற்குள், கிழக்கிந்தியக் கம்பெனியாரின் சிவில் ஊழியத்தினனாய திருவளர் செல்வன் ஜோஸப் ஓரிளம் பெண்ணைக் கண்ணாற் கொல்வான் போல் நோக்கியவாறே நேருக்கு நேர் அமர்ந்திருந்தான்; அவனுடைய கைகளிரண்டும் ஏதோ அவளிடம் இறைஞ்சுவன போல் நீண்டுகிடந்தன; அவற்றை அவள் சிக்கெடுத்துக் கொண்டிருந்த பச்சைப் பட்டு நூல் பிணைத்திருந்தது.

வாக்ஸால் செல்லக்குறித்த நாளன்று, லெப்டினன்ட் ஜார்ஜ் ரஸ்ஸல் சதுக்கத்துக்குப் போந்து பெண் மக்களிடம் சொன்னான்; “நம் டாபினை இன்றிரவு இங்கு உண்ண வருமாறு அழைத்தேன். நம்மோடு வாக்ஸாலுக்கு வருமாறும் சொல்லியிருக்கிறேன். அவனும் ஜோஸப்பைப் போல் அடக்க ஒடுக்கம் நிறைந்தவன்.”

உடல் பெருத்த அந்தப் பெருமகன் விடையாக “அடக்கமாவது ஒடுக்கமாவது” என்றான், ரெபக்காவைக் கடைக் கண்ணால் நோக்கிக்கொண்டே.

“அவனையொத்த அரிய வீரன் எங்கள் படையணியிலேயே இல்லை. சிறந்த அலுவலனாகவும் விளங்குகிறான்” என்றவாறே ஜார்ஜ் தன் தோற்றத்தை நிலைக்கண்ணாடியிற் பெருமிதத்தோடு நோக்கினான். அப்போது தன்னையே உறுத்து நோக்கிய ரெபக்காவின் கண்களைக் கண்டு ஓரளவு நாணங் கொண்டான்.

கபடும் பகட்டுமிக்க அவ்விளம் பெண் நினைத்துக் கொண்டாள்: "அட! கனம் பொருந்திய ஐயா! உம்மையளக்கும் அளவுகோல் என்னிடம் இருக்கிறது."

டாபின் வருகை

அன்று பிற்பகலில் வாக்ஸால் முற்றுகைக்குத் தக்கபடி வெண்பட்டாடை உடுத்திப் புத்தம் புதிய ரோசா மலரைப் போன்ற எமீலியா குயிலைப் பழிக்கும் குரலாற் பாடிக்கொண்டே வரவேற்பறையினுட் புகுந்தாள். நெட்டை உருவமும் நீண்ட கைகால்களும் அகன்ற செவிகளும் ஒட்ட வெட்டிய கருமயிர்த் தலையும் உடைய ஒருவன் அவள் முன்தோன்றி உலகில் வேறெவராலும் செய்தற்கியலாத மட்டமான முறையில் வணக்கஞ் செய்தான்.

அவன்தான் கேப்டன் வில்லியம் டாபின். பள்ளிப் பருவத்தில் பிள்ளைகளனைவரின் பகடிக்கும் இலக்காய் விளங்கியவன். அவர்களுள் எல்லாம் அமைதியான போக்கும் கோணங்கித்தனமான செய்கையும் மந்த மதியும் நிரம்பப் பெற்றவன். அவன் தந்தையார் லண்டன் மாநகரிலொரு பலசரக்கு வணிகர். மகனுக்குச் சம்பளம் கட்டுவதற்குப் பதில் பள்ளித் தலைவர் வீட்டுக்குத் தேவையான பண்டங்களை வழங்கினார் என்று மாணவர்கள் பகடி செய்வர். மந்தமதி காரணமாக நெடிய உருவினனான டாபின் சிறிய வகுப்பிலேயே பலகாலம் இருந்து வந்தான்; ஒருநாள் பிற்பகல் மரத்தடியில் அமர்ந்து அரபுக் கதைகளைப் படித்துக் கொண்டிருந்த டாபின், ஜார்ஜை மற்றொரு முரட்டு மாணவன் அடிக்கக் கண்டான். (அம்முரடன் பாற்புட்டி வாங்கிவர ஜார்ஜை அனுப்பினான். பள்ளியுடபுக மதில் தாவிக் குதித்ததில் புட்டி உடைந்தது. பாலைக் குடித்துவிட்டுப் புட்டி உடைந்ததாக ஜார்ஜ் பொய்யுரைக்கிறனென்று அம்முரடன் அடிக்கத் தலைப்பட்டான்.)



டாபின் குறுக்கிட்டுத் தடுத்தான். விளைவாய் டாபினுக்கும் முரடனுக்கும் மற்போர் நடைபெற்றது. தொடக்கத்தில் சுருண்டு விழுந்தானாயினும் இறுதியில் டாபின் தன் வலிமையான இடக்கையைப் பயன்படுத்தி வென்றான். அது முதல் பள்ளிப் பிள்ளைகளின் பகடிப் பேச்சு ஒழிந்தது. அவனறிவிலும் புத்தொளி பிறந்தது. எல்லாவற்றுக்கும் ஜார்ஜ்தான் காரணமென்று அவன்பால் எப்போதும் அன்புடையவனாகவே டாபின் விளங்கினான். படிப்பு முடிந்து இருவரும் படையிற் சேர்ந்த காலத்தும் ஒரே அணியில் தான் இருந்தனர். அங்கும் அவர்கள் அன்பு மேலும் வளர்ந்ததேயன்றி மாறவில்லை. அவ்வணி பல நாட்களுக்கு முன்னரே தாய்நாடு மீண்டிருந்தது.

அவன் எமீலியாவின் வீட்டு வாயிற்கதவைத் தயக்கத்தோடு மெல்லத் தட்டினான். அதனாலேயே அவ்வொலி மகளிர் செவியிற் புகுந்திலது. இல்லாவிடில் வரவேற்பறையுள் பாடிக்கொண்டே எமீலியா நுழைந்திராள். இப்போதோ அவளது இனிய குரல் நேரே டாபின் நெஞ்சுட் புகுந்து குடியிருக்கலாயிற்று. அவள் நீட்டிய கையைப் பற்றிக் குலுக்குமுன் அவன் உள்ளத்தே, "என்ன இது! நடக்கக் கூடியதா! கொஞ்ச காலத்துக்கு முன் நான் இங்குப் போந்தபோது ஊதாச் சொக்காய் போட்டுத் திரிந்தாயே, அந்தச் சிறுமியா நீ? ஜார்ஜ் மணக்கப் போவதாய்க் கூறினானே, அவ்விளம்

பெண் நீயா? கட்டவிழ்க்கும் மொட்டுப் போல் காட்சி யளிக்கிறுயே! அப் போக்கிரிப் பயலுக்கு அருமையான பரிசுதான்'' என்று நினேவோடியது.

இவ்வாருக இப் பெருமக்களெல்லாரும் உண்ணப் புக்கனர். போரும் புகழும் குறித்துப் பேச்சு நிகழ்ந்தது.

---

# 4. வாக்ஸால் இன்பமும் பின்பும்

உண்டி முடிந்தபின் வண்டியில் புறப்பட்ட குழுவொடு நாமும் வாக்ஸால் பூங்காவுக்குச் செல்வோம். வண்டியின் முன்னிருக்கையில் ஜோஸப்பும் ரெபக்காவும் நெருக்கிக் கொண்டமர்ந்திருந்தனர். டாபின் எமீலியா இருவருக்கும் இடையில் ஜார்ஜ் வீற்றிருந்தான். வண்டியிலிருந்த ஒவ்வொருவரும், அன்றிரவு ஜோஸப் ரெபக்காவிடம் தன் காதலே வெளியிட்டுத் தன்னே மணக்குமாறு வேண்டுவான் என ஒருமுகமாக நினேத்தனர்.

தக்க காலத்தில் குழுவினர் அரசுப் பூங்காவை யடைந்தனர். மாட்சிமை தங்கிய ஜோஸப் கிறீச்சிட்ட வண்டியினின்று இறங்கியபோது அப் பருத்த ஆடவனே வாழ்த்தப் பெருங் கூட்டமே கூடிவிட்டது. அவன் சற்றே நாணியவனுக ரெபக்காவைக் கையிஞலணேத்துக் கொண்டு நடந்தான். ஜார்ஜ் எமீலியாவைக் கவனித்துக் கொண்டான். கதிரவனேக் கண்ட மலர்க்கொடி போல் அவள் மகிழ்ச்சியோடு விளங்கினுள்.

**டாபின் தொண்டு**

மகளிரின் சால்வைகளேச் சுமப்பதும் எல்லாருக்கும் சேர்த்து வாயிற்கட்டணம் செலுத்துவதுமே தனக்குப் போதியன என்றமைந்தான் டாபின். அவன் அவர்களுக்குப் பின்னே அடக்கத்தோடு நடந்தான். அவர்களது வேடிக்கையைக் கெடுக்க அவன் விரும்பினனல்லன். ஜோஸப்பும் ரெபக்காவும் பற்றி அவனுக்குக் கடுகளவு கவலேயும் இல்லே. ஜார்ஜுக்கு எமீலியா பொருத்தமான துணேயெனவே அவன் மதித்தான்.

அவர்களிருவரும் சேர்ந்து நடப்பதனைக் கண்ணுற்ற போது, கள்ளங்கபடமில்லாத அவளது மகிழ்ச்சியை ஒரு தந்தைக்குரிய மனநிறைவோடு நோக்கினன். தன் கையும் சால்வைகளைச் சுற்றுவதற்குப்பதில் வேறேதேனும் ஒன்றினைச் சுற்றலாகாதா என்று ஒருகால் நினைத்திருப்பான். (நெடிய அப்படைஞன் பெண்களுக்குரிய சால்வையைச் சுமந்து செல்வது கண்ட மக்கள் சிலர் நகைக்கத்தான் செய்தனர்.) ஆயினும் வில்லியம் டாபின் தன்னலத்தைக் கருதும் பழக்கத்தைச் சிறிதும் அறியாதவன். அவனுடைய நண்பன் மகிழ்வுடனிருக்குங்கால் அவனது மனத்தில் எவ்வாறு நிறைவில்லாமற் போகும்?

நடந்து செல்கையிலேயே பாடத்தலைப்பட்டான் டாபின். எமீலியா அன்று பிற்பகல் பாடிய அதே இசையைத்தான் அவன் வாய் முணுமுணுத்தது. தன் பாடலைக் கேட்டு அவனே உரக்கச் சிரிக்கலானான். உண்மை யாதெனில் ஓர் ஆந்தையளவுகூட நன்கு பாட இயலாதவன் அவன்!

**காதலர் உரை**

ஈரிருவராய்ச் சென்ற அவர்கள் இணையோடிணை பிரிவதில்லை என்று உறுதிகூறிப் பத்து நிமிடங்களுக்குள்ளாகவே பிரிந்து சென்றனர். ஜார்ஜும் எமீலியாவும் எத்தகைய பொழுது போக்குகளில் ஈடுபட்டனரோ! அதனை எவரும் அறியார். ஒன்று மட்டும் உறுதி. அவர்கள் மகிழ்ச்சி முழுமையானது. நடத்தை அப்பழுக்கற்றது. கடந்த பதினைந்தாண்டுகளாகச் சேர்ந்து பழகி வந்தவர்களாதலின் இப்போதைய தனிமை அவர்களுக்குப் புத்தின்பம் வழங்குவதன்று.



ரெபக்காவும் அவளது உடல் பருத்த தோழனும் 'தனிமை'யான நடைபாதையில் சென்றனர். அங்கு அவர்களைத்தவிர நூறு இணைகள் தாம் உலவின; அதிகமில்லை. அத் 'தனிமைநிலை' உருக்கத்தையும், ஒரு முடிவுக்கு வரவேண்டிய கட்டாயத்தையும் அவர்கள் மனத்தில் தோற்றுவித்தது. இவ்வாய்ப்பினை விட்டுவிட்டால் ஜோஸப்பின் கோழையுதட்டில் துடிக்கின்ற மணப்பேச்சினை வெளிக்கொணரும் வேறு சமயம் கிட்டாதென்றுணர்ந்தாள் ரெபக்கா.

"இந்தியாவைக் காணவேண்டுமென்று எவ்வளவு ஆசைப்படுகிறேன் தெரியுமா?" என்றாள் அவள்.

"உண்மையாகவா?" என்றான் ஜோஸப். அவனது குரலில் ஆளைக் கரைக்கும் உருக்கம் இருந்தது. இந்தக் கேள்வியைத் தொடர்ந்து மணக்கேள்வியையும் கேட்டிருப்பான் என்பதில் ஐயமில்லை. அதற்கேற்பவே பொருமினன்; பெருமூச்சுகளை எறிந்தான். அவனுடைய மார்பிற்கிடந்த ரெபக்காவின் கை, அந்நெஞ்சின் வெறித்துடிப்புகளைக் கணக்கிட்டது. அப்போது பார்த்துத்தானா வாணவேடிக்கைக்கான மணி அடித்துத் தொலைக்க வேண்டும்? மக்கள் எல்லோரும் சிதறி ஓடலாயினர். எனவே இவ்வார்வமுடைய காதலரும் அவர்களோடு சேர்ந்து ஓடுவதுதவிர வேறு வழியில்லாமற் போயிற்று.

கேப்டன் டாபின் உணவு வேளையின் போதாவது தன் நண்பர்களோடு சேர்ந்து கொள்ளலாமென்று கருதியிருந்தான். வாக்ஸால் பூங்காவின் வேடிக்கைகளுள் ஒன்றாவது அவன் மனத்தைக் கவரவில்லை. உண்பதற்கென்றே ஏற்பாடு செய்திருந்த இடத்தில் அவ்விரு காதலிணைகளும் அமர்ந்து விட்டன. நால்

வருக்குமட்டுமே உணவு படைக்கப்பட்டிருந்தது. டாபின் அவ்விடத்தின் முன்னே இருமுறை நடை போட்டான். அவனை எவரும் பொருட்படுத்துவதாகத் தோன்றவில்லை. காதலிணைகள் தமக்குள்ளேயே அளவளாவிப் பேசிமகிழ்ந்தன. தான் ஒருவன் உயிரோடிருப்பதனையே அவர்கள் மறந்துவிட்டனர் என்பது டாபினுக்குத் தெளிவாயிற்று. "நல்லது; வேண்டாத விருந்தாளியாகவே இருந்துவிட்டுப் போகிறேன்" என்றெண்ணியவனாய்ப் பூங்காவில் ஆரவாரமற்ற தனிமைப் பகுதியை நோக்கிச் செல்லலானான் அவன்.

**கலவை மதுவும் கலகமும்**

காதலிணைகள் இரண்டும் மகிழ்ந்து மனம்விட்டுப் பேசியுண்ணலாயின. ஜோஸப் களிவெறியில் மூழ்கியவனாய்ப் பணிமக்களை மிடுக்கோடு ஏவினான். மதுப் புட்டியைத் திறத்தல் முதலிய வேலைகளைத் தானே செய்தான். படைக்கப்பட்ட உணவுவகையிற் பெரும் பகுதியை அவன் தான் உண்டான். முடிவில் ஒரு குவளைக் கலவைமது வேண்டுமென்று வற்புறுத்தினான். வாக்ஸாலுக்குச் செல்லுமெவரும் அக்கலவைமது அருந்தாமலிரார். அவ்வொரு குவளைக் கலவை மது தான் இக்கதை நிகழ்ச்சிக்கே மூலகாரணமாயமைந்தது.

நம் இளம் பெண்களிருவரும் அதனைப் பருகினரல்லர். ஜார்ஜும் அதனை வெறுத்தான். ஆகவே சாப்பாட்டுராமன் ஜோஸப்தான் ஒரு குவளை மதுவையும் குடித்து முடித்தான். விளைவாய் அவனுக்குப் பிறந்த 'புத்துணர்ச்சி' முதலில் மற்றவர்க்கு வியப்பூட்டியது; முடிவில் வேதனை தந்தது. ஏனெனில் அவன் உரக்கப் பேசிச் சிரிக்கலானான். வேடிக்கை பார்க்க அவ்விடத்



தைச் சுற்றி மக்கள் கூடினர். குடியர்க்கேயுரிய உரத்த குரலில் பாடவும் முற்பட்டான். வேறிடத்தில் இசை வல்லாரின் பாடல் கேட்டுநின்ற மக்களும் இங்குக் கூடிப் போந்து கைதட்டி ஆர்ப்பரித்தனர்.

மகளிர் நாணிக் குன்றினர். ஜார்ஜ் பெருஞ்சீற்றமுற்றான். "அடகடவுளே! வா ஜோஸப், எழுந்து போவோம்" என்றான். பெண்கள் எழுந்தனர்.

காட்டுச் சிங்கம் போல் துணிச்சலுடையவனாய் ஜோஸப் ரெபக்காவின் இடுப்பைக் கையால் சுற்றி இழுத்தபடி "நில்லடி என் செல்லக்கண்ணே" என்றிரைந்தான். ரெபக்கா திடுக்கிட்டாள். ஆயினும் அவனது பிடிப்பிலிருந்து விலகமுடியாதவளானாள். சுற்றி நின்றவர்களின் நகைப்பொலி இருமடங்காயிற்று. ஜோஸப்போ தொடர்ந்து குடிக்கவும் காதற் பேச்சுக்களைக் கொட்டவும், பாடவும் தலைப்பட்டான். கண்ணைச் சிமிட்டிக் குவளையை மக்களெதிரே அசைத்தபடி "துணிச்சலுண்டாயின் யாரேனும் என் மதுவின் ஒரு பகுதியைக் குடித்துப் பாருங்கள்" என்றான்.

கயவனொருவன் இவ் வழைப்பினை ஏற்று முன் வந்தான். ஜார்ஜ் அவனைத் தடுக்க எழுந்தான். பூசல் நிகழ்வதுபோல் தோன்றியது. நல்லகாலமாக டாபின் அங்குத் தோன்றி "விலகிப் போங்களடா மடையர்களே" என்றுரைத்துத் தன் தோளால் கூட்டத்தினரை நெட்டித் தள்ளினான். அவனுடைய குஞ்சத் தொப்பியையும் கடுந் தோற்றத்தையும் கண்ட கூட்டம் அக்கணமே ஓடி மறைந்தது.

"எங்கே போய்விட்டாய் டாபின்" என்றபடி ஜார்ஜ் அவன் கையிலிருந்த காஷ்மீர் சால்வையை

எடுத்து எமீலியாவின் தோளிற் போர்த்தினான். தொடர்ந்து, "சற்றே உதவிசெய், ஜோஸப் உன் பொறுப்பு. நான் பெண்களை வண்டியிலழைத்துச் செல்கிறேன்" என்றான்.

ஜோஸப் குறுக்கிட்டுத் தடுக்க எழுந்தான். ஜார்ஜின் கைவிரல் அவனை ஒரு தள்ளுத் தள்ளியது. அவன் மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க நாற்காலியில் விழுந்தான். ஜார்ஜின் உதவியொடு மகளிர் வண்டியிலேறினர். ஜோஸப் தன் கையை முத்தமிட்டவாறே அவர்களுக்கு விடை கொடுத்தனுப்பினான். பின்னர் டாபினது கையைப் பற்றி "இப்போது போகிறாளே அவளை நான் உள்ளத்தில் வைத்துத் தொழுகிறேன். என் நடத்தையால் அவள் மனமுடைந்து போயிருப்பாள். எப்படியாயினும் நாளைக் காலையிலேயே அவளைத் தேவாலயத்துக்குக் கூட்டிச் சென்று மணப்பேன்" என்றெல்லாம் புலம்பலானான். இந்தக் குறிப்பினைப் பயன்படுத்தியே டாபின் அவனை வாடகை வண்டியிலேற்றி அனுப்பி வைத்தான்.

**பெக்கியின் ஏக்கம்**

மாடிப் படிகளில் ஏறியபோது எமீலியா தன் தோழியைத் துன்பந் தோய்ந்த விழிகளாற் பார்த்தாள். இருவரும் தத்தம் அறைக்குப் போயினர். "நாளை உறுதியாக அவர் மணமொழி கொணர்வார். 'என்னுயிரே' என்று நான்கு முறை என்னை அழைத்தார். எமீலியாவின் முன்னிலையிலேயே என் கையைப் பற்றி அழுத்தினார். கண்டிப்பாய் நாளை மணமொழி பேசுவார்"—இவ்வாறு ரெபக்காவின் நினைவு சென்றது. எமீலியாவும் அவ்வாறே நினைத்தாள். மணப்



பெண்ணின் தோழியாக விளங்கும் போது தான் எவ்வுடை யுடுப்பது, தன் அண்ணிக்கு என்ன பரிசு வழங்குவது, அடுத்துப் பின் நிகழும் தன் மணவினை—இவற்றையெல்லாங் கற்பனை செய்திருப்பாளென்பது தவறாது.

**இரக்கமற்ற பகடி**

இரவு விடிந்தால் தன் துன்பமும் விடியுமென்று கருதினாள் ரெபக்கா. இரவும் விடிந்தது. தன் அறையில் ஜோஸப் வருத்தம் தாளாமல் முனகிக் கொண்டிருந்தான். 'நோயாளி' அருகிலமர்ந்து டாபின் தேற்றினான். இந்நிலையிலேயே ஜார்ஜ் அவ்வறையிற் புகுந்தான். அச் 'சுழிப்பயல்' "உடம்பு எப்படியிருக்கிறது, ஜோஸப்? எலும்பொன்றும் முறியவில்லையே? வாயிலில் ஒரு கண் வீங்கிய நிலையில் ஒரு வண்டிக்காரன் நிற்கிறான். உன் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப் போவதாக ஆணையிடுகிறான்" என்றான்.

"என்ன சொல்கிறாய்? சட்டப்படி நடவடிக்கையா?" ஜோஸப்பின் குரலில் உயிரே இல்லை.

"ஆமாம். நேற்றிரவு அவனை 'அடித்து நொறுக்கி'னாயாமே? என்ன, டாபின், உண்மைதானே?"

டாபின் ஜோஸப்பிடம், "ஆமாம், வண்டிக்காரனிடம் உன் திறமையைக் காட்டத்தான் செய்தாய்" என்றான்.

ஜோஸப் இருக்கையில் சாய்ந்தவாறே "உணர்ச்சி பொங்கிவிட்டால் முரடனாகி விடுகிறேன் என்பது உண்மைதான்" என்றான். அவன் முகஞ்சுளித்த தோற்றங் கண்டு டாபினும் தன்னையடக்க முடியாதவ

னுன். அவனும் ஜார்ஜும் அறையெலாம் எதிரொலிக்கும் வகையில் ஒருமிக்கச் சிரித்தனர்.

கிட்டிய வாய்ப்பினை ஜார்ஜ் இரக்கம் சிறிதுமின்றிப் பயன் படுத்தலானுன். ஜோஸப் ஒரு பேடி என்பது அவன் எண்ணம். ஜோஸப்—ரெபக்கா திருமணப் பேச்சு அவன் உள்ளத்தை உறுத்திக் கொண்டிருந்தது. அரசர் திருப்படையில் அலுவலனுன தான் மணக்கப் போகும் குடும்பத்துள் ஒருவன் ஒரு தாழ்குடிப் பெண்ணை — செல்வமும் செல்வாக்குமற்றவளை — அற்ப 'ஆசிரியை'யை மணப்பதா? ஜார்ஜ், மீண்டும் பேசினுன். "பூங்காவில் உன்னைக் கண்டு நகைக்கக் கூடியவர் எவருமில்லை. நீதான் கதறினுய். குடிவெறியில் உச்சத்தொனியில் பாடவுஞ் செய்தாயே?"

"என்ன பாடினேன்?" என்ருன் ஜோஸப்.

"உணர்ச்சி வயப்பட்ட பாட்டு ஒன்று பாடினுய். அவள் பேரென்ன — ரோஸாவா — ரெபக்காவோ — எமீலியாவின் தோழி—அவளைச் செல்லக் கண்ணே என்றழைத்தாய்"

டாபினின் கையைப் பிடித்துக்கொண்டு, இரக்கமற்ற நெஞ்சினனுய் ஜார்ஜ், ஜோஸப்பே கண்டு நடுங்கும் வகையில் முன்னிரவு நிகழ்ச்சியை நடித்துக் காட்டலானுன். டாபின் "போதும், விடு. அளியன்" என்று கெஞ்சியும் நிறுத்தினு னல்லன்.

அங்கிருந்து கிளம்பிய ஜார்ஜ் ரஸ்ஸல் சதுக்கத்துக்குச் சென்ருன். அங்குச் செட்லியின் மாளிகையில் இருவேறு சாளரம் வழியே இருவேறு முகம் 'வழி பார்த்திருப்பக்' கண்டு நகைத்தான். எமீலியாவும் ரெபக்காவும் தத்தம் காதலர் வரும் வழிமேல் விழி வைத்திருந்தனர்.



ரெபக்கா படியினின்று இறங்கி எதிர்ப்பட்ட போது, அவளுடைய அழகு ஜோஸப்பை மயக்கியதின் விளைவினை ஆர்வத்தோடு எடுத்துரைத்துப் பகடி செய்தான், ஜார்ஜ்.

அவன் பேசப் பேச ரெபக்காவி னுள்ளத்தே அவனைப் பற்றி நம்பிக்கைக் கேடும் வெறுப்பும் வளர்ந்தன. அவற்றை வளர்க்கிருேமென்று அவன் எள்ளளவும் உணர்ந்திரான். 'என்னைப் பகடிசெய்து ஜோஸப்பிடம் சொல்லியிருப்பாளே? அவரை அச்சுறுத்தி விட்டாளே? ஒரு கால் அவர் வரமாட்டாரோ?' ரெபக்காவின் கண்களில் நீர்ப் படலம் படர்ந்து கழிந்தது. அவளிதயம் படபடவெனத் துடித்தது.

அன்று முழுதும் ஜோஸப் வரவேயில்லை. வரமாட்டான் என்பது எமீலியா அறிந்ததுதான். சூழ்ச்சி வல்ல ரெபக்கா வேலைக்காரனை ஜோஸப்பின் இருப்பிடத்துக் கேவினுள். ஜோஸப் முன்னொரு முறை கொடுப்பதாய்க் கூறியிருந்த ஏதோ ஒரு புத்தகத்தைப் பெற்று வருமாறும் அவர் உடல் நலத்தை உசாவி வருமாறும் சொல்லியனுப்பினுள். வேலைக்காரன் மீண்டு, "அவர் படுக்கையிற் கிடக்கிருர். இப்பொழுது தான் மருத்துவர் அங்குப் போந்தாராம். அவருடைய பணிமகன் சொன்னுன்" என்ருன். 'சரி, நாளை வருவார்' ரென்றெண்ணினுள் ரெபக்கா. ஆயினும் அது குறித்து எவரிடமும் ஒரு சொல்லும் பேசத் துணியாதவளாயிருந்தள்.

துன்பச் செய்தி

மறுநாள் இருவரும் வீற்றிருந்தபோது அவர்கள் வீட்டுப் பணிமகன் வழக்கமான இனிய முறுவலுடன் ஒரு புத்தகக்கட்டும் துண்டுக் கடிதமொன்றும் கொண்டு தோன்றினன்.

அதனைப் பிரிக்கும்போதே எமீலியாவின் உடல் நடுங்கியது.

"அன்புள்ள எமீலியா—புத்தகத்தை உனக்கு அனுப்பியுள்ளேன். உடல் நலமின்மையால் நேற்று வரமுடியவில்லை. இன்று வெளியூர் செல்கிறேன். என் சார்பில் பழகுவதற்கினிய குமாரி ரெபக்கா ஷார்ப்பிடம் வாக்ஸாலில் நான் நடந்துகொண்டமைக்கு மன்னிப்புத் தெரிவி. அக்கொடிய உண்டியால் தூண்டப்பட்டு நான் பேசியிருக்கக்கூடிய ஒவ்வொரு சொல்லையும் மறந்துவிட வேண்டுமென்றும் என்னை மன்னிக்க வேண்டுமென்றும் அவளிடம் சொல். உடல் மிகவும் ஆட்டங்கண்டு விட்டது. தேறியவுடன் சில திங்களேனும் ஸ்காட்லாந்துக்குச் செல்வேன்.

உன் அன்புள்ள
**ஜோஸப்"**

அது மரணவோலையாகவே பட்டது. எல்லாம் ஒழிந்தன. ரெபக்காவின் வெளிறிய முகத்தையும் சிவந்த கண்களையும் ஏறிட்டு நோக்கவும் துணியாத எமீலியா, கடிதத்தைத் தன் தோழியின் மடியிற் போட்டுவிட்டு எழுந்து தன் அறைக்குச் சென்று அழுது புலம்பத் தொடங்கினள்.



பணிப்பெண் அவளைத் தேற்றினள்: "இதையெண்ணி வருந்துகிறீர்களே! உங்களிடம் முன்பே சொல்ல விருப்பமில்லை. வீட்டில் எவரும் முன்னைப் போன்று அவளை விரும்புவதில்லை. உங்கள் தாயாருக்கு வந்த கடிதங்களையெல்லாம் அவள் படிப்பாள். என் கண்ணாலேயே பார்த்திருக்கிறேன். உங்கள் நகைப் பெட்டிகளையும் மற்றவர் பெட்டிகளையும் அவள் ஓயாமல் 'குடை'கிறாளாம். எனக்கு ஓர் ஆள் தெரிவித்தது. அவள் தான் உங்கள் வெள்ளை நாடாவினை எடுத்துத் தன் பெட்டிக்குள் வைத்திருப்பாள்."

"இல்லை. நான்தான் கொடுத்தேன்."

இதனாலெல்லாம் அப் பணிப்பெண்ணின் மனம் மாறிவிடவில்லை. "ஆசிரியைகளையே நான் நம்ப மாட்டேன். அவர்கள் உயர்குடிப் பெண்களைப்போல் மினுக்குவார்கள். இத்தனைக்கும் உங்களையும் என்னையும் விடக் குறைந்த ஊதியமே பெறுபவர்கள்."

பிரிவு

ரெபக்கா புறப்பட்டுச் செல்லவேண்டிய நேரம் வந்து விட்டது என்பது எல்லோருக்கும் தெளிவாயிற்று. எமீலியா ஒருத்திதான் அவ்வுண்மையை உணர மறுத்தாள். அவளும் தன் தோழிக்குப் பரிசளிக்க ஏற்றதொரு பொருளைத் தன் பெட்டிகளிலெல்லாம் துருவிப் பார்த்தாள். தந்தையிடம் சென்று அவர் தனக்குத் தன் வயதத்தனை 'கினி' தருவதாகச் சொல்லியிருந்ததனை நினைவு படுத்தினள். தனக்கு ஒரு குறைவுமில்லாததால் அத்தொகையை ரெபக்காவுக்கே கொடுக்குமாறு வேண்டினள். ஜார்ஜையும் ஒரு பரிசு வழங்குமாறு செய்து விட்டாள். அவன் விலை

யுயர்ந்த தொப்பி யொன்று வாங்கிவந்தான். அதனை ரெபக்காவிடம் கொடுத்தபோது, எமீலியா சொன்னாள்: "இஃது உனக்கு ஜார்ஜின் பரிசு. எவ்வளவு அருமையானதாகத் தெரிந்தெடுத்திருக்கிறார்! அவரையொத்த ஆடவர் ஒருவருமிலர்."

வெளிப்பட "ஒருவருமிலர்தாம். அவருக்கு என் நன்றியை எவ்வாறு சொல்வேன்" என ரெபக்கா விடையிறுத்தாளாயினும் ஜார்ஜ்தான் என் திருமணத்தைக் 'கலைத்தான்' என்று மனத்துக்குள் எண்ணினாள். அதற்கேற்பவே அவனிடம் 'அன்பு' செலுத்தினாள்.

புறப்படுதற்கான ஏற்பாடுகளையெல்லாம் அவள் அமைதியாகச் செய்தாள். தோழி அன்போடு வழங்கிய சிறுசிறு பொருள்களையெல்லாம் பொருத்தமான அளவு தயக்கங்காட்டியே ஏற்றுக் கொண்டாள். என்றென்றும் தாயாருக்கு நன்றி செலுத்துவதாக உறுதி மொழி கூறினாள். அவ்வம்மையாரோ அவளைக் காணக் கூசினராதலின் அவளும் அவருக்குத் தொல்லை யளிக்காமல் விலகியே இருந்தாள். ஜான் செட்லி பணமுடிப்பு வழங்கியபோது பணிவுடன் அவர் கையை முத்தமிட்டாள். எதிர் காலத்தில் அவரே தன் அன்பு நண்பராகவும் பாதுகாவலராகவும் விளங்குதல் வேண்டுமென்று இறைஞ்சினாள். அவளது செய்கை உள்ளத்தை உருக்குவதாயிருந்தது. கண்ட செட்லி மேலும் இருபது பவுனுக்குக் காசோலை எழுதவும் முற்பட்டார். ஆயினும் வாயிலில் அவரையொரு விருந்துக்குச் சுமந்து செல்ல வண்டி காத்திருந்ததால், ஏறிக்கொண்டு, "இவ்வூருக்கு வரும்போதெல்லாம் இங்கு வந்து விடு.......அடே! வண்டியை ஓட்டு" என்றார்.



இறுதியாக எமீலியாவிடமிருந்து பிரியும் கட்டம் வந்தது. அதற்குள் திரையை இறக்கிவிடலாமென்று கருதுகிறேன். அக்காட்சியில் பங்கு பெற்றவர் இருவர். ஒருத்தி உண்மையான துன்பத்தினள். மற்றவளோ திறமைசான்ற பெரும் நடிகை. அன்புத் தழுவல்—உருக்கக் கண்ணீர்—'அன்பினை எக்காலத்திலும் மறவாமல் இருப்பேன்' என்ற ரெபக்காவின் உறுதி மொழி—இவற்றுக்கெல்லாம் பின்னர்த் தோழியர் பிரிந்தனர்.

# 5. அரசியார் க்ராலியும் க்ராலி குடும்பமும்

### அரசியார் க்ராலி

எலிசபெத் அரசியார் தம் வழிச்செலவின் நடுவே க்ராலி எனும் ஊரில் காலையுணவுக்காகத் தங்கி அருளினர். அங்கு அவருக்குக் க்ராலி குடும்பத் தலைவரால் வழங்கப்பட்ட மதுவகை சுவை நிறைந்ததாய் விளங்கிற்று. விளைவாய் அரசியார் அதனை மாநகராக்கிப் பாராளுமன்றத்துக்கு உறுப்பினர் இருவரைத் தெரிந்தனுப்பும் உரிமையையும் வழங்கினர். அவர் திருப்பெயரால் அம்மாநகரும் 'அரசியார் க்ராலி' என்றே வழங்கலாயிற்று. கதை நிகழ்ந்த காலத்துப் பாழடைந்த ஊராகவே கிடந்தது. ஆயினும் திருநிறை பிட் க்ராலியிடம் எவரேனும் அப்படிக் கூறின் "நாசமாய்ப்போக. எனக்கு ஆண்டிற்குப் பதினையாயிரம் பவுன் வருவாயளிக்கிற ஊரா பாழடைந்த ஊர்! நீ நாசமாய்ப் போக" என்பார்.

### திருநிறை பிட் க்ராலி

திருநிறை பிட் க்ராலி அரசவைப் பெருமக்களுள் ஒருவர்; பாராளுமன்ற உறுப்பினர். அவருக்கு முதல் மனைவி வாயிலாக ஆண் மக்கள் இருவர் தோன்றினர். அவள் உயர்குடியில் பிறந்தவள். அவளோடு இல்லறம் நடத்தியதின் விளைவாய், அவளது மறைவுக்குப் பின் உயர்குடிப் பெண்ணை மணப்பதில்லையென்று முடிவு செய்தார் அவர். இரும்புச் சாமான்களில் வாணிபம் செய்த ஒருவரின் மகளை-ரோசா என்பவளை—இரண்டாந்தாரமாகக் கொண்டார். இவளுக்குப் பெண் மக்களிருவர் பிறந்தனர். இப்பெண்களுக்கு ஆசிரியையாகவே ரெபக்காவை அவர் அமர்த்தினர்.

ரெபக்கா வேலையில் சேர்வதற்காக அவர் அனுப்பிய ஆணை ஒரு பழைய அஞ்சலுறையின்மேல் எழுதப்பட்டிருந்தது. அதில் கண்ட சொற்கள் இவைதாம்:—
"குமாரி ரெபக்காவும் மூட்டை முடிச்சுகளும் செவ்வாக்கிழமை இவிடம் வரவேணும். மறுநாள் விடியக் காலமே திருநிறை பிட் க்ராலி அரசியார் க்ராலிக்குப் புறப்படுவார்.

காண்ட் பெருவீதி."

அரசியிடமிருந்து பட்டம் பெற்ற பெருமக்கள் எவரையும் ரெபக்கா நேரில் கண்டறியாள். எமீலியாவின் இல்லத்திலிருந்து புறப்பட்டுத் தெருமுனையில் வண்டி திரும்பிய உடனேயே அவள் தன் கண்களின் நீரைத் துடைத்துக் கொண்டு 'பெருமகன்' எப்படியிருப்பார் என்று கற்பனை செய்யலானள். ரஸ்ஸல் சதுக்கத்து நண்பர்களைப் பொறுத்தவரை, 'சீச்சி இந்தப் பழம் புளிக்கும்' என்ற நரியையொத்த மனநிலையிலேயே அவள் இருந்தாள்.

வண்டி காண்ட் பெருவீதியில் புகுந்து பாழடைந்த ஒரு பெரிய வீட்டின்முன் நின்றது. கதவைத் திறந்துவிட்ட முதியவன் அருவருக்கத்தக்க உடையினன். பளபளக்கும் வழுக்கைத் தலையும் சிமிட்டும் 'பூனைக் கண்'களும், இளித்த வாயுமுடையவன்.

"அம்மா உனக்குக் குடிக்கக் காசு தருவார்கள்" என்று வண்டிக்காரன் சிபாரிசு செய்த பிறகே அவன் ரெபக்காவின் 'மூட்டை முடிச்சுக்களை' உள்ளே எடுத்துச் சென்றான்.

"இரவு சாப்பிட்ட பிறகே வந்திருப்பாய்...." என்றான் அம் முதியவன். "திருநிறை பிட் க்ராலி எங்கே?" என்றாள் ரெபக்கா மிடுக்காக.

"அவர்....அவர்....நான்தான் திருநிறை பிட் க்ராலி ....ஐயமிருந்தால் அதோ வருகிறாளே நாட்கூலி அவளிடம் கேட்டுக்கொள்.'' அப்போது அங்குப் போந்த பணிப்பெண் அவரிடம் சுங்கானும் புகையிலையும் கொணர்ந்து கொடுத்தாள். புகையிலை வாங்கி வரவே அவளை அனுப்பியிருந்தார். ''மிச்சம் ஒரு பார்த்திங்' உண்டே? எங்கே?'' என்றார் அவர்.

அக்காசினை விட்டெறிந்து விட்டுப் பணிப்பெண் சொன்னாள்: "இதோ! பெருமக்கள்தாம் ஒரு 'பார்த்திங்குக்கு' 'அடித்துக் கொள்'கிறார்கள்."

''ஒரு நாளைக்கு ஒரு 'பார்த்திங்' என்றால் ஆண்டிற்கு ஏழு 'ஷில்லிங்'. ஏழு 'ஷில்லிங்' என்பது ஏழு 'கினிக்கு' வட்டி! 'பார்த்திங்'கைப் பேணு. 'கினி'கள் தாமாகவே சேர்ந்து விடும்'' என்றாரே அந்தப் பாராளுமன்ற உறுப்பினர்!

பின் அவரே தம் கைப்பட அடுப்புப் பற்றவைத்து இரவுச் சாப்பாட்டினைச் (ஒரு துண்டு ஆட்டுக் குடலும் ஒரு வெங்காயமும்) சித்தப் படுத்தினார். அவ்வுணவைச் சரிசமமாக இரு பங்கு வைத்துப் பணிப் பெண்ணுக்குக் கொடுத்துத் தாமும் உண்டார். உறங்கச் செல்லுமுன், அவர் ரெபக்காவிடம் ''காலை ஐந்து மணிக்கு ஆயத்தமாயிரு....இப்போது இப் பெண்ணுடனேயே படுத்துக் கொள். பெரிய கட்டில்தான். இருவீரும் படுத்துக் கொள்ளலாம். என் முதல் மனைவி உயிர்விடும்போது அக்கட்டிலில்தான் கிடந்தாள்....சரி. போய்ப் படுங்கள்'' என்றார்.

மறுநாள் காலை நான்கு மணிக்கே பணிப்பெண் ரெபக்காவை எழுப்பிவிட்டாள். புறப்படுதற்கு ஆயத்த



மாகும்படி கூறியபின் வெளியிற்சென்று ஒரு வண்டியை வாடகைக்கு அமர்த்தி வந்தாள். குடிமயக்கத்தில் எவனாவது ஓர் இளைஞன் அதிக வாடகை தரமாட்டானா என்றெண்ணி அவ்வண்டிக்காரன் அவ்விடியல் வேளையிலும் காத்து நின்றானோ என்னவோ! அதுதான் அவனுடைய எண்ணமென்றால் அவன் முற்றிலும் ஏமாற்றமே அடைந்தான். ஏனெனில் இவ்வுயர்குடிப் பெருமகன் உரிய வாடகை தவிர ஒரு 'பென்னி'கூட அதிகம் கொடுக்க மறுத்துவிட்டார். அவனுக்கு ஏற்பட்ட சிற்றத்தில் அவன் சாமான்களை லண்டனில் இறக்கி வைக்கும்போது ரெபக்காவின் பெட்டிகளைச் சாய்க்கடையில் எறிந்தான். "சட்டத்தின் துணை கொண்டு உரிய வாடகையைப் பெறுவேன்'' என்று இரைந்தான். கூடிய கூட்டத்தினருள் ஒருவன் "அஃது இவரிடம் நடவாது. இவரே திருநிறை பிட் க்ராலி'' என்றான்.

''அப்படிச் சொல். வழக்குத் தொடுப்பதில் என்னை எவரும் வெல்வதியலாது'' என்றார் திருநிறை பிட்.

வண்டிக்காரன் அயர்ந்து விட்டான். "நான் வரும் வரை காத்திரு'' என்று பாராளுமன்ற உறுப்பினர் கட்டளை யிட்டபோது "அப்படியே, ஐயா'' என்பது தவிர அவன் வேறெதுவும் சொன்னானல்லன்.

வண்டியின் உள்ளே வேறுசில பயணிகளுக்கு இடமளிக்க நேர்ந்தமையால் ரெபக்கா வெளிப்புறத் திருக்கையில் கேம்பிரிட்ஜ் மாணவன் ஒருவனுடன் அமர்ந்து வழிச்செல்ல நேர்ந்தது. மட்பரியில் அவர்களுக்கென வேறொரு வண்டி காத்துநின்றது. அதனிலேறி அவர்கள் 'அரசியார் க்ராலி'க்குப் போய்ச் சேர்ந்

தனர். திருநிறைபிட் க்ராலி ரோசாவை இரண்டாம் மனைவியாகக் கொண்டாரென்று கண்டோம். அவளுக்கெனத் தனித்தன்மையோ, திறமையோ, கருத்தோ, தொழிலோ, பொழுதுபோக்கோ எதுவும் இல்லை. கழிந்துபோன தன் அழகு குறித்து எப்போதும் இரங்குவாள். நோயுற்றவளை யொப்பவே காட்சியளிப்பாள். அவளுக்கு ஆறுதல் கூறத் திரு க்ராலி ஒருவன்தான் இருந்தான்.

**மூத்தவன் திரு க்ராலி**

திருநிறைபிட்டுக்கு முதல் மனைவி வாயிலாக ஆண் மக்கள் இருவர் தோன்றினர் என்று கண்டோம். அவருள் மூத்தவனே திரு க்ராலி. ஆக்ஸ்போர்டில் பயின்றவன். குடும்பத் தலைவருக்கே யஞ்சாத பணி மக்கள் அவனைக் கண்டஞ்சுவர். அவன் வீட்டிலிருந்தால் திருநிறைபிட்டே அளவுமீறிக் குடிக்கமாட்டார். மனைவியைத் திட்டவும் மாட்டார். அவ்வளவு கண்டிப்பானவன் அவன். பணிமக்களுக்கு ஆன்ம விசாரணை வேண்டுமென்று வற்புறுத்துவான், அவன். வீட்டிலேயே அவர்களைக் கூட்டிவைத்துச் சமயச் சொற்பொழிவாற்றுவான். தந்தையாரும் அக் கூட்டத்தில் கலக்கும்படி செய்வான்.

**இளையவன் ராடன் க்ராலி**

இரண்டாமவன் ராடன் க்ராலி. உள்நாட்டுப் படையில் கேப்டனாக விளங்கினான். ஆடம்பரப் பிரியன். மற்போர், சூதாட்டம் முதலிய அக்காலச் செல்வர் களியாட்டங்களிலெல்லாம் அவன் தேர்ந்தவன். அண்ணனும் தம்பியும் ஒருவரையொருவர் மனமார வெறுத்தனர். உண்மையில் குதிரைமறவன் ராடன்



க்ராலி தன் குடும்பம் முழுதையுமே வெறுத்தான். அத்தை க்ராலியம்மையார் ஆண்டுக்கொருமுறை வரும்போது மட்டுமே அவனும் வீட்டுக்கு வருவான்.

**க்ராலி அம்மையார்**

திருநிறைபிட்டுக்கு மாற்றாந்தாய் வயிற்றுப் பிறந்த தமக்கையொருத்தி உண்டு. அவர்தாம் க்ராலியம்மையார். அவ்வம்மையார் தம் தாய் வழியின் திரண்ட செல்வத்தினை உரிமையாகப் பெற்றவர். திருநிறைபிட் தம் சொத்துக்களை அடைமானம் வைத்து அவரிடமிருந்த எழுபதினாயிரம் பவுனைக் கடனாகப் பெற விரும்பினார். க்ராலி அம்மையார் தம் பணத்தைப் பறிகொடுக்க விரும்பவில்லை என்று கூறி மறுத்துவிட்டார். ஆயினும் அதனிற் பெரும்பகுதியை ராடனுக்கும் திருநிறைபிட்டின் தம்பிக்கும் உயில் எழுதிவைக்கப் போவதாய்க் குறிப்பாகத் தெரிவித்தார். ஏனோ ராடன் சிறுபிள்ளையாயிருந்த போதே அவர் அவனிடம் பற்றுக் கொண்டார். அண்ணன் ஆக்ஸ்போர்டில் பயின்றான் என்பதற்காக அவனைக் கேம்பிரிட்ஜுக்கு அனுப்பி வைத்தார். ஆனால் அங்கு அவன் இரண்டாண்டுகளே தங்கிப் பயின்றான். அதன்பின் அப்பல்கலைக்கழக அலுவலவர்கள் அவனை வெளியேறுமாறு வேண்டிக் கொள்ளவே, அம்மையார் தம் செல்வத்தால் அவனுக்கு உள்நாட்டுப் படையில் அலுவல் பெற்றுக்கொடுத்தார். கல்லூரியிற் பயின்றபோதும், படையில் அலுவலனாக விளங்கியபோதும் அவன் பட்ட கடன்களையெல்லாம் அம்மையார்தாம் அடைத்தார். எவரேனும் அவனது ஒழுக்கக் கேடுபற்றிச் சொல்லத் தொடங்கினால் அவர் தம் செவியைப் பொத்திக் கொள்வார்.

அம்மையார் க்ராலிக்கு வருகிறார் என்றாலே திரு க்ராலி வெளியூர் சென்றுவிடுவான். ஏனெனில் அம்மையார்க்குச் சமயச் சொற்பொழிவு, ஆன்ம விசாரணை இவையெல்லாம் ஆகாதவை. அவர் திரு க்ராலியைப் பேடி என்பார். அவனும் பதிலுக்கு அவருடைய ஆன்மா மீட்க முடியாதபடி நாசமாகி விட்டதென்பான் தன் தம்பியின் மறுமையும் அம்மையாரது மறுமையைவிட அற்பமும் உயர்ந்ததன்று என்பான்.

இத்தகைய குடும்பத்தினரோடுதான் ரெபக்கா வாழலானாள். தன் நிலையை வளமாகவும் உறுதியாகவும் ஆக்கிக்கொள்ள முடிவு செய்தவளாய்த் தன் வாழ்க்கையில் குறுக்கிடக் கூடிய ஆற்றல் படைத்தவர்களையெல்லாம் நண்பர்களாக்கிக் கொள்ள முனைந்தாள்.

ரோசா பெருமாட்டி அவ்வாற்றலுடையவளல்லள். அவள் சொல்லை அவ்வீட்டில் எவரும் மதிக்க மாட்டார்கள். ஆதலால் அவளுடைய நல்லெண்ணத்தைப் பெறுவது தேவையற்றதும் நடவாததும் ஆகும் என்று கண்டாள் ரெபக்கா.

**ஆசிரியையும் மாணவியரும்**

தன் மாணவியரான சிறுமியர் இருவரது பாராட்டினையும் எளிதிற் பெற்றுவிட்டாள், அவள். கையாண்ட முறை மிகவும் எளிமையானது. சிறுமியரின் மூளையில் அதிகப் பாடங்களைத் திணிக்க முற்படாமல், அவர்களே தங்களுக்குக் கல்வி புகட்டிக் கொள்ளும்படி விட்டு விட்டாள். சொந்தக் கல்வி தவிர வேறெந்தக் கல்விதான் பயனுடையது? சிறுமியருள் மூத்தவளான ரோஸ் கதைப் புத்தகங்களில் பெரிதும் ஈடுபாடுடையவள். அரசியார் க்ராலியில் பழைய நூல்நிலையம் ஒன்றிருந்தது. அதனில்



பதினேழாம் நூற்றாண்டின் தலைசிறந்த நாவல்கள் கதைகள் நாடகங்கள் முதலியன (ஆங்கிலத்திலும், பிரெஞ்சிலும்) நிறைய உண்டென்னும் உண்மையை ரெபக்கா ஒருத்திதான் அறிவாள். ஆகவே ரோசுக்குக் கல்வி புகட்டுவது எளிதாயிற்று. ஒருமுறை பிரெஞ்சு மொழியில் அமைந்த நாடக நூலை ரோஸ் படித்துக் கொண்டிருந்தாள். அதுகண்ட திரு க்ராலி திடுக்கிட்டான். 'பிரெஞ்சு மொழியின் உரையாடலில் இடம் பெறும் மரபுச் சொற்களையும் தொடர்களையும் கற்றுக்கொள்ளும் நோக்கத்துடனேயே அவள் அந்நாடகங்களைப் படிக்கிறாள்' என்று ரெபக்கா விளக்கம் சொன்ன பிறகே அவனது மனம் அமைதியடைந்தது. பிரெஞ்சு மொழியில் அவன் திறம்படப் பேசுவான். அதுபற்றி அவனுக்கு அளவிலாச் செருக்கும் உண்டு. அத்திறமையை ரெபக்கா அடிக்கடி பாராட்டி வந்ததும் அவன் பெரிதும் மகிழக்காரணமாயிற்று.

இளையவளான வயலட் முரட்டுத்தனமும் ஆரவாரமும் உடையவள். மரங்களிலேறிப் பறவைக் கூடுகளைக் கலைத்தல், குதிரைக் குட்டியிலேறிக் காடுமேடுகளிற் சுற்றுதல்—இவை அவள் பொழுது போக்குகளில் சில. அவளுக்கும் தமக்கைக்கும் ஓயாத பூசல்தான் நிகழும். இவற்றையெல்லாம் கண்டுபிடித்தாலும் ரெபக்கா ரோசாப் பெருமாட்டியிடம் சொல்லமாட்டாள். அப்பெருமாட்டி பெரியவரிடமோ, அதனினும் கேடாகத் திரு க்ராலியிடமோ சொல்லி வைத்தால் என்ன ஆகும்? தன்னிடம் ஒழுங்காக நடந்து கொள்ளுகிறவரை, அவள் செயல்களை எவரிடமும் சொல்வதில்லை என்றுரைத்து ரெபக்கா வயலட்டின் அன்பினைப் பெற்றுக் கொண்டாள்.

சமய ஞானியும் நடிப்பு ஞானியும்

திரு க்ராலியிடம் ரெபக்கா எப்போதும் பணிவோடும் அடக்கத்தோடும் நடந்துகொள்வாள். தன் தாய் ஒரு பிரெஞ்சுக்காரியாயிருந்த போதிலும் தனக்கு விளங்காத பிரெஞ்சுப் பகுதிகளுக்கெல்லாம் அவனிடமே விளக்கம் கேட்பாள். அவனும் அவள் மனங்கொள்ளும் வகையில் விளக்குவான். இவ்வகையிலேயே அன்றி அவளுக்கு ஆன்ம விசாரணை நூல்களைத் தெரிவுசெய்து வழங்கியும் உதவுவான். அவளும் அவன் சமயச் சொற்பொழிவுகளைக் கேட்டு உருகி நிற்பாள். அடிக்கடி கண்ணீரும் சொரிவாள். நன்றி தெரிவிக்கும் போது பெருமூச்செறிந்து விண்ணுலகை நோக்குவாள். இவற்றுலெல்லாம் அச் சமயஞானியும் 'எல்லாவற்றிற்கும் பிறப்புத்தான் காரணம். இங்குள்ள மக்களுள் ஒருவரேனும் என் சொற்களைக் கேட்டு உணர்ச்சி பெறுகிருர் அல்லர். ரெபக்கா மட்டும் உணர்ந்து கண்ணீர் வடிக்கிருளே! இம் மக்களுக்கு என் நடை மிக உயர்வாக இருக்கும். இனி எளிய நடையிற் பேசுதல் வேண்டும்...இவள் தாயார் உயர் குடியிற் பிறந்தவளாதலின் இவள் மட்டும் உணர்ந்து கொள்கிருள்' என்றெண்ணுவான்.

ரெபக்கா தன் தாயார் பிரெஞ்சு உயர்குடி ஒன்றிற் பிறந்தவளென்றே அவனிடம் சொல்லியிருந்தாள். கூத்தாடி என்று கூறியிருப்பின் அச் சமய ஞானியின் மனம் அதிர்ச்சியடைந்திருக்கும். தன் மூதாதையரைப் பற்றி அவள் கூறிய பல வரலாறுகளெல்லாம் அங்கு நூலகத்திலுள்ள ஓரகராதியில் இருக்கக் கண்டான் திரு க்ராலி. அப்போதும் அவள் கூறுவனவெல்லாம்



உண்மையாதலாலேயே அகராதியிலும் இடம்பெற்றுள்ளன என்று நம்பினுன் அவன்.

'ஆண்டை'யும் அடிமையும்

ஓரிருமுறை ரெபக்கா திருநிறை பிட்டுடன் வல்லாடக் கண்ட திரு. க்ராலி அவளைக் கடிந்திருக்கிருன். அது கடவுளுக்கு ஏற்காத விளையாட்டென்பான். அவளோ தன் அன்புத் தாயார் உயர் பெருங்குடி மக்களோடும் சமயத்தலைவர்களோடும் அவ்வாட்டம் ஆடுதலுண்டெனக் கூறித் தப்பித்துக் கொள்வாள்.

இப்படி வல்லாடுதலில் மட்டுமன்றி வேறு பல வழிகளிலும் திருநிறை பிட்டுக்கு ரெபக்கா உதவினுள். வழக்குகள் சம்பந்தமான கட்டுகளையெல்லாம் எல்லையற்ற பொறுமையொடு படித்துக்காட்டுவாள். அவருடைய கடிதங்களுக்குப் படியெடுத்துக் கொடுப்பாள். அவருடைய பிழைமலிந்த எழுத்துக்களை இக்கால மக்களுக்கு விளங்கும் வகையில் மாற்றுவாள். அவரோடு உலாவச் செல்லும்போது பண்ணை நிலபுலன்கள் முதலியவை பற்றிக் கருத்தொடு பேசுவாள்.

இவ்வாறு ஓராண்டுக்காலத்துக்குள் அவள் அவருடைய நம்பிக்கைக்குரியவளாகி விட்டாள். திரு. க்ராலி வீட்டிலில்லையென்றுல் அவள் இட்டதுதான் சட்டம் என்னுமளவு குடும்பத்தில் அவள் செல்வாக்கு உயர்ந்தது. மடைப்பள்ளி, இலாயம் ஆகிய ஈரிடத்துப் பகையையும் தேடிக்கொள்ளாத வகையில் அவள் பணிவோடும் விழிப்போடும் நடந்துகொண்டாள்.

அண்டை அயலில் வாழ்ந்த திருநிறைபிட்டின் உறவினர் சிலரை இப்போது படிப்போர்க்கு அறிமுகஞ் செய்யக் கருதுகிருேம்.

திருநிறை பிட்டுக்கு மாற்றாந்தாய் வயிற்றுப்பிறந்த தம்பி ஒருவர் உண்டென்றும், க்ராலி அம்மையார் தம் சொத்தில் ஒருபகுதியை அத் தம்பிக்கு எழுதி வைக்கக் கருதினர் என்றும் முன்னர்க் கூறினோம். அவர்தாம் மறைத்திரு பூட் க்ராலி. ஊரில் அண்ணனைவிட மிக்க செல்வாக்குடையவர்

**மறைத்திரு பூட்டின் மனைவி**

பூட் க்ராலியின் மனைவி மார்த்தா திறமைசாலி. அவர் தேவாலயத்திற் படிப்பதற்குரிய சொற்பொழிவுகளை யெல்லாம் அவள்தான் எழுதிக் கொடுப்பாள். குடும்பப் பாங்குடையவளாதலின் வீட்டுச் செயல்களில் பெரும்பகுதி அவளுடையனவே. வெளியிடங்களில்தான் பூட் உரிமையோடு பேசலாம்; செய்யலாம். வெளியிடங்களில் அவர் எத்தனை நாள் வேண்டுமெனினும் விருந்துண்ணச் செல்லலாம். உணவு, மது வகைகளின் விலையுயர்வை மார்த்தா நன்கறிந்திருந்தாலேயே இவ்வுரிமையை வழங்கினாள். அவள் கட்டும் செட்டுமாகக் குடும்பம் நடத்தியும் அவர் எப்போதும் கடனாளியாகவே விளங்கினார். படிப்புக்கு வாங்கிய கடனை யடைத்த நிலையில் அவர் குதிரைப்பந்தயத்தில் ஈடுபட்டதே காரணம். அவ்வப்போது க்ராலியம்மை நூறோ இருநூறோ கொடுத்துதவுவார். அம்மையார் சாவைத்தான் அவர் நம்பியிருந்தார். எழுபதினாயிரம் பவுனில் பாதியாவது அவருக்குக் கொடுக்காமலா போய்விடுவார் என்பார் அவர்.

இப்படியாக அண்ணன் திருநிறை பிட் க்ராலியும் தம்பி பூட் க்ராலியும் ஒருவர் 'குடுமி'யை மற்றவர் பற்றி நிற்கப் போதிய காரணங்களிருந்தன.



இத்தகு சூழ்நிலையில் ரெபக்காவையொத்த ஒருவர் அரசியார் க்ராலியில் குடிபுகுந்து படிப்படியாய் அங்கு எல்லோரது நற்பெயரையும் அடைந்துவிட்ட செய்தி, மார்த்தாவுக்குத் தெரியாமல் போகுமா? மாட்டுத் தொடையிறைச்சி திருநிறை பிட்டின் இல்லத்தில் எத்தனை நாளுக்கு உணவாயிற்று, ஒரு சலவைக்கு எத்தனை உருப்படி சேர்கின்றன என்பன முதல் திருநிறை பிட்டின் இல்லத்து ஒவ்வொரு செய்தியையும் அறிந்தவளல்லளோ, அவள்?

'பகைவர் பாசறை'யில் நிகழும் ஒவ்வொன்றையும் மார்த்தாவின் கழுகுக்கண்கள் கண்டன. நிகழவிருப்பவைகளையும் கூடக் கண்டுபிடித்தன. ரெபக்கா சிஸ்விக் மாலில் பயின்றவள் என்பதறிந்தாள், மார்த்தா. அவளும் அப்பள்ளியின் பழைய மாணவிதான். அவ்வுரிமை பற்றிப் பிங்கர்டன் அம்மையார்க்கு ஒரு கடிதம் எழுதினாள். பிற் குறிப்பில் ரெபக்காவின் முன் வரலாறு பற்றித் தெரிவிக்குமாறு வேண்டினாள். பிங்கர்டன் அம்மையாரும் தடையின்றி விடையெழுதினார். அதன் பிற்குறிப்பு இது;—"ரெபக்கா என் மாணவியருள் ஒருத்தியே. அவளுக்கு எதிராகச் சொல்ல எதுவுமில்லை. தோற்றந்தான் சற்றே அழகற்றது. என் செய்வது! இயற்கையின் செயலை நாம் கட்டுப்படுத்தக் கூடுமோ? மேலும் அவள் பெற்றோர் பழிப்புக்குரியவர். தந்தை ஓர் ஓவியர். பலமுறை நொடித்துப் போனவர். தாயாரோ —பின்னாளில்தான் அறிந்தேன்—ஒரு கூத்தாடி. எனினும் ரெபக்காவின் திறமை சாதாரணமானதன்று. அவளைத் தர்மத்துக்காகவே ஏற்றுக் கொண்டேன். அதுபற்றி இப்போதும் எனக்கு வருத்தமில்லை. அவளுடைய தாயார்

பிரெஞ்சுப் பெருமாட்டி யென்றும் புரட்சியின் கொடுஞ்செயலால் நாட்டைவிட்டு வெளியேறியவள் என்றும் என்னிடம் பொய்யுரைத்தனள். பிற்பாடு தான் அவள் மிக இழிந்த குடிமையும் ஒழுக்கமும் உடையவள் என்பது அறிந்தேன். தாயார் தரமும் ஒழுக்கமும் பரம்பரைக் குணமாக இவ்விளம் பெண் ணிடமும் வெளிப்படுமோ என்றுதான் அஞ்சுகிறேன். ஆயினும் இதுவரை அவள் கருத்துப் பிறழாமலேயே இருந்திருக்கிருள். திருமிறை பிட் க்ராவியின் உயர் குடிப் பெருமைக்கு மாசுபடும் வகையில் எதுவும் நிகழாதென்று நம்புகிறேன்.''

---

## 6. க்ராலி இல்லத்தில் க்ராலி அம்மையார்

ரெபக்கா எமீலியாவுக்கு எழுதிய கடிதத்தின் சில பகுதிகள் வருமாறு:—'' களையிழந்த இவ்வீட்டில் சில நாட்களாகக் களை ஏற்பட்டிருக்கிறது. க்ராலி அம்மை யார் இங்குப் போந்துளார். பார்வைக்கு வலிப்புக் கண்டவர்போல் தோன்றுகிருர். அவருடைய உடல் நலங்குறித்துத் தம்பிமார்கள் கவலைப் படுதலில் வியப் பில்லை. தம்பியர் இருவரும் அம்மையார்க்குத் திண்டு எடுத்துப் போடுவதிலும் காப்பி ஊற்றிக் கொடுப் பதிலும் போட்டியிடுவது கண்கொள்ளாக்காட்சி. அம்மையாரின் எழுபதாயிரம் பவுனுக்குள்ள ஆற்றல் தான் என்னே! தம்பியர் இடையே யிருந்த பகைகூட இப்போது மறைந்ததே!

### ராடனும் பெக்கியும்

''சமயபோதனை இப்போது நின்றிருக்கிறது. திரு. பிட் வெளியூர் போய்விட்டார். மாருக இளையவர் ராடன் க்ராலி இங்கு வந்திருக்கிருர். ஆறடி உயரம், கனத்த குரலில் பேசுவார். அடிக்கடி சூளுரைப்பார். பணிமக்களை நன்கு வேலைவாங்குவார். என்ருலும் அவர்கள் எல்லோரும் அவரை விரும்புகிருர்கள். காரணம் அவர் பணத்தை வாரியிறைப்பதுதான்.

''தந்தையைக் கேப்டன் வெறுக்கிருர். பல பெயரிட்டு அழைக்கிருர். பெண்களிடத்தில் அவர் நடந்துகொள்வது பற்றி ஊரெல்லாம் கெட்ட பெயர். தம் தோழர்களை வீட்டுக்குக் கூட்டி வருவார். விருப் பப்பட்டவர்களையெல்லாம் உண்ண அழைப்பார். தமக் கையின் மனம் நோவுமோ என்றும், வலிப்புக் கண்டு

அவள் இறந்தபின் சொத்துக் கிட்டாமற் போகுமோ என்றும் அஞ்சியவராய்த் திருநிறை பிட் இவற்றை யெல்லாம் பொறுத்துக்கொள்கிருர்.

"அன்ெருரு நாள் கேப்டன் எனக்களித்த பாராட்டினைக் குறிப்பிடாமலிருத்தல் கூடுமோ! ஒருநாள் மாலை, உள்ள படியே இங்கு ஆடல் நிகழ்ந்தது. உயர் குடிப் பெருமக்களும் அவர்தம் பெண்களும் பங்கு கொண்டனர். அப்போதுதான் ராடன் சொன்னர்: "அட, அந்தப் பெண் தூய சிறு அல்லிமலர்தான்." உன் அன்புத் தோழியைப் பற்றித்தான் அவ்வாறு சொன்னர். என்னேடு இரு நாடோடிஆடலும் ஆடி எனக்குப் பொருமையளித்தார்...."

பெக்கி பெற்ற நட்பு

க்ராலி அம்மையார் க்ராலி இல்லத்துக்குப் போந்து சிலநாட்களுக்குள்ளாகவே ரெபக்காவிடம் மயங்கிவிட்டார். ஒருநாள் மாலை வழக்கம்போல் வண்டியிற் 'காற்றுவாங்க'ச் சென்றபோது ரெபக்கா வையும் உடன் வருமாறு பணித்தார். மீண்டு வருவதற்குள் ரெபக்கா அம்மையாருள்ளத்தை அடிமை யாக்கி விட்டாள்.

திருநிறை பிட் இரவு ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்தார். அண்டையயலிலுள்ள உயர்குடிப் பெருமக்களை யெல்லாம் அழைத்திருந்தார். அவரிடம் க்ராலி அம்மையார் பேசினர்: "என்ன! ரெபக்கா ஒருங்கிருந்து உண்ணலாகாதா? பின் எவரோடு நான் உரையாடுவேன்? ரெபக்கா கட்டாயம் உடனிருத்தல் வேண்டும். அவள் ஒருத்தி தான் இவ்வட்டாரத்திலேயே நான் உரையாடுவதற்குத் தகுதியுடையவள்."



இக்கட்டளைக்குப்பிறகு ரெபக்கா விருந்தினரோடு கலந்துண்ணக் கீழே வரவேண்டுமென்று செய்தி பிறந்தது. அவளை அம்மையார் தம் அருகிலேயே அமர வைத்தார். விருந்து முடிந்து எல்லோரும் சென்றபின் அம்மையார் சொல்வார்: "என் அறைக்கு வா. ரெபக்கா! விருந்தாளிகள் கூட்டத்தை எள்ளி நகையாடுவோம்." அவர்களிருவரும் அவ்வாறே செய்து மகிழ்ந்தனர். பிறரை 'வலித்துக் காட்டு'தலில் ரெபக்கா வல்லவள். அம்மையார் மகிழ்ந்தார்: "ரெபக்கா! நீ உள்ளபடியே ஒரு புதையல். உன்னை என்னேடு லண்டனுக்கு அழைத்துச் செல்லவிரும்புகிறேன். ஆயின் 'அப்பாவி' ப்ரிக்சை நான் எவ்வளவு எள்ளி நகையாடினுலும் பொறுத்துக்கொள்வாள். நீ அத்தகையளல்லை. அறிவுக் கூர்மை மிகுதியுடையாய்."

இவ்விருந்தின் பின் ஒவ்வொரு நாளிரவும் அம்மையார் உணவுக்கு எழுந்தருளும்போது ராடன் க்ராலி அவரை அழைத்து வரவேண்டும் என்றும், ரெபக்கா திண்டினை எடுத்துக்கொண்டு பின்வர வேண்டுமென்றும் கட்டளையிட்டார். சில நாட்களில் ரெபக்காவின் கைகளைப் பற்றிக் கொண்டு உண்ணச் செல்வார். ராடன் திண்டுடன் பின் செல்வான். அம்மையார் சொல்வார்: "மூவரும் கூடியிருப்போம். நாம் மூவர்தாம் இவ்வட்டாரத்திலேயே உண்மைக் கிருஸ்தவர்கள்" அவர் கூறியது உண்மையெனில் அவ்வட்டாரத்தில் சமய உணர்ச்சியே மிகவும் வற்றிப்போய் விட்டது என்றுதான் சொல்லவேண்டும்.

சமயத்துறையில் மட்டுமின்றிப் பிறவற்றிலும் அவர் பரந்த மனப்பான்மை யுடையவர். அம்மனப்

பான்மையைக் கள்ளமில்லாமல் தாராளமாக அடிக்கடி வெளிக்காட்டுவார். ரெபக்காவிடம் சொல்வார்; "குடிப் பிறப்பில் என்ன இருக்கிறது? என் தம்பிகளைப் பார். அவர்களுள் ஒருவரேனும் அறிவிலோ வளர்ப்பிலோ உனக்கு நிகராவரா? உன்னுடைய எவருக்கு வரும்? திறமை தகுதிக்கேற்ற நிலை கிட்டுவதாயின் நீ ஒரு பெருமாட்டியாக விளங்கவேண்டும்...எந்த வகையிலும் நின்னை எனக்கு நிகரானவளாகவே மதிக்கிறேன்."

அக்காலத்தே நிகழ்ந்த சில கலப்புமணங்கள் நாட்டினிடையே பெரும் கிளர்ச்சியைத் தோற்றுவித்தன. அம்மையார் ரெபக்காவிடம், "என்னைக் கேட்டால் உயர்குடிப்பிறந்தவன் ஒவ்வொருவனும் தொழிலாளி மகளை மணக்க வேண்டும்... உன்னை இழுத்துக்கொண்டு பெருமகன் எவனாவது ஓடிப்போக மாட்டானா! நீ அழகிற் குறைந்தவளா?"

"அடடா! எடுபிடிகள் எத்தனைபேர் இருப்பார்கள்! எவ்வளவு இன்பமாயிருக்கும்!" — ரெபக்காவும் ஒப்புக்கொண்டாள்.

"அப்படியே ஏழைப்பயல் பணக்காரப் பெண்ணோடு ஓடிப் போகவேண்டும். ராடன் எவளாவதொருத்தியோடு ஓடிப் போக வேண்டுமென்று முடிவு செய்துவிட்டேன்"

"பணக்காரியுடனா? ஏழையுடனா?"

"என்ன இப்படிக் கேட்கிறாய்! நான் கொடுப்பது தவிர ராடனுக்கு ஒரு 'ஷில்லிங்கு' கூடக் கிடையாது. அவன் தன் செல்வநிலையைச் சீர்திருத்திக் கொண்டு உலகத்தில் செழிப்போடு வாழவேண்டும்."



"அவர் மிகவும் புத்திசாலியா?"

"புத்திசாலியா! குதிரைகள், தன்படையணி, வேட்டை, விளையாட்டு இவைதவிர உலகவிவகாரம் எதுவும் அறியமாட்டான். அவன் சிறப்படையத்தான் வேண்டும்..."

**கரவற்ற உள்ளம்!**

ஆடல் நிகழ்ச்சி குறித்துத் தன் தோழிக்கு ரெபக்கா எழுதியது முழுக்க முழுக்க உண்மையென்பதியலாது. ராடன் க்ராலி ஏற்கெனவே பலமுறை அவளைப் பாராட்டியிருக்கிறான். உலவச்செல்கையில் பத்துமுறை சந்தித்திருக்கிறான். நடைபாதைகள் தாழ்வாரங்களில் ஐம்பதுமுறை அவள் எதிரே நின்றிருக்கிறான். ஒருநாள் மாலையில் அவள் பியானோ வாசித்துக்கொண்டிருந்த போது இருபதுமுறை பியானோ மீது சாய்ந்து நின்றான். தன்னாலியன்ற மட்டும் எழுத்துப்பிழை நீக்கி, மனத்திற் பட்டவகையில் பலப்பல துண்டுக்கடிதங்கள் எழுதியனுப்பியிருக்கிறான். ரெபக்கா மீது அம்மையார் கொண்ட தனி அன்பினைக் கண்ணுற்றுப் பொறுமை கொள்வதற்குப் பதிலாக மார்த்தா அவளையும் ராடன் க்ராலியையும் தன் இல்லத்துக்கு அடிக்கடி வரவழைத்தாள்! மார்த்தா எவ்வளவு நல்லவள்! நிலவொளியில் அங்கிருந்து இருவரும் க்ராலிஇல்லத்துக்குத் திரும்பி வருவர். ஒருநாள் முதியவர் அக்காட்சியைத் தம் அறைச் சாளரம் வழியே கண்டுவிட்டார். "மெட்டில்டாவுக்காகப் (க்ராலி அம்மையாருக்காகப்) பொறுக்கிறேன். இல்லையென்றால் அக்கயவனை வீட்டினின்று அடித்துத் துரத்திவிடுவேன்" என்றார் அவர்.

நல்லமனம் கொண்ட மார்த்தா குதிரை மறவன் மேல் இரக்கம் கொண்டு அவன் ரெபக்காவைத் தன்

இல்லத்தில் கண்டுபேசுதற்கும் அவளோடு நடந்து வீடு திரும்புதற்கும் பலப்பல நாட்களில் வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுத்தாள். தன்னையும் ரெபக்காவையும் அவள் பிணைத்துவைப்பதற்கு அடிப்படையான காரணம் ஒன்று இருக்கவேண்டும் என்று அவன் மனத்திற் கூடப்பட்டது. இத்தனைக்கும் அவன் கூரிய அறிவுடையவனல்லன். ஒருநாள் மார்த்தா உதிர்த்த சொற்களைக் கேட்டபோதுதான் அவனது இருண்ட மூளையில் ஒளி பிறந்தது.

"ராடன்! இன்றைக்குச் சொல்கிறேன். ஒருநாள் உண்மையாகப் போகிறது. ரெபக்கா உனக்கு நெருங்கிய உறவினளாகப் போகிறாள்."

"என்ன உறவு சித்தி? அண்ணன் அவளிடம் அக்கறை காட்டுகிறானா?"

"ஆண்கள் கண்ணிருந்தும் குருடர்கள். பெருமாட்டி ரோஸாவுக்கு ஏதேனும் நேரிடுமாயின் ரெபக்கா உன் சிற்றன்னையாகிவிடுவாள். அதுதான் நடக்கப் போகிறது."

ஒரு சீழ்க்கையின் மூலம் தன் வியப்பினை வெளிப்படுத்தினான் ராடன். மறுத்துப்பேச இயலாதவனானான். தந்தை ரெபக்காவிடம் கொண்ட அன்பு அவன் கண்களுக்கும் தப்பவில்லை. திரும்பும் வழியில் மார்த்தாவின் விந்தைச் செயலுக்குக் காரணம் கண்டுவிட்டதாக அவன் எண்ணினான்: 'இது மிகவும் கெட்ட செயல். அந்த ஏழைப் பெண் க்ராலி பெருமாட்டியாகக் குடும்பத்தில் ஒருத்தியாகிவிடக்கூடாது; அவளது வாழ்வைக் கெடுக்க வேண்டும் என்பதே மார்த்தாவின் ஆவல்.'



ரெபக்காவைத் தனிமையிற் கண்டபோது, இது குறித்துப் பகடிசெய்தான். அவள் அவனைக் கடுமையாகப் பார்த்தாள். "சரி, அவர் என்னை விரும்புகிறார் என்றே வைத்துக் கொள்வோம். விரும்புகிறார் என்பதனை நானும் அறிவேன். மற்றவரும் அறிந்திருக்கின்றனர். என் பெயரைக் காப்பாற்றிக் கொள்ள வழி அறியேன் என்று நினைத்தீர்களா? ஏழை-எவர் துணையும் அற்றவள்-என்பதால் எனக்குத் தன்மானமே இல்லாமற் போமோ? செல்வர்களுக்குத்தான் அஃது இல்லை. நான் ஏழை ஆசிரியை என்பதற்காக எனக்கு அறிவும் உணர்ச்சியும் ஆன்ற குடிப்பிறப்பும் இல்லையென் றெண்ணினீர்களா? நான் 'மாண்ட் மாரென்ஸி' குடியில் தோன்றியவள். க்ராலி குடியைப் போல் மாண்ட் மாரென்சி குடி நல்லதன்று என்ற எண்ணமா? நான் வறுமையையும் புறக்கணிப்பினையும் தாங்கிக்கொள்வேன். ஆனால் சிறுமையையோ பழிப்பினையோ தாங்கமாட்டேன். அதுவும் உங்களிடமிருந்து வரும் பழிச்சொல்லை ஏற்கமாட்டேன்"

அவள் அழலானாள்.

"நிறுத்து, ரெபக்கா. என் உயிர்மீதாணை, உன்னைப் பழிக்கமாட்டேன். நிறுத்து, ரெபக்கா."

அவள் அறையிலிருந்து நீங்கியதோடு க்ராலி அம்மையுடன் வண்டியிலேறி வெளியேயும் சென்றுவிட்டாள். அன்றிரவு உண்டியின்போது ராடன் க்ராலியின் கண்சாடைகளும் தலையசைவுகளும் பயனற்றுப்போயின. பலநாட்கள்வரை அவள் அவனொடு பேசாமலிருந்தாள். இஃது அவனது ஆற்றாமையை மிகுவித்தது.

# 7. காதற் படலம்

### ஜார்ஜ் எங்கே?

ஜார்ஜ் ஒவ்வொருநாள் காலையிலும் தன் வீட்டிலிருந்து கிளம்பிவிடுவான். வாரத்தில் ஆறுநாட்கள் வெளியிடங்களில்தான் உண்பான். அதனால் அவன் தங்கைகளும் ஊராரும் அவன் எமீலியாவின் வீடே தஞ்சமெனக் கிடப்பதாக நினைத்தனர். ஆயின் அவனோ அங்கு எப்போதும் எமீலியாவுடன் இருப்பதில்லை. பல வேளைகளில் நண்பனைத்தேடி டாபின் ஆஸ்போர்ண் இல்லத்துக்கு வருவான். தங்கையர் "ஜார்ஜைப் பார்க்க வேண்டுமா? வீடுதப்பி வந்துவிட்டீர்கள். நாள் முழுதும் அவன் செட்லியின் வீட்டில்தான் இருக்கிறான்" என்பர். டாபின் கோணங்கித்தனமாய்ச் சிரித்துப்பேச்சினை மாற்றிவிடுவான். ஏனெனில் ஏற்கெனவே செட்லியின் இல்லத்து நிகழ்ந்தது அவன் நினைவிலெழும்.

ஜார்ஜைக் காணும் சாக்கில் அவன் அங்குச் சென்றான். எமீலியாதான் கவலை தோய்ந்த முகத்தோடு சாளரத்தருகே வீற்றிருந்தாள். சிறிது நேரம் எவ்வெவற்றையோ பேசியபின், "படையணி விரைவில் வெளிநாடு செல்லவிருப்பது உண்மையா? இன்று ஜார்ஜைப் பார்த்தீர்களா?" என வினவினாள்.

செய்தி உண்மையில்லை. ஜார்ஜை அன்றெல்லாம் அவனும் கண்டறியான். "ஒருகால் தங்கைமாருடன் இருப்பான். போய் அந்த ஊர்சுற்றியை அழைத்து வருகிறேன்."

அவள் விழிகளில் நன்றி நிறைந்தது. அவன் ரஸ்ஸல் சதுக்கத்தைக் கடந்து ஆஸ்போர்ண் இல்லத்துக்குப் போனான். எமீலியா காத்துக்கொண்டேயிருந்தாள். ஜார்ஜ் வந்திலன்.



### அன்புமனத்துத் துன்பம்

பெற்றோரது அரவணைப்பில் வாழ்ந்த அச்சிறு பறவையின் வாழ்க்கையில் புதினத் தலைவியொருத்திக்குரிய நிகழ்ச்சி எதுவும் நேர்ந்திலது. ரெபக்கா தன் சொந்தச் சிறகடித்துப் பறந்து திரிந்தாள். எத்தகைய சிறு கிளையாயினும் தத்தித் தத்தியமர்ந்தாள். பற்பல வலைகளிலும் சிக்காமல் தன் இரையைத் திறம்படக் கொத்திக் கொண்டாள். எமீலியாவோ தன் இல்லத்திலேயே ஒடுங்கிக் கிடந்தாள். எப்போதாயினும் மூத்தோர் துணையுடன் வெளியுலகினுள் புகுவாள். அவளுடைய தாயார் தம் காலைக் கடமைகளிலும், அன்றாடம் நண்பர்களைப் போய்ப்பார்த்தலிலும், கடைத்தெருவுக்குப் போய்ப் பண்டங்கள் வாங்கி வருவதிலும் மனநிறைவு கண்டார். தந்தையாரோ தம் வாணிபத்திலே மூழ்கியவராய் விளங்கினார். ஐரோப்பா முழுதும் போரால் அலைக்கழிக்கப்பட்ட காலம் அது. போர் குறித்துப் பலவேறு செய்திகள் நாளுக்கு நாள் வெளியாயின. ஒவ்வொரு சமயம் அவர் துன்பம் நிறைந்த முகத்தோடு வீட்டுக்கு வருவார். போர் அவருடைய வணிகத்தை எவ்வாறு பாதித்ததோ? போரைப்பற்றி எமீலியா சிறிதும் கவலைப்பட்டிலள். போர் முடிந்து உடன் படிக்கை ஏற்பட்டதனை அறிந்தபோதுதான் அவள் மகிழ்ந்து கைதட்டி ஆர்ப்பரித்தாள். இனி ஜார்ஜின் படையணி வெளிநாடு செல்லத்தேவையில்லை அன்றோ? எப்போதும் அவனையே எண்ணி எண்ணி அவளுள்ளம் துடியாய்த் துடித்தது.

அத் துடிப்பினைப் போக்கப் பெற்றோர் எதுவும் செய்திலர். அண்ணனோ வெளியூரில் ஒரு கைம் பெண்ணின் முற்றுகைக் கிரையாகிக் கிடந்தான். “ஜார்ஜ் காவல் படையிலன்றோ இருக்கிறார். ஓயாமல் இங்கு வருவதற்கு விடுமுறை கிட்டுமோ? அப்படியே லண்டனுக்கு வருவராயினும் அவர்க்கு எத்தனை நண்பர்கள் தங்கைமார் இருக்கிறார்கள்? அவர்களோடெல்லாம் அளவளாவுதல் வேண்டாவோ? பாசறையிலிருக்கும் காலத்திலும் அவர்க்கு, வேலையாற் களைப்பு ஏற்படாதோ? அதனால்தான் நெடுங்கடிதங்கள் எழுதுகின்றிலர்’—இவ்வாறு தன்னைத் தேற்றிக் கொள்வாள்.

ஜார்ஜின் கடிதங்கள் சின்னஞ்சிறியவாய்ப் படைஞனுக்கேயுரியவாய் விளங்கின எனின், எமீலியா அவனுக்கு எழுதியவைகளோ மிகமிக நீண்டவை. அவற்றை அவ்வாறே எடுத்து எழுதுவதாயினும் அவைமட்டுமே பல தொகுதிகளாயமையும்.

இந் நெடுங்கடிதங்கள் தொடர்ந்து வந்தமையால் ஜார்ஜ் தன் நண்பர்களின் பகடிக்கு இலக்கானான். (ஆகவே தான் தனித்திருக்கும் போதுதான் அக்கடிதங்களைத் தன்னிடம் கொடுக்க வேண்டுமென்று தன் வேலையாளுக்குக் கட்டளையிட்டான். ஒருமுறை அக்கடிதங்களில் ஒன்றினைக் கொளுத்தித் தன் சுருட்டினைப் பற்றவைத்தான். அதனை டாபின் பார்த்துவிட்டான். ஒவ்வொரு கடிதத்திற்கும் ஆயிரமாயிரம் வழங்க ஆயத்தமாயிருந்தான் டாபின் என்பது உறுதி.)

**நண்பனின் உதவி**

தனக்குத் திருமணம் உறுதி செய்யப் பெற்றதனை ஜார்ஜ் நண்பர்களிடம் மறைத்து விட்டான். ஆயின்



ஒரு பெண்தான் எழுதுகிறாள் என்பதனை ஒப்புக்கொண்டான். “இவள்தான் முதற் பெண் என்று சொல்லமுடியாது” என்றான் நண்பருள் ஒருவன். மற்றொருவன் “ஜார்ஜின் காதலி அரசியின் அவையினராய ஒரு பெருமாட்டி” என்றான். இன்னொருவன் “இல்லை இல்லை. அவள் தீயொழுக்கத்துக்குப் பேர்போன பாடினி” என்றான். இதனைக் கேட்ட டாபின் பொறுமையை இழந்தான். அவன் வாய்நிறைய முட்டையும் ரொட்டியும் வெண்ணெயும் இருந்தன; ஆயினும் மறுத்துப் பேசலானான்: “முட்டாளே! எப்போதும் பொருத்தமற்ற வம்புகளையே பேசுகிறாய். ஜார்ஜ் அரசவைப் பெருமாட்டியோடும் பாடினியோடும் ஓடிப்போகப் போவதில்லை. எமீலியா இவ்வுலகத்தில் பிறந்த அழகிகளிலெல்லாம் தலையானவள். நெடுங்காலத்துக்கு முன்பே இவர்கள் திருமணம் உறுதி செய்யப்பட்டு விட்டது. என் செவிப்பட எவரும் அவளைக் குறித்துப் பகடி பேசாதிருப்பாராக” அரைமணி நேரத்திற்குள்ளே செய்தி படைஞர் எல்லாரிடமும் பரவிவிட்டது.

மறைபொருள் வெளிப்பட்டமையால் ஜார்ஜ் சீற்றத்தோடு டாபினுடன் சண்டைபோடக் கருதியவனாய்ப் பாசறையுட் புகுந்தான்.

“என் செய்கைகளைப் பற்றிப் பேசுமாறு உன்னை எவர் அழைத்தார்கள்? படைஞர் அனைவரும் என் திருமணம் உறுதியாயுள்ளதை அறிந்துகொள்ளத்தான் வேண்டுமா? என் செய்திகளில் குறுக்கிட்டுக் குழப்பம் விளைவிக்க உனக்கு என்ன உரிமை?”

“எனக்கு என்ன தோன்றுகிறதென்றால்....”

"தோன்றுகிறது பாழாய்ப்போக. உனக்குக் கடமைப்பட்டுள்ளேன். அதனை நன்கு அறிவேன். என்னிலும் ஐந்தாண்டுகள் முதியவன் என்பதற்காக உன் பேச்சுக்களையெல்லாம் கேட்டுக்கொண்டிருக்க மாட்டேன்."

"உன் திருமணம் உறுதி செய்யப்பட்டுள்ளதா இல்லையா?"

"அதுபற்றி உனக்கோ மற்றவர்களுக்கோ என்ன அக்கறை?"

"அத் திருமணத்தை மானக்கேடென நினைக்கிருயா?"

"இக் கேள்வி கேட்பதற்கு உனக்கென்ன உரிமையென்பதை முதலிற் சொல்."

"அட கடவுளே! அத்திருமணம் நிகழவேண்டாதென்று தடுக்கப் போகிருயா?"

"வேறு வகையிற் சொல்வதாஞல் என் நாணயத்தில் உனக்கு நம்பிக்கையில்லை. அப்படித்தானே? நானும் பார்க்கிறேன். கொஞ்ச நாட்களாக உன் பேச்சு வரம்பு மீறுகிறது. இனியும் பொறுத்துக்கொள்ள மாட்டேன்."

"என்ன வரம்பு மீறிவிட்டேன்? ஓர் அருமைப் பெண்ணைப் புறக்கணிக்கிருய் என்றுதான் சொல்கிறேன். ஜார்ஜ். மாநகருக்குச் செல்லுங்கால் நீ அவளைக் கட்டாயம் பார்க்க வேண்டுமேயன்றிச் சூதாடுமிடங்களுக்குப் போகலாகாது என்கிறேன்."

"கொடுத்த கடனைத் திருப்பிக் கேட்கிருய். அவ்வளவுதானே?"



"ஆமாம், ஆமாம். எப்போதும் அப்படித்தானே கேட்பேன். இல்லையா? அள்ளிக் கொடுப்பவனைப்போல் பேசுகிருயே!"

"என்னை மன்னித்துவிடு டாபின். நூற்றுக்கணக்கான வழிகளில் நீ என் நண்பன். ராடன் க்ராலி சூதாட்டத்தில் என்னிடமிருந்த தொகையைப்பறித்துக் கொண்டபோது நீ உதவவில்லையேல் அடியோடு கெட்டிருப்பேன். ஆயினும் எதற்கெடுத்தாலும் என்னைக் கண்டிக்கலாகாது. நான் எமீலியாவைக் காதலிக்கிறேன். உள்ளக் கோவிலில் வைத்துத் தொழுகிறேன். இப்படி அடுக்கிக்கொண்டு செல்லலாம். சரி. சரி நாளையே கர்னலிடம் விடுமுறைபெற்று லண்டன் செல்வேன். எமீலியாவைக் காண்பேன். போதுமா?"

"உன்னேடு நெடுநேரம் சினங்கொள்வதியலாது ஜார்ஜ். அன்ஞெருநாள் உன்னைப்பற்றி எமீலியா என்னிடம் கேட்டாள். அப்போது அவள் முகத்தை நீ பார்த்திருந்தால் உன் சூதாட்டங்களுக்குத் தலைமுழுகியிருப்பாய்....போ. போய் அவளைத் தேற்று. அவளை மகிழ்விக்க ஏதாகிலும் செய். சிறிதளவு செய்தாலும் போதும்."

அதே நேரத்தில் ரஸ்ஸல் சதுக்கத்தில் திங்களை நோக்கியவாறே எமீலியா தன் காதலன் அப்போது என்ன செய்து கொண்டிருப்பான் என்று கற்பனை செய்தபடி இருந்தாள். பாசறைக் காவலரை மேற்பார்வையிடுவாஞே? புண்பட்ட நண்பஞெருவனுக்குத் தேறுதல் சொல்வாஞே? அறையில் தனிமையில் போர்க்கலையைக் கற்பாஞே?—இப்படிச் சென்றது அவள் நினைவு.

மேற்குறித்த உரையாடலுக்குப்பின் மூன்று நாள் ஜார்ஜ் தான் சொன்னபடி செய்பவன் என்று காட்டு பவனைப்போல லண்டனுக்குப் புறப்படலானான். கேப்டன் டாபின் அவனைப் பாராட்டினான். அப்போது ஜார்ஜ் சொன்னான்: "அவளுக்கு ஏதாவதொரு சிறு பரிசு வழங்க விரும்புகிறேன். கையில்தான் பணமில்லை. அப்பாவிடம் பெற்று வந்தால்தான் உண்டு." பொருள் முடையால் நண்பனது நல்லெண்ணம் பாழ் படக் கூடாதென்று முடிவுசெய்த டாபின் சிறு தொகையை வழங்கினான். சற்றுத் தயக்கத்தோடு அதைப் பெற்றுக் கிளம்பினான் ஜார்ஜ்.

காதலனும் காதலியும்

உள்ளபடியே எமீலியாவுக்குப் பரிசாக ஒரு பொருளைக் கொண்டு சென்றிருப்பான். ஆனால் வழியிலொரு கடையில் அழகிய சட்டைக் கொக்கியைப் பார்த்தான். அதனைத் தனக்கென வாங்கினான். பரிசுப் பொருளுக்குப் பணமில்லாமற்போயிற்று. அவனுடைய பரிசுகளையா எமீலியா விரும்பினாள்? அவன் தன் எதிரே நின்றபோது கதிரவனைக்கண்ட தாமரைபோல அவள் முகம் மலர்ந்தது. பலநாள் நினைவுத்துன்பத்தையும் அவனது ஒரு புன்னகையில் மறந்து விட்டாள் அவள்.

சிறிதுநேரம் அவர்கள் உரையாடினர். அவனுக்குக் கிட்டியதோ ஒருநாள் விடுமுறைதான். நகரத்தில் அவன் செய்து முடிக்கவேண்டிய 'வேலைகள்' பல இருந்தன. ஆகவே அவன் எமீலியாவை அழைத்துச்சென்று தன் தங்கையருடன் அளவளாவ விட்டுவிட்டுத் தன் 'வேலைகளை' முடிக்கச் சென்றான். வேலைகள் இவை



தாம்—உணவு விடுதிக்குப் போய் உண்டது, துணிக் கடையில் புதிய மேலங்கி வாங்கியது, சூதாடுமிடத்தில் தன் நண்பனோடு பதினொருமுறை ஆடி எட்டுமுறை வென்றது. அவன் இரவு உண்டிக்கு அரைமணி நேரம் தாழ்த்தே வீடு திரும்பினான்.

முதியவர் ஆஸ்போர்ண்

இதற்கிடையில் ஜார்ஜின் தந்தை வீடுதிரும்பினார். எமீலியா எழுந்து அவரை வணங்கினாள். அவரோ பதிலுக்கு வெடுவெடுப்பாகப் பன்றியைப்போல் ஒருமுறை உறுமினார். சுற்றுமுற்றும் பார்த்தார். அப்பார்வையில் 'இவள் எதற்கு இங்கு வந்தாள்' என்பது ஒலித்தது. அப்பொருளையறிந்த ஜார்ஜின் தங்கை ஒருத்தி, "ஜார்ஜ் வந்திருக்கிறான். வெளியிலே போனான். சாப்பாட்டுக்குத் திரும்பி விடுவான்" என்றாள்.

"அவன் வரும்வரை காத்திருப்பது இயலாது" என்றவாறே தமக்கேஉரிய இருக்கையில் அமர்ந்தார். உரிய நேரத்தில் அவர் சமையற்காரனை அழைத்துச் "சாப்பிடலாமா?" என்றார்.

"இன்னும் சின்ன ஐயா வரவில்லையே?"

"சின்ன ஐயா பாழாய்ப்போக. இந்த வீட்டுக்குத் தலைவன் நானா இல்லையா? உணவு படை."

எமீலியாவும் ஒருங்கிருந்து உண்டாள். உணவருந்தியபோது அவர் சில பொருள்கள் சமைக்கப்பட்ட முறை குறித்துக் கடிந்து பேசினார். சமையற்காரனை மறுநாளே நீக்கிவிடுவதாக அச்சுறுத்தினார். உண்டு முடித்தபின் மீண்டும் வாய்வாளாமையை மேற்கொண்டார். அவர் தோற்றம் முன்னிலும் கடுமையாயிற்று.

ஜார்ஜ் வீடுதிரும்பினான். இருப்பதனைப் படைக்கச் சொல்லியுண்டான். வாய் ஓயாமல் பேசினான். குறிப்பாக ஒருத்தி பெரிதும் மகிழ்ந்தாள்.

**தந்தையும் மகனும்**

தந்தையாரின் முகத்தோற்றம் ஜார்ஜுக்குத் திகிலையளித்தது. இப்படி வளைந்தேறிய புருவமும் கடுமையான பார்வையுமாய்த் தோன்றிடும் அவரிடமிருந்து எப்படிப் பணம் கறப்பது? அவனுக்கோ பணம் கட்டாயம் வேண்டும். தந்தையாரின் மதுவைப்புகழ்ந்து பேச்சினைத்தொடங்கினான். அப்புகழ்ச்சிதான் எளிதில் அவரை வயப்படுத்தும் வழியென்பது ஜார்ஜ் அறிந்ததே.

"இவ்வுயர்ந்த மதுவை யருந்தும்போதே நான் உன்னிடம் ஒரு முக்கியமான செய்திபற்றிப் பேசவிரும்புகிறேன்" என்றார் அவர். மதுக்கொணர மணியடித்தார்.

மாடியிலிருந்த எமீலியாவின் செவியில் அம்மணியொலி தீமைக் கறிகுறியாகவே பட்டது.

"எனக்கு ஒன்று தெரிந்தாக வேண்டும். உனக்கும் மாடியிலிருக்கிற அந்தச் சிறுமிக்கும் உறவு எப்படியுள்ளது?"

"பார்ப்போர்க்கே தெரியுமே அப்பா! தெளிவாக விளங்கும்."

"தெளிவாக விளங்குமென்றால்...."

"என்னை வற்புறுத்தாதீர்கள். நான் இயல்பாகவே அடக்கமுடையவன்....அவள் தன் உயிரையே என்மீது வைத்திருக்கிறாள். ஓரக்கண்ணால் பார்ப்பவர்கூட இதனையறிவர்."



"அது சரி. நீ...?"

"அவளை மணக்க வேண்டுமென்று நீங்கள் தாமே எனக்குக் கட்டளையிட்டீர்கள். இத்திருமணம் மூத்தவர்களால் உறுதி செய்யப்பட்டதுதானே? நான் என்றுமே நல்லபிள்ளையாய் நடந்து வருகிறேன்."

"ஆமாம் ஆமாம். நல்லபிள்ளைதான். கேப்டன் க்ராலி, டார்குவின் ஆகியவர்களோடு நீ செய்யும் செயல்களைக் கேள்விப்பட்டேன். எச்சரிக்கையாயிரு."

இப்பெயர்களை யெல்லாம் கேட்டவுடன் ஜார்ஜ் திடுக்கிட்டான். சூதாட்டச் செய்திகளுள் எவ்வெவற்றைத் தந்தை அறிவாரோ என்றஞ்சலானான். கிழவர் தொடர்ந்து கூறியவை அவனுக்கு ஆறுதலளித்தன.

"எல்லாம் பருவக் கோளாறு. இங்கிலாந்திலேயே உயர்வான நல்இனத்தோடு இணங்கியிருக்கிறாயென்பது தான் எனக்குள்ள ஆறுதல்."

"கையிலே காசில்லாமல் நல்லினத்தோடு பழகுதல் இயலாது அப்பா. என் பணப்பையைப் பாருங்கள்..." என்றவாறே திறந்து காட்டினான். எமீலியா பின்னிக் கொடுத்த அப்பணப்பையில் டாபின் வழங்கிய சிறு தொகையுள் ஓரேயொரு பவுன்தான் எஞ்சியிருந்தது.

"உனக்குப் பணத்தட்டு ஏற்படாது. பிரிட்டிஷ் வணிகரின் மகனுக்குப் பணத்தட்டு ஏற்படவே கூடாது; நாளை என் கணக்கரைப் போய்ப் பார். நல்லினம் என்றும் தீமை பயவாது என்பதறிவேன். அதனால் உனக்குப் பணம்கொடுக்க ஒருபோதும் முணுமுணுக்கமாட்டேன். ஒரே ஒரு செயலைத்தான் நீ விட்டுவிட வேண்டுமென்று வற்புறுத்துகிறேன். அதுதான் சூதாட்டம்."

"அப்படியே ஆகட்டும், அப்பா."

"சரி. மற்றொன்று எமீலியாவைப் பற்றியது. தரகு வணிகரின் மகளைவிட உயர்வான ஒரு பெண்ணை நீ மணந்தால் என்ன? உன் எண்ணம் யாது?"

"இது குடும்ப ஏற்பாடப்பா. நீங்களும் செட்லியும் நெடுங்காலத்துக்கு முன்பே முடிவு செய்த ஏற்பாடு."

"மறுப்பதற்கில்லை. ஆனால் மக்களின் நிலைமை மாறுபடுகிறது. செட்லியால்தான் நான் செல்வமுடையவனானேன் என்பதை மறவேன். வேறு வகையிற் சொன்னால் என் அறிவாலும் திறமையாலும் பொருள் தேடுவதற்கு அவர் உதவி செய்தார். நானும் என் நன்றியைக் காட்டி வருகிறேன். என் காசோலைப் புத்தகமே சான்றாகும். உன்னிடம் உண்மையைச் சொல்கிறேனே! அவரது வாணிபநிலை உயர்வாகப் படவில்லை. 'பாங்கு'கூட அவரைக் காணக்கூசுகிறது. ஒன்றுமட்டும் உறுதி. பத்தாயிரம் வரதட்சணை தருவதாகக் கூறினாரே அத்தொகை பெற்றாலொழிய நீ அவளை மணக்கக் கூடாது".

இதனைக் கூறியபின் அவர் செய்தித்தாளைப் பிரித்துப் படிக்கலானார். உரையாடல் முடிந்தது என்பதற்கு அறிகுறி அது.

**அடக்க எழுந்த அன்பு**

ஜார்ஜ் மாடிக்கு விரைந்தான். அன்றிரவு எமீலியாவைக் கண்ணுங் கருத்துமாய்ப் பேணினான். அவளிடம் மிக்க அன்போடும் மிக்க சுவையாயும் பேசினான். கிட்டாத பொருளாகப் போய்விடுவாளோ என்ற அச்சம் தான் அவனது காதலை மிகுவித்ததோ என்னவோ! என்றுமே சினங்கொண்டறியாத அவள், பணிமகன் தன்னை வீட்டுக்கு அழைத்துச்செல்ல விரைவிலேயே வந்ததுகண்டு ஓரளவு சினந்தாள். ஆயினும் அன்றைய நிகழ்ச்சியை நெடுநாள் எண்ணி மகிழ்ந்தாள்.



மறுநாள் அவளிடம் உருக்கத்தோடு விடை பெற்றுச் சென்றான் ஜார்ஜ். கணக்கரைப் பார்த்துக் காசோலை பெற்றுக்கொண்டு 'பாங்'கை அடைந்தான். அவன் நுழையும்போது ஜான் செட்லி வெறியேறிக் கொண்டிருந்தார். அவர் முகத்தில் படர்ந்திருந்த இருளோ அவர் தன்னைப் பார்த்தபோது அப்பார்வையில் நிறைந்த துன்பமோ அவன் கண்ணிற் பட்டிலது.

'பாங்'கிற் பெற்ற கற்றைத் தாள்களைப் பையில் திணித்துக்கொண்டு கிளம்பினான் ஜார்ஜ்

அன்று மாலையே எமீலியா அவனுக்கு உருக்கமானதொரு நெடுங்கடிதமெழுதினாள். அவள் நெஞ்சில் அன்பு பொங்கி வழிந்ததாயினும் 'தீமை நிகழப்போகிறது' என்னும் அச்சமும் இல்லாமற் போகவில்லை. 'ஆஸ்போர்னின் கடுந்தோற்றத்திற்குக் காரணமென்ன? தந்தைக்கும் மகனுக்கும் ஏதாவது பூசலா?' என்றெல்லாம் வினவினாள். தன் தந்தை கவலையேயுருவாக வீடு திரும்பிய தோற்றங்கண்டு வீட்டவரெல்லாம் திடுக்கிட்டது முதலியவற்றையும் எழுதினாள். மொத்தத்தில் அன்பும் அச்சமும் நம்பிக்கையும் உற்சாகமும் நிறைந்தனவாக நான்கு பக்கங்கள் எழுதியிருந்தாள்.

அதனைப் படித்த ஜார்ஜ், "அளியள் எம்மி! என் மீது எவ்வளவு அன்பு!.... இந்த மதுக்கலவை எத்தகைய தலைவலியை உண்டாக்கி விட்டது" என்றெண்ணினான். எம்மி உள்ளபடியே அளியள்தான்!

# 8. க்ராலி அம்மையாரின் இல்லம்

### அம்மையாரின் நோய்

ஏறத்தாழ இக்காலத்திலேயே லண்டனில் நல்லதொரு வசதியான மாளிகைமுன் ஒரு வண்டி போந்து நின்றது. க்ராலி அம்மையார்தாம் நோயுற்றவராய் அரசியார் க்ராலியினின்று மீண்டார். பூட் க்ராலியின் இல்லத்தில் அவர் ஒரு நாளிரவு விருந்துண்டார். அளவு மீறியுண்டு குடித்தார். சுடச்சுடக் கடல்நண்டிறைச்சியும் உண்டார். அதன்பிறகுதான் அவருடல்நலங் கெட்டது. நோயின் கடுமை கண்ட க்ராலியர் அனைவரும் எழுபதினாயிரம் பற்றி வருந்தலாயினர். திரு க்ராலி அவளை மறுவுலகத்துக்கு ஆயத்தப்படுத்தும் வகையில் அரிய நூல் சிலவற்றை அனுப்பினான். நல்லகாலமாக மருத்துவர் தக்க காலத்தில் போந்து அவளுக்கு ஊறுசெய்துவந்த கடல்நண்டுகளை அப்புறப்படுத்தி அவளை லண்டனுக்கு அனுப்பிவைத்தார்.

அனைவரும் க்ராலி அம்மையைக் கவனித்துக் கொண்டிருந்த அக்காலத்திலேயே திருநிறை பிட் க்ராலியின் மனைவி பேணுவாரற்றுப் படுத்த படுக்கையாய்க் கிடந்தாள். மருத்துவர் அவளைப் பார்த்து விட்டுத் தம் தலையை அசைத்துவிட்டார் (மருத்துவருக்குப் பணம் கொடுக்கவேண்டியதில்லை என்று அறிந்த பின்னரே திருநிறை பிட் அவரை வரவழைத்தார்.)

சிறுமியரும் தம் ஆசிரியையின் அரிய பாடங்களை இழந்தனர். ஏனெனில் ரெபக்காவின் தொண்டுகளில் மனத்தைப் பறிகொடுத்த க்ராலியம்மையார் அவளைத் தம்முடன் லண்டனுக்கு அழைத்துச் சென்றுவிட்டார்.



அம்மையாரின் தோழியாகிய பிரிக்ஸ் பொறாமைத் தீயில் கருகினாள்.

கேப்டன் ராடன் க்ராலி மறுநாளே அத்தையைக் காண லண்டன் போந்தான். பணிமகள் ஒருத்தி வழியே தன்வருகையை அம்மையார்க்கு அறிவித்தான். ரெபக்கா வெளிப்பட்டு அவனைச் சாப்பாட்டு அறைக்கு அழைத்துச் சென்றாள். அங்கு அவ்விருவரும் பத்து நிமிடங்கள் உரையாடினர். அம்மையாரின் நோய் குறித்தே உரையாடியிருப்பர் என்பதில் ஐயமில்லை.

### பெக்கியும் பிரிக்சும்

அன்று உண்ணும் வேளையில் ரெபக்கா பிரிக்ஸிடம் நயமாகப்பேசினாள்: "நீ இதைப் பெரிது பண்ணி வருந்துவது நன்றாயில்லை" என்று தொடங்கினாள்.

"என் அருமைத் தோழி நோயாய்க் கிடக்கிறாள். என்னைக்கூடப் பார்க்க மறுத்துவிட்டாளே." பிரிக்ஸ் அழுதுகொண்டே பேசினாள்.

"அப்படியொன்றும் கடுமையான நோயில்லை. அளவுமீறி உண்டதன் விளைதான். இப்போது எவ்வளவோ தாவிலை"

"என்னைப் பார்க்க மறுத்தாளே? இருபத்து மூன்று ஆண்டுகளாக வளர்ந்த நட்புக்கு இதுதான் பயனா?"

"ஏன் இப்படி அழுகிறாய்? என்னைப் போல் நீ பேணமாட்டாய் என்று அவர் நினைக்கிறார். அதனால் தான் உன்னைப் பார்க்க விரும்புகின்றிலர். இர

வெல்லாம் கண்விழித்து அருகிலிருப்பது எனக்கு மட்டும் மகிழ்ச்சி தருகிறதா? நீயே செய்து கொள் என்று விட்டுவிடுவேன். ஆயினும் நோயாளிகள் மனம் போலவே நடக்க வேண்டும். அவர் தேறி விட்டால் நான் போய்விடுவேன்."

"ஒருகாலும் நடவாது"

"எது? தேறுவதா? போவதா? பாரேன். இன்னும் பதினைந்தே நாளில் அவர் எழுந்து நடமாடுவார். நானும் என் மாணவியரிடம் மீள்வேன். அவர்கள் தாயார் நம் தோழியைவிடப் பெரிதும் நோய் வாய்ப்பட்டிருக்கிறாள். என் மீது பொறாமைப்படுதல் வேண்டா. நான் ஓர் ஏழைச் சிறுமி. உற்றார் உறவினர் அற்றவள். அம்மையின் அருளுக்கு உன்னோடு போட்டியிடும் எண்ணம் இல்லை. நான் போய்விட்டால் ஒரு கிழமைக்குள் என்னை மறந்து விடுவார். பல்லாண்டுகளாக உன் மீது வைத்த அன்புதான் நிலைக்கும். நாம் தோழிகளாகவே விளங்குவோம். எனக்கும் தோழியர் வேண்டும்."

இவ்வுரையாடலின் பின் இருவரும் கைபற்றிக் குலுக்கினர். எனினும் பிரிக்ஸ் தன் வருத்தத்தை முற்றிலும் மறந்தாளல்லள். அன்றிரவு அம்மையார் கவலையற்று உறங்கினாராதலால் மறுநாட்காலையில் எழுந்து இருக்கையில் அமரும் தன்மை பெற்றார். பிரிக்ஸ் அழுதது, கைக்குட்டையால் முகத்தைத் துடைத்தது முதலியவற்றை ரெபக்கா நடித்துக் காட்டினாள். அம்மையார் பெரிதும் மகிழ்ந்தார். சாவைப்பற்றிய அச்சமும் கவலையும் அவரை ஓயாமல் வருத்தும். அவற்றையும் அவர் மறந்தார்.



ராடன் க்ராலி நாள்தோறும் அங்கு வருவான். தன் அத்தையின் உடல்நிலை குறித்து ரெபக்கா சொல்லும் செய்திகளைக் கேட்பான். விரைவாகவே அம்மையாரின் உடல் தேறலாயிற்று. விளைவாகப் பிரிக்ஸ் அவரைப் பார்த்தற்கும் இடம் பிறந்தது. ரெபக்கா பயபக்தியோடு பிரிக்ஸைப் போல் நடித்துக் காட்டி அம்மையாரின் மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கினாள்.

ராடன் க்ராலி விடுமுறைபெற்று நல்லபிள்ளையைப் போல் அவ் வீட்டு முன்னறையிலேயே தங்கினான். அவன் தந்தையாரும் அவ்வப்போது போந்து தங்கினார். ஒருவரை யொருவர் கண்காணித்து வரலாயினர். நோயாளியைப் பேணுவதில் ஏற்பட்ட போட்டியோ என்னவோ! ரெபக்கா அவ்விருவரையும் ஒருங்காகவோ ஒவ்வொருவரையும் தனித்தனியாகவோ தேற்றுவாள்.

ராடனின் காதல்

ரெபக்கா தன் தொண்டுகள் அளித்த துன்பத்தை நெடுநாள் வரை எவரிடமும் சொன்னாள் அல்லள். உலகியல் நாட்டமும் தன்னலமும் மிகவுடையவள்—அருளையும் நன்றியையும் உணர்ந்தறியாதவள்—கடவுளையும் சமயத்தையும் கருதாதவள் ஆகிய ஒரு கிழவி நோயுற்றுச்சாவுக்கஞ்சிப் புரளும் காலத்து எவ்வளவு துன்பம் கொடுத்திருப்பாள் என்பதனைப் படிப்போரே கற்பனை செய்து கொள்ளலாம். ரெபக்காவின் முகம் சற்றே வெளிறி வாடியது. அவள் கண்களைச் சுற்றிக் கரும் வளையங்கள் சிறிதே தோன்றின. ஆயினும் அவள் முன்னறையுள் புகும் போதெல்லாம் புன்னகையோடும் புத்துணர்ச்சியோடும் பொருத்தமான உடையுடனும் தோற்றமளிப்பாள்.

அவ்வாறு தான் கேப்டன் ராடன் நினைத்தான். காதலெனும் குத்தீட்டி அவனது கனத்த தோலையும் ஊடுருவி விட்டது. போயும் போயும் அவன் தன் காதல் ரகசியத்தைச் சித்தி மார்த்தாவிடமா வெளியிட வேண்டும்? அவள் அவனைக் கடிந்து கொண்டாள்; அவனது மடமையை எடுத்துக் காண்பித்தாள். முடிவில் ரெபக்காவைப் போல் அறிவும் பண்புமமைந்த எளிய பெண்ணை இங்கிலாந்திலேயே காணமுடியாது என்றாள். அவன் தன் காதலால் அவள் வாழ்வைக் கெடுக்கக் கூடாது என்றும், இக்காதலை க்ராலி அம்மையார் ஒருபோதும் ஏற்கமாட்டார் என்றும் கூறினாள். தானே ரெபக்காவை ஒரு மகள் எனக் கருதி அன்பு செலுத்துவதாயும் தெரிவித்தாள். இருப்பினும் இவள் தான் ரெபக்காவும் ராடனும் தனியே கண்டுபேசுதற்கு வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுத்தாள் என ஏற்கெனவே பார்த்திருக்கிறோம்!

### திருநிறை பிட்டின் முயற்சி

தம் தமக்கையாரின் சொத்துக்களை இழக்க நேரும் என்ற அச்சத்தாலேயே திருநிறைபிட்க்ராலி ரெபக்காவை அவ்வம்மையாருடன் அனுப்பினார். இல்லையெனில் தம் மக்களது கல்வி கெடுதற்கு ஒருபோதும் இணங்கியிருக்க மாட்டார். ரெபக்கா இல்லாமையால் அவர்க்குத் தம் மாளிகையே ஒரு பாலை நிலமாகத் தோன்றியது. அவருடைய கடிதங்கள் படியெடுக்கப் படாமல் கிடந்தன. கணக்கு வழக்குக்கள் முடிக்கப் பெறாமல் நின்றன. கணக்கற்ற வீட்டுவேலைகள் கவனிப்பாரற்றுப்போயின. ஒவ்வொரு நாளும் அவர் திரும்பி வருமாறு ரெபக்காவுக்குக் கடிதம் எழுதினார். மக்களின்



கல்வி பாழ்படுதலைப்பற்றி க்ராலி அம்மையாருக்கும் உருக்கமாகக் கடிதங்கள் அனுப்பினார். அம்மையாரோ அவற்றை எள்ளளவும் பொருட்படுத்தினாரல்லர்.

### ஜார்ஜும் பெக்கியும்

ரெபக்கா, அம்மையார்க்குப் பலவகையில் ஆறுதலும் தேறுதலும் அளித்துவந்தாள். ஒருவாறு அம்மையார் தேறி ஊர் சுற்றத் தலைப்பட்டபோது ஒருமுறை ரெபக்கா, அவரை எமீலியாவின் இல்லத்துக்கு அழைத்துச் சென்றாள். எமீலியாவின் மேனியும் இனிய குரலும் அம்மையாரைக் கவர்ந்தன. அவளைப்பற்றித் தன் மருமகன் ராடனிடம் அன்றிரவு எடுத்துரைத்தார். அக்கணமே எமீலியாவுக்கும் ஜார்ஜுக்கும் திருமண உறுதி செய்யப்பட்டிருப்பதனை ரெபக்கா தெரிவித்தாள். கேப்டன் ராடன் ஏற்கெனவே ஜார்ஜை அறிந்தவன். இப்போது அவனை அம்மையாரில்லத்துக்கு அழைக்கவும் அவனோடு சூதாடவும் விரும்பினான். விருந்துக்கு எமீலியாவையும் ஜார்ஜையும் அழைக்க ஒப்புக்கொண்டார் அம்மையார். ஆயினும் சூதாடுவதற்குத் தம்இல்லத்தில் இடமளிக்க மறுத்து விட்டார். ராடன் சென்று ஜார்ஜை அழைத்தான். ஜார்ஜ் ரெபக்காவைப்பற்றி உசாவியது அவனுள்ளத்தே புயலைக் கிளப்பியது.

ஜார்ஜ் விருந்துண்ணப் போயிருந்த போது ரெபக்காவிடம், “புதிய இடம் அவளுக்கு ஒத்துவருகிறதா” என வினவினான். அவனால்தான் தன் முதல் காதல் முடியாக்காதலாகப் போயிற்றென்பதனை மறவாத ரெபக்கா அவன் செவியும் மனமும் கைப்பப் பேசினாள். பக்கத்தறையிலிருந்து கேட்டுக் கொண்

டிருந்த ராடன் க்ராலியின் மனப்புயல் ஓய்ந்தது; அவன் களிப்புற்ருன்.

ஜார்ஜின் எச்சரிக்கை

மறுநாள் ஜார்ஜ் ராடனை எச்சரித்தான். கோள் சொல்லும் பழக்கம் அவனிடம் இல்லையென்ருலும், அவன் ராடனிடம் 'ரெபக்கா சூதுக்காரி; நினைத்ததை முடிக்கும் பசப்புக்காரி' என்றெல்லாம் வருணித்து விட்டுப் "பெண்களைப்பற்றி நன்கு அறிவேன். உன்னை எச்சரிக்கிறேன். விழிப்பாயிரு" என்ருன்.

"நன்றி, தம்பி, நன்றி. நீ கண்ணில் விளக்கெண்ணெய்யை ஊற்றிக்கொண்டு இருக்கிருய் என்பது தெரிகிறது" என்ருன் ராடன். இருபத்து நான்கு மணி நேரத்துக்குள் ரெபக்காவிடம் ஜார்ஜ் கூறிய ஒவ்வொரு சொல்லையும் ஒப்புவித்தான். இஃது அவள் ஏற்கெனவே ஜார்ஜிடம் வைத்திருந்த 'மதிப்பினை'ப் பெருக்கியது.

ஜார்ஜ் எமீலியாவிடம் தான் ராடனை எச்சரித்தது பற்றிச் சொன்ஞன். "யாரைப் பற்றி?" என்ருள் அவள்.

"உன் தோழியைப் பற்றித்தான். ஏன் இப்படிப் பார்க்கிருய்?"

"ஐயோ ஜார்ஜ்! என்ன காரியம் செய்துவிட்டீர்கள்?" என்ருள் அவள். காதலால் கூர்மையாக்கப்பட்ட அவள் கண்கள் மற்றவர் காணுத ஒருண்மையை ஒரு நொடியில் கண்டுவிட்டன. எமீலியாவும் ரெபக்காவும் அம்மையார் இல்லத்து மாடியறையில் சிறிது நேரம் தனித்துப் பேசியவாறிருந்தனர். அப்போது, எமீலியா, தன் தோழியின் இருகைகளையும் பற்றி,



"ரெபக்கா, எல்லாம் எனக்கு விளங்குகின்றன" என்ருள்.

ரெபக்கா அவளை முத்தமிட்டாள்.

அவ் இரகசியம் பற்றி அதற்குமேல் ஒரு சொல் லேனும் அவர்கள் பேசிக் கொண்டனரல்லர். ஆயினும் விரைவிலேயே அது வெளிப்பட வேண்டுமென்று விதியிருக்கிறதே!

திருநிறை பிட்டின் மணப்பேச்சு

இவை நிகழ்ந்து சிலநாட்களில் திருநிறைபிட்க்ராலி மீண்டும் தபுதார நிலை எய்திவிட்டார். ரோசாவின் மனம் எப்போதோ மரத்துப் போயிற்று. இப்போது உடலும் விறைத்தது. சாகும் நேரத்தில் திரு க்ராலி வழங்கிய சொற்களே அவளுக்கு ஆறுதலளித்தன.

ரோசா பெருமாட்டியின் மறைவுக்குப்பின் ஒரு நாள் காலை, க்ராலியம்மை தம் இல்லத்தமர்ந்து ஒரு பிரெஞ்சுப் புதினத்தைப் படித்துக் கொண்டிருந்தார். ரெபக்கா சாளரம் வழியே நோக்கியவள், திருநிறை பிட்டின் வருகையைக் கண்டு, உணர்த்தினள். க்ராலி அம்மையார் அவரைப் பார்க்க விருப்பமில்லாதவராய்ப் புதினத்தில் மூழ்கிவிடவே, ரெபக்கா கீழிறங்கி, அவரிடம் "அம்மையார் நோயுற்றுள்ளார். உங்களைப் பார்ப்பதியலாது" என்ருள்.

"அதுவும் நல்லதுதான். நான் உன்னைப் பார்க்கவே வந்தேன், பெக்கி. என்னேடு தாழ்வாரத்துக்கு வா" என்ருர். இருவரும் அங்குப் போய்ச் சேர்ந்தபின் அவர் சொன்ஞர்: "நீ அரசியார் க்ராலிக்குத் திரும்பிவிடு." அவரது பார்வை ஏனே ஒரு புதுவகையாயிருந்தது. அவளையே இமையாமல் நோக்கினர்.

"விரைவில் வரலாமென்றே நம்புகிறேன். அம்மையார் தேறியவுடனேயே என் அருமைப் பிள்ளைகளிடம் திரும்புவேன்."

"கழிந்த மூன்று திங்களாக இப்படித்தான் சொல்லி வருகிறாய். இன்னும் அக்காவோடுதான் ஒட்டிக் கொண்டிருக்கிறாய். என்றாவது ஒருநாள் காதறுந்த செருப்பினைப்போல் உன்னையும் அவள் கழற்றி எறியப் போகிறாள். நான் சவ அடக்கத்துக்குப் போகிறேன். நீயும் அங்குக்கட்டாயம் வரவேண்டும். முடியுமா முடியாதா? சொல்."

ரெபக்காவின் இதயம் படபடத்தது. "எனக்குத் துணிவில்லை. உங்களோடு தனியே இருப்பது முறையாகாது என்றே நினைக்கிறேன்."

"மீண்டும் சொல்கிறேன். எனக்கு நீ தேவை. நீ இங்கு வந்த பிறகே உன் மதிப்பினை அறிந்தேன். வீடே குழப்பத்தில் மூழ்கிவிட்டது. வா, பெக்கி வந்துவிடு."

"எப்படி வருவேன்?"

"எப்படி விருப்பமோ அப்படி வா. விரும்பினால் க்ராலி பெருமாட்டியாகவே வந்துவிடு. போதுமா? வந்து என் மனைவியாய் விளங்கு. அதற்கேற்ற அறிவு உன்னிடமுள்ளது. குடிப்பிறப்பாவது, மண்ணாவது! நான் கண்ட பெருமாட்டிகளுள் எவளுக்கும் நீ தாழ்ந்தவளில்லை. வருவாயா மாட்டாயா?"

"ஐயோ, யாது சொல்வேன்?"

"சரி என்று சொல். நான் கிழவன்தான். ஆயினும் நல்லவன். உன்னைக் கண்கலங்காமற் பார்த்துக் கொள்வேன். நீயே பாரேன். உன் விருப்பம்போல் செலவழி.



விரும்பியதனைச் செய். உன் எண்ணம் போலவே யாவும் நடக்கும். உனக்கு வேண்டியவற்றை எழுதிவைக்கிறேன். இதோ பார்"—முதியவர் முழந்தாளிட்டு வனதேவதைபோல் கடைக்கண் நோக்கம் வழங்கினார்.

**"நான் மணமானவள்"**

ரெபக்கா திடுக்கிட்டுத் திகிலோவியமாய்த் திகழ்ந்தாள். எந்நேரத்தும் தன் மனநிலையை இழந்தறியாதவள் இப்போதிழந்தாள். ஒருபோதும் வடித்தறியாத உண்மைக் கண்ணீர் சொரிந்தாள்.

"ஐயோ கடவுளே! பெருமானே! நான் ஏற்கெனவே மணமானவள்" என்றாள்.

கேட்டவுடன் எழுந்த சீற்றத்தையும் வியப்பினையும் அடக்கியவாறு அவர் இரைந்தார்: "மணமானவளா? பகடி செய்கிறாய் பெக்கி, என்னைப் பகடி செய்கிறாய். ஒரு ஷில்லிங்கு கூடப் பணமில்லாத உன்னை எவர் மணக்கத் துணிவார்?"

"உள்ளபடியே மணமானவள்தான். அன்புடைப் பெருமானே! எனக்கு எவ்வளவோ நன்மை செய்தீர்கள். நன்றி கெட்டவள் என்று நினைக்காதீர்கள். உங்கள் பெருந்தன்மைதான் என் இரகசியத்தை வலிய வெளிக்கொணர்ந்தது."

"பெருந்தன்மை பாழாய்ப்போக. சரி, உன்னை மணந்தவன் யாவன்? எங்கே மணம் நிகழ்ந்தது?"

"உங்களோடு ஊருக்கு வருகிறேன். என்றும்போல் உங்களுக்கு நன்றியோடு ஊழியம் செய்கிறேன். என்னை மட்டும் அரசியார் க்ராலியினின்று விலக்கிவிடாதீர்கள்."

"அப்படியென்றால் அந்தப் பயல் உன்னை விட்டு ஓடிவிட்டானா? சரி. விரும்பினால் என்னோடு வா. கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசையா? எப்படியாயினும் நான் உனக்கு நல்லதொரு வாய்ப்பினை அளிக்க முன்வந்தேன். நீ ஆசிரியையாகவே வர விரும்புகிறாய். சரி உன் எண்ணப்படியே யாவும் நடக்குமாக."

ரெபக்கா அழுது புலம்பினாள். துன்பமுகத்தோடு முழந்தாளிட்டு, "எனக்கு நீங்கள் அளிக்க முன்வந்த பெருமையை நினைக்கும்போது என் உள்ளமெல்லாம் நன்றியுணர்வு நிறைகிறது. உங்கள் மனைவியாக விளங்கத்தான் முடியாமற்போயிற்றென்றாலும் உங்கள் மகளாகவேனும் விளங்குவேன்" என்றாள். ஏற்கெனவே கதவுக்கு வெளியே நின்று ஓட்டுக்கேட்ட பிரிக்ஸ், க்ராலியம்மையாரிடம் சென்று திருநிறை பிட் க்ராலி முழந்தாளிட்ட கதையைச் சொன்னாள். அம்மையார் அவ்வறைக்கு ஓடோடிப் போந்தார். "அம்மா தான் முழந்தாளிட்டு நிற்கிறாள். ஐயா இல்லை. திருநிறை பிட்அவர்களே! நீங்கள் தண்டனிட்டதாகவன்றோ என்னிடம் சொன்னார்கள். இன்னொரு முறை அப்படிச் செய்யுங்கள். நான் இவ்வழகிய காதலிணையைக் கண்குளிரப் பார்க்கிறேன்" என்றார். அவர் குரலிலும் பார்வையிலும் ஏளனம் மேலோங்கி நின்றது.

### அக்காவும் தம்பியும்

ரெபக்கா எழுந்துகொண்டே சொன்னாள்: "அம்மா நான் அவருக்கு நன்றி கூறினேன். என்றும் அவர் மனைவியாவது இயலாது என்று தெரிவித்தேன்."



"என்ன! மறுத்தாயா?" என்றார் அம்மையார். அவர் வியப்பு முன்னிலும் பன்மடங்கு பெருகிற்று. கதவுக்குப்பின் நின்ற பிரிக்ஸின் கண்களும் உதடுகளும் கூட விரிந்தன.

ரெபக்கா துன்பம் தோய்ந்த குரலில் "ஆமாம், மறுத்தேன்" என்றாள்.

அம்மையார் தம் தம்பியிடம் திரும்பினார்: "என்ன! நீ மணமொழி பேசியதும் இவள் மறுத்ததும் உண்மையா?"

"ஆமாம்." திருநிறை பிட்டின் முகத்தே புன்னகை படர்ந்தது.

"இதனால் உன் உள்ளம் உடைந்துபோகவில்லை என்பது தெரிகிறது."

"எள்ளளவும் இல்லை" என்றார் திருநிறை பிட். ஃபிரெஞ்சுப் புதினங்களில் வரும் புதிர்களைவிட இது பெரும் புதிராய்ப் பட்டது அம்மையார்க்கு. அவர் தரையை ஓங்கி மிதித்தவாறு, "ஏனம்மா ரெபக்கா? இளவரசரே தம் மனைவியைச் சட்டப்படி விலக்கிவிட்டு வருவாரென்று காத்துக்கொண்டிருக்கிறாயா? எங்கள் குடும்பம் உன் தரத்துக்கு ஏற்றதில்லை என்னும் நினைவா?" என்றிரைந்தார்.

"அறைக்குள் நீங்கள் புகுந்தபோது என் நடத்தை அப்படியோர் எண்ணத்தையா தோற்றுவித்தது? என்னை இதயமற்றவள் என்று நினைத்தீர்களா? ஏழை-எவருமற்றவள் - என்பதற்காக என்னிடம் நன்றியுணர்வுகூட இராதென்று மதித்தீர்களா! ஐயோ நான் எப்படி இதனைத் தாங்குவேன்" என்றவாறு நாற்

காலியில் சோர்ந்து விழுந்து அழலானாள். கண்டவர் பலரது உள்ளமும் துன்பத்தால் உருகியது.

"என்னை நீ மணப்பினும் மணவாவிடினும் நீ நல்லவள்தான். என்றும் நான் உன் நண்பனாகவே இருப்பேன்" என்றபின் திருநிறைபிட் கிளம்பிவிட்டார். ரெபக்கா ஆறுதல் பெருமூச்செறிந்தாள். அவளுக்குத் திருமணமாகி விட்டதனை இன்னும் அம்மையார் அறிந்துகொள்ளவில்லையே! துன்பத்தை இன்னும் சில நாட்களுக்குத் தள்ளி வைக்கலாமே!

**அம்மையாரது ஆராய்ச்சி**

அன்று அம்மையாரும் பிரிக்ஸூம் ஒருங்கிருந்து உண்டனர். பிரிக்ஸின் மகிழ்ச்சியைச் சொல்லவும் வேண்டுமோ? அம்மையார் தெரிவித்தார்: "ரெபக்கா இப்படிச் செய்துவிட்ட பிறகு நம் குடும்பம் ஏதாவது செய்தாகவேண்டும். அந்த ஆள் யாரென்று கண்டுபிடி பிரிக்ஸ்."

பிரிக்ஸ் அவ்வாணையைத் தலைமேற்கொண்டு ரெபக்காவைத் தேற்றும் சாக்கில் அவளறைக்குச் சென்றாள். ரெபக்கா இரகசியக் காதல் உண்மையென்று ஒப்புக்கொண்டாள். வேறெதுவும் வெளிப்படுத்தியிலள். ஐந்து நிமிடங்களுக்கு மேல் பொறுக்க இயலாதவராக அம்மையாரே அவ்வறைக்குள் புகுந்தார். பிரிக்சை வெளியே அனுப்பிவிட்டு ரெபக்காவோடு உரையாடலானார். நேரிடையாகவே கேட்டார்: "என் தம்பியின் மணப்பேச்சினை நீ மறுத்தாயெனில் நல்லதொரு காரணம் இருக்கவேண்டும். எவனோ ஒருவனை எண்ணித்தான் மறுத்தாய். உன் உள்ளத்தைக் கொள்ளைக்கொண்ட அவன் யாவன்?"



"சரியாகச் சொல்லிவிட்டீர்களே! எவருமற்ற ஏழைப்பெண் காதலிப்பது உங்களுக்கு வியப்பளிக்கிறது இல்லையா? வறுமை காதலுக்குக்காவலாகாது என்றுதான் சொல்வார்கள். ஆகியிருக்கக் கூடாதா!"

"பெண்ணே! மனத்துக்குள் வைத்தே புழுங்குகிறாயே! என்னிடம் சொன்னால் உனக்கு ஆறுதல் கிட்டும்!"

"ஆறுதலளிப்பீர்கள் என்றுதான் ஏங்குகிறேன். எனக்கும் அது தேவை."

"சரி. அவன் யார்? அந்த எமீலியாவின் அண்ணனா? அவனைப்பற்றி முன்பு எப்போதோ சொன்னாயே! அவனை, இங்கே அழைத்து நானே கேட்டு மணமுடிக்கிறேன்."

"இப்போது எதுவும் கேளாதீர்கள். விரைவில் அறிந்துகொள்வீர்கள். நான் பெரியதோர் இக்கட்டில் சிக்கியுள்ளேன். ஒன்றே ஒன்றுதான் உங்களிடம் வேண்டுகிறேன். என்னிடம் எக்காலத்தும் அன்போடிருப்பதாய் உறுதியளிப்பீர்களா?"

கண்ணீருக்கிடையில் அம்மையார் அவ்வாறே உறுதிமொழியளித்துவிட்டு அறையினின்று வெளியேறினார்.

**நடப்பும் நினைப்பும்**

தனியே விடப்பட்ட ரெபக்கா அந்நாளைய விந்தை நிகழ்ச்சிகளை நினைத்துப் பார்க்கலானாள். தொடக்கத்தில் தன் செய்கைக்கு இரங்கினாள். அரியதொரு வாய்ப்பினை மறுக்க நேர்ந்ததே என்று உள்ளபடியே உள்ளழிந்தாள். ஆயினும் அவள் நெஞ்சுரமும் நேர்

மைத் திறமும் கொண்டவள். எற்றென்று இரங்குவ செய்தபின் அவ்விரங்குதலைச் செய்யாமையே நன்ருகுமென்று முடிவு செய்தாள். எதிர்காலத்தைப்பற்றியே முழுக்கருத்துஞ் செலுத்தத் தலைப்பட்டாள்.

முதலாவதாக அவளுக்கு மணமாகிவிட்டதென்பது அப்பட்டமான உண்மை. திருநிறை பிட்டும் அதனை அறிந்துவிட்டார். இன்றில்லாவிடினும் என்ருவது ஒரு நாள் அது வெளிப்பட்டே ஆகவேண்டும். இன்று வெளிப்பட்டதனல் என்ன தீமை? அவளை மணக்கக் கருதிய முதியவரே அவளுடைய மணத்தை அமைதியாய் ஏற்றுக்கொண்டார். அதுபோதாதா? க்ராலி அம்மையார் ஏற்பாரா என்பதுதான் சிக்கலானகேள்வி. ரெபக்காவின் உள்ளத்தே ஐயப்பாடுகள் எழுந்தன. ஆயினும் முன்பு அம்மையார் குடிப்பிறப்புப் பற்றியும் பிறவற்றைக் குறித்தும் கூறிய சீர்திருத்தக்கருத்துக்களை எண்ணி ஒருவாறு அமைதியுற்ருள். அன்றியும் அம்மையார் தம் மருமகனிடத்துக் கொண்ட அளப்பரிய அன்பினை நினைத்தாள். மருகன் செய்யும் எச்செயலையும் அம்மையார் மன்னித்து விடுவார் என்று தெளிந்தாள். இத்தகைய மனநிலையில் அவள் தன் தோழிக்கு ஒரு கடிதம் எழுதினள்:

**கடிதம் யாருக்கு ?**

“என் உயிர்த் தோழி! நாம் ஓயாமல் அஞ்சிய இக்கட்டான வேளை வந்துவிட்டது. இரகசியத்தில்பாதி வெளியாகிவிட்டது. நினைத்து நினைத்துப் பார்த்தேன். முழுதினையும் வெளியிடுதற்கு இதுவே தக்க வேளை; இன்றுகாலை திருநிறை பிட் என்னிடம் வந்தார். என்ன செய்தார் தெரியுமா? உரிய முறைப்படி மணம் பேசி



ஞர். பார்த்தீர்களா! இந்த ஏழைப் பெண் க்ராலி பெருமாட்டியாக ஆகியிருக்க முடியும்...யாருக்கோ அன்னையாகியிருப்பேன். அதற்குப் பதில்...கை நடுங்குகிறது. விரைவிலேயே எல்லோரிடத்தும் சொல்ல நேருமே என்றெண்ணும்போது உடலெல்லாம் நடுங்குகிறது.

“நான் மணமானவள் என்று திருநிறை பிட் அறிவார். யாரை மணந்தேன் என்று அறியாமையால் அவர் இப்போதைக்குக் கவலையற்றுத்தான் இருக்கிருர். அவரை மறுத்தது பற்றி உண்மையாகவே அத்தைக்குக் கோபம். ஆயினும் அவர்தம் அன்பும் அருளும் நான் அறியேனு! செய்தியைக் கேட்டவுடன் அவர் முதலில் திடுக்கிடுவார். அவரது வெகுளி கணப்போதே நிற்குமென்று நினைக்கிறேன். உங்கள் துடுக்குத்தனமும் கையாலாகாத்தன்மையும் தெரிந்த பிறகும் அவர் உங்களிடம் உயிரையே வைத்துள்ளாரே! உங்களுக்கு அடுத்தபடி அவர் எனக்குத்தான் தம் மனத்தில் இடம் கொடுத்துள்ளார் என்றெண்ணுகிறேன். அன்பே! நாம் வெற்றி பெறுவோம் என்று என்னுள்ளே ஏதோ ஒன்று சொல்கிறது. அருவருக்கத்தக்க அப் படையணியை நீங்கள் விரைவில் விட்டுவிடலாம். சூதாட்டத்தையும் குதிரைப் பந்தயத்தையும் வெறுத்துவிட்டு நல்ல பிள்ளையாக இருங்கள். எல்லோரும் பார்க் லேனிலேயே வாழலாம். அத்தை தம் சொத்துக்களையெல்லாம் நமக்கு எழுதிவைப்பார்...’’

ரெபக்காவின் கடிதம் பெற்ற தோழி யாரென்று படிப்பவர்கள் இதற்குள் அறிந்திருப்பார்கள். கேப்டன் ராடன் க்ராலியேயன்றி வேறெவர் இருத்தல்கூடும்?

# 9. துண்டுக் கடிதம்

**ஏற்பாடுகள்**

மறுநாள் பிற்பகல் தன் கணவனைத் தனியே கண்டு பேசியபோது 'நெருக்கடியான வேளை வந்து விட்டது; செயலில் ஈடுபடுங்கள்' என்று ரெபக்கா தெரிவித்தாள். 'படைகொண்டு சென்று தாக்கு' என்று கர்னல் கட்டளையிட்டிருப்பின் எவ்வளவு பணிவோடு ஏற்றுச் செயல்பட்டிருப்பானோ அவ்வளவு பணிவோடு செயற்பட அவன் ஆயத்தமாயிருந்தான். ரெபக்கா இட்ட கட்டளையும் கடுமையானதன்று. படைஞரின் பாசறைகளுக்கு அணித்தாய ஓரிடத்திலேயே குடிக்கூலிக்கு வீடமர்த்த வேண்டுமென்று தான் அவள் சொன்னாள். க்ராலியம்மையாரின் இல்லத்தைவிட்டு ஓடிவிடுவதென்று அவள் முடிவு செய்துவிட்டாள். ஏற்கெனவே பலமுறை அவன் அவளை அப்படிச் செய்யுமாறு வற்புறுத்தினான். ஆகலின் இப்போது அம்முடிவு அவனுக்கு மகிழ்ச்சியையே அளித்தது.

அன்றிரவு ரெபக்கா முன்னினும் இனிமையாகப் பாடினாள்; கேட்பவர் மகிழுமாறு உரையாடினாள். நொடிக்கு நூறுமுறை க்ராலிஅம்மையைக் கட்டித் தழுவினாள். திருநிறை பிட் மணம்பேசி வந்ததுபற்றிச் சிரிக்கச் சிரிக்கப் பேசினாள். முதுமைக் கோளாறுதான் அச்செயலுக்குக் காரணமென்றாள். தனக்கு என்றென்றும் நன்மை செய்பவராய அம்மையார்க்கு ஊழியஞ் செய்து கிடப்பதுதவிர வேறு ஆவலே இல்லை என்றாள். இதனைச் சொல்லும்போது அவள் கண்களில் நீர் பெருகியது. அம்மையாரும், "என் அன்பே, எத்தனை ஆண்டுகளாயினும் உன்னைப் பிரிய எனக்கு மனம்



வராது.... எனக்கு வயதாகி விட்டது. என்னைக் கவனித்துக்கொண்டு இங்கேயே தங்கி இரு" என்றார். அப்போது மட்டும் ராடன் க்ராலி அங்கிருந்து, தன் மனைவியொடு அம்மையார் காலில்விழுந்து மன்னிப்புக் கேட்டிருப்பானாயின் அவர் இமைப்போதில் எல்லாவற்றையும் மறந்திருப்பர். ஆயின் இக்கதையை நாம் எழுத வேண்டியதிருக்கிறதே! அதனால் அவ்விளம் மணமக்கட்கு அவ்வாய்ப்புக் கிடைக்கவில்லை.

**துண்டுக் கடிதம்**

மறுநாள் காலையில் வழக்கம்போல் வேலைக்காரச் சிறுமி ரெபக்காவின் அறைக்கதவைத் தட்டினாள். விடை கிடைக்காமற் போகவே மறுமுறையும் புடைத்தாள். அமைதி குலைந்திலது. ஆகவே அறைக்குள் புகுந்தாள் அச்சிறுமி. மேசைக்கண்ணாடிக்கு முன் பெரிய குண்டூசித்திண்டு ஒன்றில் துண்டுக் கடிதம் இருந்தது. அறையில் எவரும் இல்லை. சிறுமி அக்கடிதத்தை எடுத்துக்கொண்டு மாடிப்படி இறங்கினாள். பிரிக்ஸிடம் சென்று கொடுத்தாள். சிறுமி பள்ளிக்குச் சென்றதேயில்லை. துண்டுக் கடிதம் பிரிக்சுக்குத்தான் என்பதனை அவள் எப்படித்தான் அறிந்தாளோ? (பணத்தை வாரியிறைக்கும் பழக்கமேயில்லாதவளாகிய ரெபக்கா முதல்நாள் மாலை அச்சிறுமிக்குக் காரணமில்லாமலா மூன்று 'கினி'களைத் தூக்கிக் கொடுத்தாள்!)

"அன்பான பிரிக்ஸ்! உலகிலேயே அன்பிற்சிறந்தது உன்னுடைய உள்ளம். இரக்கங்கொண்டு என்னை மன்னித்துவிடு. நீர் வழியும் கண்ணோடும் குவிந்த கைகளோடும் வழுத்தும் நாவுடனும் இவ் அநாதைக்கு

ஆதரவும் அன்பும் காட்டிய இவ்வீட்டை விட்டுப் போகிறேன். கடமை அழைக்கிறது; கணவரிடம் செல்கிறேன். ஆமாம். எனக்குத் திருமணமாகிவிட்டது. என் அன்புக்குரிய தோழியரும் பாதுகாவலருமாய அம்மையார்க்கு இச்செய்தியை எப்படி அறிவிப்பது என்பதனை நீ நன்கு அறிவாய். ஏற்கெனவே நான் மணமானவள் என்று திருநிறை பிட்டிடம் கூறினேன். அவர் என்னை மன்னித்து விட்டார். அப்போதே எல்லாவற்றையும் நான் அவரிடம் சொல்லியிருத்தல்வேண்டும். அவருக்கு மருமகளாகி விட்டதாலேயே மனைவியாகும் தகுதியில்லை என்று தெரிவித்திருக்க வேண்டும். ஆமாம். அம்மையாரின் ராடன் தான் என் ராடன். அம்மையாரின் குழந்தைகளாகிய எங்களை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அவரிடம் தெரிவி.

உன் அன்புள்ள,
ரெபக்கா க்ராலி.

**உற்றுழிப் போந்த உறவினள்!**

பிரிக்ஸ் படித்து முடிக்கவும், மார்த்தா அவ்வீட்டினுள் புகுந்தாள். பிரிக்ஸ் மார்த்தாவிடம் கடிதத்தோடு சென்ருள்! மார்த்தா, "கடவுளாகவே பார்த்து என்னை நல்ல நேரத்தில் இங்கு அனுப்பியுள்ளார். க்ராலி அம்மையாரை அதிர்ச்சியிலிருந்து காப்பாற்றவே என்னை அனுப்பியிருக்கிருர். ரெபக்காமீது எனக்கு எந்நாளும் ஐயந்தான். அவள் வெறும் சூழ்ச்சிக்காரி. ராடன் க்ராலி ஓர் ஊதாரி. அம்மையார்க்கு அவனிடம் அவ்வளவு அன்பு ஏற்பட்டதுதான் எனக்கு இன்னும் வியப்பூட்டுகிறது. இப்போதேனும் அம்மையார் அக்கயவனின் உண்மைக் குணத்தை அறிந்து கொள்வாரல்லவா!" என்றெல்லாம் பேசிளுள்.



**மணச்செய்தி வெளியாதல்**

சற்றைக்கெல்லாம் க்ராலியம்மையார் மாடியினின்று இறங்கி வந்தார். வழக்கமான தழுவுதல் உசாவுதல்கள் நிகழ்ந்தன. அதன் பிறகுதான் மார்த்தாவும் பிரிக்சும் தங்கள் வேலையைத் தொடங்கினர்.

மார்த்தா தெரிவித்தாள்: "அவள் திருநிறை பிட்டை ஏற்க மறுத்தாளென்ருல்—மனத்தைத் தேற்றிக்கொள்ளுங்கள் — காரணம் அவளாலேயே தவிர்க்கமுடியாதது என்பதே."

அம்மையார் விடையிறுத்தார்: "காரணம் இருந்திருக்கத்தான் வேண்டும். அவள் வேறு எவனையோ விரும்பியிருப்பாள்."

இப்போது பிரிக்சு குறுக்கிட்டாள்: "விரும்பிளுளா! ஏற்கெனவே அவள் மணமானவள்."

"ஆமாம். ஏற்கெனவே மணமானவள்" மார்த்தா ஒத்தூதிளுள்.

அம்மையார் இரைந்தார்: "அவள் வந்தவுடனேயே என்னிடம் அனுப்புங்கள். என்னிடமே மறைத்தாளே! என்ன துணிச்சல்?"

"இப்போதைக்கு அவள் வரமாட்டாள்—மனத்தைக் கல்லாக்கிக் கொள்ளுங்கள்—அவள் நேற்றிரவே தப்பி விட்டாள்."

"ஆமாம். எனக்கொரு கடிதம் எழுதிவைத்து விட்டுப் போயிருக்கிருள். அவளுடைய கணவன்...." என்று நிறுத்திளுள் பிரிக்ஸ்.

"அட கடவுளே, பிரிக்ஸ் ஏன் அம்மாவை இப்படி வதைக்கிருய்? ஆர அமரச் சொல்லலாமே!"

"அவளுடைய கணவன் யார்?" என்றிரைந்தார் அம்மையார் சீற்றத்தோடு.

"ஓர் உறவினர்."

"திருநிறை பிட்டை ஏற்க மறுத்தாள். உடனே சொல்லிவிடுங்கள். என்னைப் பித்துக் கொள்ளச் செய்யாதீர்கள்."

"ஐயோ அம்மா! எப்படிச் சொல்வேன்! அவளை மணந்தவன் ராடன் க்ராலிதான்" என்றாள் மார்த்தா.

"ராடன் ரெபக்காவை—அனாதையை - ஆசிரியைத் தொழிலைப் பார்க்கவந்தவளை மணந்தானா? முட்டாளே! பிரிக்சு! வீட்டைவிட்டு வெளியே போ. மார்த்தா! நீதான் சதிகாரி. அவள் அவளை மணந்து கொண்டால் என் சொத்தெல்லாம் உனக்கு எழுதிவைப்பேனென்று நீ தான் இச்சதி வேலையைச் செய்திருக்கிறாய்."

"என்ன சொல்கிறீர்கள்? இக் குடும்பத்துள் ஒருவனை ஓவிய ஆசிரியரின் மகளை மணக்குமாறு நானா வற்புறுத்துவேன்?"

"அவளுடைய தாயார் மாண்ட் மாரென்சி குடியில் தோன்றியவள்" என்று கத்தினார் அம்மையார்.

"அவளுடைய தாயார் ஒரு கூத்தாடி. மேடைகளில் ஏறி ஆடியவள்" என்றாள் மார்த்தா அமைதியாக.

### திருநிறை பிட்டின் சீற்றம்

க்ராலி அம்மையார் அலறிய அலறலில் வீடே அதிர்ந்தது. அதன் பிறகு அவர் மயக்கமுற்றார். மார்த்தாவும் பிரிக்சும் அவரை மாடிக்கு எடுத்துச் சென்றனர். அக்கணமே திருநிறை பிட் அங்குப்போந்து, "பெக்கி எங்கே? எங்கே அவளுடைய பெட்டி படுக்கைகள்?



0111, 3MDC1,V A162

என்னோடு அரசியார் க்ராலிக்கு அவள் வருகிறாள்" என்றார்.

பிரிக்சு அவரிடம், "அவளுடைய களவுமணம் குறித்த வியத்தகும் செய்தியைக் கேள்விப் பட்டீர்களா?" என வினவினாள்.

"அதனால் எனக்கென்ன வந்தது? அவள் மணமானவள் என்றறிவேன். அவளை உடனே இறங்கி வரச் சொல். என்னைக் காக்க வைக்காதே".

"அவள் இங்கிருந்து ஓடிப்போய் விட்டாள் என்பது உங்களுக்குத் தெரியாதா? அம்மையாரே அதிர்ந்து போனார். அதுவும் ராடன் க்ராலிதான் அவள் கணவன் என்னும் செய்தி...."

அச் செய்தி கேட்டுத் திருநிறை பிட் வெகுண்டெழுந்து கொட்டிய வசைமொழிகள் எழுத்தில் வடிக்கவும் அருகதையற்றவை. பிரிக்சு நடுநடுங்கி அறையை விட்டு ஓடி மறைந்தாள். மறுநாள் அரசியார் க்ராலிக்கு மீண்ட திருநிறை பிட் வெறிகொண்டவர்போல் ரெபக்காவுக்கென விடுத்த அறைக்குள் புகுந்தார். அவளுடைய பெட்டிகளை உதைத்துத் தள்ளினார். உள்ளிருந்த தாள்களும் துணிகளும் பிறவும் வெளியிற் சிதறின. வேலைக்காரரின் குழந்தைகள் ஆளுக்குக் கொஞ்சமாக அள்ளிக் கொண்டனர்.

### கணவனும் மனைவியும்

அதே நேரத்தில் பிராம்ப்டன் எனுமிடத்தில் வாடகை வீடு ஒன்றினில் ரெபக்காவும் ராடனும் அருகருகே அமர்ந்திருந்தனர். ராடன் தன் இளம் மனைவியிடம் கேட்டான்: "ஆமாம். கிழவி மனம் மாறவில்லையென்றால்....?"

ADU ARCHIVES LIB No. 110343 EGMORE MADRAS

"நானே உங்களுக்கு அதிர்ஷ்டத்தை உண்டாக்குவேன்" என்றவாறே அந்த ரதி மன்மதனின் கன்னத்தைச் செல்லமாய்த் தட்டினுள்.

"எதனையும் சாதித்து விடுவாய் நீ. ஆமாம் உண்மைதான்" என்ருன் அவன், அவளது சின்னஞ் சிறு கையை முத்தமிட்டபடி.

ஒரு திங்களாகியும் கிழவியின் மனம் மாறவில்லை. அம்மையார் வீட்டுக்கு ராடன் சென்றபோதெல்லாம் வேலைக்காரன் உள்ளேவிட மறுத்தான். எழுதியனுப்பிய கடிதங்களோ பிரிக்கவும் படாமல் திரும்பிவந்தன. உடல் நலமின்மையால் அம்மையாரும் வெளிப்பட்டிலர். மார்த்தாவோ அவருடனேயே தங்கிவிட்டாள்; ஒரு போதும் அவரைவிட்டு அகலாமற் காத்தாள். மார்த்தாவின் உருவில் தங்கள் கேடுகாலமே அங்குக் குடியிருப்பதாக ராடனும் ரெபக்காவும் நினைத்தனர்.

"அரசியார் க்ராலியில் நம்மை அவள் ஏன் நெருங்கிப் பழகவிட்டாள் என்பது இப்போதுதான் விளங்குகிறது" என்ருன் ராடன்.

"எத்தகைய சூழ்ச்சிக்காரி!" ரெபக்கா பெருமூச் செறிந்தாள்.

"எவ்வாருயினும் இப்பழக்கத்தைக் குறித்து எனக்கு வருத்தமில்லை. உனக்கு....?"

அவளது முத்தந்தான் விடையாகக் கிடைத்தது. 'இவருக்கு மட்டும் இன்னும் கொஞ்சம் மூளையிருந்தால் இவரை எப்படி ஆளாக்கி விடுவேன்!' என்றெண்ணினுள் அவள்.



ஆயினும் ஒருபோதும் தன் எண்ணத்தை அவன் கண்டுகொள்ள இடமளிக்காமல் நடந்து கொண்டாள். அவன் கூறும் கதைகளை ஆவலொடு கேட்பது முதலிய பல சிறுபணிகளைச் செய்தாள். விளைவாய் அப் பழம் பெருங் கயவனும் மகிழ்வோடு அடங்கி நடக்கும் கணவனுக மாறினுன்; பழைய இனங்களையெல்லாம் மறந்தான்.

இவர்களது இல்லத்தில் கைப்பொருள் ஒன்று தவிர எல்லாம் நிறைந்திருந்தன. இத்தகைய நிலையில் தான் ஒரு நாள் அரசுப் பதிவிதழைப் பார்த்துக் கொண்டிருந்த ராடன் க்ராலி, லெப்டினன்ட் ஜார்ஜ் பணங் கொடுத்துக் கேப்டன் பதவியேற்ற செய்தியைக் கண்டு துள்ளினுன். கணவனும் மனைவியும் உடனேயே ரஸ்ஸல் சதுக்கத்துக்குப் புறப்பட்டனர்.

# 10. டாபின் தொண்டு

**இசைக் கருவி வாங்கியவர் யாவர்?**

ஜான் செட்லியின் வணிகம் 'நொடித்துப்'போயிற்று. அவருடைய வீடும் பொருளும் ஏலத்தில் விடப்பட்டன. ஏலப் பொருள்களுளெல்லாம் குறிப்பிடத் தக்கது ஒன்று உண்டு. சதுரவடிவான அச்சிறிய 'பியானோ'வை இளம்பெண்ணொருத்தி 'வாசித்து'ப் பார்த்தாள். அவள் சார்பில் ஒருவன் ஏலம் கேட்டான். ஆயின் அதற்குப் போட்டி ஏற்பட்டது. கடைசியில் அதனை ஏலத்தில் எடுத்தவனைக் கண்ணுற்றதும், "ராடன், அவர் நம் டாபின்தான்" என்றாள் அவ்விளம் பெண். ஆம். ரெபக்காதான் அப் பியோனவைப் பெற்றுவிட முயன்றாள். கணவன் புதிதாக வாங்கிக் கொடுத்த பியானோ அவளுக்கு அலுப்புத் தட்டியிருக்கும்; அல்லது தன் முதற் காதலின் நினைவுச் சின்னமாக அதனை வாங்கக் கருதியிருப்பாள். டாபினிடம் மேற்கொண்டு எதுவும் வினவும் முன் அவன் எப்படியோ நழுவிவிட்டான்.

அன்று மாலையே அவ்விசைக்கருவி லண்டனில் ஒரு சந்துக்குள்ளிருந்த சிறிய வீட்டினுள் சென்றது. அங்குத்தான் செட்லியின் குடும்பம் குடிபுகுந்திருந்தது. டாபின் அவ்வீட்டினுள் நுழைந்தபோது எமீலியாவின் தாயார் அவனை மகிழ்ச்சியோடு வரவேற்றார். 'ஜார்ஜ் தான் பியானோவை அனுப்பியிருப்பான். அவன்மட்டுமேனும் எங்களிடம் அன்போடிருக்கிறானே' என்று நினைத்தது அத்தாயுள்ளம். டாபின் அவ்வம்மையின் தவறான கருத்தை மாற்ற நினையாதவனாய் அவருடைய துன்பக் கதைகளையெல்லாம் செவிமடுத்தான். தான்



எமீலியாவைப் பார்க்க விரும்புவதாகத் தெரிவித்தான். மாடியிலிருந்து அவளை அவ்வம்மையே அழைத்து வந்தார். அவளுடைய பொலிவிழந்த தோற்றமும் ஒளி மழுங்கிய கண்ணும் டாபினைத் திடுக்கிட வைத்தன. ஓரிரு நிமிடங்கள் அவனுடன் உரையாடியபின் அவள் அவன் கையிலொரு சிறிய பொட்டலத்தை வைத்துவிட்டு "இதனைக் கேப்டன் ஜார்ஜிடம் கொடுங்கள். அவர் நலம்தானே? எங்களைப் பார்க்க வந்த உங்கள் அன்பினை எவ்வாறு பாராட்டுவேன்! புதிய வீட்டை நாங்கள் மிகவும் விரும்புகிறோம். சரி. களைப்பாயிருக்கிறது. மாடிக்குச் செல்கிறேன் அம்மா" என்றுரைத்த பின் செல்லலானாள். மகளோடு சென்ற தாயார் டாபினை ஏக்கத்தோடு திரும்பிப் பார்த்தார். அவரது வேண்டுகோள் வேறு தேவையா? அந்நல்லவன்தான் ஏற்கெனவே அவளுக்காக உயிரையும் கொடுக்க ஆயத்தமாயிருந்தானே!

பொட்டலத்தில் ஜார்ஜ் அவளுக்கு ஏற்கெனவே பலவேறு காலத்து வழங்கிய சிறு பரிசுகளும் ஒரு கடிதமும் இருந்தன. ஜான் செட்லியின் கட்டளைதான் காரணம்.

**பொருட்கேடும் நட்புக்கேடும்**

பொருளையெல்லாம் இழந்து நின்ற நிலையில் செட்லிக்கு முதற் பகைவராய் விளங்கியவர் ஜார்ஜின் தந்தை ஜான் ஆஸ்போர்ண்தான். இவரது உதவியாலேயே அவர் வணிகத்தில் செழித்துச் செல்வந் திரட்டினார். இவருடைய மகளுக்கும் அவருடைய மகனுக்கும் திருமணம் உறுதி செய்யப்பட்டிருந்தது. அத்தனையையும் மறந்துவிட்டு ஆஸ்போர்ண் செட்லியை

வெறுத்தார். தம் மகன் எமிலியாவைக் கண்டுபேச லாகாதென்று தடை விதித்தார். எமிலியாவைப் புன்மைக் குணமுடையவளென்றும், சூழ்ச்சி வல்ல குள்ளநரி என்றும் வருணித்தார்.

செட்லியும் சளைத்தவரா! ஆஸ்போர்ணையும் அவரது குடும்பத்தாரையும் நன்றி கெட்டவர்கள் என்றும், இரக்கமற்ற கொடியவர்களென்றும் பழித்தார். எக்காரணங் கொண்டும் தம் மகளை அக்கொடியவனின் மகனுக்கு மணமுடித்துக் கொடுப்பதில்லையென்று பேசினார். தம் மகள் ஜார்ஜை மறந்துவிட வேண்டுமென்றும் அவன் வழங்கிய பொருள்களையெல்லாம் திருப்பியனுப்பிவிட வேண்டுமென்றும் கட்டளையிட்டார்.

அவளும் சரியென்றாள். அவ்வாறே செய்யவும் முயன்றாள். அவனுடைய கடிதங்களையெல்லாம் எடுத்து ஒவ்வொன்றாய்ப் படித்தாள். ஏற்கெனவே அவை அவளுக்கு மனப்பாடமாகவே ஆகிவிட்டவைதாம். என்றாலும் அவற்றைப் பிரிவதரிது என்றுணர்ந்தாள். அவற்றைத் தன் இதயத்தோடணைத்துப் புலம்பலானாள். இரண்டொரு சிறிய அணிகலன்களை மட்டும்தான் பொட்டலமாகக் கட்டிக்கொடுத்தாள்.

**தூதனும் தங்கையரும்**

பொட்டலத்தையும் கடிதத்தையும் எடுத்துச் செல்லும் பொறுப்பினை டாபின் ஏற்றான். ஊருக்குக் கிளம்புமுன் தன் குடும்பத்தாரைக் காணச்சென்றான். தங்கையருள் ஒருத்தி, "செல்லாக்காசும் இல்லாத செட்லியின் மகளை ஜார்ஜ் மணப்பதரிது. அந்த எமிலியாவின் மடமைதான் என்னே!" என்றாள்.



"மடமை என்ன இருக்கிறது? பிள்ளைப் பருவத்திலேயே உறுதியாக்கப்பட்டதுதானே! நடந்தால்தான் திருமணமா? அன்பிற்கும் பண்பிற்கும் தூய்மைக்கும் உருவாக விளங்கும் அவளுக்கெதிராக என் முன்னிலையில் ஒருவரும் பேசாதீர்கள்"

"ஏன் அண்ணா! அவளை நீயே மணந்துகொள்வதுதானே?" என்றாள் இன்னொருத்தி.

"நான் அவளை மணப்பதா! உங்களைப்போல் அவளும் அடிக்கடி நிலைமாறக் கூடியவளென்று நினைத்தீர்களா?"

"பாவம்! இவ்வேளை பார்த்தா அண்ணாவின் படை அயல்நாடு செல்லக் கட்டளை பிறக்கவேண்டும்?" என்றாள் மூத்தவள்.

"அதுவும் நல்லதுதான். இந்த இக்கட்டிலிருந்து அண்ணா தப்பினார்" என்றாள் இளையவள்.

படைஞர் விரைவில் அயல்நாடு செல்ல நேருமென்பது உண்மைதான். இவ்வாறுதான் ஃபிரெஞ்சு மாமன்னர் நெப்போலியனும் நம் குடும்பக் கதையில் ஒரு பங்கு பெறுகிறார். சிறையிலிருந்து தப்பியோடிய நெப்போலியன் தம் தலைநகருக்குத் திரும்பிப் படைதிரட்டலானார். டாபினும் ஜார்ஜும் அலுவல் புரிந்த பிரிட்டிஷ் படையினர் தாக்குதற்கேற்ற காலத்தை நோக்கியிருந்தனர். இத்தகைய செய்திகள் கேட்டு நாடும் படையும் துடிதுடித்தன.

**கடிதமும் கவலையும்**

ஆயினும் ஜார்ஜ் கவலையற்று விளங்கினான். தன் புதிய 'சீருடை'யையணிந்து மகிழ்ந்தான். டாபின்

கொடுத்த பொட்டலத்தையும் கடிதத்தையும் படித்து விட்டு "எல்லாம் ஒழிந்தது. இக்கடிதத்தைப் பார் டாபின்" என்றான்.

கடிதத்தில் சில வரிகளே அடங்கியிருந்தன:— "மகிழ்வோடிருந்த நாட்களில் எனக்கு இப்பரிசுகளை வழங்கினீர்கள்; இவற்றைத் திருப்பி யனுப்புமாறு தந்தை கட்டளையிட்டிருக்கிறார். எங்களுக்கு விழுந்த 'பேரிடி'யை என்னைப்போலவே நீங்களும் உணருவீர்கள். இப்போதைய வறிய நிலையில் நம் திருமணம் நிகழ்வதியலாது. நானே உறுதிமொழியிலிருந்து உங்கட்கு விலக்களிக்கிறேன். துன்பநிலைக்கோ அல்லது உங்கள் தந்தையாரின் கொடிய ஐயப்பாடுகளுக்கோ நீங்கள் எவ்வகையிலும் பொறுப்பாக மாட்டீர்கள் என்பது உறுதி. அவ்வையப்பாடுதான் எங்கள் துன்பங்களுள் எல்லாம் கொடியது. வணக்கம். வணக்கம். இதனையும் பிற கேடுகளையும் தாங்குதற்கேற்ற வலிமையை ஆண்டவன் எனக்கு அளிப்பானாக. எப்போதும் அவன் உங்களுக்கு இன்னருள் சுரப்பானாக. எமீலியா.

பி. கு:—அடிக்கடி அப் பியானோ'வை—உங்கள் 'பியானோ'வை வாசிப்பேன். அதனை அனுப்பியது உங்கள் உள்ளப்பாங்கினை எடுத்துக் காட்டுகிறது."

டாபின் இளகிய மனமுடையவன். பெண்களும் குழந்தைகளும் துன்புறுங் காட்சியைக் காணநேர்ந்தால் அவன் அழாமலிரான். ஜார்ஜின் உள்ளத்திலோ ஆயிரமாயிரம் குடும்பக்காட்சிகளும் நினைவுகளும் எழுந்தன. களங்கமற்ற அவளது அன்பினையும் தன்னலம் கருதும் தன்போக்கினையும் ஒப்பிட்டுப் பார்த்துத்



தன்னையே நொந்தான் அவன். "அவர்கள் இப்போது எங்கிருக்கிறார்கள்? கடிதத்தில் முகவரியேதும் இல்லையே?" என்றான்.

**காதலர் காட்சி**

நான்கு மணி நேரத்திற்குப்பிறகு எமீலியாவின் அறைக்குள் போந்த வேலைக்காரி அவளது கருத்தினைக் கவரப் பல்லாற்றானும் முயன்றாள். அவளோ தன் கருவூலங்களில்-ஜார்ஜ் முன் எழுதிய கடிதங்களில்-மூழ்கிக் கிடந்தாள்.

"சின்ன அம்மா" என்றாள் வேலைக்காரி.

நிமிர்ந்து பாராமலேயே எமீலியா சொன்னாள்; "இதோ வந்துவிட்டேன்."

"இஃதோ ஒருகடிதம். யாவரோ உங்களைக் காண வந்துள்ளனர்."

எம்மி கடிதத்தைப் பெற்றுப் படித்தாள்.

"நான் உன்னைப் பார்க்கவேண்டும். அன்பு எம்மி—ஆருயிர்க் காதலி—அருமை மனைவி—உடனே வா."

அவளுடைய தாயாரும் ஜார்ஜும்' வெளியில் காத்து நின்றனர்.

---

# 11. நோயாளியின் துன்பம்

### பேண வந்தவள் தொண்டு

க்ராலியம்மையாரின் இல்லத்தில் மார்த்தா வைத்ததே சட்டமாயிற்று. ஆயினும் 'ராடன் ஒரு முறை பெற்ற தோல்வியாலேயே மனமுடைந்து போவானோ? இழந்துள்ள உரிமையை விட்டுக்கொடுப்பானோ? இல்லத் தலைவியின் உள்ளக்கருத்து யாது? அவனை அம்மையார் ஒதுக்குவாரா? அவனை மீண்டும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற ஆவல் அம்மையாரது உள்ளத்தில் புதைந்து கிடக்கிறதா?' இவற்றையெல்லாம் எண்ணி மறுகினாள் மார்த்தா. அவளுடைய நாட்டுப்புறத்து ஆட்கள் எவரும் நகரத்துக் கிழவியாகிய அவ்வம்மையார்க்கு ஆர்வமூட்டும் வகையில் பேசவோ பாடவோ வல்லவர் அல்லர். இவ்வுண்மையை அவளும் உணர்ந்தாள். எடுத்துரைக்கத் தன்னிடம் நன்மை ஏதும் இல்லையெனில் எதிரிகளின் தீமைகளை எடுத்துக் காட்டுவதுதானே வெற்றிக்கு வழியாகும்? அதனால் ராடனின் பலதரப்பட்ட பழிபாவங்களையும் அம்மையாரிடம் மிகைப்படுத்திக் கூறினாள். அவள், க்ராலியம்மையாரின் பெட்டிவண்டியிலேயே ஏறிச் சென்று பிங்கர்டன் அம்மையாரைக் கண்டு பேசினாள். பின் ரெபக்காவின் தந்தை குடியிருந்த வீட்டுக்கு உரியவளோடேயே உரையாடினாள். இம்முயற்சிகளின் பயனாக ரெபக்காவையும் அவள் குடும்பத்தாரையும் பற்றித் திரண்ட செய்திகள் எல்லாம் க்ராலி அம்மையாரின் செவிகளைச் சரண்புகுந்தன. "பண்பு கெட்டவன் மானங் கெட்டவளை மணந்தான். இருவரின் கயமைக்கும் மருந்தில்லை. அறிவுடைய எவரும் அவ்விரு



வரையும் ஏறெடுத்துக்கூடப் பார்க்க மாட்டார்கள்." இதுதான் மார்த்தா சொன்ன கதைகளின் நீதி. "வாழ்க்கையில் ஒருவன் செய்யும் தவறுகளை வையகமெல்லாம் பறைசாற்ற வேறெவரும் தேவையில்லை. அவனுடைய உறவினரே போதும்" என்பது எவ்வளவு உண்மை!

இவ்வாறு க்ராலியம்மையார் மார்த்தாவின் கைக்குள் சிக்கிக்கொண்டார். படுத்த படுக்கையானார். வேறெவரும் அவர் அருகில் செல்வதுமிலர். எனவே அம்மையார் தம் 'இறுதிமுறி'யை மாற்ற வேண்டுமென்று அடிக்கடி மார்த்தா நச்சரித்தாள். இயல்பாகவே சாவுக்கு அஞ்சி நடுங்குபவர் அவர். இத்தகைய பேச்சு அவரது நடுக்கத்தைப் பெருக்கியது. அவர் மனமகிழ்வோடிருந்தாலொழியத் தன் தூய நோக்கம் நிறைவேறாதென்று கண்ட மார்த்தா அவரைச் சுற்றுப்புறச் சிற்றூர்களுக்கு அழைத்துச் சென்றாள். வழியெல்லாம் ராடனையும் அவன் மனைவியையும் அம்மையார் வெறுக்கும் வகையில் இட்டுக்கட்டிப் பற்பல சொன்னாள்.

### அத்தையும் மருமகனும்

அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சுதானே? அம்மையாரது மனம் அக்கதைகளால் ராடனையும் ரெபக்காவையும் வெறுத்தது. எனினும் உள்ளூற மார்த்தாவை யெண்ணியும் நடுங்கலாயிற்று. அவளிடமிருந்து விடுதலைபெற விரும்பலானார் அம்மையார். சிற்றூர்களுக்குச் செல்லுதலை எதிர்த்தார். லண்டனில் பூங்காவுக்குச் செல்ல விரும்பினார். அங்கு அவர் ஒருகால் ராடனைக் காணுதல் கூடுமென்றஞ்சினாள்,

மார்த்தா. அவ்வச்சம் வீண்போகவில்லை. ஒருமுறை ராடனது வண்டி இவர்களது வண்டியை எதிர்ப்பட்டது. ராடன் எவ்வளவோ முயன்றும் அம்மையார் அவனை ஏறெடுத்தும் பார்த்திலர். எதிர்ப்புறம் முகத்தைத் திருப்பிக் கொண்டார். வண்டிகள் எதிர்த் திசையில் கடந்தன.

“இன்னொரு முறை முயன்று பாருங்கள். முடியுமானால் இரு வண்டியின் சக்கரங்களும் பின்னிக் கொள்ளச் செய்யுங்கள்” என்று தூண்டினாள் ரெபக்கா. இரண்டாம் முறை அம்மையார் முகத்தைத் திருப்பாமல் அவனையே பார்த்தார். இரக்கமற்ற அப் பார்வை அவனை வாட்டி வதைத்து விட்டது. மார்த்தாவைப் பொறுத்தவரை இது வெற்றிதான். ஆயினும் இத்தகைய சந்திப்புக்கள் அடிக்கடி நிகழுவது இடர் விளைவிக்குமென்றெண்ணிய அவள், பிரைட்டான் தான் அம்மையார் உடலுக்கு நலமளிக்கும் ஊர் என்று வற்புறுத்திச் சொல்லி அங்கு அழைத்துச் சென்றாள்.

---

# 12. தந்தையும் மகனும்

ஜார்ஜை அறைக்கு வெளியிற் கண்ட எமீலியா அவனது தோளில் முகத்தைப் புதைத்துக் கொண்டு தேம்பியழலானாள். அவர்களைத் தனிமையில் பேச விட்டுவிட்டு எமீலியாவின் தாயார் கீழிறங்கி டாபினுடன் உரையாடலாயினர். குடும்ப நிலையையும் இளம் காதலர்களின் எதிர்காலத்துக்கு ஏற்பாடுகளையும் பற்றிப் பேச்செழுந்தது. “ஆஸ்போர்ணின் நன்றிகெட்ட நடத்தையால் செட்லி மனமுடைந்து போனார். திருமணத்துக்கு ஒருபோதும் இணங்க மாட்டார்” என்று தெரிவித்தாள் அவ்வம்மை.

“இவ்வாறாயின் தோழி செய்தது போன்று எமீலியாவும் தன் காதலனுடன் ஓடிப்போக வேண்டியதுதான்” என்றான் டாபின். செய்தியை விளங்கக் கேட்ட அவ்வம்மை பெரிதும் வியந்தார்.

### நண்பனின் கவலை

செட்லியின் சீற்றம் திருமணத்துக்குத் தடையாயிருக்கும் என்றஞ்சியவனல்லன் டாபின். (பின்னொரு நாளில் இத் திருமணம்தான் ஆஸ்போர்ணின் நன்றிகெட்ட செய்கைக்குப் பதிலடி என்றுரைத்துச் செட்லியையும் டாபின் இணங்கச்செய்தான்) ஆயினும் ஆஸ்போர்ணின் இயல்பினை எண்ணியே அவன் சோர்ந்தான். முரண்டுக் குணமுடைய அவர் தாம் சொன்ன சொல்லிலிருந்து ஒருநாளும் மாறமாட்டார் என்பது அவன் அறிந்ததுதான்.

ஜார்ஜின் நல்லெண்ணமும் டாபினின் அறிவும் கூடி எமீலியாவுக்கு அமைதியும் மகிழ்வும் அளித்தன,

அதே நேரத்தில், ஜார்ஜின் பெற்றோரும் தங்கைகளும் அவனுக்கு மற்றொரு பெண்ணை மனைவியாக்க ஏற்பாடு செய்யலாயினர். அவன் எதிர்த்து நிற்பானென்று அவர்கள் எள்ளளவும் ஐயுற்றனரல்லர்.

பெற்றவர் திட்டம்

ஸ்வார்ட்ஷ் என்னும் பெண்ணைத்தான் ஜார்ஜ் மணக்க வேண்டுமென்று ஆஸ்போர்ண் ஒருநாள் குறிப்பாகச் சொன்னார். உடனேயே அவன் அவரைத் திகைப்பிலாழ்த்தினான்: "காலங்கடந்த பேச்சு அப்பா. ஒவ்வொரு நாளும் நாங்கள் அயல்நாட்டுப் பயணத்தை எதிர்பார்க்கிறோம். உயிரோடு திரும்பி வருவேனாயின் அப்போது பார்த்துக் கொள்ளலாம். ஏதாவதொரு வழியில் என்பெயர் அரசுப்பதிவிதழில் வரும். பாருங்கள்."

இப்போதே இம் மணத்துக்கு ஏற்பாடு செய்யவில்லையெனில் வேறு எவரேனும் ஸ்வார்ட்ஷுக்கு மாலையிட்டுவிடுவர் என்று ஆஸ்போர்ண் நகரத்தில் பலர் சொல்லக் கேட்டிருந்தார். ஆதலால் எழுத்து மூலம் திருமணம் உறுதிசெய்துகொள்ளலாமென்றும் இங்கிலாந்து திரும்புங் காலத்து மணவினை நிகழ்த்தலா மென்றும் ஆண்டொன்றுக்குப் பத்தாயிரம் பவுன் வருவாய் தாய் நாட்டில் காத்திருக்கையில் போர்க்களத்தில் உயிர் விடுபவன் முட்டாளென்றும் சொன்னார் அவர்.

"ஸ்வார்ட்ஷின் பணத்துக்காக என்னைக் கோழையாக மாறிக் குடும்பப் பெயரையே கெடுக்கச் சொல்கிறீர்களா!" என்றான் ஜார்ஜ்.

இவ்விடை கேட்டு அவர் தடுமாற்றங் கொண்டார். ஆயினும் தம் முடிவான கருத்தினை மொழிந்தார்:



"ஸ்வார்ட்ஷ் இவ்வீட்டிற்கு விருந்தாக வரும்போதெல்லாம் நீயும் உடனிருந்து அவளைக் கவனித்துக் கொள்ளவேண்டும். செலவுக்குப் பணம் தேவையெனில் கணக்கரைப் பார்த்துப் பெற்றுக்கொள்."

காதல் வெறி

நிறங்கரிய ஸ்வார்ட்ஷ் எப்போதோ எங்கோ ஒருமுறை ஜார்ஜைக் கண்டவள் தன் உள்ளத்தை யிழந்தாள். ஆகவே ஜார்ஜ் வீட்டிலிருக்கிறான் என்று அறிவாளாயின் அவனுடைய தங்கையரைப் பார்க்கும் சாக்கினில் அவளும் ஆஸ்போர்ணில்லத்துக்கு ஓடோடி வருவாள். அப்படித்தான் ஒருநாள் எமீலியாவுடன் மூன்று மணிநேரம் உரையாடியபின் வீடு திரும்பினான் ஜார்ஜ். ஸ்வார்ட்ஷின் பாடலைக் கேட்டுத் தன் தங்கைகள் மகிழ்ந்திருப்பக் கண்டான். மற்றொன்று பாடுதற்காகப் பாட்டுப் புத்தகத்தைப் புரட்டினாள், ஸ்வார்ட்ஷ். ஒரு மூலையில் எமீலியா எனும் பெயர் எழுதப்பட்டிருந்தது கண்டு வியப்புடன் "யார் எமீலியா? பிங்கர்டன் பள்ளியில் என்னோடு பயின்றவள் தானே? இப்போது எங்கிருக்கிறாள்?" என்று கேள்வி தொடுக்கத் தொடங்கினாள்.

ஜார்ஜின் தங்கையொருத்தி "இவ்வீட்டில் அவள் பெயரையுஞ் சொல்லலாகாது. அவளது குடும்பம் தன்னையே இழிவு படுத்திக் கொண்டது. அவள் தந்தை எங்கள் தந்தையை ஏமாற்றி விட்டார்" என்றாள்.

ஜார்ஜ் துள்ளியெழுந்து ஸ்வார்ட்ஷிடம் சொன்னான்: "நீ எமீலியாவின் தோழியா? அப்படியானால் கடவுள் உன்னைக் காப்பாற்றுவார். இப்

பெண்கள் சொல்வதை நம்பாதே. எவ்வாறுயினும் அவள்மீது தவறில்லை. அவள்தான் சிறந்த....''

தங்கை குறுக்கிட்டுப் பேசினாள்: ''ஜார்ஜ்! அப்பா விதித்த தடையை மறந்தாயா? அவளைப் பற்றி நீ எதுவும் பேசலாகாது என்றாரே?''

''என்னைத் தடுப்பவர் எவர்? நான் அவளைப் பற்றிப் பேசத்தான் செய்வேன். அவள்தான் இந்நாட்டிலேயே சிறந்தவள். அன்பின் ஊற்று. மென்மையினுருவம். இனிமையின் பிறப்பிடம். அவளுக்குத் தீவட்டி பிடிக்கக்கூட என் தங்கைகளுக்கு அருகதை கிடையாது. ஸ்வார்ட்ஷ்! அவளை நீ விரும்புவது உண்மையாயின், போய்ப்பார். அவளுக்கு இப்போது தோழியர் தேவை. அவளோடு தோழமை கொள்பவரெல்லாரும் கடவுளின் அருளுக்குரியவர். அவளைப் பற்றி அன்பாகப் பேசுவோர் எவரும் என் நண்பர். அவளுக்கெதிராகப் பேசுவோர் எல்லாரும் என் பகைவர்'' என்றிரைந்தான் ஜார்ஜ்.

**பூசல்**

ஆஸ்போர்ண் சினத்தாற் சிவந்த முகத்தோடும் கனல் தெறிக்கும் கண்ணொடும் அங்குத் தோன்றினார். ஜார்ஜின் சொற்பெருக்குத் தடைப்பட்டது. ஆயினும் அவன் துடிப்பு அடங்கவில்லை. தந்தையாரின் சீற்றப் பார்வைக்கு எதிராக உறுதியும் மறுப்பும் தோன்ற நோக்கினான். அவரோ நடுங்கியவராய் முகத்தைத் திருப்பிக் கொண்டார். உணவு படைக்கப்பட்டது.

வேளை நெருங்கிவிட்டது என்றுணர்ந்தான் ஜார்ஜ். ஆயினும் அமைதி சிறிதும் குலையாதவனாக உண்டான். முதியவரோ பதற்றங் கொண்டவராக அளவுமீறிக்



குடித்தார். ஜார்ஜின் அமைதி அவருடைய சீற்றத்தை மிகுவித்தது. உண்டு முடித்து ஜார்ஜ் அமைதியாய் எழுந்து வீறுபடத் தலைதாழ்த்தி மகளிர் நீங்குதற்காகக் கதவினைத் திறந்துவிட்டான். இச்செய்கை ஆஸ்போர்ணை மேலும் வெறிகொள்ளச் செய்தது. மகளிர் வெளியேறிய பின் ஒரு குவளை மதுவையூற்றி ஒரே மடக்கிற் குடித்து விட்டு ஜார்ஜ் தன் தந்தையின் முகத்தை உற்றுப் பார்த்தான்! 'நீங்களே தாக்குதலைத் தொடங்குங்கள்' என்பது போன்றிருந்தது அந்தப் பார்வை. பெரியவர் தாக்குவதற்கு ஆயத்தப் படுத்திக் கொள்ளலானார்; குவளையில் மது ஊற்ற முற்பட்டார். கை நடுங்கியது. பெருமூச்சு ஒன்றினை ஊதித்தள்ளிவிட்டுச்செக்கச்சிவந்த முகத்தோடு பேச்சினைத்தொடங்கினார்: ''என் வீட்டில் ஸ்வார்ட்ஷுக்கு எதிரில் அந்த ஆள் பெயரைச் சொல்லஉனக்கு என்ன துணிச்சல்? ஆமாம். என்ன துணிச்சல் என்று கேட்கிறேன்.''

''நிறுத்துங்கள் ஐயா! என்ன துணிச்சல் என்பது பிரிட்டிஷ் படைக் கேப்டன் ஒருவனிடம் பயன் படுத்தக் கூடிய சொல்லாகாது.''

''என் மகனிடத்தில் என் விருப்பம்போல் பேசுவேன். நான் விரும்பினால் ஒரு ஷில்லிங்கு கூடக் கொடாமல் அவனைத் துரத்துவேன். பின்னும் விரும்பினால் அவனைப் பிச்சைக்காரனாக்குவேன். என் விருப்பம் போல்தான் பேசுவேன்.''

''நான் உங்கள் மகனாயிருந்தாலும் கண்ணியமானவன். என்னிடம் எச்செய்தி தெரிவிக்க விரும்பினாலும் எக்கட்டளையிட விரும்பினாலும் நான் கேட்டுப் பழக்கப்பட்ட மொழியிலேயே சொல்லுதல் வேண்டும்.''

இளைஞன் இத்தகைய இறுமாப்பொடு பேசத் தொடங்கிவிட்டால், அவனுடைய தந்தையார் உள்ளத்தில் கலவரமோ எரிச்சலோ தான் பிறக்கும். மகன் தன்னைவிடக் கண்ணியமானவனோ என்று அவர் எப்போதும் உள்ளூற நடுங்குவார். ஆகவே அவர் சொன்னார்:

"நீ பெற்ற கல்வியையோ வாய்ப்புக்களையோ பணத்தையோ என் தந்தை எனக்கு வழங்கவில்லை. என் பணத்தைக் கொண்டு வேறு சிலர் அமைத்துக் கொண்ட தொடர்புகளை நானே எனக்கு ஏற்படுத்திக் கொண்டிருந்தால் என் மகன் இப்படித் தன் உயர்வைத் தம்பட்டம் அடித்துக்கொள்ள வாய் இராது. என் காலத்தில் ஒருவன் தன் தந்தையைப் பழிப்பது கண்ணியமான செயலாகக் கருதப்பட்டதில்லை. அப்படி ஏதேனும் நான் செய்திருந்தால் என் தந்தை என்னை உதைத்துத் தள்ளியிருப்பார்."

"நான் உங்களைப் பழித்தேனா! உங்களைப் போலவே உங்கள் மகனும் கண்ணியமானவன். அதனை மறவாதீர்கள் என்றுதானே சொன்னேன்? எனக்குப் பணத்தை அள்ளி அள்ளிக் கொடுக்கிறீர்கள். நன்கறிவேன். அடிக்கடி சொல்லியும் காட்டுகிறீர்கள். அதனை மறப்பேனோ என்றையுறத் தேவையில்லை."

"அதனையொப்பவே பிறவற்றையும் மறவாதிரு என்றுதான் சொல்கிறேன். இந்த வீட்டினை உன் வருகையாற் சிறப்பிக்கும் போதெல்லாம் நான்தான் குடும்பத் தலைவன்... அந்தப் பெயர்..., அந்த.... அந்த... வந்துநீ.... அதாவது..."

"எந்தப் பெயர்?" என வினவினான் ஜார்ஜ், சிறிதளவும் முறுவலிக்காமல்.



"..............." கொடிய வசைச்சொல் அவரது வாயிலிருந்து வெடித்துக் கிளம்பியது. தொடர்ந்து இரைந்தார்: "செட்லி குடும்பத்தார் பெயரை இங்குச் சொல்லலாகாது. ஆமாம். அந்தப் பாழாய்ப்போனவர்கள் ஒருவர் பெயரையுஞ் சொல்லக்கூடாது."

"எமீலியாவின் பெயரை இழுத்தவன் நான் அல்லேன். அவளைப் பற்றித் தங்கைமார்தாம் ஸ்வார்ட்ஷிடம் இழிவாகப் பேசினர். எங்கெங்குச் செல்லினும் அவள் பெயருக்குக் களங்கம் வராமற் காப்பேன். என் முன்னிலையில் எவரும் அப்பெயரை மாசுபடுத்த விடமாட்டேன். உங்களைத் தவிர வேறு எவராயினும் அவளுக்கெதிராக ஒரு சொல் சொன்னாலும் சுட்டுத் தள்ளுவேன்."

"சொல். சொல்."

"எதனைச் சொல்ல? தேவமகளனைய அவளுக்கு நம் குடும்பம் தீங்கிழைத்த கதையைச் சொல்வேனா? வளங்குன்றி நிற்கும் அவள்மீது வசைபாடும் வகையைச் சொல்வேனா?.... அவளைக் காதலிக்குமாறு என்னை ஏவியவர் யார்? எல்லாம் உங்கள் செயல்தாம். வேறெவளையும் நான் தெரிந்தெடுத்திருப்பேன். ஒருவேளை உங்களைவிட உயர்தரக்குடியில் பிறந்த ஒருத்தியை நோக்கியிருப்பேன். ஆயினும் உங்கள் ஆணைக்குப் படிந்து நடந்தேன். அவளுடைய உள்ளம் எனதாகி விட்டது. பிறகு அதனை வீசியெறிய—அவளை வேதனைப் படுத்த—அவளுயிரை வேறுபடுத்தக் கட்டளையிடுகிறீர்கள். காரணம், எவரோ செய்த தவறு. கடவுளுக்கே அடுக்காது. அப்பா, இளம்பெண்ணின் உள்ளத்தாசைகளோடு மனம்போன போக்கினில் விளையாடுவதா?

நான் கைவிட்டுவிட்டால் அவள் என்னை மறப்பாள் என்று நினைக்கிறீர்களா?"

"உணர்ச்சி வயப்பட்ட பித்தலாட்டங்களுக் கெல்லாம் இங்கே இடங்கொடுக்க மாட்டேன். என் குடும்பத்தில் பிச்சைக்காரத் திருமணங்கள் நிகழலாகாது. ஆண்டொன்றிற்கு எண்ணூயிரம் பவுன் வருவாய் வேண்டா என்று உதறுவது உன் விருப்பமாயின் அப்படியே செய். இக்கணமே உன் மூட்டைமுடிச்சுகளைத் தூக்கிக்கொண்டு இவ்வீட்டினை விட்டு வெளியே போ. என் சொல்லைக்கேட்டு நடப்பாயா? மாட்டாயா?"

"அந்தக் கலப்புப் பிறவிப் பெண்ணை மணக்கச் சொல்கிறீர்களா? அவள் நிறம் எனக்குப் பிடிக்கவில்லை. தெருப் பெருக்குகிறானே, அந்தக் கறுப்பனைக் கேட்டுப்பாருங்கள்."

ஆஸ்போர்ண் தம் சமையல்காரனை அழைப்பதற் கென்றமைந்த மணியின் கயிற்றை வெறிகொண்டவராய்ப் பற்றியிழுத்தார். அவன் அங்குப்போந்ததும், "கேப்டன் ஜார்ஜுக்கு ஒரு வண்டி பிடித்துவா" என்றேவினார்.

ஒருமணி நேரத்துக்குப்பின் காப்பிக் கடையில் தன் நண்பனைக் கண்ட ஜார்ஜ், வெளிறிய முகத்துடன், "செய்துவிட்டேன்" என்றான். "என்ன செய்தாய்?" என வினவினான் டாபின்.

ஜார்ஜ் தந்தையார்க்கும் தனக்குமிடையில் நிகழ்ந்தவற்றை எடுத்துரைத்தான். பின், "நாளையே அவளை மணப்பேன். நாளுக்குநாள் என் காதல் வளர்கிறது, டாபின்" என்றான்.

---

## 13. திருமணம்

எப்ரல் திங்களின் இறுதியில் ஒருநாள். அடைமழையோடு பெருங்காற்றும் சேர்ந்து கொண்டது. சோர்ந்து வெளிறிய முகத்தொடு ஜார்ஜ் காப்பிக் கடையினுட் புகுந்தான். அங்கு அவன் நண்பன் டாபின் வீற்றிருந்தான். டாபினது உடலை வழக்கமாய்ப் போர்த்திருக்கும் படைஞருடைக்குப் பதில் அன்று புத்தாடை யணிசெய்தது.

இருவரும் கரம்பற்றிக் குலுக்கினர். சற்று நேரம் உரையாடியபின் வெளியிற் காத்துநின்ற வண்டியி லேறினர். மணி பதினொன்றரை. வண்டி கிளம்பிக் குறித்த ஒரு தேவலாயத்தின் முன் நின்றது. அங்கே நான்கு குதிரைகள் பூட்டிய வண்டியொன்று காத்துக் கிடந்தது. ஜோஸப் முற்பட்டு வரவேற்றான்: "ஐந்து நிமிடம் பிந்தி வந்திருக்கிறாய் ஜார்ஜ். சே! என்ன நாள் இது! வங்காளத்தில் மழைகாலம் தொடங்குவது போன்றன்றோ இருக்கிறது." அவனுடல் முன்னினும் மிகுதியாகப் பருத்திருந்தது.

ஜார்ஜுக்கு அந்நாளில் திருமணம். முதல்நாளிரவெல்லாம் அவன் உறங்கினானல்லன். அந்நாட் காலையிலும் அவனுள்ளம் படபடத்துக்கொண்டு தானிருந்தது. பழுப்புநிறப்பட்டுடையும், ஊதா நாடாவுடைய தொப்பியும் மணமகளாடையாக விளங்கின. வேலைப்பாடமைந்த - மணமகளுக்குரிய - முகத்திரை அவளது முகத்தை மூடியிருந்தது. அம்முகத்திரை ஜோஸப்பின் பரிசு. டாபினும் அவளது இணக்கம்பெற்றுத் தங்கச் சங்கிலியோடு கூடிய

கடிகாரத்தைப் பரிசளித்தான். அதனையும் அவள் அணிந்திருந்தாள். எமீலியாவின் தாய் ஓரிருக்கையில் அமர்ந்து விம்மிக்கொண்டிருந்தாள்.

ஜான் செட்லி தம்நிலைக்கு நாணியவராய்த் தேவாலயத்துக்கு வர மறுத்துவிட்டார். ஜோஸப்தான் தந்தை நிலையில் நின்று பெண்ணை வழங்கினன். டாபின் மணமகனுக்குத் தோழனாக விளங்கினன்.

மணம் நடாத்திவைத்தோரையும் மணமக்களையும் உற்றார் உறவினர் பணியாட்கள் அடங்கிய சிறு குழுவையும் தவிரத் தேவாலயத்தில் வேறெவரும் இல்லை. மழைநீர், சாளரக் கதவுகளில் ஓசைபட விழுந்தது. அவ்வோசையும் தாயாரின் விம்மலொலியுந் தாம் வழிபாட்டுக்கிடையே ஒலித்தன. மணமகன் உறுதிமொழி அடித்தொண்டையிற் பிறந்தது. எமீலியாவின் மறுமொழியோ இதயத்தினின்றெழுந்து தொண்டைவரை வந்தது. அதற்கு வெளியே வந்ததனை டாபின் தவிர வேறு எவரும் கேட்டிலர்.

வழிபாடு நிறைவுற்றது. அவர்கள் பேரேட்டில் கைச்சாத்திட்டனர். டாபின் கையைப் பற்றிய ஜார்ஜின் கண்களில் நீர்ப்படலம் மின்னி மறைந்தது. "டாபின்! உனக்குக் கடவுள் எல்லா நன்மையும் அருள்வாராக" என்றான். டாபின் வெறுமெனத் தலையசைத்தான். அவன் உள்ளம் முழுதும் நிறைந்து விட்டதால் வாயும் அடைத்துக் கொண்டது.

"கடிதம் எழுது. விரைவில் புறப்பட்டுவா" என்றான் ஜார்ஜ்.

விம்மிப் புலம்பிய தாயாரிடம் எமீலியா விடை பெற்றாள். மணமக்கள் கிளம்பினர். தேவாலய வாயிலில்



ஈரஉடலோடும் பரட்டைத்தலையோடும் பிள்ளைகள் சிலர் கூடி நின்றனர். "குட்டிப்பிசாசுகளே! வழியை விட்டு விலகிநில்லுங்கள்" என்றான் ஜார்ஜ். வாயிலினின்றும் வண்டிக்குச் சென்றபோது மணமக்களிருவர் முகத்தையும் மழைத்துளிகள் நனைத்தன. அப்பிள்ளைகளின் சத்தற்ற வாழ்த்தொலிக் கிடையில் வண்டி சேற்றினை வாரி யிறைத்தவாறு ஓடலாயிற்று.

டாபின் அதனையே நோக்கியவாறு சற்றுநேரம் தேவாலய வாயிலில் போந்து நின்றான். பிள்ளைகள் கூட்டம் அவனைப் பகடி செய்தது. அவர்களோ அவர்களது நகைப்பொலியோ அவனது உள்ளத்தினுள் புகவில்லை. அவனது பின்புறத்தில், "வீட்டுக்கு வந்து ஏதாவது சாப்பிட்டுவிட்டுப்போ" என்றது ஒரு குரல். தடித்துக் குட்டையான ஒரு கை அவன் தோளில் விழுந்தது. அவனது கனவும் கலைந்தது. விம்மிக்கொண்டிருந்த தாயினையும் வேலைக்காரர்களையும் ஜோஸப் போடு வண்டியிலேற்றினன், அவன். இவ்வண்டியும் கிளம்பிற்று. பரட்டைத் தலைகள் மறுபடியும் ஏளனமாய்ச் சிரித்தன.

"பிடியுங்களடா பிச்சைக்காரப் பயல்களே" என்று செல்லமாய்க் கூறியபடி அவன் அவர்களுக்குக் காசு கொடுத்தபின், மழையைப் பொருட்படுத்தாமல் தனியே நடக்கலானன். எல்லாம் முடிந்து விட்டன. அவர்கள் மணந்து மகிழ்ச்சியோடு சென்றனர். பிள்ளைப் பருவந்தொட்டு இந்நாள்வரை அவன் இப்படியொரு தனிமைத் துன்பத்தை உணர்ந்தறியான். நாட்கள் விரைந்து கழியாவா, நான் அவளை மீண்டும் பாரேனா என மனம்உளைய ஏங்கினன் அவன்.

14. முதியவர் முரண்டு

இக்கட்டான கடமையைச் செய்துமுடிக்க டாபின் லண்டனுக்குச் சென்றான். முதியவராய ஆஸ்போர்ணிடம் எப்படிச் சொல்வதென்றெண்ணியபோதே அவனுடல் பதறலாயிற்று. ஆயினும் அவர் இத்திருமணச் செய்தியை எவ்வாறு ஏற்கிறார் என்று கண்டறிந்து ஜார்ஜிடம் தெரிவிக்கும் கடமையை மேற்கொண்டிருந்தான். ஆகவே ஆஸ்போர்ணின் வணிகநிலையஞ்சென்று தன் வருகையை அவர்க்கு உணர்த்தினான்.

டாபினும் ஆஸ்போர்ணும்

ஆஸ்போர்ண் எழுந்து வரவேற்றார். மகிழ்ச்சியோடு கைகுலுக்கினார். "அம்மா நலமா" என அவர் வினவியபோது குரலில் மிளிர்ந்த பரிவுகண்ட டாபினது குற்றமுள்ள நெஞ்சு முன்னிலும் இருமடங்கு வருந்திற்று. தம் மகன் சரணடையுஞ் செய்தியைச் சொல்லவே டாபின் வந்திருப்பதாக ஆஸ்போர்ண் நினைத்துக் கொண்டார். கைப்பணம் கரைந்தபின் பையன் தானே தம் வழிக்கு வருவான் என்றுதான் அவர் கடந்த சிலநாட்களில் எல்லாம் எண்ணியிருந்தார்.

டாபின் துணிச்சலை வரவழைத்துத் தொடங்கினான். "கவலையளிக்கும் செய்தியோடு வந்திருக்கிறேன்: இக்கிழமை யிறுதிக்குள் எங்கள் படை பெல்ஜியத்துக்குப் போய்க்கொண்டிருக்கும். வரும் போரில் எங்களில் பலர் உயிரிழக்கலாம். ஆகவே போவதற்கு முன் உங்களுக்கும் ஜார்ஜுக்குமிடையேயுள்ள மனக்கசப்பு மாறிவிட வேண்டும். அவனுக்கு ஏதேனும் நேர்ந்தால் பிறகு நீங்கள் அன்போடு வழியனுப்பாமைக்கு வருந்துவீர்கள்."



டாபின் உள்ளத்தில் தானே இரண்டகஞ் செய்ததாக நினைவெழுந்தது. அவர்கள் திருமணத்தைத் தான் இவ்வளவு விரைவில் முடிக்க வேண்டிய தேவை ஒன்றுமில்லையே என்றெண்ணலானான்.

"நீ நல்ல பையன் டாபின். ஜார்ஜ் சினத்தொடு என்னைப் பிரிந்து செல்லலாகாது. உண்மைதான். இதோபார். உனக்கு உன் அப்பா கொடுத்ததைவிட மூன்று மடங்கு நான் அவனுக்குக் கொடுத்திருப்பேன். நாட்டவரெல்லாம் போற்றும் வகையில் நல்லதொரு மணஞ் செய்துகொள் என்றுதான் சொல்கிறேன. என் வாழ்க்கையிலேயே நான் அவனிடம் கேட்பது ஈதொன்றுதான். இதனைச்செய்ய மறுக்கிறான். நானு சண்டைபோட்டேன்? அவன் வீட்டுக்கு வருவானாகை. திருமணம் இப்போது நடைபெறுவதியலாது. அவனும் ஸ்வார்ட்ஷுமே மணநாளை முடிவுசெய்து கொள்ளலாம். அவனை வழிக்குக் கொண்டு வந்தாயே! மிகவும் மகிழ்ச்சி."

"ஐயா, ஜார்ஜ் பணத்திற்காக மணஞ்செய்து கொள்ளுமளவு இழிந்த மனப்பான்மையுடையவனல்லன். சொற்படி நடக்காவிடில் அவனுக்குச் சொத்துரிமை கிட்டாது என்று நீங்கள் வற்புறுத்துவதால் அவனது எதிர்ப்புத்தான் வளரும்."

"எண்ணாயிரமோ, பத்தாயிரமோ ஓராண்டிற்கு வழங்க முற்படுகிறேனே, இதுவா வற்புறுத்தல்? அடகடவுளே! அந்தப் பெண் என்னை ஏற்றுக்கொள்வாளனில் நான் அவள் அடிமையாக இருப்பேன். நிறம்

கம்மலாயிருப்பது பற்றி யெல்லாம் கவலைப்பட மாட்டேன்.''

'' ஜார்ஜ் முன்னாளில் செய்துகொண்ட உறுதிகளை மறந்து விட்டீர்களே?''

“என்ன உறுதி? இன்னும் அந்த முட்டாள் செல்லாக்காசின் மகளைத்தான் மணக்க விரும்புகிறானா? அதனைச் சொல்லவா இங்கு வந்தாய்? அப்படி மணப்பானாயின் பாழாய்ப் போவான். ஒரு விளக்குமாறு வாங்கிச் சந்தியைப் பெருக்குவானாக.''

“நீங்கள் உறுதி செய்ததுதானே அத்திருமணம்? அந்தப் பெண்ணின் உள்ளத்தாசைகளோடு மனம் போன போக்கினில் விளையாட ஜார்ஜுக்கு உரிமையில்லையே?''

“உள்ளத்தாசைகள்—மனம்போன போக்கினில் விளையாடுவது—இவ்வார்த்தைகளைத் தான் அன்று அவனும் பேசினான். நீதான் அவனுக்குக் கற்றுக் கொடுத்தாயா? நீதான் என் குடும்பத்தில் பிச்சைக்காரர்களைக் குடிபுகுத்த விரும்புகிறாயா? உனக்கு நிரம்ப நன்றி. அவளை அவன் ஏன் மணக்கவேண்டும்? மணக்காவிடினும் அவள் அவனோடு ஒட்டிக் கொள்வாள்.''

டாபின் அடக்கவியலாப் பெருஞ் சீற்றத்தோடு எழுந்து, “ஐயா! என் செவிப்பட அப்பெண்ணை எவர் பழித்தாலும் விடமாட்டேன்'' என்றான்.

“என்னை இழிவு படுத்துவதற்காகத்தான் என் மகன் உன்னை இங்கு அனுப்பினானா?''

“நீங்கள்தாம் உலகிற் சிறந்த ஒருத்தியை இழிவு படுத்துகிறீர்கள். வேண்டா. அஃது உங்களுக்கே இழிவாகும். ஏனெனில் அவள் உங்கள் மருமகள்'' என்றவாறே தன் உணர்ச்சிப் பெருக்கினை அடக்கமுடியாதவனாய் டாபின் வெளியேறினான்.



ஆஸ்போர்ன் தொப்பென்று நாற்காலியில் சாய்ந்தார். அவர் கண்கள் அவன் செல்வதனையே வெறியோடு நோக்கின.

கணக்கரிடம் ஜார்ஜ் ஐந்து நாட்களுக்கு முன் எமீலியாவை மணஞ்செய்ததைக் கூறி அவருதவியை நாடினான், டாபின். செய்தி ஏதேனும் உண்டெனில் தான் தங்கியிருக்கும் விடுதிக்குப் போந்து தெரிவிக்குமாறு வேண்டினான்.

### முதியவர் கடுமை

அன்றிரவு உண்ணுங் காலத்தில்கூட ஆஸ்போர்ன் முகத்தில் நிலவிய கடுமையைக் கண்டு அவருடன் பேசவே குடும்பத்தார் எல்லோரும் அஞ்சினர். சாப்பாட்டு முடிவில்தான் அவர் கண்கள் ஜார்ஜுக்கென வழக்கம்போல் வைக்கப்பட்டிருந்த தட்டினை நோக்கின. “அதனை அப்புறப் படுத்துங்கள்'' என்றார் அவர்.

உண்டபின் அவர் தம் தனியறைக்குச் சென்றார். ஜார்ஜ் பிள்ளைப் பருவம் முதல் அணிமைக் காலம்வரை எழுதிய கடிதங்களை யெல்லாம் அங்கொருபுறம் சேர்த்து வைத்திருந்தார். மற்றொரு புறம் அவனுக்கென அவர் செலவிட்ட தொகைகளுக்கான கணக்குகள் இருந்தன. அவற்றை யெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாகப் படித்து நெடுநேரம் சிந்தனையில் மூழ்கிக் கிடந்தார். பின் ஏதோ முடிவுக்கு வந்தவராய் அவற்றை யெல்லாம் சிறு பேழைக்குள் வைத்துப் பூட்டி முத்திரையிட்டார். பிறகு குடும்ப மறைநூலை யெடுத்தார். அதன் முதல்

தாளில் மரபுப்படி குடும்பத்தார் ஒவ்வொருவர் பெயரும் பிறந்த நாளொடு குறிக்கப்பட்டிருந்தன. ஜார்ஜின் பெயரை முற்றிலும் அடித்தார். மறைநூலை உரிய இடத்தில் சேர்த்தபின் தாம் ஏற்கெனவே எழுதி வைத்த இறுதி முறியை எடுத்துக் கசக்கிக் கொளுத்தினார். தொடர்ந்து தம் வழக்கறிஞருக்கு ஒரு கடிதம் எழுதினார். வேலைக்காரனை அழைத்துக் காலையில் அதை உரியவரிடம் சேர்க்குமாறு கட்டளையிட்டார். ஆயின் ஏற்கெனவே பொழுது விடிந்து விட்டது.

அன்று மாலையில் ஆஸ்போர்ணின் கணக்கர் விடுதியில் டாபினைக் கண்டு ஒரு கடிதத்தைக் கொடுத்தார். "கேப்டன் டாபினுக்கு என் ஆசி. உடனிருக்கும் கடிதத்தைக் கேப்டன் ஜார்ஜிடம் சேர்ப்பிக்குமாறு வேண்டுகிறேன்—ஆஸ்போர்ண்." இவ்வளவே எழுதியிருந்தார் ஆஸ்போர்ண்.

மறுநாள் காலையிலேயே டாபின் தன் நண்பர்களைக் காணும் கருத்துடையவனாய்ப் பிரைட்டான் செல்லும் வண்டியிலேறினான்.

---

# 15. பிரைட்டான் நகரம்

நம் இளம் மணமக்கள் மணமுடிந்ததும் பிரைட்டானுக்குப் புறப்பட்டனர் என்று ஏற்கெனவே பார்த்தோம். அங்குக் 'கப்பல் விடுதி'யில் அவர்கள் அறைகளமர்த்தித் தங்கினர். நாட்கள் அமைதியிலும் மகிழ்விலும் கழிந்தன.

## ராடன் தம்பதிகள் வருகை

சில நாட்களுக்குப் பின் ஜோஸெப்பும் அவர்களோடு சேர்ந்து கொண்டான். அம்மட்டோ? ஒரு நாள் மாலை கடற்கரையோரமாக நடந்துவிட்டு விடுதிக்குத் திரும்பினர். வழியில் ரெபக்காவும் அவள் கணவனும் எதிர்ப்பட்டனர். ரெபக்கா ஓடோடிப் போந்து தன் தோழியைத் தழுவினாள். க்ராலியும் ஜார்ஜும் அன்போடு தழுவிக் கொண்டனர். சிலமணி நேரத்திற்குள்ளாகவே ஜார்ஜின் மனத்தைத் தான் முன்னொரு முறை புண்படுத்தியதற்காக ரெபக்கா வருத்தம் தெரிவித்தாள். "க்ராலியம்மையாரின் இல்லத்தில் நாம் சந்தித்தபோது கடுமையாகப் பேசினேன் இல்லையா? எமீலியாவைப் புறக்கணித்தீர்கள் என்று கருதினேன். அதுதான் எனக்குச் சினமூட்டியது. அச்சினத்தில் ஏதேதோ பேசிவிட்டேன். மன்னித்து விடுங்கள்" என்றாள். செய்யும் தவறுகளை வெளிப்படையாகப் பணிவோடு ஒப்புக்கொள்வது ஒருவனுக்கு எவ்வளவு நன்மைகளைச் செய்துவிடுகிறது!

இணைகளிரண்டும் தமக்குள் பரிமாறிக் கொள்ள எத்தனையோ செய்திகள் இருந்தன. தத்தம் திருமணம் பற்றியும் எதிர்காலம் பற்றியும் உரையாடினர். (க்ராலி

யம்மையாரைப் பின்தொடர்ந்து ராடனும் ரெபக்காவும் பிரைட்டனுக்கு வந்திருந்தனர்.)

ரெபக்கா நகைத்தவாறே சொன்னாள் : "எங்கள் வாயிலிற் காத்திருக்கும் ராடனின் நண்பர்களை நீ பார்க்க வேண்டுமே! விடாக்கண்டர்கள் அவர்கள். இவர் அத்தையார் இரக்கப்படவில்லையெனில் எங்கள் நிலைமை யாதாகுமோ?"

ராடன் உரக்கச் சிரித்தான். கடன்காரர்களைப் பற்றிக் கதை கதையாகச் சொன்னான். கடன்காரர்களைப் பேச்சிலேயே மயக்கி அனுப்பிவிடக் கூடிய திறமையுடையவள் ஐரோப்பாக் கண்டத்திலேயே ரெபக்கா ஒருத்திதான் என்றான். மணமாகி ஓரிரு நாட்களுக்குள்ளேயே அவள் இப்பணியைத் தொடங்க வேண்டியவளானாள். அப்போதுதான் தன் மனைவியின் மதிப்பினையும் அவன் உணர்ந்தான். கடன் மிகுதியாகக் கிடைத்தது. கைப்பொருள் இல்லாக் குறைதான் அவர்களுக்குப் பெருங்கவலையாக விளங்கியது.

இவ்வாறாக அவ்விணைகளிரண்டும் அடிக்கடி கண்டு பேசின. இரண்டொரு நாட்களில் ஆடவர் சூதாடலாயினர். விளைவாக ராடனின் பணப்பை ஓரளவு நிறைந்தது. அவன் கவலையும் பறந்தது. சூதாட்டமேயன்றி ஆடவர் மூவரும் மற்றொரு பொழுதுபோக்கிலும் ஈடுபடுவர். இலண்டனிலிருந்து அவ்வூர் வரும் பயணிகள் வண்டியைக் கண்டு மகிழ்வதே அப்பொழுது போக்கு. அவ்வாறே ஒருநாள் அவர்கள் 'மின்னல்' எனப் பெயரிய அவ்வண்டியின் வருகையைக் காணநின்றனர். வண்டிக் கூண்டின்மேல் டாபின் இடம் பெற்ற வேடிக்கை கண்ட ஜார்ஜ் மகிழ்ந்தவனாய் "அதோ டாபின் வருகிறான்" என்றான்.



**நண்பன் கொணர்ந்த செய்தி**

டாபினை அருகிற் கண்டதும் "என்ன டாபின், நலமா? வந்தது பற்றி மகிழ்ச்சி. எமீலியாவும் உன்னைக் காணின் மகிழ்வாள். சரி செய்தி யாது? ரஸ்ஸல் சதுக்கத்துக்குச் சென்றிருந்தாயா? பெரியவர் யாது கூறினார்? எல்லாவற்றையுஞ் சொல்" என்றான்.

டாபினின் முகம் வெளிறியது; கவலையொடு மறுமொழி புகன்றான்: "உன் தந்தையைப் பார்த்தேன். எமீலியா—உன் மனைவி—நலமா? எல்லாச் செய்தியும் இக்கணமே சொல்கிறேன். அவற்றுளெல்லாம் முதன்மையுடையது ஆவது...."

"சொல்லப்பா."

"பெல்ஜியத்துக்குப் புறப்படுமாறு நமக்குக் கட்டளையிட்டிருக்கிறார்கள். படை முழுதுமே செல்கிறது. அடுத்த வாரம் சாத்தாமிலிருந்து கப்பலேறுகிறோம்."

அக்கணமே இப்பிரிவுச் செய்தியை மகளிர்க்குத் துன்பந்தராத வகையில் வெளியிடவேண்டுமென்று ஆடவர் நால்வரும் முடிவு செய்தனர்.

அன்றிரவு ஜார்ஜும் டாபினும் முன்னறையில் தனித்திருந்தனர். ஆஸ்போர்ண் தம் மகனுக்கெனக் கொடுத்தனுப்பிய கடிதத்தை டாபின் எடுத்துக் கொடுத்தான். கண்ட அளவிலேயே திடுக்கிட்டவனாய் ஜார்ஜ் "இஃது என் தந்தையார் கையெழுத்து இல்லையே?" என்றான். ஆஸ்போர்ணின் வழக்கறிஞர் தாம் எழுதியிருந்தார் :—

"ஐயா! ஆஸ்போர்ண் அவர்களின் ஆணைப்படி இச் செய்தியைத் தங்களுக்குத் தெரியப்படுத்தலா

னேன். அவர் உங்களிடம் நேரிற் கூறிய கருத்தினை ஒருபோதும் மாற்றிக் கொள்ளமாட்டார். நீங்களே விரும்பிச் செய்த இத்திருமணத்தின் விளைவாக அவர் உங்களை இனியும் தம் குடும்பத்தில் ஒருவரெனக் கருத மாட்டார். இம்முடிவு இறுதியானது; மாற்ற முடியாதது.

பிள்ளைப் பருவத்தே உங்களுக்காக அவர் எவ்வளவோ செலவழித்தார். அணிமைக்காலத்திலும் அவரிடமிருந்து கணக்கு வழக்கில்லாமல் பணம் பெற்றிருக்கிறீர்கள். இவற்றையெல்லாம் கூட்டினால் உங்களுக்குரிய சொத்தின் மதிப்பினைவிட மிகுதியுங் கூடுதலாகும். ஆயினும் தந்தையார் உங்கள் பங்கில் உரிமை கொண்டாட விரும்புகின்றிலர். உங்கள் தாயாரின் சொத்தாகிய ஆறாயிரம் பவுனில் மூன்றிலொருபகுதியாய இரண்டாயிரம் பவுன்தான் உங்களுக்குரியது. இத்தொகையை எப்போது வேண்டுமாயினும் உங்களிடமோ உங்கள் ஏஜண்டிடமோ பற்றுச் சீட்டுப் பெற்றுக்கொண்டு ஒப்படைத்துவிட ஆயத்தமாயிருக்கிறேன்.

தங்கள் பணிவுள்ள ஊழியன்,
ஒிக்ஸ்.

"பி. கு :—இதுபற்றி எத்தகைய செய்தியும் கடிதமும் உங்களிடமிருந்து வருமாயினும் அவர் ஏற்க மாட்டார் என்பதனையும் அவருடைய விருப்பப்படி தெரிவித்துக் கொள்கிறேன்."

"நிரம்ப நன்றாயிருக்கிறது நீ சந்து செய்வித்த முறை. இதைப்பார் டாபின்" என்றவாறே ஜார்ஜ் டாபினிடம் அக்கடிதத்தை விட்டெறிந்தான். தொடர்ந்து



டாபினைக் கடிந்து நோக்கியபடியே, "உணர்ச்சிக்கு ஆட்பட்டதன் விளைவாகப் பிச்சைக்காரனாகிவிட்டேன். நாம் பொறுத்திருந்தால் குடியா முழுகியிருக்கும்? இப் பிச்சைக்காரன் போரில் மாண்டால் எமீலியாவின் கதி யாது? ....எல்லாம் உன்னால் வந்தவையே. எனக்கு மணஞ்செய்வித்து என்னைக் கெடுத்த பிறகுதானே உன் மனம் அமைதியடைந்தது? இவ்விரண்டாயிரம் பவுன் எத்தனை நாளைக்குக் கண்டுவரும்? ஏற்கெனவே ஆட்டத்தில் தோற்று ராடனுக்கு நூற்றுநாற்பது கொடுத்துவிட்டேன்...." என்றான்.

"நிலைமை இக்கட்டானதுதான். நீ சொல்வது போன்று ஓரளவு என் பணியும் காரணமாகும். உனக்குக் கிடைத்ததைப் பெறுவதற்கு எத்தனையோ பேர் ஏங்குகிறார்கள். இவ்விரண்டாயிரம்கூடச் சொந்தமாக இல்லாத கேப்டன்கள் எத்தனைபேர் நம் படையில் இருக்கிறார்கள்? அறிவாயா? தந்தை மனமாறும் வரையில் நீ உரிமையிழந்த இளவரசன். புயலடங்கும் வரை பொறு. விரைவிலேயே உன் பெயர் அரசுப்பதிவிதழில் வெளிவரும்போது உன் தந்தையார் மனம் மாறும்."

"அரசுப் பதிவிதழில் என் பெயரா? வீழ்ந்தோர் புண்பட்டோர் பட்டியலில் வேண்டுமாயின் முதலிடம் பெறலாம்."

"புலம்புவதற்கு இன்னும் காலம் இருக்கிறது. அப்படியே உனக்கு ஏதேனும் நேருமாயினும் என்னிடம் ஓரளவு சொத்திருக்கிறது. திருமணத்துக்கும் எனக்கும் காதவழி. உயிரெழுதும்போது என் ஞானக் குழந்தையை மறந்துவிட மாட்டேன்."

அவ்வளவிலேயே அவர்கள் பூசல் ஓய்ந்தது. டாபினுடன் நெடுநேரங் கோபம் கொள்வதியலாது என்றவாறே ஜார்ஜ் அவனைப் பெருந்தன்மையோடு மன்னித்து விட்டான்.

**பகட்டும் பணமும்**

அதே சமயத்தில் இரவுச் சாப்பாட்டிற்காகத் தன்னை அழகுபடுத்திக் கொண்டிருந்த ரெபக்காவைப் பெக்கி என்றழைத்தான் ராடன்.

"என்ன?" என்றது அவளது கீச்சுக்குரல்.

"ஆமாம், ஜார்ஜ் படையோடு வெளிநாடு சென்றுவிட்டால் அவன் மனைவி சென்ன செய்வாள்?"

"என்ன செய்வாள்! நாளெல்லாம் கண்ணீர் வடிப்பாள். ஏற்கெனவே அதனை நினைத்து நினைத்து என்னிடம் ஆறேழுமுறை புலம்பினாளே!"

"உனக்குச் சிறிதளவும் கவலையில்லை. அப்படித்தானே?" மனைவியின் இரக்கமற்ற உள்ளம் அவனுக்கு ஓரளவு சினம் மூட்டியது.

"என்ன இழிவான எண்ணம்! நான்தான் உங்களோடு வருவேனே! எனக்கென்ன கவலை? மேலும் நீங்கள் களத்துக்கா போகிறீர்கள்? தளபதிக்கு உதவியாகத்தானே செல்கிறீர்கள்?... அன்பே! மன்மதன் போவதற்குள் அவனிடமிருந்து இன்னும் பணம் கறப்பது நல்லதில்லையா?" என்றாள் அவள். ஜார்ஜை மன்மதன் என்றே அவள் குறிப்பிடுவாள். அவனிடமே அவனழகைப் பன்முறை புகழ்வாள். இரவு அவனும் ராடனும் சீட்டாடும் போதெல்லாம் அவனையே பரிவுடன் பார்ப்பாள். அவனுக்குச் சுருட்டுக் கொணர்ந்து கொடுப்பாள்; அதனைப் பற்ற வைக்க நெருப்பும் நீட்டுவாள். வெளியில் வண்டியிற்செல்லும் போதும் விருந்துகளிலும் ரெபக்கா எமீலியாவைவிடப் பன்மடங்கு கவர்ச்சியுடையவளாய்த் திகழ்ந்தாள்.



**புதுமணப் பெண்ணின் துன்பம்**

தன் கணவன் ரெபக்காவுடன் மனமகிழ்ந்து உரையாடிய போதெல்லாம் எமீலியா அடக்க ஒடுக்கத்தோடு ஒருபுறமாக ஒதுங்கியிருப்பாள். அவளுள்ளத்தே தன் தோழியைப்பற்றி ஐயம் எழலாயிற்று. மணமாகி ஒருகிழமைதான் கழிந்தது. அதற்குள்ளாகவே ஜார்ஜுக்குத் தன் மனைவியிடம் அலுப்புத் தட்டிவிட்டது. அவன் ரெபக்காவைச் சுற்றி அலையலானான்.

இத்தகைய சூழ்நிலையில்தான் படைஞர் பிரஸ்ஸலுக்குச் செல்ல வேண்டுமெனும் செய்தியைக் கொணர்ந்தான் டாபின். கேட்ட அளவில் எமீலியா திடுக்கிட்டாள். ஆயினும் அவளையும் அழைத்துச் செல்வதாக ஜார்ஜ் கூறியபின் அவள் ஒருவாறு தேறினாள். 'அவளை அழைத்துச் செல்வது இக்கட்டானது" என்றான் டாபின். எமீலியா "நானும் வருவேன்" என்று உறுதியாகச் சொல்லி விட்டாள். அவளைக் கண்ணுற்காண்பதே தன் வாழ்வின் பயனென்றும் அவளைக் கண்ணிமைபோற் பாதுகாத்தலே தன்குறிக்கோளென்றும் கொண்ட டாபின் அவளும் வருவதை ஏற்றுக்கொண்டான்.

ஜோஸப்பின் வண்டியில் மறுநாளே இலண்டனுக்குச் செல்வதென டாபினும் ஜார்ஜும் முடிவு செய்தனர். அவர்கள் வற்புறுத்தியதாலேயே ஜோஸப் அத்திட்டத்துக்கு இணங்கினான். இல்லையேல் அவன்

ராடனும் ரெபக்காவும் கிளம்பும்வரை பிரைட்டானிலேயே தங்கியிருப்பான்.

### அளவுக்கு மீறினால்...

மார்த்தா தன் செல்வாக்கினை அளவுமீறிப் பயன்படுத்தலானாள். ஈவு இரக்கமின்றித் தன் வெற்றியே குறிக்கோளாக, க்ராலியம்மையை ஆட்டுவிக்கலானாள். அம்மையார் உணவு ஒரு கவளம் கூடுதல் வேண்டினாலும், மருந்து ஒரு சொட்டும் குறைவாகப் போதுமென்றாலும் உடனேயே அவள் அம்மையாரைச் சாவு வருமென்று அச்சுறுத்துவாள். அம்மையாரின் தோழியையும் சமையற்காரனையும்கூட வேலையிலிருந்து நீக்கிவிட ஏற்பாடு செய்து கொண்டிருந்தாள். இந்நிலையில்தான் வெறுக்கத்தகுந்த ஒரு விபத்தின் விளைவாக மார்த்தா தன் இல்லத்துக்குத் திரும்ப நேர்ந்தது. அவளுடைய கணவன் மறைத்திரு பூட் க்ராலி குதிரையிலிருந்து விழுந்து, தோள்பட்டை எலும்பினை முறித்துக் கொண்டார். வீக்கமும் காய்ச்சலும் ஏற்படவே மார்த்தா புறப்பட்டாக வேண்டிய நிலை ஏற்பட்டது. அவள் புறப்பட்டுச் சென்ற அந்நாள் மாலையிலேயே க்ராலியம்மையார் மருந்து குடித்தலை விட்டுவிட்டார் அவரில்லத்தில் உரிமை மணம் கமழ்ந்தது.

### அருஞ் செய்தி

மறுநாள் காலையிலேயே ரெபக்கா பிரிக்ஸைக் கண்டு பேசினாள். மார்த்தா போனது முதல் நடைபெற்றவற்றையெல்லாம் பிரிக்ஸ் ரெபக்காவிடம் சொன்னாள். ரெபக்கா மார்த்தாவின் சூழ்ச்சித் திட்டங்களையெல்லாம் பிரிக்சுக்குப் புலப்படுத்தினாள். தனக்கும் ராடனுக்குமிடையே ஆயிரக்கணக்கான



வழிகளில் காதலை மூட்டிவிட்டவள் மார்த்தா என்றும், தங்கள் மணத்தின் மூலம் அம்மையாருக்கும் தங்களுக்கும் இடையே பகை மூட்டியவள் அவள் என்றும் விளக்கினாள். பின் ரெபக்கா விடுதிக்கு ஓடோடித் திரும்பினாள். இலண்டனுக்குக் கிளம்பிய எமீலியாவைக் கட்டித்தழுவிப் பிரியா விடை கொடுத்தாள். வண்டி பார்வையினின்று மறைந்தவுடனேயே ராடனிடம் மார்த்தா போய்விட்ட அருஞ் செய்தியை எடுத்துரைத்து, அவனை அம்மையார்க்கு ஒரு கடிதம் எழுதுமாறு வற்புறுத்தினாள்.

### ராடனின் கடிதம்

‘பிரைட்டான், வியாழக்கிழமை,’ ‘என் அன்புள்ள அத்தைக்கு’ என்பது வரைதான் அவனுடைய கற்பனை ஓடியது. அதற்குமேல் ரெபக்காவே அவன் எழுத வேண்டியவற்றைச் சொன்னாள். அக் கடிதத்தை அம்மையாரிடம் பிரிக்ஸ் கொடுத்த போது அவர் சிரித்தார். பிரிக்சையே படிக்கச் சொன்னார். படித்து முடித்த போதோ முன்னிலும் அதிகமாகச் சிரித்தார். “முட்டாளே! உனக்குத் தெரியவில்லையா? இக் கடிதத்தில் ஒருவரிகூட ராடன் எழுதியதன்று. பணம் வேண்டுமென்று கேளாமல் ஒருநாள்கூட அவன் எனக்குக் கடிதமெழுதியவனல்லன். அவனது கடிதமென்றால் எழுத்துப் பிழைகளும் இலக்கணப் பிழைகளும் புள்ளிகளும் கோடுகளும் ஏராளமாய் இருக்கும். இக்கடிதம் அப்பெண்ணுருக் கொண்ட பாம்பு எழுதியதுதான்” என்றாள். ‘எல்லோரும் நான் சாகவேண்டுமென்றே விரும்புகிறார்கள்; என் பணத்தைத் தட்டிக் கொண்டுபோகவே பார்க்கிறார்கள்’—இவ்வாறு ஓடியது அவள் நினைவு.

சற்றுப் பொறுத்து அம்மையார் அலட்சியமான குரலில் சொன்னார்: "ராடனைக் காண்பதில் எனக்குத் தடையில்லை. ஆயினும் பொறுமைக்கும் எல்லையுண்டு. அவன் மனைவியைக் கண்ணுற்று காணவும் பொறுக்க மாட்டேன்."

மறுநாளே அம்மையார் உலாவச் செல்லும் வழியில் ராடன் காத்து நின்றான். தன் முன்னையன்புக் குரியவனைக் கண்ட அளவில் அம்மையாருள்ளத்தே எத்தகைய உணர்ச்சி மேலோங்கியதென எவரே சொல்லவல்லார்! ராடனைப் பொறுத்தவரை அவன் முகம் குருதியெனச் சிவந்தது. அம்மையார் அன்போடு நீட்டிய இருவிரல்களைப் பற்றிக் கொள்வதற்குப் பதில் அவன் பிரிக்சின் கையை இறுகப் பிடித்துக் குலுக்கினான். உணர்ச்சிப் பெருக்கில் அவனது மனமே குழம்பியது.

நிகழ்ந்தவற்றை ராடன் தன் மனைவியிடம் சொன்னான். "அட முட்டாளே! நீங்கள் வீட்டிற்குள் போயிருக்க வேண்டும். மறுபடி வெளியிலேயே வந்திருக்கக்கூடாது" என்றாள் அவள்.

"எனக்குப் பட்டங்கட்டத் தேவையில்லை. அப்படியே நான் முட்டாளாக இருந்தாலும் நீ சொல்லிக் காட்டக் கூடாது" என்றான் அவன், சீற்றத்தோடு.

அவள் அதன் பிறகு குழைந்து பேசி அவனது சீற்றத்தைத் தணிக்க முற்பட்டாள். மறுநாள் அவன் எப்படியும் அம்மையார் இல்லத்துக்குள் போய்விட வேண்டும் என்றாள். "நீ உன் நாவை அடக்கிக் கொண்டிரு, அதுவே போதும். நான் என் விருப்பப்படி செய்வேன்" என்றான் அவன்.



### கடிதத்தின் விளைவு

அன்றிரவே க்ராலி அம்மையார் பிரிக்சை அழைத்தார். நெடுநாட்பிரிவுக்குப் பின் ராடனைக் கண்டதன் விளைவாக அவர் மனம் கொந்தளித்தது போலும். பிரிக்சைக் கொண்டு அவனுக்கு ஒரு கடிதம் எழுதுவித்தார். சீர்கெட்ட தம் உடல்நிலையில் உணர்ச்சிப் பெருக்கிற்கு இடமில்லையாதலால் குடும்பப் பேச்சுக்கோ சந்திப்புக்கோ இனி முயல வேண்டா என்றும், பிரைட்டானுக்கு ராடன் வந்தது பற்றித் தம் நன்றியைத் தெரிவிப்பதாகவும் தம் பொருட்டாக இனியும் அவன் அங்குத் தங்க வேண்டியதில்லை யென்றும், மறுநாள் இலண்டனிலுள்ள தம் வழக்கறிஞரைப் போய்ப் பார்த்தால் அவரிடமிருந்து ஒரு செய்தி கிட்டுமென்றும் கடிதத்தில் தெரிவித்தார்.

கடைசிப் பகுதி அம்மையார் கருதிய பலனைத் தந்தது. மறுநாளே ராடன் தன் மனைவியுடன் லண்டனுக்குப் புறப்பட்டு விட்டான். சீட்டாட்டத்தில் பெற்ற பணத்தைக் கொண்டு விடுதிக் கடனை அடைத்தான். "போகுமுன் கிழவியைப் பார்க்க விருப்பம் உண்டு. அவள் தளர்ந்து போயிருக்கிறாள். நெடுநாள் கிடக்க மாட்டாள்...காசோலை எவ்வளவுக் கிருக்குமோ! இருநூறு....ஏன் பெக்கி, இருநூற்றுக்குக் குறைவாகவா இருக்கும்?" என்றான் அவன்.

இருவரும் பிராம்ப்டனில் ஒரு விடுதியில் தங்கினர். வழக்கறிஞரைக் கண்டுவிட்டு ராடன் பெருஞ் சீற்றத்

தோடு திரும்பினான். "அட கடவுளே! அவள் இருபதுதான் கொடுத்திருக்கிறாள்" என்றான் அவன்.

அம்மையார் செய்தது தங்களுக்கு எதிராக இருந்த போதிலும் பெரிய வேடிக்கையாகப்பட்டது. ரெபக்கா விழுந்து விழுந்து சிரித்தாள். ராடனே சீற்றமும் வருத்தமும் கொண்டான்.

---

# 16. இலண்டன் மாநகரில்

பிரைட்டானிலிருந்து கிளம்பிய ஜார்ஜும் மற்றவர்களும் இலண்டனை அடைந்து உயர்தர விடுதியொன்றில் தங்கினர். ஜார்ஜ் பகட்டுக்காகச் செய்யும் செலவுகளைக் கண்டு டாபின் திடுக்கிட்டான். டாபின் தடுத்துச் சொல்லியும் ஜார்ஜ் செவி மடுத்திலன்.

**தாயும் மகளும்**

இரவு உண்டிக்குப்பின் எமீலியா தன் தாயைக் காண வேண்டுமென்னும் விருப்பத்தை எடுத்துரைத்தாள். ஜார்ஜ் முணுமுணுத்தவாறே இணங்கினான். "அன்பே நீங்களும் என்னோடு வருகிறீர்களா?" என்றாள் அவள். இல்லை. அன்புக்கு வேறு வேலையிருந்தது. வேலைக்காரனை அவளோடு அனுப்புவதாகச் சொல்லி விட்டான் அவன்.

மகளும் தாயும் நெடுநாட்களுக்குப் பின் கூடினர். மடையுடைத்தாற்போல் கண்ணீர் வெள்ளம் பெருக்கியது முதலியவற்றைப் படிப்பவர்களே கற்பனை செய்து கொள்ளலாம்.

மறுநாட் காலையிலும் ஜார்ஜுக்கு முக்கியமான வேலையிருந்தது. எனவே எமீலியா மீண்டும் தன் தாய் வீடு சென்றாள். வெளிநாடு செல்லும் பெருமாட்டி ஒருத்தியின் தகுதிக்கேற்பத் துணிமணிகளையெல்லாம் அவளே கடைத்தெரு சென்றுவாங்கிக் கொள்ள வேண்டுமென்று ஜார்ஜ் கட்டளையிட்டனுப்பினான்.

இலண்டனை அடைந்தவுடனேயே ஜார்ஜ் தன் தந்தையின் வழக்கறிஞருக்குக் கடிதமெழுதியிருந்தான்; மறுநாளே அவரைப் பார்க்க விரும்புவதாய்த் தெரிவித்

திருந்தான். ராடனேடு சீட்டாடியதில் ஏற்பட்ட இழப்புக்களால் அவனது பணப்பை வற்றிவிட்டது. எனவே வழக்கறிஞர் அவனுக்காக வைத்திருக்கும் இரண்டாயிரம் பவுனைப் பெற்றுக் கொள்வது தவிர வேறு புகலில்லை. 'விரைவிலேயே தந்தை மனம் மாறுவார். அவனையொத்த தலைசிறந்த மகனேடு எந்தத் தந்தைதான் நெடுங்காலம் பிடிவாதம் பண்ணமுடியும்? அவனது குணத்தால் அவர் மனம் மாருவிடினும், போர்க்களத்தில் அவனது வீரச்செயலைக் கேட்டபிறகாவது மாறிவிடுவார். மாருமலே போயினும் என்ன? உலகமே எதிரிலிருக்கிறது. பார்க்கலாம்.'

ஜார்ஜின் அலுவல்

வழக்கறிஞர் ஹிக்ஸிடம் தன் வருகையை உணர்த்துமாறு கேப்டன் ஜார்ஜ ஒருவரை ஏவினன். அவனது குரலில் ஆணவமும் கடுமையும் நிறைந் திருந்தன. வரவேற்பறையில் இருந்தவர்கள் முகத்திலெல்லாம் பரவிய இகழ்ச்சிக் குறிப்பு அவன் கண்ணில் பட்டிலது.

அறைக்குள் தான் நுழைந்தவுடன், வழக்கறிஞர் நல்லிணக்கச் செய்தி ஏதேனும் சொல்லுவார் என்று ஜார்ஜ் எதிர்பார்த்தானே என்னவோ! வழக்கறிஞர் அவனைச் சிறிதும் பொருட்படுத்தாதவராய் ஏதோ எழுதிக் கொண்டிருந்தார். "உட்காருங்கள், இதோ நொடியில் உங்கள் சிறு விவகாரத்தைக் கவனிக்கிறேன்" என்றபின் தம் உதவியாளனை அழைத்து விடுதலை முறியைக் கொணரப் பணித்தார். மீண்டும் எழுதத் தலைப்பட்டார்.



உதவியாளன் முறியைக் கொண்டு வந்து வைத்துக் 'காசோலை வேண்டுமா அல்லது அத்தொகையைச் சரக்குகளில் முடக்கி வைக்கலாமா' என வினவினன். ஜார்ஜ் வெடுவெடுப்பாகக் காசோலையே கொடுங்கள் என்ருன். தொகையை வழக்கறிஞர் எழுதப்புகுந்தார். ஜார்ஜ் 'பெருந்தன்மை'யோடு "ஷில்லிங் பென்ஸுகளை விட்டுத் தள்ளுங்கள்" என்ருன். இப்பெருந்தன்மை வழக்கறிஞரை நிலைகுலையச் செய்துவிடும் என்ற நினைப்புடனேயே காசோலையைப் பையில் திணித்துக்கொண்டு வெளியேறினன்.

காசோலையை வங்கியில் பணமாக்கிக் கொண்டு விடுதி திரும்பினன். வங்கிப் பங்காளி ஆஸ்போர்ணிடம் சென்று "அவன் துணிச்சலாகவே இருக்கிருன். முழுத் தொகையையும் பெற்றுச் சென்றுவிட்டான். இரண்டாயிரம் பவுன் இவனையொத்த பயலிடம் எத்தனை நாள் நிலைக்கும்?" என்ருர். ஆஸ்போர்ண் சீறினர்: "எப்படிச் செலவழித்தாலும் எத்தனை நாளில் செலவழித்தாலும் எனக்குக் கவலையில்லை."

# 17. பிரஸ்ஸல்ஸ்

படையினைச் சார்ந்த மக்கள் பலரும் தங்கள் தோழன் ஜார்ஜின் அழகிய மனைவியை அன்போடு வரவேற்றனர். தங்கள் வீரத்திறனுக்கேற்ற வகையில் அவளுக்கு வணக்கஞ் செய்தனர். கிடைத்த இச்சிறு வெற்றியில் அவள் உள்ளம் களித்தது; கண்கள் புத்தொளி பெற்றன. அவளது புகழ் பரவியது கண்டு ஜார்ஜ் பெருமித மடைந்தான்.

நம் நண்பர்கள் பிரஸ்ஸல்சை அடைந்தனர். அங்குத்தான் படையணி தங்குவதற்கு ஏற்பாடாயிருந்தது. அந்நாளைய ஐரோப்பியக் கண்டத்துத் தலைநகரங்களுளெல்லாம் பிரஸ்ஸல்ஸ் களிப்புக்கிடமாகத் திகழ்ந்தது. பகட்டுச்சந்தையின் கடைகளெல்லாம் அங்கே கவர்ச்சிகரமாகப் பரப்பப்பட்டிருந்தன. சூதாட்டமும் ஆடல்பாடல்களும் விருந்துகளும் தங்குதடையில்லாமல் நிகழ்ந்தன. புதுமணப்பெண்களுள் எவளுக்கும் சளைக்காதவளாய் எமீலியா இந்நகரில் சில கிழமைகளைக் கழித்தாள். அவள் தங்கியிருந்த விடுதி மிகச் சிறந்த ஒன்று. விடுதிச் செலவுகளைஜோஸப்பும் ஜார்ஜும் ஏற்றுக்கொண்டனர் (ஜோஸப்பும் தன் தங்கையைக் கண்காணிப்பதற்கென்று உடன் போந்திருந்தான்.)

**நண்பர்கள் கூட்டம்**

தனக்கென ஜார்ஜ் ஒரு குதிரை வாங்கினான். ஜோஸப்பும் எமீலியாவும் பெட்டிவண்டியில் உலவச் செல்லுங்கால், ஜார்ஜும் டாபினும் குதிரைகளில் ஏறி வண்டிக்குப் பின்னாகச் செல்வது வழக்கமாயிற்று. ஒரு நாள் அவ்வாறு உலவுகையில், குதிரைவீரர்களடங்கிய சிறுபடையொன்று எதிர்ப்பட்டது. அப்படையின் நடுவே தளபதிக்குப் பக்கத்தில் எழில்மிகுந்த உடையுடுத்து, அரபுக்குதிரைமேல் ரெபக்கா சென்றுகொண்டிருந்தாள். பெட்டிவண்டியைப் பார்த்த போதும், அவள் தன்போக்கிலேயே சென்றாள். வண்டிக்குள் எமீலியா இருத்தலையறிந்தவுடன், முறுவலித்தவாறே கையை உயர்த்தி ஆட்டினாள். பின்னர்த் தளபதியோடு உரையாடுதலைத் தொடர்ந்தாள். ஆயின் ராடன் தன் அணியை விட்டு விரைந்துபோந்து எமீலியாவின் கரம் பற்றிக் குலுக்கினான்; ஜோஸப்பின் நலத்தை உசாவினான். சற்றே பின் தங்கிவிட்ட ஜார்ஜும் டாபினும் விரைவாக முற்பட்டனர். 'பெரும்புள்ளி'களைக் கண்டு வணக்கஞ் செலுத்தினர். அவர்கள் நடுவில் ரெபக்கா செல்லுதலை ஜார்ஜ் இமைப்பொழுதிற் கண்டு கொண்டான். ராடனும் எமீலியாவும் உரையாடுதலை நோக்கி மகிழ்ந்தான். ராடனும் சற்றுநேரம் ஜார்ஜோடு ஊக்கமாகப் பேசினான். அவனும் ரெபக்காவும் தளபதியோடு ஒரு விடுதியில் தங்கியுள்ளனர் என்றறிந்துகொண்டான், ஜார்ஜ். ஜார்ஜைத் தங்கள் விடுதிக்கு வருமாறு ராடன் அழைத்தான். அதன்பின் இருவரும் பிரிந்தனர். ராடன் தன் படைஞரோடு கலந்தான். ஜார்ஜும் டாபினும் முன்போலவே பெட்டி வண்டியின் இருபுறமும் செல்லலாயினர்.

**ஜார்ஜும் ரெபக்காவும்**

அன்றிரவு ஜார்ஜ் ஒரு நாடகத்துக்கு எமீலியாவை அழைத்துச் சென்றான். "ரெபக்கா இங்குப் போந்தது எவ்வளவு ஆறுதலாயிருக்கிறது! உனக்குத் தோழி வேண்டுமே என்ற கவலையில்லை" என்றான். எமீலியா வாய் திறக்கவில்லை. அவள் யாது நினைத்தாளோ!

நாடகத்தின் ஓரங்க முடிவில் ஜார்ஜ் தன் பெட்டியினின்று கிளம்பினான்—ரெபக்காவைக் கண்டு பேசும் கருத்துடன். அவளறை வாயிலில் ராடன் நின்றான். இருவரும் கழிந்த சில கிழமைகளில் நிகழ்ந்தவற்றைக் குறித்துப் பேசலாயினர். இப்போது ராடன் "செவ்வாய்க்கிழமைகளில் தளபதி வெளியிடத்திலுண்பார். நீ இந்தச் செவ்வாய்க்கிழமை விடுதிக்கு வாயேன்" என்றழைத்தான். ஜார்ஜ் அவ்வழைப்பினை அரைமனத்தோடு ஏற்றுக்கொண்டான். பின், "உள்ளே போய் உன் மனைவிக்கு என் வணக்கத்தைத் தெரிவிக்கிறேன்" என்றான். இருவரும் பொருள் பொதிந்த பார்வையினைப் பரிமாறிக் கொண்டனர்.

ஜார்ஜைக் கண்டவுடன் ரெபக்கா இரு கையும் பிணைத்தபடி துள்ளியெழுந்தாள். பிணைத்தவாறே கைகளை நீட்டினாள். அவளுடன் இருந்த தளபதியோ, "யார் இந்தக் கரடி" என்று சொல்பவர் போல முணுமுணுத்தார். ரெபக்கா ஜார்ஜிடம் குழைவாகப் பேசப் பேசத் தளபதியின் சீற்றம் கூடலாயிற்று. அவர் இவ்விருவரையும் சிவந்த கண்களால் மாறி மாறிப் பார்க்கலானார். "என் அன்புத் தோழி எமீலியாவை இப்போதே பார்க்கவேண்டும். கேப்டன் ஜார்ஜ், கை கொடுங்கள்" என்றவாறே அவள் கிளம்பினாள். அவர்களிருவரும் சென்றவுடன் தளபதி கொட்டிய வசவுகளை அப்படியே நான் எழுதினாலும் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்து அச்சுக் கோப்பவர்கள் கோக்க நாணுவார்கள்.

தன் அன்புத் தோழியைக் கண்டவுடன் எமீலியா எழுந்தாள். ரெபக்கா, நாடக அரங்கு என்பதனையும்



மறந்தவளாய்த் தன் தோழியைத் தழுவிக் கொண்டாள். அடுத்து ஜோஸப்பையும் வணங்கினாள். அங்குத் தங்கிய கொஞ்ச நேரத்திலும் துருதுருவென்றியங்கினாள்; படபடவென்று பேசினாள்; முகத்தில் புன்னகையை நிலைக்கச் செய்தாள். (எல்லாவற்றையும் தளபதி கண்ணாடி வழியே கவனித்தார் என்பது அவளுக்குத் தெரியும்) இடைவேளை முடிந்த போது அவள் தன் இடத்துக்கு எழுந்தாள். உடன் செல்ல முனைந்த ஜார்ஜைத் தடுத்தாள்; அவன் கண்ணான எமீலியாவுடனேயே இருத்தல் வேண்டுமென்று வற்புறுத்தினாள். விளைவாக டாபின் அவளை அழைத்துச் சென்றான். மீண்டு வந்த டாபின், ஜார்ஜிடம், "அந்தப் பெண் எத்தகைய புரட்டுக்காரி! அவள் இங்கிருந்தபோதெல்லாம் தளபதி காணவேண்டுமென்பதற்காகவே என்னென்னவோ நடித்தாள்" என்றான்.

"புரட்டுமில்லை நடிப்புமில்லை. இங்கிலாந்திலேயே தலைசிறந்த நற்பண்பினள் அவ்விளம் பெண்தான்" என்று விடையிறுத்தான் ஜார்ஜ், தன் மீசையை முறுக்கி விட்டவாறு.

எமீலியா தன் ஐயப்பாட்டினை ஒருபோதும் ஜார்ஜிடம் எடுத்துரைத்தாளல்லள். மனத்துக்குள் வைத்தே புழுங்குவாள். அவள் சிறிதும் ஐயுற்றிலள் என்றெண்ணி மகிழ்ந்தான் அவன். ரெபக்கா உலவச் செல்லும் போதெல்லாம் (வேறெவரும் உடன்போகவில்லையெனில்) ஜார்ஜ் உடன் செல்வான். தன் மனைவியிடம், 'படைத் தொடர்பான வேலை' என்று கூறிப் புறப்படுவான். மாலை வேளைகளை ராடன் தம்பதிகளு

டன் கழிப்பான்; ராடனிடம் பணத்தை இழப்பான். ரெபக்கா தன்மேல் கொண்ட காதலால் உருகிக்கொண்டிருப்பதாக நினைத்து மகிழ்வான். மனைவி இளைஞனிடம் கொஞ்சிப் பேசுவது, கணவன் சீட்டாட்டத்தில் அவனிடமிருந்து பணம் பறிப்பது; இத்திட்டத்தை அவ்விருவரும் வாய்விட்டுப்பேசி வகுத்துக் கொண்டனரல்லர் எனினும் நடைமுறையில் செய்து காட்டினர். கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் நன்கறிந்திருந்தமையால், ஜார்ஜ் தன் இருப்பிடத்துக்கு அடிக்கடி வருவதுபற்றி ராடன் எள்ளளவும் வருத்தப்பட்டிலன்.

ஜார்ஜ் இப்புதிய தொடர்புகளில் முழுகிப்போயினமையால் டாபினை முன்போல அடிக்கடி கண்டு பேசுவதைக் குறைத்தான். டாபின் எப்போதாவது எதிர்ப்பட்டாலும், அவன் கூறும் அறிவுரைகளை ஜார்ஜ் அறவே புறக்கணித்தான்.

**ஆடல் நிகழ்ச்சியில்**

1815-ஆம் ஆண்டு, ஜூன் 15-ஆம் நாளிரவு பிரஸ்ஸல்சின் உயர்குடிப் பிறந்த பெருமாட்டி ஒருத்தி ஆடல் நிகழ்ச்சி ஏற்படுத்தினார். குறித்த நேரத்தில் எமீலியாவுடன் ஜார்ஜ் அந்நிகழ்ச்சிக்குச் சென்றான். அழைக்கப்பட்டிருந்தவர்களுள் ஒருவரேனும் எமீலியாவுக்குப் பழக்கமானவரல்லர். அவள் தோற்றமும் அன்று எடுப்பாக இல்லை. மாறாக ரெபக்காவின் தோற்றமோ கவர்ச்சி மிக்கதாய் விளங்கிற்று. கூடியிருந்த ஆடவருள் பெரும்பாலோரை அவள் ஏற்கெனவே அறிவாள். ஆதலின் அவ்வாடவருள் பலர் அவளைச் சூழ்ந்துகொண்டனர். மகளிர்க்கிடையிலோ, 'கன்னிமடத்தில் பயின்ற



அவளை ராடன் காதலித்து அழைத்தோடினான்; அவள் மாண்ட் மாரென்சி குடியில் தோன்றியவள்' என்னும் செய்தி பரவியது.

அவளொடு நடனமாட விரும்பிப் பலர் முன்வந்தனர். அவளோ தான் சிறிது நேரமே ஆடப்போவதாகவும், ஏற்கெனவே ஒருவருக்கு வாக்குக் கொடுத்துவிட்டதாயும் சொல்லிவிட்டாள். நேரே எமீலியாவிடம் சென்றாள். அப்பேதைப் பெண்ணை அண்டுவார் எவருமின்றிச் சோர்ந்து உட்கார்ந்திருந்தாள். (ஜார்ஜ் அவளை உட்காரவைத்துப் பின் எங்கோ சென்றுவிட்டான்) ரெபக்கா தன் தோழியின் உடையைப் பற்றியும் கூந்தலழகு குறித்தும் குறைப்பட்டுக் கொண்டாள். "பெருமகிழ்ச்சி யூட்டும் அரிய நிகழ்ச்சி. ஊரறிந்த பெருமக்கள் தாம் பலராய் இங்கு வீற்றுள்ளனர். ஒரு சிறப்புமில்லாதவர் மிகச்சிலரே அழைக்கப்பட்டிருக்கின்றனர்" என்றாள். தொடர்ந்து தன் தோழிக்குச் சில அறிவுரைகளும் வழங்கினாள்; "அட கடவுளே! உன் கணவன் சீட்டாடுவதை நீதான் நிறுத்தவேண்டும். இல்லையேல் அவன் அடியோடு கெட்டுவிடுவான். ஒவ்வோரிரவும் உன் கணவனும் என் கணவரும் சீட்டாடுகிறார்கள். உன் கணவனோ அப்பாவி. ராடன் ஷில்லிங்கு கூட மிச்சமில்லாமல் பிடுங்கிக்கொள்வார். நீ ஏன் வீட்டையே காத்திருக்கிறாய்! எங்கள் வீட்டுக்குத்தான் ஒருநாள் வாயேன். சோம்பலுக்கு உறைவிடமாய் வீட்டிலேயே அந்தக் கேப்டன் டாபினோடு தங்கிவிடுகிறாயே! ஆமாம். அவ்வளவு பெரிய பாதங்களுடையவனை எவள்தான் காதலிப்பாள்! உன் கணவரது பாதங்கள் எத்துணை அழகானவை! இதோ அவரே வந்துவிட்டாரே!... அவனைப் பாருங்கள். எங்கே போய்

விட்டீர்கள்? உங்களைத் தேடி இங்கே எம்மி கண்ணீர் வடிக்கிறாள். என்ன! என்னை ஆடுவதற்கு அழைக்கத் தானே வந்தீர்கள்?'' தான் கொணர்ந்த மலர்ச்செண்டினையும் போர்வையையும் எமிலியாவின் பக்கத்தில் வைத்துவிட்டு, ரெபக்கா ஜார்ஜோடு நடனமாடக் கிளம்பிவிட்டாள். ஒருவரைக் கடுமையாகப் புண்படுத்துவது எப்படி என்பதனைப் பெண்கள் மட்டுமே அறிவார்கள். அவர் தம் நாவெனும் கணையின் நுனி நஞ்சினில் தோய்ந்தது; ஆடவனின் மழுங்கிய நாவைவிட ஆயிரமடங்கு மிக்க வலிமையோடு துளைக்க வல்லது.

ஜார்ஜும் ரெபக்காவும் எத்தனை முறை நடனமாடினரோ! எமீலியா அறியாள். அவள் தன் இருக்கையில் ஒடுங்கியிருந்தாள். ஓரிருமுறை ராடன் அவள் முன் தோன்றி உரையாட முயன்றான். நெடுநேரத்துக்குப்பின் டாபின் துணிச்சலோடு அவளுக்கெனச் சிற்றுண்டி வருவித்து அவளருகில் அமர்ந்தான். தன் கண்ணிற் பெருகும் கண்ணீருக்குக் காரணம் கற்பிப்பாளாய், எமீலியா அவனிடம் ரெபக்காவின் எச்சரிக்கை பற்றிச் சொன்னாள். "சூதாட்டத்தில் நாட்டங்கொண்டுவிட்ட மனிதன் எத்தகைய கயவரெல்லாம் தன்னை ஏமாற்ற இடமளிக்கிறான்'' என்றான் டாபின். "அப்படியா'' என்றது அவள் வாய். மனமோ பொருளிழப்பைப்பற்றி நினைத்துக் கவலைப்படவில்லை; வேறெதனையோ கருதி உருகியது.

### விந்தை மலர்ச்செண்டு

முடிவில் ரெபக்காவின் மலர்ச் செண்டினையும் போர்வையையும் எடுத்துச் செல்ல ஜார்ஜ் மீண்டு போந்தான். ரெபக்கா புறப்பட்டு விட்டாள். தோழியிடம் விடைபெற்றுச் செல்லவும் அவள் மனமிரங்க



ரெபக்கா கைநீட்டி மலர்ச்செண்டினைப் பெற்றபோது...

வில்லை. எமீலியா கணவன் வந்துசென்றபோதும் வாய் திறந்து ஒரு சொல்லும் சொல்லவில்லை; தலை கவிழ்ந் தாள். அந்நேரத்தில் டாபினும் அங்கில்லை. படைத் தலைவர் அழைத்ததால் போயிருந்தான். மலர்ச்செண் டினை எடுத்துச்சென்ற ஜார்ஜ் உரியவளிடம் கொடுத்த போது, பூக்களினிடையில் நாகம்போல் ஒரு துண்டுக் கடிதம் சுருண்டு கிடந்தது. அக்கணமே ரெபக்காவின் கண்களில் அது பட்டது. அவள் கைநீட்டி அச்செண் டினைப் பெற்றபோது இருவர் கண்களும் சந்தித்தன. கடிதமிருத்தலை அவளறிவாள் என்பதனை அவளது பார்வையே அவனுக்குச் சொல்லிற்று. ராடன் அவ்விரு வருக்குமிடையே நடந்த பார்வைப்பேச்சினைச் சற்று முணராதவனாய் நண்பனிடம் விடைபெற்று மனைவியை அழைத்துச் சென்றான். ஜார்ஜின் உள்ளமோ வெற்றி யுணர்ச்சியினால் துடிதுடித்தது.

எமீலியா மலர்ச்செண்டு நாடகத்தின் முழுவடி வத்தையும் காணாவிடினும் முதன்மையான காட்சி யினைக் கண்டுவிட்டாள். ரெபக்காவின் போர்வை யினையோ, செண்டினையோ தன் கணவன் எடுத்துச் செல்வது அவளுக்குச் சிறிது காலமாகவே பழக்கப் பட்ட ஒன்றுதான். ஆயினும் இந்நாளைய நிகழ்ச்சியோ அவளால் பொறுக்க வியலாததாகப் போயிற்று. சற்றுப் பின் அங்குப் போந்த டாபினின் கையைப்பற்றி, "வில்லியம்! நீங்கள் எப்போதும் என்னிடம் அன்பாக நடக்கிறீர்கள். இப்போது...என்...என் உடல்நிலை சரியில்லை. என்னை வீட்டுக்கு அழைத்துச் செல்லுங்கள்" என்றாள். ஜார்ஜைப் போலத் தானும் அவனை முதற் பெயரால் அப்போது அழைத்தலையும் அவள் உணர்ந் திலள். டாபின் அவளை அழைத்துச் சென்றான்.



எமீலியா நேரே படுக்கைக்குச் சென்றாள். ஆயினும் உறக்கம் அவளை அணுகவில்லை.

**எதிர்பார்த்த செய்தி**

களிவெறி கொண்ட ஜார்ஜ் பெரும் பொருள் வைத்துச் சூதாடினான். தொடர்ந்து வெற்றியும் எய்தினான். "இன்றிரவு எல்லாமே என்பக்கம் வெற்றி யாகின்றன" என்றான் அவன். சூதாட்டமும் அவனது மனத்துடிப்பினை யடக்காமற் போகவே, குவளை குவளை யாக மதுவருந்தலானான். அடுத்திருந்தோரிடம் சளசள வென்று பேசி உரக்கச் சிரித்தான். இத்தகைய நிலையில் தான் டாபின் அவன்முன் தோன்றினான்.

"வா, டாபின்! நீயும் குடி. இந்த மது பேர் போனது."

"புறப்படு ஜார்ஜ்! குடித்தது போதும்." டாபின் ஆழ்ந்த கவலையோடு கூறினான்.

"போதுமா! குடியைப் போன்றது வேறில்லை. நீயும் குடி. குடித்து விளக்குமாடம் போன்ற உன் தாடையில் ஒளிசேர். இதோ பிடி."

டாபின் அவனையணுகிச் செவியில் ஏதோ ஓதி னான். உடனேயே ஜார்ஜ் துள்ளியெழுந்து, மகிழ்ச்சி யாரவாரஞ்செய்தான். குவளையை மேசையில் ஓங்கித் தட்டினான். நண்பனின் கையைப் பிடித்தவாறு விரைந்து நடக்கலானான். "எதிரிகள் ஆற்றைக் கடந்து விட்டார்கள். இடப் பக்கத்தில் நம் படை போர் தொடங்கிவிட்டது. புறப்படு. மூன்றுமணி நேரத்தில் நாமும் அணிவகுத்துச் செல்லவேண்டும்"—இதுதான் டாபின் சொன்ன செய்தி.

## குற்றஞ் செய்த நெஞ்சு

நெடுநாட்களாய் எதிர்பார்த்த செய்திகிட்டியதும், ஏற்பட்ட பரபரப்பினுல் ஜார்ஜின் உடலே துடித்தது. தன் விடுதி நோக்கிச் சென்றுகொண்டிருந்த நேரத்தில் அவன் ஆயிரமாயிரஞ் செய்திகளை நினைத்துப் பார்த்தான். கழிந்த கால வாழ்வும், எதிர்கால வாய்ப்புக்களும், தன்னெதிரே தோன்றும் விதியும், தான்விடைபெறவிருக்கும் மனைவியும் பிறக்கப்போகும் தன் குழந்தையும் இப்படிப் பல அவன் நினைவில் எழுந்தன. அன்றிரவு நடைபெற்றவற்றை நடைபெருத கனவாய் ஆக்கிவிட முடியுமானுல்....! குற்றமற்ற மனத்தொடு அக்களங்கமற்ற காதல் மனைவியிடமிருந்து உருக்கமாக விடைபெற்றுச் செல்லமுடியுமே!

தன் குறுகிய மணவாழ்வு பற்றியெண்ணினுன். சில கிழமைகளில் அவன் தன் சிறு செல்வத்தைச் சிதறடித்தனனே! எத்துணை ஊதாரியாக இருந்து விட்டான்! அவனுக்கு ஏதேனும் இக்கட்டு நேருமெனில் அவள் கதி என்ன? அவன் ஏன் அவளை மணந்தான்? திருமணத்திற்கே அருகதையில்லாதவன் தானே? எப்போதும் தன்னிடம் அன்புகாட்டிய தந்தையை ஏன் பகைத்தான்? நம்பிக்கையும் கழிவிரக்கமும் ஆசையும் உருக்கமும் அவனது நெஞ்சில் நிறைந்தன. இருக்கையிலமர்ந்து அவன் தன் தந்தைக்கு ஒரு கடிதம் எழுதலானுன். முடித்தபோது வைகறையொளி வானில் மங்கலாய்ப் பரவத் தொடங்கிவிட்டது. விடுதியில் நுழைந்த பொழுதே அவன் எமீலியாவின் படுக்கையைக் கண்டான். அவள் கண்ணை மூடியவளாய் அசையாமற் படுத்திருந்தாள். அவளுறங்குவதாயெண்ணி அவன் ஓர் அமைதியுங் கொண்டான். இப்போது அவன் ஓசைப்படாமல் அவளையணுகி உற்று நோக்கலானுன். கடவுளே! ஏத்துணை தூயவள்! அன்பினள்! யாருமற்றவள்! அவன் எவ்வளவு தன்னலக்காரன், கொடியவன், குற்றமுடையவன்! அவன் அவள் முகத்தை நோக்கிக் குனிந்தான். அழகிய இரு கைகள் அவனது கழுத்தைச் சுற்றின. "விழித்துக் கொண்டுதானிருக்கிறேன்" என்றுள் அப்பேதை, ஏக்கத்துடன். அவள் இதயத்தோடு நெருங்கிநின்ற அவனிதயம் உருகலாயிற்று. அக்கணத்தில் தான் படைவீட்டினின்றும் காளவொலி தெளிவாய் எழுந்து நகரெல்லாம் பரவிற்று. காலாட் படைஞரின் முரசொலியும், குதிரைப் படைஞரின் குழலொலியும் கேட்டு நகரமுழுதுமே விழித்தெழுந்தது.



## ராடன் போர்க்கெழுதல்

காதல் ஆட்கொள்ளும் வரை, கேப்டன் ராடன் தன்னையன்றி வேறெதனையும் நினைத்துப் பார்த்தவனல்லன். இப்போது அவன் தன் உடைமைகளின் பட்டியலை ஆராயலானுன். தனக்கு ஏதேனும் நேர்ந்துவிட்டால் தன் மனைவி எவ்வெவற்றை விற்றுப் பணமாக்க முடியுமென்றுராய்ந்தான். பள்ளிப்பிள்ளைக்குரிய கையெழுத்தினில் அவன் தன் உடைமைகளாய பல்வேறு சிறு பொருளையும் பென்சிலால் குறித்து வைத்தான். பின் தன் சிக்கனத் திட்டப்படி, தனக்குரிய சீருடைகளுள் எல்லாம் மிகப்பழையதும் அழகற்றதுமாய உடையை உடுத்துக்கொண்டான். புத்தம் புதிய உடைகளை மனைவியின் பாதுகாப்பினில் விட்டுவைத்தான்.

கணவனது பிரிவு குறித்துப் பயனற்ற உணர்ச்சிகளுக்கு இடங்கொடுக்கலாகாதென்று ரெபக்கா மனத்

தைத் திடப்படுத்திக் கொண்டாள். சாளரம் வழியே அவன் போவதைப் பார்த்துக் கையையாட்டி விடை கொடுத்தாள். அவன் பார்வையிலிருந்து மறைந்த மறுகணமே அறைக்கு மீண்டாள்.

### ரெபக்காவின் தற்காப்பு

முதல் நாளிரவு அவளுக்கு ஓய்வு என்பதே இல்லாமற் போயிற்று. இப்போது கூட அவள் ஆடலுடையிலேயே இருந்தாள். கண்ணாடியில் தன் தோற்றத்தைக் கண்டபோது அவளுக்கே கவலை ஏற்பட்டது. உடை மாற்றலானாள். அப்போது துண்டுக் கடிதமொன்று கீழே விழுந்தது. புன்னகை பூத்தவாறே அதனையெடுத்துத் தன் சொந்தப் பேழையில் வைத்துப் பூட்டினாள். பின் கவலையற்றுப் படுத்துறங்கலானாள். பத்து மணிக்குத்தான் விழித்தாள். காலைச் சிற்றுண்டிக் குப்பின் ராடன் முதல்நாளிரவு தொடங்கிய கணக்குகளைப் போட்டுப் பார்க்கலானாள். நடக்கக் கூடாதது நடந்து விட்டாலும் கூட, அவள்பாடு திண்டாட்டமில்லை. கணவன் விடுத்துச்சென்ற பொருள்கள் நீங்கலாக அவளுடைய சொந்த அணிகலன்கள் சிலவும் இருந்தன. அவளுடைய அடிமையும் பக்தருமாகிய தளபதி அவளுக்குப் பல அழகிய பொருள்களைப் பரிசாக வழங்கியிருந்தார். ஜார்ஜ் விலையுயர்ந்த கடிகாரமொன்று கொடுத்திருந்தான்.

இப்பொருட்களையெல்லாம் விற்றால் அறுநூறு எழுநூறு பவுன் கிட்டும் என்றுணர்ந்த ரெபக்காவின் மனம் ஆறுதலும் களிப்பும் அடைந்தது. அவளுடைமைகளுள் இருபது பவுனுக்கான காசோலை ஒன்றுமிருந்தது. அதனை எப்போதோ ஜார்ஜ் கொடுத்திருந்



தான். கண்ட அளவில் ரெபக்கா "இதனைப் பணமாக்கி விட்டு, அந்த அப்பாவிப் பெண்ணைப் பார்த்துவர வேண்டும்" என்றெண்ணினாள்.

### டாபின் ஜோஸப்பை வேண்டுதல்

போர்க்களஞ் செல்லாமல் தங்கியவர்களுள் மற்றொருவரும் நமக்கு நன்கு பழக்கப்பட்டவரே. அவர்தாம் போக்ளீவாலாவின் முன்னாள் தண்டல் நாயகம் திருவாளர் ஜோஸப். ஊரெல்லாம் விழித்தபோதே ஜோஸப்பும் எழுந்தான். காரணம் காள ஒலியில்லை. பிரிட்டிஷ் படையிலுள்ள அத்தனை முரசுகளும் காளங்களும் குழல்களும் அதிர்ந்தாலும் அவன் வழக்கமான நேரத்துக்குமுன் விழிக்கக் கூடியவனல்லன். கேப்டன் டாபின்தான் அவனறைக்குள் போந்து அவனை எழுப்பியவன். போகுமுன் அவனிடம் கைகுலுக்கி விடைபெற வேண்டுமென்று டாபின் வற்புறுத்தினான்.

ஜோஸப் கொட்டாவி விட்டபடி "உன் அன்பினை என் சொல்வேன்" என்றான். உள்ளுக்குள் டாபினைச் சபித்தான்.

ஜார்ஜின் அறைகளை நோக்குவதும், குறுக்கும் நெடுக்குமாக நடந்து நாற்காலிகளை உருட்டித்தள்ளுவதும், நகத்தைக் கடிப்பதுமாக டாபின் அலைந்தான். அதுகண்ட ஜோஸப் இகழ்ச்சியாகவே "டாபின், உனக்காக நான் என்ன செய்ய வேண்டுமோ, சொல். செய்கிறேன்" என்றான்.

"சொல்கிறேன். இன்னும் கால்மணி நேரத்துக்குள் நாங்கள் போய்விடுவோம். ஜார்ஜும் நானும் ஒருவேளை உயிரோடு திரும்பாமலேயே போகலாம். நினைவில்வைத்துக்கொள். நடப்பு எப்படியுளது என்று

திட்டமாக அறிந்து கொள்ளும்வரை இவ்வூரை விட்டு நீ நகரலாகாது. இங்கேயே தங்கி உன் தங்கையைக் கண்காணி. அவளுக்கு ஆறுதலளி. அவளுக்கு இக்கட்டு நேராமற் காப்பாற்று. நம் படையின் நோக்கம் நிறைவேறாமற் போகுமாஞல், அவளைப் பத்திரமாக இங்கிலாந்து அழைத்துச் சென்று விடு. அவளைவிட்டு ஒரு போதும் பிரிவதில்லை என்று எனக்கு உறுதியளி. பணத்தைப் பொறுத்தவரை உனக்குக் கவலையில்லை யென்றறிவேன். ஏதேனும் வேண்டுமா? அஃதாவது இங்கிலாந்து போய்ச்சேரப்போதிய பொருள் உளதா?"

"ஐயா! பணம் வேண்டுமெனில் எவரிடங் கேட்பதென்று நான் அறிவேன். தங்கையைப் பற்றிய மட்டில் நான் நடந்துகொள்ளவேண்டிய முறையை நீ சொல்லித்தரவேண்டியதில்லை."

"வீரனைப்போல் பேசுகிறாய், ஜோஸப். உன் பாதுகாப்பில் அவளை ஜார்ஜ் கவலையின்றி விட்டுச் செல்லலாம் என்றறிந்து மகிழ்கிறேன்." டாபினின் மனத்தில் இருந்த பெருங்கவலை நீங்கியது.

படைஞரோடு புறப்படுமுன் ஒரு முறை எமீலியாவைக் கண்ணுற் காண்பதே அவன் கருத்தாயின், அவனது தன்னலத்துக்குத் தக்க தண்டனையைப் பெற்றுவிட்டான். ஆம். எமீலியாவின் முகம் ஒரு முறை காட்சியளித்தது. ஐயோ! முகத்தோற்றமா அது! வெளிறித் துன்பக் கொள்கலமாய் விளங்கிற்று அம்முகம். நெடுநாட்களுக்குப் பின்னும் அவனது உள்ளக் கிழியிலெழுந்து அவனை வாட்டி வதைத்தது.

இறுதியில் ஜார்ஜ் அவ்விடமிருந்து விடைபெற்றுப் புறப்பட்டான். ஒருவழியாக இஃது ஓய்ந்தது என்



றெண்ணியவனாய் அவன் மாடிப்படிகளில் தட தடவென்றிறங்கிப் படைஞர் திரண்டிருந்த இடம்நோக்கிச் செல்லலானான்.

**போலி நட்பினள்! பொய்த்தொழுகும் மனைவி!**

ரெபக்காவை எதிரிற் கண்ட போது எமீலியா திடுக்கிட்டுப் பின்னடைந்தாள். கணவனது பிரிவையும் அவனது இக்கட்டினையும் பற்றியே எண்ணிய அவளது மனம் ரெபக்காவையும் பொறுமையையும் மறந்துவிட்டிருந்தது. தொடர்ந்து அவளுள்ளத்தே சினம் மூண்டது. வெளிறிக் கிடந்த அவள் முகம் இப்போது சிவந்தது.

"என் அருமை எமீலியா! நலமிழந்தவளைப் போல் தோன்றுகிறாய். என்ன காரணம்?" என்றவாறே தோழியின் கரம்பற்றத் தன் கையை நீட்டினாள் ரெபக்கா.

எமீலியா தன் கையைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டாள். "ஏன் வந்தாய் ரெபக்கா?" என்றாள் அவள்.

துண்டுக் கடிதம் கொடுத்ததனைப் பார்த்திருப்பாளோ என்றெண்ணிய ரெபக்கா, "பதறாதே எமீலியா! நலமாயிருக்கிறாயா என்று காணவே வந்தேன்" என்றாள்.

"நீ நலமாயிருக்கிறாயா? நலமாகவேயிருக்கிறாய் என்று துணிந்து சொல்வேன். நீ உன் கணவனைக் காதலிக்கிறாயில்லை. காதலித்தால் இங்கு வந்திருக்க மாட்டாய். சொல் ரெபக்கா, நான் அன்பு செலுத்தியதேயன்றி உனக்கேதேனும் தீங்கு நினைத்திருக்கிறேனா?"

தலைகுனிந்தவாறே, "இல்லை" என்றாள் ரெபக்கா.

"வெறும் ஏழையா யிருந்தாயே, அப்போது விரும்பி உன்னோடு நட்புக்கொண்டவள் யார்? உடன் பிறப்பாக உன்னை மதித்தவள் யார்? அவர் என்னை மணக்குமுன் எங்களை யெல்லாம் மகிழ்ந்திருப்பக் கண்டாய். அப்போது அவர்க்கு நானே எல்லாமாக விளங்கினேன். இல்லையேல் அவர் தம் செல்வச் சிறப்புக்களையும் குடும்ப உறவுகளையும் என் மகிழ்ச்சிக் காகப் பெருந்தன்மையோடு துறந்து வந்திருப்பாரா? என் அன்புக்கும் எனக்கும் நடுவே நீ ஏன் புகுந்தாய்? கடவுளால் சேர்த்து வைக்கப்பட்டவர்களைப் பிரித்து வைக்க நீ ஏன் இடையிற் புகுந்தாய்? வெட்கக்கேடு ரெபக்கா! நீ பொல்லாத பெண்; போலி நட்புக் கொண்டவள்; பொய்த்தொழுகும் மனைவி."

"எமீலியா! கடவுள் சாட்சியாய்ச் சொல்கிறேன். என் கணவனுக்கு இரண்டகம் செய்தறியேன்."

"எனக்கு இரண்டகம் செய்தாயா இல்லையா? முயன்றாய். வெற்றிகிடைக்கவில்லை. உன் உள்ளத்தையே கேட்டுப்பார்."

'சரிதான். இவள் ஒன்றுமேயறியாதவள்' என்று முடிவுகட்டினாள் ரெபக்கா.

"அவர் என்னிடம் மீண்டார். மீள்வா ரென்று அறிவேன். பொய்யோ, புகழுரையோ அவரை என்னிடமிருந்து வெகுநாட்கள் பிரித்து வைப்பதியலாது."

அப்பேதை பேசிய விரைவினையும் ஆற்றலையுங் கண்ட ரெபக்கா ஊமையானாள். எமீலியா தொடர்ந்து உருக்கமான குரலில் வினவினாள்: "உனக்கு என்ன



தீங்கு செய்தேன்? ஏன் அவரை என்னிடமிருந்து பிரிக்க முயன்றாய்?"

ரெபக்கா இடைமறித்தாள்: "நான் ஒருபோதும் இங்கு வந்ததில்லை."

"நீ இங்கே வரவில்லை; அவரை உன்னிடம் வர வழைத்துக் கொண்டாய். பிரிவினால் நான்படும் துன்பத்தைக் கண்டு மகிழவந்தாயா? ஆமாம். அவர் இங்கேதான் இருந்தார். இப்போதுதான் போனார். திரும்பிவருவதாக உறுதியளித்தார்."

"உறுதியாகத் திரும்பிவிடுவார்."

"இதோ பார். இஃது அவரது இடைக்கச்சு. இதன் நிறம் அழகாயில்லை?" அவள் தன் சீற்றத்தைப், பொறுமையை, எதிரிலிருக்கும் எதிரியை மறந்து விட்டாள். அடிமேலடி வைத்துப் படுக்கையை யடைந்து ஜார்ஜன் தலையணையைச் சரிப்படுத்த லானாள். ரெபக்காவும் ஓசைப்படாமல் நடந்து அறையின் நீங்கினாள். முன்னறையில் நாற்காலியில் வீற்றிருந்த ஜோஸப் கேட்டான்: "எமீலியா எப்படி யிருக்கிறாள்?"

"அவள் மிகவும் நலக்குறைவாக இருக்கிறாள். அவளோடு துணையாக யாரேனும் இருக்கவேண்டும்" என்றவாறே கவலை தோய்ந்த முகத்தோடு ரெபக்கா வெளியேறினாள்.

ரெபக்கா நல்லியல்பும் பிறர்க்குதவும் பண்பும் உடையள் அல்லவா? எமீலியாவை அவள் விரும்பத் தான் செய்தாள். வசை போலத் தோன்றினாலும் அவளின் கடுஞ்சொற்களெல்லாம் தோல்வி கண்டவரின்

புலம்பல்களேயாகும். வழியில் மேஜரின் மனைவி பெக்கி எதிர்ப்பட்டார். ரெபக்காவின் பணிவான வணக்கத்தை முன்பு பெற்றறியா அவ்வம்மையார் இப்போது அவளது மாறுதலுக்குக் காரணம் யாதென வியந்தார். அவரிடம் எமீலியாவின் நிலையை எடுத்துக்கூறி அவளுக்கு ஆறுதலளிக்குமாறு வேண்டினாள் ரெபக்கா. அவரும் அப்போதே கிளம்பினார்.

**ஜோஸப்பின் கவலை**

ஜோஸப்பைப் பொறுத்தவரை இரண்டரைமணியளவில் அன்றுட முதன்மையுடைய நிகழ்ச்சி நேர்ந்தது. அதாவது சாப்பாட்டு நேரம் வந்தது. வீரர் போரிடலாம்; வீழ்ந்தொழியலாம். அவன் நேரந் தவறாமல் சாப்பிட்டாக வேண்டும். எமீலியாவைச் சாப்பிடவைக்க முயலுங் கருத்துடன் ஜோஸப் அவளறைக்குள் நுழைந்தான். "நீங்கள் மிகவும் நல்லவர், அண்ணா! எல்லோருமே நல்லவர்தாம். ஆயினும் கேள். இன்றொரு நாள் மட்டும் என்னைத் தனியே விட்டுவிடு" என்று சொல்லி விட்டாள் அவள். குழம்பின் மணத்தில் மயங்கிய பெக்கிதான் அவனுடன் உணவருந்த முற்பட்டார்.

திடீரெனப் பணிமகள் பரிமாறுதலை நிறுத்தினாள்; பெக்கி உண்பதனை நிறுத்தினார். பீரங்கிகளின் முழக்கம் கேட்டது தான் காரணம். ஊர் மக்கள் எல்லோருமே தெருக்களில் திரண்டது போல் ஆரவாரம் மிகுந்தது.

மேஜரின் மனைவி பக்கத்தறையிலிருந்த எமீலியாவைக் கண்காணிக்கவும், இயலுமாயின் தேற்றவும் விரும்பியவராய் அங்குப் போனார்.



ஒரு முறை ஜோஸப் திகைப்புக் கோலத்தோடு அவ்வறைக்குள் புகுந்தான். ஏதோ சொல்ல வாயெடுத்தான். மேஜரின் மனைவி எமீலியாவின் அருகிலேயே அமர்ந்தமையால் அவனது பேச்சு வெளிப்படவேயில்லை. அவ்வம்மையார் முன்னிலையில் தான் ஓடிப்போக விரும்புவதாக எவ்வாறு நாணமில்லாமல் சொல்வான்?

ஆயினும் அவர் சாப்பாட்டறைக்குப் போந்த போது, அவன் தன் மனத்தைத் திறந்து காட்டினான். அவ்வம்மையாரோ "மேஜரிடமிருந்து எனக்குக் கட்டளை வந்தாலொழிய நான் நகரமாட்டேன். விரும்பினால் நீங்கள் போகலாம். எமீலியாவும் நானும் இங்கேதான் தங்கப் போகிறோம். போகுமுன் மீசையை எடுத்து விடுங்கள்; இல்லையேல் தொல்லை நேரும்" என்று திண்ணமாய்ச் சொல்லிவிடவே ஜோஸப் தன் அறைக்குத் திரும்பினான்.

ஜோஸப் தன் பணிமகனை அழைத்து வண்டியை ஆயத்தப் படுத்த ஆணையிட்டான். பணிமகனோ குதிரைகளே ஊரெங்கும் கிடைக்கவில்லையென்றான். ஜோஸப்பைப் போல் அஞ்சி நடுங்கிய ஆடவர் எத்தனையோ பேர் தாம் குதிரைப் பஞ்சத்துக்குக் காரணம்.

பத்துமணியளவில் பணிமகன் ஜோஸப்பிடம் தெரிவித்தான்: "நம் படைத்தலைவர்களுள் ஒருவரைப் பிரெஞ்சுக்காரர்கள் சிறையெடுத்து விட்டார்களாம். மற்றொருவர் கொல்லப்பட்டாராம்; நம் படைகளெல்லாம் முழுவிரைவுடன் பின்னிட்டோடுகின்றனவாம்" என்றான்.

**ஜோஸப் தன்னையே காப்பாற்றினன்**

ஜோஸப்பின் நடுக்கம் உச்சநிலையடைந்தது. எமீலியாவின் அறைத்கதவை யணுகினன். மேஜரின் மனைவி அவன் முகத்திலறைவது போன்று கதவை யடைத்து உட்புறமாய்ப் பூட்டி விட்டார். ஜோஸப் தன் அறைக்கு மீண்டு கண்ணுடியில் நோக்கினன். தன்னைப் படைஞருள் ஒருவனுக மதிப்பரோ என்று ஐயுற்றவனுய்ப் பணி மகனைக் கூவியழைத்துத் தன் மீசையை யெடுத்துவிடப் பணித்தான். சாதாரண உடைகளை உடுத்திக்கொண்டு குதிரை பெற்றுவரக் கிளம்பினன்.

ரெபக்காவிடம் இரு குதிரைகள் உண்டென்பதனை யறிந்த ஜோஸப் அவளை யணுகினன். கணவன் விடுத்துச் சென்ற குதிரைக் குட்டியில் தான் தப்பிச் செல்லலாம் என்று முடிவு செய்திருந்த ரெபக்கா, கிடைத்த வாய்ப்பினைப் பயன்படுத்தி மற்றை இரு குதிரைகளையும் மிக வுயர்ந்த விலைக்கு விற்று விட விரும்பினள். அவள் கூறிய விலையைக் கேட்டு ஜோஸப் திடுக்கிட்டான். இரு நாட்கள் அவன் தவணை கேட்க வேண்டிய அளவுக்கு அது பெரிதாயிருந்தது.

குதிரைகளோ வண்டியில் பூட்டியறியாதன; ஏறிச்செல்வதற்கே ஏற்றன. ரெபக்கா கணவனை இழப்பினும் தனித்து உரிமையுடன் வாழுமளவு போதியது குதிரைவிலை.

முன்னெழுந்த பீரங்கி முழக்கத்தினும் மிகுதியாக முழக்கம் இருநாட்களுக்குப்பின் எழுந்தது. வாட்டர்லூச் சண்டையில் பீரங்கிகள் முழங்கத் தொடங்கியிருந்தன.



இனியும் அச்சத்தைப் பொறுத்தலியலாதென வுணர்ந்த ஜோஸப் உடனடியாகத் தப்பியோட முடிவு செய்தான். எமீலியாவிடம் முறையிட்டான்: " இனி மேலும் தாங்க முடியாது. தாங்கிக்கொள்ளவும் மாட்டேன். நீ என்னேடு வந்துவிடு. உனக்காக ஒரு குதிரை வாங்கிவிட்டேன். விலையைப் பற்றிக் கவலைப்பட்டுப் பயனில்லை. உடைமாற்றிக்கொள் என்னேடு வந்துவிடு".

மேஜரின் மனைவி குறுக்கிட்டார், "கோழையை விட நீங்கள் ஒருவகையிலும் உயர்ந்தவரல்லர்."

"நான் அந்த அம்மையாரிடம் கேட்கவில்லை. எமீலியா, உன்னிடம் கடைசிமுறையாய்க் கேட்கிறேன். வருகிருயா இல்லையா?"

" என் கணவரில்லாமலா?" என்ருள் எமீலியா. அவள் கண்களில் வியப்புத் தேங்கியது. கைகளோ மேஜர் மனைவியின் கைகளைப் பற்றின. ஜோஸப்பின் பொறுமை நீங்கிற்று.

"அவ்வாருயின், நான் போய் வருகிறேன்" என்று சொல்லிவிட்டுக் கதவை ஓங்கிச் சார்த்திவிட்டு வெளியேறினன். அவனும் பணிமகனும் ஆளுக்கொரு குதிரையிலேறிக் கொண்டு உள்ளபடியே புறப்பட்டு விட்டனர்.

அன்று முழுதும் பீரங்கிகள் ஓயாமல் முழங்கின. திடீரென அம்முழக்கம் நின்றபோது நகரில் இருள் பரவிவிட்டிருந்தது. எமீலியா ஜார்ஜின் நலனை நாடி இறைவனைத் தொழுதாள். அதே நேரத்தில், ஒரு குண்டு மார்பினைத் துளைத்ததால் உயிரிழந்து போர்க்களத்தில் குப்புறக் கிடந்தான் ஜார்ஜ்.

# 18. அம்மையார் எடுத்த முடிவு

போரும் குழப்பமும் மிக்க அந்நாட்களிலும் க்ராலி அம்மையார் பிரைட்டானில் அவற்றால் பெரிதும் பாதிக்கப் படாமல் வாழ்ந்தார். அந்நிகழ்ச்சிகளைச் செய்தித்தாளில் படிப்பது இன்பமாகவே இருந்தது. ஒருமுறை ராடனின் வீரத்தைப் பற்றியும் பதவியுயர்வு பற்றியும் செய்திகள் வெளியாயின. இப்போது அவன் லெப்டினென்ட் கர்னல். செய்தியைப் பிரிக்ஸ் படிக்கக் கேட்ட அம்மையார் "அளியன்! அவனுடைய தகுதிக்கும் தரத்துக்கும் இலட்சாதிபதியின் மகளை மணந்திருக்கலாம். இப்படிச் சேற்றில் விழுந்து விட்டானே! ஓவிய ஆசிரியன் ஒருவனின் மகளை மணந்து க்ராலி குடும்பத்துக்கே களங்கம் ஏற்படுத்தி விட்டானே" என்றார். வரவர அவர் தம் வழக்கறிஞருக்கு இறுதி முறிபற்றி அடிக்கடி எழுதலானார். பிரிக்சைத் தவிர வேறெவரும் தம் இல்லத்தில் தங்க இடமளித்திலர். எனினும் அவர்தம் உறவினர்கள் அவ்வப்போது கடிதங்களும் அன்பளிப்புக்களும் அனுப்பித் தங்களை அவர் மறந்துவிடாமல் பாது காத்துக் கொண்டனர்.

வாட்டர்லூச் சண்டைக்குப்பின் சிலநாட்களில் க்ராலியம்மையார்க்கு ராடனிடமிருந்து கடிதமும் சில அன்பளிப்புக்களும் வந்தன. போர்க்களத்தில் தான் கைப்பற்றிய சின்னங்கள் என்று ராடன் அப்பொருள்களை அனுப்பியிருந்தான் (உண்மையில் அவற்றைக் கூடைக்காரரிடம் ரெபக்கா சிறிய தொகைக்கு வாங்கியிருந்தாள்). கடிதத்தில் தன் போர்க்கள அனுபவங்களைச் சுவைபட விளக்கி



யிருந்தான். தோற்ற பகைவரைத் துரத்திச் செல்லும் ஆங்கிலேயப் படையுடன் தானும் பாரிஸ் செல்வதாகவும் அம்மையார் விரும்பினால் அங்கிருந்து எழுதுவதாகவும் தெரிவித்தான். கடிதத்தின் ஒவ்வொரு சொல்லும் ரெபக்காவுக்குரியது என்று அம்மையார் உணர்ந்தார். ஆயினும் தொடர்ந்து கடிதம் எழுதித் தம்மை மகிழ்விக்குமாறு ராடனுக்கு எழுதினார்.

ஊருக்குச் சென்ற மார்த்தா அங்கேயே தன் குடும்பத்துடன் தங்கலாமென்றும் தம்பொருட்டாக அவள் பிரைட்டானுக்கு வரவேண்டியதில்லை என்றும் அம்மையார் பிரிக்சைக் கொண்டு கடிதம் எழுதுவித்தார். மார்த்தாவின் உள்ளத்தே புயல் எழுந்தது. அவள் தன் கணவன் 'பிரசங்கி'ப்பதற்கென ஒரு கட்டுரை எழுதிக்கொடுத்தாள். படைச்செல்வாக்கின் இழிவினைப்பற்றி அதனில் விளக்கினாள். ஒருவரியேனும் போதகருக்கு விளங்கவில்லை. பிரசங்கத்தைக் கேட்டவர்களுள் திரு க்ராலியும் ஒருவர். அவர்தாம் தம் தங்கைகளோடு கோவிலுக்குத் தவறாமல் வந்து கொண்டிருந்தார். முதியவராய திருநிறை பிட் ரெபக்காவின் பிரிவுக்குப்பின் முழுக்க முழுக்கத் தீயவழிகளில் இறங்கிச் சுற்றப்புறத்தில் கெட்ட பெயரையும், மகனின் வெறுப்பினையும் தேடிக்கொண்டார்.

தொடர்ந்து கடிதம் எழுதுமாறு க்ராலியம்மையார் எழுதியது கண்டு ராடனும் ரெபக்காவும் பெரிதும் மகிழ்ந்தனர். அவர்கள் இப்போது பாரிஸில் நாட்களை இன்பமாய்க் கழித்தனர். அப்பாவி ஜோஸப் குதிரைகளுக்கு விலையாகக் கொடுத்த பெருந்தொகை அவர்கள் ஓராண்டுக் காலத்தைக்

கவலையின்றித் தள்ளப்போதியதாயிருந்தது. பாரிஸில் ரெபக்காவுக்குச் சிறப்பான வெற்றி கிட்டிற்று. பிரெஞ்சுப் பெருமாட்டிகளெல்லாம் அவளது கவர்ச்சியை வியந்தனர். அவள் அவர்களுடைய மொழியைத் திறம்படப் பேசினாள்; நடையுடை பழக்க வழக்கங்களை எளிதாக மேற்கொண்டாள். உயர்குடிப் பெண்கள் பலரும் அவளை விருந்திற் கழைக்கலாயினர்.

1816 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஒரு பிரெஞ்சுச் செய்தித்தாளில் கீழ்க்காணும் செய்தி வெளிவந்தது:— "மார்ச்சு-26 ஆம் நாளில் லெப்டினென்ட் கர்னல் ராடன் க்ராலி ஆண்மகவொன்றிற்குத் தந்தையானார்" இச்செய்தியை இலண்டன் இதழ்களும் எடுத்தாண்டன. பிரிக்ஸ் இதனைப் படித்துக் காட்டிய போது க்ராலியம்மையார் சீற்றத்தின் உச்சியையே எட்டிப்பிடித்தார். திரு க்ராலியையும் ஜேன் பெருமாட்டியையும் அழைத்துவரப் பணித்தார் (இவ்விருவருக்கும் மணவினை உறுதி செய்யப்பட்டிருந்தது.) விரைவிலேயே திருமணச் சடங்கினை முடித்துக் கொள்ள வேண்டுமென்றும், உயிரோடிருக்கும் வரை அம்மணமக்களுக்கு ஆண்டொன்றிற்கு ஆயிரம் பவுன் அளிப்பார் என்றும் தமது மறைவுக்குப் பின் சொத்துக்களெல்லாம் அவர்கட்கே உரியன என்றும் அறிவித்தார்.

ஜேனை மணந்த திரு க்ராலி சிலகாலம் வெளியூர்களைச் சுற்றிப் பார்க்க விரும்பியிருப்பார். ஆயின் அம்மையாரோ ஜேன் தன் அருகில் இருக்க வேண்டுமென்று சொல்லிவிட்டார்.

---

# 19. சொன்ன சொல் தவறாதவர்

1815 ஜூனில் நிகழ்ந்த வாட்டர்லூச் சண்டைக்குப் பின் அரசுப் பதிவிதழில் வெற்றிச் செயல்கள் வெளியாயின. தொடர்ந்து புண்பட்டோர், வீழ்ந்தோர் பட்டியல்கள் வெளியாயின. மகனது பெயரை இறந்தவர் பட்டியலில் கண்ட ஆஸ்போர்ண் பேரதிர்ச்சிக்குள்ளானார். அவனது அடங்காமைக்குத் தக்க தண்டனை கிடைத்ததெனஅவர் மதித்தார். தண்டனையின் கடுமையும் விரைவும் அவரை அதிர வைத்தன. ஆயினும் அவர் வெளிக்காட்டினாரல்லர்.

### இறுதிக் கடிதம்

மூன்று கிழமைகட்குப்பின் டாபினின் தந்தையாகிய திருநிறை வில்லியம் டாபின் ஆஸ்போர்ணைக் காண அங்குப்போந்தார். "என் மகன் மேஜர் டாபின் எனக்கொரு கடிதம் ஆள்வழியே அனுப்பினான். அதனோடு உங்களுக்கென ஒன்றும் இருந்தது" என்று கடிதத்தைக் கொடுத்துச் சென்றார். போர்க்களஞ் செல்லுமுன் ஜார்ஜ் தன் கைப்பட எழுதிய கடிதமே, அது. போர்க்களம் செல்லுமுன் அவரிடம் விடைபெறக் கருதுவதாகவும், தன் மனைவியையும் பிறக்கப் போகும் குழந்தையையும் அவர் பேணுமாறு வேண்டுவதாகவும், தன் ஒழுங்கீனத்தாலும் பகட்டாலும் தன் சொத்தின் பெரும் பகுதியை வீணாக்கி விட்டதாகவும், தந்தை முன்னாளில் தன்னிடம் காட்டிய அன்புக்கு நன்றி செலுத்துவதாகவும், வென்றாலும் வீழ்ந்தாலும் குடிப்பெயரின் சிறப்பினைப் பாதுகாப்பதாகவும் தெரிவித்திருந்தான்.

**ஆஸ்போர்ண் பயணம்**

கடிதம் ஆஸ்போர்ணின் கையிலிருந்து நழுவி விழுந்தது. அவர் உள்ளத்தே பற்றும் சீற்றமும் பெருகின. மகனிடம் அன்பு மாறவில்லை; மன்னிப்பதற்கும் அவர் ஆயத்தமாயில்லை. இரண்டு மூன்று திங்களுக்குப் பின் அவர் வெளிநாடு செல்வதாகத் தம் பெண்களிடம் கூறி விட்டுப் புறப்பட்டார். பிரஸ்ஸல்சில் ஜார்ஜ் புதைக்கப்பட்டிருந்த இடத்தையும், போர்க்களத்தில் அவன் வீரச் செயல் புரிந்த இடங்களையும் நேரிற் சென்று கண்டார். வாட்டர் லூவினின்று பிரஸ்ஸல்சுக்கு மீளும் வழியில் ஒரு பெட்டி வண்டி எதிர்ப்பட்டது. வண்டிக்குள் இருந்தவள் எமீலியாதான். அழகிய அவள் முகமா இப்படி வெளிறி மெலிந்து விட்டது! அவளது பார்வை எங்கோ நிலைத்திருந்தது. எதனையும் பார்த்திலள். டாபின் ஒரு குதிரைமேல் ஏறியவாறு வண்டிக்குப் பக்கத்தே சென்று கொண்டிருந்தான்.

**டாபின் வேண்டுகோள்**

ஆஸ்போர்ண் வண்டியைக் கடந்து சிறு தொலைவு சென்ற பின்னரே டாபினுக்கு உணர்வு வந்தது. கூவி அழைத்தவாறு தன் குதிரையைச் செலுத்தி அவரது வண்டியை யணுகினன். அவரோடு அவர் தங்கியிருந்த விடுதியை அடைந்தான்.

"உங்களிடம் ஒரு செய்தி சொல்ல வந்தேன்."

"அந்தப் பெண்ணிடமிருந்தா?"

"இல்லை. உங்கள் மகனிடமிருந்து. உங்கள் மகனின் நெருங்கிய நண்பன் என்ற உரிமையிலும், அவனது இறுதிமுறியை நிறைவேற்றுபவன் என்ற தகுதியிலும் இங்குப் போந்துள்ளேன். அவனது சொத்தின் சிறுமையையும், அவன் மனைவியின் வறுமையையும் நீங்களே அறிவீர்கள்!"

"அவன் மனைவியை நானறியேன். அவள் தன் தந்தையிடமே செல்லலாமே."

"அவளது நிலையை அறிவீர்களோ என்னவோ? துன்பச்சுமை தாளாமல் அவளது உடலும் உள்ளமும் ஆட்டங்கண்டு விட்டன. தேறுவாளா என்பதும் ஐயப்பாடுதான். விரைவிலேயே அவள் ஒரு குழந்தைக்குத் தாயாவாள். அதுபற்றியே உங்களோடு பேசவந்தேன். தந்தையின் தவற்றுக்காகக் குழந்தையைத் தண்டிக்கப் போகிறீர்களா? அல்லது, ஏழை ஜார்ஜை எண்ணிக் குழந்தையை மன்னித்து ஏற்பீர்களா?"



**சொன்ன சொல் தவருதவன்**

ஆஸ்போர்ண் தம் பெருமையையும் மகனின் சிறுமையையும் விளம்பத் தொடங்கினர். முன்னது அவரது மனச்சான்றினை அடக்கப் பயன்பட்டது. பின்னது ஜார்ஜின் அடங்காமையைமிகைப்படுத்தியது. முடிவில் "நான் சொன்ன சொல் தவருதவன். அந்தப் பெண்ணோடு பேசுவதுங் கூடாதென்று உறுதி செய்து விட்டேன். அவளை என் மருமகளாக ஏற்கவும் மாட்டேன். அவளிடம் போய்ச் சொல்லுங்கள். உயிருள்ளவரை என் சொல்லைக் காப்பாற்றுவேன்" என்றார்.

இனியும் அவரை நம்புவதிற் பயனில்லையென உணர்ந்த டாபின் கிளம்பினன்.

---

# 20. இளந்தாயும் நண்பனும்

ஓராண்டு கழிந்தது. அந்த நாளும் வந்தது. அளவற்ற மகிழ்ச்சியுடன் எமீலியா ஓர் ஆண் மகவை மார்போடணைத்துக் கொண்டாள். ஜார்ஜையே உரித்துவைத்தாற் போன்று விளங்கிற்று அக்குழந்தை. அவள் பெற்றுப் பிழைத்து விட்டாள்! மருத்துவர் அவளுக்கு யாது நேருமோவென மயங்கினர்; குறைந்தது அறிவேனும் பிறழுமென்று எண்ணினர். நல்லகாலமாகச் சிறு தீங்கும் நிகழ்ந்திலது

இங்கிலாந்துக்கழைத்து வந்து அவளின் தாயிடம் ஒப்படைத்தவன் டாபின்தான். குழந்தையை அவன் தூக்கிவைத்துக்கொள்ளுதலையும், அதுகண்டு எமீலியா பெருமிதம் எய்துதலையும் காண்போர் நெஞ்சம் கனிந்தது. டாபின் தன் ஞானக் குழந்தைக்குப் பல பொருள்களை அன்றாடம் வாங்கி வருவான். எமீலியாவுடனே அவளுடைய பெற்றோர்களுடனே மணிக்கணக்காக அமர்ந்திருப்பான். எமீலியாவின் நடவடிக்கைகளைக் கருத்தூன்றிக் காணுவான். காதலால் அவனுள்ளத் துணர்வுகளெல்லாம் தெய்வத் தன்மையுடையவாயின. அவளுள்ளத்தே தனக்கு எள்ளளவும் இடமில்லை என்பதனை யுணர்ந்தான். ஆயினும் வருத்தமின்றி அவ்வுண்மை நிலையை ஏற்றுக்கொண்டான்.

ஒருநாள் மரக்குதிரை, சிறுபறை, ஊதுகுழல் முதலிய விளையாட்டுப் போர்க் கருவிகளோடு டாபின் எமீலியாவினறைக்குள் புகுந்தான். அவள் குழந்தையைத் தாலாட்டிக் கொண்டிருந்தாள். 'உஸ்' என்று அவள் அவனையடக்கினாள். (ஒருகால் அவனது பூட்ஸ்



எழுப்பிய ஒலி குழந்தையின் உறக்கத்தைக் கலைக்குமோ என்று அவள் ஐயுற்றிருப்பாள்.)

அவளது சிறு வெண்கையைப் பற்றியவாறு டாபின் "விடை பெற்றுப்போக வந்தேன்" என்றான்.

"விடை பெறவா? எங்கே செல்கிறீர்கள்?"

"கடிதங்களை என் செயலருக்கு அனுப்பு. அவர்கள் எனக்கு அனுப்பி வைப்பார்கள். எழுதுவாயில்லையா? நெடுநாள் வெளியூரில் இருக்கமாட்டேன்."

"ஜார்ஜி (குழந்தை)யைப் பற்றி எழுதுவேன். அவனுக்கும் எனக்கும் எத்தனை நன்மை செய்கிறீர்கள்! குழந்தையைப் பாருங்கள்! தேவமகனைப் போல் அழகாயில்லை?"

மேஜர் டாபின் நீட்டிய விரலைக் குழந்தையின் விரல்கள் எந்திரம் போல் பற்றின. தாய்மையின் பெருமை மீளிர எமீலியா முறுவலித்தாள். டாபின் உணர்ச்சிப் பெருக்கினால் சற்று நேரம் ஊமையானான். முடிவில் அவளிடம் விடைபெற்றுக் கிளம்பினான். கால்கள் தள்ளாடின. பூட்ஸ் கிறீச்சிட்டது.

"உஸ்! ஜார்ஜியை எழுப்பி விடாதீர்கள்" என்றாள் எமீலியா. அவனது வண்டி எழுப்பிய ஓசையும் அவளது செவியிற் புகுந்திலது. அவள் குழந்தையை உற்று நோக்கிக் கொண்டிருந்தாள். அஃது உறக்கத்திலும் சிரித்தது.

# 21. வருவாயின்றியே வளமாய் வாழ்வது எப்படி?

### ஆட்டத்தால் பிறந்த அறிவு

பாரிஸை அடைந்த சில நாட்களுக்குள்ளாகவே ரெபக்கா அத்தலைநகரச் சமூகத்தாரிடையே முன்னணியிடம் பெற்றுவிட்டாள். லெப்டினன்ட் கர்னல் ராடனோ சூதாடுமிடங்களிலெல்லாம் இடம் பெறும் ஈடுபாடுடையவன். இடைவிடாமல் ஆடியதால் தேர்ச்சியும் பெற்றான். சீட்டாட்டம் முதலியவற்றில் அவன் தொடர்ந்து வெற்றிபெறவே, ஆடித் தோற்றவர்களில் பலர் ஏதோ சூழ்ச்சி இருப்பதாகப் பேசலாயினர். ராடனின் தேர்ச்சியால் வெற்றி தவறாது கிட்டியதாயினும் நிலைமை எக்கச்சக்கமான தெனவே ரெபக்கா மதித்தாள். கடனையடைக்கும் பழக்கத்தை அவர்கள் மேற்கொள்ளவில்லை. இருப்பினும் என்றேனும் ஒரு நாள் தங்கள் 'முதல்' வற்றிச் சுருங்கி அற்றுப் போகுமென்று அவள் கருதலானாள். "சூதாட்டம் வருவாயைப் பெருக்கப் பயன்படும்; அதுவே வருவாயாக வாழ்வதியலாது" என்பாள் அவள்.

பாரிஸ் வாழ்வு எளிதில் இன்பந்தருவதாய் இருந்தாலும் அவர்கட்கு அலுப்பூட்டுவதாயிற்று. தாய் நாட்டினில்தான் ராடன் நிலையை உயர்த்த முடியும். நாட்டாட்சியிலோ, குடியேற்ற நாடுகளிலோ அவனுக்கு ஒரு வேலை பெற்று விடலாம். முட்டுக்கட்டைகள் நீங்கியவுடனேயே இங்கிலாந்திற்குத் திரும்பிவிட வேண்டும்—இவ்வாறு அவள் முடிவு செய்தாள். முதல் நடவடிக்கையாக ராடனைப் படையிலிருந்து விலகச் செய்தாள். தளபதியின் மெய்காவற் பணியும் முன்னரே நின்று போயிற்று.

### ராடனின் பயணம்

இச் சூழ்நிலையில்தான் அவர்களுடைய கடன்காரர்களுக்கு ஒரு செய்தி கிட்டிற்று. 'ராடனின் பணக்கார அத்தை சாகுந் தறுவாயிலிருக்கிறாள். அவளின் திரண்ட சொத்துக்களெல்லாம் அவனுக்கே வந்து சேரும். ஆகவே அவன் அவளைக் காண விரைகிறான். ரெபக்காவையும் குழந்தையையும் அழைத்துச் செல்ல அவன் திருப்பி வருவான்' என்ற செய்தி கேட்டு ராடனுக்குக் கொடுத்த கடன் மீளுமென்று மகிழ்ந்தனர். ராடன் கலை துறைமுகஞ் சென்றான். கப்பலேறி டோவர் செல்லுதற்கு மாறாக டன்கர்க் எனுமூர் வழியாக அவன் பிரஸ்ஸல்சை யடைந்தான். காரணம் இதுதான். பாரிஸ் கடன்களைவிட இலண்டன் கடன்கள் மிகுதி. எனவே ஆரவாரமிக்க அத்தலைநகரங்களை வெறுத்து விட்டு அவன் அப்பெல்ஜியத் தலைநகரிற் புகுந்தான்.

### ரெபக்கா புறப்படுதல்

சில நாட்களிலெல்லாம் க்ராலியம்மையார் இறந்த செய்தியை ரெபக்கா வருத்தத்தோடு வெளியிட்டாள்; ஆழ்ந்த இரங்கலைப் பறைசாற்று முடைகளை உடுத்தாள்; சிறுவன் ராடனுக்கும் அணிவித்தாள். வாரிசுரிமை பெறுவதற்கான வேலைகளைக் கர்னல் செய்து வருவதாகவும், இனித் தங்களுக்கு முன்பக்கத்துப் பேரறையே வேண்டுமென்றும் விடுதிக்குரியவரிடம் தெரிவித்தாள். அவ்வறையிற் செய்யவேண்டிய சீர்திருத்தங்களை அவரிடம் கூறலானாள். அவருடைய வண்டிகளுள் ஒன்றிலேயே ஏறிப் பணிமகள், சிறுவன் ராடன் ஆகியோருடன் புறப்பட்டாள். வாயில்வரை சென்று வழி அனுப்பிய உரிமையாளரிடம் தான் விட்டுச் செல்லும் பெட்டிகளைக் கண்ணும் கருத்து

மாய்க் காக்குமாறு வேண்டினாள். (நெடு நாட்களாகியும் அவ்வழகிய பெண்ணோ அவள் கணவனோ வாராது போகவே, உரிமையாளர் சீற்றத்தோடு அப்பெட்டிகளை உடைத்துத் திறந்தார். உள்ளே விலைமதிப்புக்குரியது எதுவுமே இல்லை.)

வேலைக்காரியிடம் பிள்ளையை ஒப்படைத்துவிட்டு ரெபக்கா இங்கிலாந்து சென்றாள். ஒருவரையொருவர் பிரிவது பற்றித் தாய்க்கும் சரி பிள்ளைக்கும் சரி எள்ளளவு வருத்தமுமில்லை. பெற்றெடுத்துச் சில நாட்களிலெல்லாம் அக்கால நாகரிகப்படி பிள்ளையை ஊருக்கு வெளியில் வாழ்ந்த ஒரு செவிலியிடம் ஒப்படைத்து விட்டாள் ரெபக்கா. ராடன் தனியே அவ்வப்போது சென்று மகனைக் காண்பான். (பாலூட்டி வளர்த்த செவிலிக்குக்கூட முதலாறு திங்கள் மட்டுமே ஊதியம் கிடைத்தது.)

**ரெபக்காவின் திறமை**

இங்கிலாந்துக்கு ரெபக்கா பயணப்பட்டதன் நோக்கம் அங்கிருந்த எண்ணற்ற கடன்காரர்களைச் சரிக்கட்டுவதே. அவர்களுக்கெல்லாம் பவுனுக்கு ஒரு ஷில்லிங் வீதம் திருப்பிக் கொடுப்பதாக உறுதி கூறினாள். 'கணவனது அப்போதைய செல்வ நிலையில் அவ்வளவுதான் தேறும்; ஏற்கமறுத்தால் ராடன் ஐரோப்பாவிலேயே தங்கிவிடப் பின்னிடான்; பிறகு இவ்வளவு கூடக் கிட்டாமலொழியும்'—இவ்வாறு அவள் திறம்பட விளக்கினாள். கடன்காரர் சார்பினில் வழக்கறிஞர்கள் பேசினர். அவளோ, தன் கட்சியைத் தானே எடுத்துச் சொன்னாள். அவ்வழக்கறிஞர்கள்கூட அவளது சொல்திறமையை வியந்து போற்றினர்; கிடைத்ததை ஏற்க இணங்கினர்.



**தாய்நாடு திரும்புதல்**

பிறகு ரெபக்கா நேரே பிரஸ்ஸல்சுக்குச் சென்றாள். தன் கணவனிடம் கடன்காரர்களிடமிருந்து முழுவிடுதலை கிட்டிய அரிய செய்தியை எடுத்துரைத்தாள். பிள்ளையை அழைத்துக்கொண்டு ராடனும் மனைவியும் இலண்டனுக்குப் புறப்பட்டனர்.

அவர்களுடைய நல்வினைப் பயனாக, இலண்டனில் கர்ஸான் தெருவில் 201ஆம் எண்ணுள்ள வீடு காலியாயிருந்தது. வீட்டுக்காரர் ராகிள்ஸ் முற்காலத்தில் க்ராலியம்மையாரிடம் சமையற்காரராகப் பணியாற்றியவர்; க்ராலி குடும்பத்தாரிடம் பெருமதிப்புடையவர். தாம் பணியாற்றிய காலத்தில் சேர்த்து வைத்த தொகையைக் கொண்டு அவர் அவ்வீட்டை வாங்கியிருந்தார். சிறிய மளிகைக்கடையும் காய்கறி வாணிபமுங்கூட நடத்தி வந்தார். அவர் தம் வீட்டினை ராடனுக்குக் குடிக்கூலிக்கு விடுத்ததோடு, ஒவ்வொரு சமயம் சமையலிலும் உதவி புரிந்தார். தொடக்கத்தில் தம் வீட்டிலிருந்தே அவர்களுக்கு உணவும் வழங்கினார். இவ்வாறாக ராடன் கைப்பணம் இல்லாமலேயே வீடு பிடித்து விட்டான்.

முன்பு க்ராலியம்மையார்க்கு உணவுப் பொருள்கள் முதலியவற்றை விற்ற வணிகர்களையே ராடன் தம்பதிகள் ஆதரிக்கலாயினர். அம்மையாரிடம் குற்றேவல் செய்தவர்களையே இவர்கள் வேலைக்கமர்த்தினர். ஆயின் எந்த வேலைக்காரனும் தன் கூலியை முழுமையாகப் பெற்றதில்லை. விளைவாக ராடனில்லத்தில் தொடர்ந்து பணியாற்ற வேண்டிய கட்டாயம் வேலைக்காரர்களுக்கு ஏற்பட்டது. கர்ஸான் தெரு,

வில் 200, 202 எண்ணுள்ள வீட்டுக்காரர்கள் 201ஐப் பற்றி எதுபேசினால் என்ன? 201க்குள் நுழைந்து விட்டால் கிட்டுவது முதல்தரமான வரவேற்புத்தான்—உணவுதான்—மதுவுந்தான்.

### கணவனும் மனைவியும்

ரெபக்காவின் அறிவும் திறமும் குறிப்பிட்ட ஒரு சமூகத்தினரைக் கவர்ந்தன. ஆடவர் பலர் அவளது தலைவாயிலிற் காத்து நின்றனர். மகளிரோ அவளை ஒதுக்கி வைத்தனர். அவளைத் தம் இல்லத்துக்கழைப்பதுமிலர். இங்கிலிஷ் கால்வாயின் மறுகரையில் அவளோடு தோழமை பூண்ட மகளிர் சிலர்கூட இக்கரைக்குப் போந்தபின் அவள் கண்ணிற்படாமல் மறையலாயினர்.

மனைவிக்கு நேர்ந்த சிறுமைகளைக் கண்டு மனம் புழுங்கினான் ராடன். சில வேளைகளில் சீற்றங்கொண்டு, “இவ்வாணவக்காரிகளின் துணைவர்களையும் அண்ணன் தம்பிகளையும் சுட்டுத்தள்ளுகிறேன்” என்பான். “சுட்டுத்தள்ளுவதால் நீங்கள் என்னைச் சமூகத்தில் உயர்த்திட முடியாது. வாழ்வின் தொடக்கத்தில் நான் ஓர் ஆசிரியையாகத் தானே இருந்தேன்! நீங்களும் சூதாட்டங்களில் கெட்ட பெயர் தேடிக்கொண்டீர்கள். காலம் மாறும். வேண்டுமளவு நண்பர் கூடுவர். அதுவரை இவ்வாசிரியை சொல்லைக் கேட்டு ஒழுங்கான பிள்ளையாக நடக்க வேண்டும். உங்கள் அத்தை சொத்துக்களையெல்லாம் உங்கள் அண்ணனுக்கு எழுதிவைத்த செய்திகேட்டுக் குதியாய்க் குதித்தீர்கள். நான் தடுத்திராவிட்டால் அச்செய்தியைப் பாரிஸ் முழுதும் பறைசாற்றியிருப்பீர்கள். என்ன



நேர்ந்திருக்கும்? கடனாளிகள் சிறையிலன்றோ இருந்திருப்பீர்கள்?....உங்கள் தந்தையார் மறைவுக்குப்பின் ‘அரசியார் க்ராலி’ உங்களுக்குத்தானே சேரும்? இல்லாவிடினும் என்ன! நீங்கள் குதிரைகளைப் பராமரியுங்கள். நான் ஜேனின் குழந்தைகளுக்கு ஆசிரியை ஆவேன். அந்நிலை ஒரு நாளும் வராது. திரு க்ராலியும் அவர் மகனும் செத்துவிட்டால் நீங்கள் திருநிறை ராடன்; நான் ரெபக்காப் பெருமாட்டி. வாழ்வே நம்பிக்கை தானே? உங்களை உயர்மனிதனாக ஆக்கியே தீர்வேன். உங்களுக்காகக் குதிரைகளை விற்றவர் யார்? உங்கள் கடன்களை அடைத்தவர் யார்?” மனைவியாலேயே இந்நன்மைகளெல்லாம் நேர்ந்தன என்று ஒப்புக்கொண்டான் ராடன். எதிர் காலத்திலும் அவள் சொற்படியே நடப்பதாகக் கூறினான்.

### குடும்பத்தோடு இணக்கம்

பாரிசில் இருந்தபோதே ராடன் தன் அண்ணனுக்கு ஒரு கடிதம் எழுதினான். தன் திருமணத்தால் அத்தையின் அன்பினை இழந்ததாகவும், அம்மையார் மனம் இறுதிவரை மாறாதது ஓர் ஏமாற்றமே என்றும், அவர்தம் சொத்துக்களெல்லாம் குடும்பத்து ஒரு கிளைக்கே சேர்ந்தது பற்றி மகிழ்வதாயும் அக்கடிதத்தில் கூறினான். அண்ணியார்க்குத் தன் வணக்கத்தையும் தெரிவித்தான். பின்குறிப்பாக ரெபக்கா தானும் அவ்வாழ்த்துரையில் பங்கு கொள்வதாக எழுதினாள்.

திரு க்ராலி இக்கடிதத்தை மிக்க அன்போடு பெற்றுப் படித்தார். கடிதத்தை ஜேனும் படித்து மகிழ்ந்தார். உடனேயே தம் சொத்துக்களை இரு கூறிட்டு ஒன்றினைத் தம்பிக்காகப் பாரிசுக்கே தம் கணவர்

அனுப்புவார் என்று அவ்வம்மை எதிர்பார்த்தார். அவரோ 'இங்கிலாந்துக்கு எப்போது வந்தாலும் வீட்டுக்கு வாருங்கள்' என்று மட்டுமே விடையனுப்பினார். இவ்வாறாக உடன் பிறப்பாளரிடையே ஏற்கெனவே இணக்கம் ஏற்பட்டிருந்தது. ஆயினும் ரெபக்கா இலண்டனை யடைந்தபோது திரு க்ராலியோ அவர் மனைவியோ அந்நகரில் இல்லை. ரெபக்கா ஜேனின் வருகையை எதிர்பார்த்ததற்குக் காரணமுண்டு. ஜேன் பெருமாட்டியின் உதவியால் இலண்டன் நகரப் பெருமக்களது அறிமுகம் கிட்டுமென்று நம்பியதுதான் அக்காரணம்.

''கிடைநாய்''

பெருங்குடிப் பெண்டிர்க்குப் பெட்டிவண்டியும் மலர்ச்செண்டும் எவ்வளவு இன்றியமையாதனவோ அவ்வளவு இன்றியமையாதவர் கூட்டாளி. ஒரு நாள் இரவு ரெபக்காவின் இல்லத்தில் பெருமக்கள் பலர் விருந்துண்டிருந்தபோது அவள் தன் கருத்தினை வெளியிட்டாள்; ''எனக்கு ஒரு கிடைநாய் வேண்டும்'' என்றாள்.

''என்ன அது?'' என வினவியதோடு ராடன் சீட்டாட்டத்திலேயே கண்ணாயிருந்துவிட்டான். உரையாடலில் கலப்பது அவன் வழக்கமன்று.

''உருவகமாகச் சொன்னேன்'' என்றாள் ரெபக்கா. சிரித்தபடியே ஸ்டேயின் பெருமகனை ஏறெடுத்து நோக்கினாள்.

''அப்படி யென்றால்?'' என்றார் பெருமகன்.

''ஓநாய்கள் என்னை அணுகாதவாறு காக்க ஒரு நாய்—ஒரு தோழர்.''



''ஏன் இந்த அப்பாவி ஆட்டுக் குட்டியைப் பேண இடையன் போதவில்லையோ?''

''இடையன் சீட்டாட்டத்திலும் கழகங்களிலுமே கருத்தாயிருக்கிறான்''

''ரெபக்காவின் கணவன்''

புரியாத வகையில் பேசும் இப்பேச்சுக்களிலெல்லாம் ராடன் ஈடுபடுவதில்லை. அவனைக்காணும் போதெல்லாம் வணக்கஞ்சொல்லுமுறையில், ''ரெபக்காவின் கணவர் நலமா?'' என்றுதான் ஸ்டேயின் பெருமகன் உசாவுவார். உள்ளபடியே அதுதான் இப்போது அவனது பதவியாகிவிட்டது. கர்னல் பட்டமெல்லாம் மறைந்து அவன் 'ரெபக்காவின் கணவனானான்.'

தாயும் மகனும்

சிறுவன் ராடியோ மாடியின் ஒருமூலையிலோ சமையலறையிலோ மறைத்து வைக்கப்படுவது வழக்கமாயிற்று. தாய் பிள்ளையை நினைத்துப் பார்ப்பதில்லை. தந்தைதான் கைப்பணத்தைச் செலவிட்டு மகனுக்காக வண்ணப் புத்தகங்களும் பொம்மைகளும் ஏராளமாக வாங்கிக் கொடுத்தான். எத்தனை இழிகுணங்கள் ராடனிடம் இருந்தாலும் உள்ளத்தில் மனிதப்பண்பாகிய பாசம் நிறைந்திருந்தது. மனைவி மீதும் மகன் மீதும் ஒருங்கே அன்பு செலுத்தினான். மகன் மீது அன்பு செலுத்தியதனை அறிந்தபோது ஏற்கெனவே ரெபக்கா தன் கணவனைப் பற்றிக் கொண்டிருந்த இழிவான எண்ணந்தான் மிகுதியாயிற்று. ஆயினும் வெளிப்படையாகக் கணவனிடம் அது பற்றிப் பேசினாளல்லள். அவனும் மனைவியிடமிருந்து தன் பிள்ளைப் பாசத்தை ஒளித்தே வைத்தான்.

**ஒதுக்கப் பட்டவன்**

நாட்கள் செல்லச் செல்ல, ராடன் விடுதிகளில் தன் முன்னாள் படை நண்பரோடு உண்ணுதலையே விரும்பத் தலைப்பட்டான். "அவளையொத்த அறிவு எனக்கில்லை. நான் வீட்டில் இல்லாதது பற்றி அவளும் கவலைப்படமாட்டாள்" என்பான் அவன். அஃது உண்மையே. அவனில்லாதது பற்றி அவளுக்குக் கவலையில்லைதான்.

ரெபக்கா தன் கணவனை விரும்பத்தான் செய்தாள். எப்போதும் அவனிடம் அன்புடன் கலகலப்பாகவே பேசினாள். அவன் அறிவிலியாயிருத்தலையே அவள் விரும்பியிருத்தலும் கூடும். அவன் அவளிட்ட வேலைகளையெல்லாம் செய்தான். அவனுக்கு ஒரே ஒரு மனக் குறைதான் இருந்தது. அவள் தன் பிள்ளையிடம் இன்னும் அதிகமான அன்பு செலுத்தலாம் என்றெண்ணினான் அவன். அதற்கும் அவனது மனம் ஓர் அமைதி கண்டது. "அவள் அறிவுக் கூர்மைதான் காரணம். நான் என்ன இலக்கியம் படித்தேனா?" என்பான் அவன்.

'கிடைநாய்' கிட்டிய பிறகு ராடனின் வீட்டு வேலைப் பளுவும் குறைந்தது. "இன்றிரவு சிலர் விருந்துண்ண வருவர். உங்கள் நன்மைக்காகவே அவர்களை அழைத்துள்ளேன். அவர்களுடைய பேச்சு உங்களுக்குத் தலைவலியைத்தான் தரும். இன்றிரவு வீட்டில் தங்காதீர்கள். 'கிடைநாய்' தானிருக்கிறதே. தனியே இருத்தலில் எனக்கு அச்சமில்லை" என்பாள் ரெபக்கா

---

# 22. முதாதையர் இல்லம்

**திருநிறை பிட்டின் கடைசிக்காலம்**

அரசியார் க்ராலியில் திருநிறை பிட் இரங்கத் தக்க முறையில் வாழ்ந்து கொண்டிருந்தார். அகவை முதிர முதிரக் கண்ணிய மற்ற வாழ்வையே அவர் பெரிதும் விரும்பலானார். திருமண முடிந்து சில நாட்களுக்குப் பின் திரு க்ராலியும் ஜேனும் அவரைக் காணச் சென்றனர். இல்லத்து நிலைமைகள் திரு க்ராலிக்கு அருவருப்பளித்தன. பணிமக்கள் தம் மனம் போன போக்கினில் ஒழுகினர். திருநிறை பிட்டோ அளவு மீறிக் குடித்தார். சமையற்காரனின் மகளையும், அவரையும் பிணைத்து ஊரவர் ஏதேதோ பேசினர். விளைவாகத் திரு க்ராலி நெடு நாள் வரை அவ்வில்லத்தையே மிதித்தாரல்லர்.

ஒரு நாள் அளவுகடந்த குடியின் விளைவாகத் திருநிறை பிட் நோய்வாய்ப் பட்டு விழுந்தார். மருத்துவரை அழைத்து வந்து காட்டினர். கிழவர் அதற்குப் பின்னும் சிலகாலம் உயிரோடிருந்தாராயினும் தம் பேச்சுத்திறனை இழந்து விட்டார். ஆட்களை இனங்கண்டு கொள்ளு முணர்வு மட்டுமே பெற்றிருந்தார். ஜேன் பெருமாட்டியும் பணியாட்களும் அவருக்குத் தொண்டு செய்தனர். பின்னொரு நாளில் அவரது உயிர் பிரிந்தது. மூத்த மகனாய திரு க்ராலி குடும்பத் தலைவராயும் சொத்துக் குரியவராயும் ஆகிவிட்டார்.

**அழைப்பின் பெருமை**

உறவினர் பலருக்குப் போய்ச் சேர வேண்டிய சொத்துக்களை நல்வினைப் பயனாய்த் திருக்ராலி—இப்

போதைய திருநிறை க்ராலி—ஒருவரே பெற்றுர். ஆயினும் அவர் தம் குடும்பத்தாரை அன்போடு நடத்தவும், பண்டைக்காலத்தைப்போலவே அரசியார் க்ராலியைப் பெருமனையாக்கவும் முடிவு செய்தார். அவர் தம் தம்பிக்கு ஒரு கடிதம் அனுப்பினுர். தந்தையின் சவ அடக்கத்திற் கலந்து கொள்ள அவனையும் அவன் மனைவியையும் அழைத்திருந்தார். கடிதத்தைப் படித்த ராடன் க்ராலி 'ஆமாம். அங்குப் போவதனுல் என்ன பயன்? எனக்கும் அவனுக்கும் ஒத்து வராது. போவதானுலும் குதிரைகள் அமர்த்துவதில் இருபது பவுன் செலவழியும்' என நினைத்தான். தன் துன்பங்களையெல்லாம் மனைவியோடு பகிர்ந்து கொள்ளும் பண்பினனுய அவன் இப்போதும் இக்கடிதத்தை மனைவியிடம் காட்டினுன். அவளோ படித்தவுடன் துள்ளியெழுந்து மகிழ்ச்சியோடு " அருமை " என்றுள்.

" அருமையா? சொத்தில் சிறிதளவும் எனக்கு எழுதி வைக்காமல் செத்ததா அருமை?" என்றுன் ராடன்.

" இன்னும் சிறு பிள்ளையாகவே இருக்கிறீர்களே? போய் இரங்கலுடைக்கு ஏற்பாடு செய்யுங்கள்."

" போகப் போகிருயா?"

" போகத்தான் போகிறேம். அடுத்த ஆண்டினில் ஜேன் பெருமாட்டி என்னை அரசவையினர்க்கு அறிமுகம் செய்து வைப்பாள். உங்கள் அண்ணன் உங்களுக்குப் பாராளுமன்றத்தில் ஓர் இடம் பெற்றுத் தருவார். ஸ்டேயின் பெருமகன் உதவியால் நீங்கள் மேற்கிந்தியத் தீவுகளின் ஆளுநராகவோ, இந்நாட்டின் கருவூலக் காப்பாளராகவோ, தூதராகவோ பதவி ஏற்பீர்



கள். பொது வண்டியிலேயே செல்வதுதான் எளிமைக்குப் பொருத்தமாக இருக்கும். "

" ராடியும் வருவானில்லையா?"

" அஃதெல்லாம் நடவாது. அவனுக்கு வேறு பயணச்சீட்டு வாங்கச் செலவழிப்பானேன்? மடியில் வைத்துக்கொள்ள அவன் என்ன சிறு பிள்ளையா? அவன் இங்கேயே இருப்பான். பிரிக்ஸ் பார்த்துக் கொள்வாள்."

**பிரிக்ஸ் சேர்ந்த முறை**

பிரிக்ஸ்தான் இப்போது ரெபக்காவின் கற்பினையும் நற்பெயரையும் காக்கும் 'வீட்டு நாயா'க விளங்கினுள். க்ராலி அம்மையார் தம் இறுதி முறியில் அவளை மறந்திலர். அவரது மறைவுக்குப் பின் அவள் கொஞ்ச நாட்கள் தன் உறவினரோடு வாழ்ந்தாள். அவ்வாழ்வு அவளுக்கு ஏற்றதாயில்லை. செய்தித்தாளில் 'வேலை தேவை' என்று விளம்பரம் செய்துவிட்டு இலண்டனிலேயே தங்கியிருந்தாள். ஆறும் முறையாகத் தன் விளம்பரத்தைப் போடச் சொல்லிவிட்டுத் திரும்பும் வழியில்தான் அவள் ரெபக்காவைக் கண்டாள். இருவரும் அளவளாவினர். அம்மையார் தம் இறுதி முறியில் பிரிக்ஸுக்கு ஒரு சிறு தொகையை வழங்கியதனையும், சம்பளம் அவளுக்கு ஒரு பொருட்டன்று என்பதனையும் அறிந்த அளவிலேயே ரெபக்கா அவளைத் தன்னில்லத்திலமர்த்திக்கொண்டாள். ஆறு திங்கள் கழிவதற்குள் ராடனுக்கு அறுநூறு பவுனைக் கடனுக வழங்கியிருந்தாள் பிரிக்ஸ். அவள் சிறுவன் ராடியை அன்போடு பேணி வந்தாள்.

## 'அரசியார் க்ராலி'யில்

அரசியார் க்ராலியில் திருநிறை க்ராலியும் ஜேன் பெருமாட்டியும் ராடன் தம்பதிகளை அன்போடு வரவேற்றனர். அரை மணி நேரத்திற்குள்ளாகவே ரெபக்கா இன்சொற்களால் ஜேன் பெருமாட்டியின் அன்பினைப் பெற்றுவிட்டாள். அடிநாளில் போல் திருநிறை க்ராலியின் சொல்வன்மையையும் உயர் பண்பினையும் அவரிடம் புகழ்ந்து தன் செல்வாக்கினை நிலைநாட்டினாள். ஜேனின் தாயாரைக்கூடத்தன் பேச்சுத் திறனால் கவர்ந்தாள். சவ அடக்கத்திற்குப்பின் தன் மனத் துடிப்பினையும் உடல் நடுக்கத்தையும் அக் கிழவியிடம் கூறி மருந்து கேட்டாள். அவ்வம்மையே தன் கைப்பட ஒரு மருந்து கலந்து எடுத்துக்கொண்டு ரெபக்காவின் அறைக்குள்ளேயே வந்துவிட்டார். பேச்சினை வேறு திசையில் திருப்பியும் அவர் கிளம்பவில்லை. ரெபக்கா அக்கருநிறக் கலவையைக் குடித்த பிறகுதான் அவ்வம்மை அவளைத் தனியே விடுத்தார். ('கருநிறக் கலவை' நாடகத்தைப் பின் பல நாட்கள் வரை ரெபக்கா தன் இலண்டன் நண்பர்கள் மகிழுமாறு நடித்தாள்.) சவ அடக்கத்துக்குப் பின்னும் சில நாட்கள் ராடன் தம்பதிகள் அங்குத் தங்கினர். லண்டனிலிருந்து தன் மகன் எழுதியனுப்பிய கடிதத்தை ராடன் தன் அண்ணனிடமும் அண்ணியிடமும் படித்துக் காண்பித்தான். சிறுவனின் பள்ளிச் செலவுகளைத் தான் ஏற்றுக்கொள்வதாகத் திருநிறை க்ராலி வாக்களித்தார். சிறுவனுக்கு ஏதேனும் வாங்கிக் கொடுக்குமாறு ஒரு சிறு தொகையை ரெபக்காவிடம் வழங்கினார். தம் பெருந்தன்மையை நிலைநாட்டியதாக எண்ணி மகிழ்ந்தார்.



நாட்கள் ஒன்றன்பின் ஒன்றாய்க் கழிந்தன. அரசியார் க்ராலியின் வாழ்வினைக் கண்ட ரெபக்கா பின்வருமாறு நினைத்தாள்: "நாட்டுப்புறப் பெருமாட்டியாக விளங்குவது எளிய செயல். ஆண்டொன்றிற்கு ஐயாயிரம் வருவாயாயிருந்தால் நானும் நல்லவளாயிருப்பேன். வயிறார விருந்துண்ணும் நகரத் தலைமகன் திருடத் துணியமாட்டான். அவனையே பட்டினி போடுங்கள். வாழைப் பழத் தோலைக்கூடக் களவு செய்வான்." இவ்வாறு அவள் தன்னையே தேற்றிக்கொண்டாள்.

## இலண்டன் திரும்புதல்

ராடன் தம்பதிகள் புறப்பட்டபோது ஜேனும் திருநிறை க்ராலியும் உருக்கமாக வழியனுப்பினர். "கண்ணனைய மகனை மீண்டும் காணும்போது எவ்வளவு மகிழ்ச்சியடைவாய்" என்றாள் ஜேன். "ஆமாம். மகிழ்ச்சிக்கு அளவில்லை" என்றாள் ரெபக்கா. அவ்வீட்டினின்று செல்வதில் இன்பமும் துன்பமும் அவளுக்கு ஒருங்கே தோன்றின.

இலண்டனில் கர்ஸான் தெரு 200ஆம் எண் வீட்டினை அவர்கள் அடைந்தபோது சிறுவன் ராடி அவர்களை வரவேற்பதற்காக விழித்திருந்தான். பிரிக்ஸ் குளிரைப் போக்கத் தகதகவெனத் தணல் மூட்டியிருந்தாள்.

# 23. எளிய குடும்பம்

### செட்லியின் தொண்டு

எமீலியாவின் தந்தை செட்லீ இப்போது சிறிய அளவில் மதுவாணிபம் நடாத்தினார். எமீலியா பெரும்பாலான நேரத்தைத் தன் மகனை வளர்த்தலிலும் எஞ்சியதனைக் கணவனைப் பற்றிய நினைவுகளிலும் கழித்தாள். ஆண்டொன்றுக்கு அவளுக்கு ஐம்பது பவுன் அரசாங்கத்திடமிருந்து கிடைத்தது. ஜார்ஜ் விட்டுச்சென்ற பணமென்று ஐந்நூறு பவுனை டாபின் வாணிபப் பங்குகளில் முடக்கியிருந்தான். (அவ்வாறு அவன் முடக்கப்போவதாகத் தெரிவித்தபோது செட்லி எதிர்த்தார். பணத்தை அவனிடம் கொடுக்கவேண்டா என்று ஜார்ஜின் செயலர்களிடம் தெரிவிக்கச் சென்றார். அவர்களோ ஜார்ஜின் கணக்கில் இருப்பு நூறுகூடத் தேருது என்றனர். ஏதோ புரட்டு நடைபெறுகிறது என்றையுற்ற அவர் டாபினை உசாவினார். அவன் திக்கித் திணறியபோது அவரது ஐயம் பெருகலாயிற்று. அவன் மோசடி செய்வதாகக் குற்றம் சாட்டினார். அதற்கு மேலும் பொறுக்க இயலாதவனாய் டாபின் ஜார்ஜ் தனக்கு எழுதிக்கொடுத்த கடன் பத்திரங்களையெல்லாம் காண்பித்தான். "ஜார்ஜ் இங்கிலாந்தில் தான் பட்ட கடன்களையெல்லாம் அடைத்தான். இறக்கும்போது அவனிடம் நூறுபவுன்கூட இல்லை. நானும் வேறு சில அலுவலருமாகக் கையிலிருந்த பணத்தைத் திரட்டியதுதான் இந்த ஐந்நூறு" என்றான். உண்மையில் ஐந்நூறும் டாபினது பணமே. நண்பனது மரணச் செலவையும், எமீலியாவை இங்கிலாந்துக்கு அழைத்துவந்த செலவையும் அவனே ஏற்றான். எமீலியா அவன் சொல்லிய கணக்கினைத் தடை சொல்லாது ஒப்புக்கொள்பவள். ஆதலின் தான் அவனிடம் பட்ட கடன் எவ்வளவு என்றும் அறியாள்.)

### டாபினைப் பொறுத்த செய்தி

எமீலியா தன் சொல்லுக்கேற்ப ஆண்டிற்கு இரண்டு மூன்று முறை சென்னை மாநிலத்துக்கு (டாபினுக்கு)க் கடிதம் எழுதினாள். எல்லாம் ஜார்ஜியைப் பற்றியனவே. அவள் எழுதினால் மட்டுமே அவன் விடையிறுப்பான்; தானாக எழுதமாட்டான். ஆயினும் அவளுக்கும் பையனுக்கும் அவ்வப்போது பல பொருள்களைப் பரிசாக அனுப்பிவைத்தான்.

டாபினது கட்டளைப்படி, அவனுடைய தங்கைமார் சில வேளைகளில் எமீலியாவைக் காணப் போதுவர். அவளையும் ஜார்ஜியையும் தம் வண்டியில் ஏற்றிக்கொண்டு உலவச்செல்வர். அவ்வாறு போந்த ஒரு நாளில் அவளுக்கு இன்பந்தரவல்ல செய்தி—டாபினைப் பொறுத்த இன்பச்செய்தி—யொன்று கொணர்ந்திருப்பதாகக் கூறினர்.

"என்ன அது? அவர் நாடு திரும்புகிறாரா?"

"இல்லையில்லை. விரைவிலேயே டாபின் திருமணஞ் செய்துகொள்ளப் போவதாக நம்பத்தகுந்த செய்தி கிட்டியுள்ளது. பெண் உன் தோழி ஒருத்திக்கு உறவினள்; மேஜரின் மனைவிக்குத் தங்கை"

"அப்படியா?" என்றாள் எமீலியா. அவள் மிக மிக மகிழ்ந்தாள். அன்று அதன் பிறகு உலாவிய நேர முழுதும் அவள் ஒரு சொல்லேனும் பேசினாளல்லள்.

ஆமாம். உள்ளபடியே அவள் மிக மிக மகிழ்ந்தாள். மற்றொருநாள் ஆன் (டாபினின் தங்கை) நெடுநேரம் கெஞ்சிக் கேட்ட பிறகு, அவளுடன் ஜார்ஜியை அனுப்ப எமீலியா இணங்கினாள். மகன் வெளியே சென்றிருந்த நேரத்தில் தாய் டாபினுக்கு ஒரு கடிதம் எழுதினாள்.

**ஜார்ஜியின் அத்தை**

கடிதத்தில் பல சொற்றொடர்கட்குக் கீழ்க் கோடிட்டாள். ஜார்ஜியை அழைத்துச் சென்ற ஆன், (தன் அண்ணனது கட்டளைப்படி) அவனை அவன் அத்தைக்கு (ஜார்ஜியின் அத்தைக்கு) அறிமுகம் செய்து வைத்தாள். அன்று வீடு திரும்பிய ஜார்ஜியின் கழுத்தினில் பொன்வடமும், கையில் கடிகாரமும் தொங்கின. கிழவி ஒருத்தி கொடுத்ததாக அவன் சொன்னான். ஜார்ஜியின் தங்கையைத்தான் அவன் குறிப்பிடுகிறான் என்றுணர்ந்த எமீலியாவின் உள்ளத்தே ஏனோ அச்சம் பிறந்தது.

அன்றிரவு உண்ணும்போது ஆஸ்போர்ண் தம் மகளின் முகத்தில் ஏதோ மாறுதலைக் கண்டவராய், "யாது செய்தி?" என வினவினார். அவள் அழுது கொண்டே, "ஐயோ! அப்பா! நான் சிறுவன் ஜார்ஜியைப் பார்த்தேன். எவ்வளவு அழகாயிருக்கிறான்! அவனைப் போலவே யிருக்கிறான்" என்றாள். கிழவர் பதிலே பேசவில்லை. அவர் உடலெல்லாம் நடுங்கியது.

**இரு கடிதங்கள்**

சென்னை மாநிலத்தில் ஓரிடத்தில் டாபின் ஒரு நாள் கீழ்க்காணும் கடிதத்தைப் படித்தான். "உங்கள் தங்கை இப்போதுதான் ஓர் இன்பச் செய்தியைச் சொன்னாள். என் மனமார்ந்த வாழ்த்துக்கள் நீங்கள் மணக்க இருக்கும் இளம் பெண் உங்கள் அன்புள்ளத்துக்கும் நற்பண்புக்கும் தக்கவளாக விளங்குவாளென நம்புகிறேன். உங்கள் நலனுக்காகத் தொழுதலையன்றி இக்கைம் பெண் என்செய வல்லேன்! ஜார்ஜி தன் அன்புக்குரிய ஞானத்தந்தை தன்னை மறக்க மாட்டார் என்று நம்புகிறான்......"



அவனின் உள்ளத்தே புயல் வீசிற்று: "ஐயோ, எமீலியா! உனக்காகவே வாழ்கிறேனே! என்மீது வசை பாடுகிறாயே! உன்னை யெண்ணி ஆண்டுக்கணக்காகக் காத்திருக்கிறேன். என் 'மணச்செய்தி' அறிந்து வாழ்த்துகிறாயாமே!" அன்றிரவெல்லாம் அவன் உறங்கினானல்லன். விரைவிலேயே செய்தியை மறுத்து எமீலியாவுக்கு ஒரு கடிதமும், பொய்ச் செய்திகளைப் பரப்பியது பற்றிக் கடிந்து தன் தங்கைக்கு ஒரு கடிதமும் அனுப்பினான். ஆயினும் சில நாட்கள் வரை அவன் மனத்தில் அமைதி பிறக்கவில்லை. ஆகவே தங்கையிடமிருந்து வந்த ஒரு கடிதத்தைப் பிரித்தும் பாராதிருந்தான். பத்து நாட்களுக்குப் பின்னர் ஒரு நாளிரவு அதனைப் பிரித்தான். கடிதத்தின் பிற்குறிப்பினில் இருந்த ஒரு செய்தி அவனை உலுக்கியது. இரவென்றும் பாராமல் படைத்தலைவரில்லத்துக்கு ஓடினான். "எனக்கு விடுமுறை வேண்டும். அவசரமான சொந்தவேலை. இப்போதே இங்கிலாந்துக்குப்போக வேண்டு"மென்றான்.

அவனை ஆட்டுவித்த செய்தி இதுதான்:—"உன் கட்டளைப் படியே உன் ஞானப் பையனை ஜார்ஜின் தங்கைக்குக் காட்டினேன். அவள் அவனைக் காண

மகிழ்ந்தாள். ஒரு வேளை தாத்தா பேரனை ஏற்றுக் கொள்ளுமாறு செய்து விடவும் முடியும். அவனை அவரிடம் விட்டுவிட எமீலியாவும் இணங்குவாளென்றே நினைக்கிறேன். அக்கைம்பெண், இப்போது தேறிவிட்டாள். விரைவிலேயே மறைத்திரு பின்னியை மணக்க இருக்கிறாள். பொருந்தாத மணம். என் செய்வது? அவளுக்கும் வயது ஏறிக்கொண்டு போகிறது. அவள் தலையில் கூட நரையைப் பார்த்தேன்.’’

**எமீலியாவின் எளிமை**

பிராம்ப்டனில் எமீலியாவும் குடும்பத்தாரும் கிருஸ்துமஸைச் சிறப்பாகக் கொண்டாடினர் என்று சொல்லவியலாது.

எமீலியா செலவுகளை மட்டுப் படுத்தித் தன் வருவாயில் ஒரு பகுதியை மீத்துவந்தாள். அச்சேமிப்பினைக் கொண்டு ஜார்ஜிக்குத் தரமான உடைகளை வாங்கினாள்; அவனது பள்ளிச் செலவையும் சரிக்கட்டினாள். திங்கள் தோறும் அறுபது பவுன் குடும்பச்செலவுக்குக் கொடுத்து வந்தாள்.

**தந்தையார் கவலை**

செட்லி தொடங்கிய மதுவாணிபமும், நிலக்கரி வாணிபமும் தோல்வி எய்தின. அவர் மனந்தளராமல் பங்குச் சந்தையில் சிறு சிறு தொகையாக முடக்கலானார். செல்வநிலை குறித்து மகளிரோடு கலந்து பேசுவது ஆகாது என்பது அவரது கொள்கை. ஆதலின் தங்களைச் சூழ்ந்து வந்த கொடுமைகளைக் குடும்பத்தினர் உணர்ந்தனரல்லர். ஆயினும் மளிகைக்கடை வீட்டுவாடகை முதலியன அடைபடாமல் நின்றபோது செட்லி தம் மனைவியிடம், இந்தியாவிலிருந்து ஜோஸப்



ஒழுங்காகப் பணம் அனுப்புவதில்லை என்று சொல்லி வைத்தார்.

**தாய் குற்றஞ் சாட்டுதல்**

ஜார்ஜி தனக்களிக்கப்படும் உணவைப் பற்றிக் குறை கூறலானான். எமீலியா தன்னைப் பொறுத்த வரையில் ரொட்டித் துண்டினை மட்டுமே உண்டு கிடக்கவும் ஒப்புவாள்; மகனுக்குக் குறை வைப்பாளோ? தன் சேமிப்பிலிருந்து அவனுக்குத் தின்பண்டங்கள் வாங்கலானாள். கிருஸ்துமசுக்கெனத் தன் மகனுக்குப் புத்துடை தைக்க ஏற்பாடு செய்து அதற்கென ஒரு தொகையைச் சேர்த்து வந்தாள். இந்நிலையில் ஒரு நாள் அவள் தாய் சொன்னாள்: “ஜோஸப்பிடமிருந்து பணம் வருவதில்லை. குடும்பத்தின் நிலையை நீ பார்த்தும் பாராதிருக்கிறாயே! உனக்கு ஜார்ஜியைத் தவிர வேறெதனைப் பற்றியும் கவலையில்லை.’’ அவ்வளவிலே எமீலியா அன்று தனக்கு வந்த பணத்தையெல்லாம் தாயிடம் ஒப்படைத்து விட்டாள்.

கிருஸ்துமசுக்குப் புத்தாடை இல்லை என்பதனைக் கேட்டபோது ஜார்ஜி அரற்றலானான். “எல்லாரும் புத்தாடை யுடுப்பார்கள். என்னைக் கேலிசெய்வார்களே’’ என்றான் அவன். எமீலியா அரும்பாடுபட்டு அவனைத் தேற்றினாள். டாபின் தனக்கு வழங்கிய காஷ்மீர் சால்வையை நினைத்தாள். அதனை விற்றுப் பணமாக்க முடிவு செய்தாள். மறுநாளே அதனை ஒரு கடையிற் கொடுத்து இருபது கினி பெற்றாள். மகிழ்ச்சியோடு புத்தகக் கடைக்குச் சென்று ஜார்ஜி நெடுநாட்களாகக் கேட்டுக்கொண்டிருந்த இரு புத்தகங்களை வாங்கிக்கொண்டு வீடு திரும்பினாள். மாடிப்படிகளில்

ஏறிய போது தாயை எதிரிற் கண்டாள். புத்தகங்களைப் பார்த்தவுடன் "என்ன அது" என்ருள் தாய்.

"ஜார்ஜிக்குச் சில புத்தகங்கள்...கிருஸ்துமசுக்கு வாங்கித் தருவதாகச் சொல்லியிருந்தேன்"

"புத்தகங்களாம் புத்தகங்கள்! வீட்டில் சாப்பாட்டிற்கு வழியில்லை. நீயும் உன் மகனும் மட்டும் ஆடம்பரமாக வாழவேண்டுமோ? வணிகர்கள் இகழ்கிருர்கள். வீட்டுக்காரர் நல்லவர் எனினும் எத்தனை நாள் பொறுப்பார்?"

"அம்மா! முன்பே என்னிடம் ஏன் சொல்லவில்லை? இப்போதுதான் என் சால்வையை விற்றேன். இதோ பணம்" என்று தன் கையிலிருந்தவற்றையெல்லாம் தாயின் கரத்தில் திணித்தாள். சில நாணயங்கள் மாடிப்படிகளில் உருண்டன.

### முடிவு கண்ணில் தோன்றுதல்

இப்போது உண்மை அவளுக்குத் தெளிவாயிற்று. தன்னலத்தால் அவள் தன் மகன் வாழ்வைக் கெடுக்கிருள். அவள் குறுக்கே நிற்காவிடில், அவன் தன் தந்தையின் இடத்தையும் செல்வத்தையும் பெற்று விடுவான். இத்தகைய உணர்வு அவளது அன்புள்ளத்தை என்ன பாடு படுத்தியது!

### தாத்தாவும் பேரனும்

டாபினின் தங்கைகள் எமீலியாவிடம் ஜார்ஜியைத் தம்முடன் உலவ அனுப்புமாறு அடிக்கடி வேண்டினர். 'அவனுடைய அத்தை அவனிடம் அன்புகாட்டுகிருள்; ஒரு வேளை தாத்தாவும் மனம் மாறுவர்' என்றனர். ஜார்ஜி ஒவ்வொருமுறை மீளும் போதும், பொருளும் பொம்மையும் கொண்டு வந்தான். 'யாரேனும் பெரியவரைப் பார்த்தாயா?' என அப்போதெல்லாம் வினவுவாள். இறுதியில் ஒரு நாள் அவன் முதியவர் ஒருவர் தன்னைப் பார்த்தார் என்றும் அப்போது அவருடலே நடுங்கியது என்றும் கூறினன். பையன் தன் தாத்தாவையே கண்டான் என்று எமீலியா உணர்ந்தாள். எந்நேரம் அவரிடமிருந்து கடிதம் வருமோ என்றெண்ணி நடுங்கலானுள். சில நாட்கள் கழிந்தன.



### தாயின் சீற்றம்

ஆஸ்போர்னின் வழக்கறிஞர் அவளுக்கு ஒரு கடிதம் கொணர்ந்தார். ஆஸ்போர்ண் பையனை வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள ஆயத்தமாயிருக்கிருர். தன் சொத்துக்களையெல்லாம் அவனுக்கே எழுதிவைப்பார். எமீலியாவுக்கு வாழ்க்கைச் செலவாக ஆண்டு தோறும் ஒரு தொகையளிப்பார். அவள் மறுமணம் செய்து கொள்ள விருப்பதாக அவர் கேள்விப்படுகிருர். அப்படியே செய்துகொண்டாலும் அவளுக்கு உதவித் தொகை நிறுத்தப்படாது. ஆயின் பையன் தன் தாத்தாவின் வீட்டிலோ அவர் சொல்லும் இடத்திலோ தான் இருப்பான். அவ்வப்போது தன் தாயைக் காண அவள் வீட்டுக்குப் போதுவான்—இச்செய்திகளைக் கண்ட அளவில் எமீலியா சீறியெழுந்தாள். கடிதத்தைச் சுக்கு நூருகக் கிழித்தெறிந்து காலால் நசுக்கினுள். "மறுமணம் செய்வேனும். பணத்தைப் பெற்றுக் கொண்டு பிள்ளையை ஒப்படைப்பேனும். என்னை இவ்வாறெல்லாம் இகழத்துணிந்தனரோ? இதற்கு நான்

விடையெழுத மாட்டேன். போய்வாருங்கள்'' என்று அவ்வழக்கறிஞரை அனுப்பிவிட்டாள்.

**எளியவளின் முயற்சி**

அதன்பின் எமீலியா வருவாயைப் பெருக்குவதற்கான சில முயற்சிகளை மேற்கொண்டாள். "உயர்குடிப் பெண்ணொருத்தி ஓய்வு நேரத்தில் சிறுமிகளுக்கு ஆங்கிலம், பிரெஞ்சு, நிலநூல், வரலாறு, இசை ஆகியவற்றைக் கற்பிக்க விரும்புகிறாள்'' என்றொரு சீட்டில் எழுதி 'நுண்கலைப் பண்டகசாலை' யொன்றில் பலர் கண்ணிற்படுமிடத்தில் வைக்கச் செய்தாள். நெடுநாட்களாகியும் அவ்வறிவிப்பிற்குப் பலன் இல்லை.

நாளுக்குநாள் கவலைமிக்கவளாய் அவள் மெலியலானாள். தன் உதவித் தொகையைப் பெற்றோர்க்குக் கொடுத்து விடலாமென்றும், தான் போதகரை மணந்து கொண்டால் மகனுக்கு வாழ்வு கிட்டும் என்றும் ஓர் எண்ணம் பிறந்தது. ஆயின் ஜார்ஜின் நினைவு மேலோங்கி அவ் எண்ணத்தைப் பழித்தது. காதலும் நாணமும் அத் 'தியாகத்தை'த் தடுத்தன. மனம்விட்டுப் பேசுவதற்கொரு தோழியும் இல்லாதவளாய், அவள் பல கிழமைகள் தன் மனத்தோடு போராட்டம் நடத்தினாள். இடையில் கல்கத்தாவில் வாழ்ந்த ஜோஸப்புக்குக் குடும்பநிலை குறித்து ஒரு கடிதம் எழுதினாள். அவன் தன் பொருளுதவியைத் தொடர்ந்து வழங்குமாறு வேண்டினாள். உண்மை நிலையை அவள் அறியாள்.

**மனப்போராட்டத்தின் முடிவு**

ஒருநாள் நிலைமை முற்றிவிட்டது. கடன்காரர்கள் நெருக்கினர். தாயார் புலம்பினார். தந்தையாரோ



கவலையே உருவாய் விளங்கினார். அவரைத் தேற்றக் கருதியவளாய், எமீலியா தான் ஜோஸப்புக்குக் கடிதம் எழுதியிருப்பதாயும் மூன்று நான்கு திங்களில் விடை கிடைத்துவிடுமென்றும் தெரிவித்தாள். அப்போதுதான் தந்தையாரிடமிருந்து உண்மை வெளிப்பட்டது. ஜோஸப் ஒழுங்காகப் பணம் அனுப்பிக்கொண்டுதானிருந்தான். அவரது அறிவற்ற தன்மையாலேயே பணமெல்லாம் பங்குச்சந்தையிற் கெட்டது. முன்னரே அவளிடஞ் சொல்ல அவர்க்குத் துணிவில்லை.

முடிவு தெரிவிக்கப்பட்டது. அவள் தன் மகனை மற்றவர்க்குக் கொடுத்துத்தான் தீர வேண்டும். மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு அவள் அதற்கான ஏற்பாடுகளைச் செய்யலானாள்.

ஒருநாள் ஜார்ஜின் தங்கைக்கு எமீலியாவிடமிருந்து கடிதம் வந்தது. எளிய சொற்களில் அவள் தன் மனமாற்றத்துக்குக் காரணங்களை விளக்கியிருந்தாள். பிற்குறிப்பினில் அவள் ஒரு நிபந்தனை விதித்தாள்: "எத்தனை முறை பார்க்க விரும்பினாலும் நான் என் மகனைப் பார்க்க இடங்கொடுக்க வேண்டும். இல்லையேல் நான் இவ்வேற்பாட்டிற்கு இணங்க மாட்டேன்.''

மகள் அக்கடிதத்தைத் தந்தையிடம் படித்துக் காட்டினாள். ஆஸ்போர்ண் "என்ன! செருக்கம்மாள் இறங்கி விட்டார்களா!... அன்றாடம் பட்டினியா? இப்படி வருவாளென்று எதிர்பார்த்தேன்'' என்று சிரித்தார். பிறகு "என்னறைக்கு மேலுள்ள மாடியறையை—அவனுக்கு விட்டிருந்த அந்த அறையை—ச் சித்தப்படுத்திவை'' என்றார். (பத்தாண்டுகளாக

மூடிக் கிடந்தது அவ்வறை). வெளியே போகுமுன் மற்றொரு கட்டளையும் இட்டுச் சென்றார்: "அந்தப் பெண்ணுக்கு ஏதேனும் பணம் அனுப்பு. அவளுக்கு இனிமேற் குறை வைக்கக் கூடாது. நூறு பவுன் அனுப்பிவை."

அன்றிரவு எமிலியா தன் தந்தையின் கையில் நூறு பவுனுக்கான ஒரு காசோலையைக் கொடுத்தாள். தாயிடம் "ஜார்ஜியிடம் அன்பாக நடந்து கொள். அவன் சில நாட்களே நம்மோடிருக்கப் போகிறான்" என்றாள்.

ஜார்ஜி பாட்டனார் வீடு சேரல்

அடுத்துச் சில நாட்களில் எமீலியா பட்ட மனத் துன்பத்தை எடுத்தெழுதுவதும் இயலாது. பிரியும் நாளும் வந்தது. வண்டி வரும் முன்பே, எமீலியா சிறுவனின் பெட்டிகளை அழகாகக் கட்டி வைத்திருந்தாள். இட மாற்றத்தை ஜார்ஜி பொருட்படுத்தியவனாய்த் தோன்றவில்லை. உண்மையில் அவன் அம்மாற்றத்தை விரும்பினான். குழந்தை சிரித்துக் கொண்டே பிரிந்து செல்கிறது. தாயோ மனமுடைந்து அழுகிறாள். இப் பகட்டுச் சந்தையில் பெண்கள் தம் பிள்ளைகள் மேற் கொள்ளும் பயனற்ற அன்பு இரங்கத் தக்க ஒன்றேயாகும்.

நாட்கள் நகர்ந்தன. ஜார்ஜி தன் தாயைக் காண அடிக்கடி வந்து கொண்டிருந்தான்.

---

# 24. உறவினர் கூடல்

காண்ட் பெரு வீதியிலுள்ள க்ராலி யில்லம் புதுப்பிக்கப் படலாயிற்று. வேலைக்காரப் பெண்களைப் பிரிக்சும் சிறுவன் ராடியும் மேற்பார்த்தனர். ரெபக்கா புதுப்பிக்கும் வேலைக்குப் பொறுப்பாளியாக விளங்கினாள். ஒரு முறை திருநிறை க்ராலி இலண்டனுக்குப் போந்த போது இவ்வேலையைத் தொடங்குவது என்பது உறுதியாயிற்று. தொடக்கத்தில் அவர் ஒரு விடுதியில் தங்கியிருந்தார். செய்தி கேட்டு ரெபக்கா அவரைக் காணச் சென்றாள். ஒரு மணி நேரத்துக்குள் அவள் அவரைத் தன் இல்லத்துக்கு அழைத்து வந்து விட்டாள். அவர் ஒரு கிழமை வரை தங்கினார்.

ஏழையின் மனைவி

ரெபக்காவின் சொற்படி ராடன் இரண்டு மூன்றிரவுகள் விடுதிகளில் உண்டான். வீட்டில் திருநிறை க்ராலி ரெபக்காவுடன் பிரிக்சுடனும் மாலைப் பொழுதினைக் கழித்தார். ரெபக்கா தன் கைப்படச் சமையல் செய்து அவர்க்குப் படைத்தாள்.

"நீ செய்யும் எதுவும் சுவையாகவே உள்ளது" என்றார் க்ராலி.

ரெபக்கா, "ஏழையின் மனைவி பயனுள்ள பணிகளைக் கற்றிருக்கவேண்டுமன்றோ?" என்றாள். உண்டபின் அவள் அவர்க்கு இனிய மது வழங்கினாள். அம் மது பிரான்சிலிருந்து ராடன் கொணர்ந்தது என்று தெரிவித்தாள். (உண்மையில் அவ்விலையுயர்ந்த மது ஸ்டேயின் பெருமகனின் மனையினின்று போந்ததுவே.) மதுவருந்தியபின் அவரைத் திண்டு நாற்காலியில் ஒய்

வெடுக்கச் சொன்னாள். அவர் பேசிய சொற்களையெல்லாம் கருத்தாய்க் கேட்டார். அவர் புறப்பட்டுச்செல்வதற்குள் காண்ட் பெருவீதியிலுள்ள மனை புதுப்பிக்கப்பட வேண்டுமென்பதும் கிருஸ்துமஸ் தினத்தில் குடும்பத்தாரெல்லாரும் அரசியார் க்ராலியில் கூட வேண்டுமென்பதும் முடிவாயின.

அவர் புறப்பட்டுச் சென்றவுடன் ராடன் தன் மனைவியிடம் கவலையொடு சொன்னான்: "அவனிடமிருந்து சிறிதேனும் பணத்தைப் பெற்றிருந்தாயாயின் நலமாயிருக்கும். வீட்டுக்காரக் கிழவர்க்கு ஏதேனும் கொடுத்தாக வேண்டும். எத்தனை காலந்தான் அவர்க்குப் பணம் கொடாமல் கடத்துவது?"

"பெரியவரின் சொத்துரிமைகள் முடிவானவுடனேயே எல்லோர்க்கும் கொடுத்து விடலாமென்று சொல்லுங்கள். வரவுவைத்துக் கொள்ளச் சொல்லி இத்தொகையை வீட்டுக்காரரிடம் கொடுங்கள்" என்றவாறே ரெபக்கா ஒரு காசோலையைத் தன் கணவனிடம் கொடுத்தாள். சிறுவன் ராடனுக்கெனத் திருநிறை க்ராலி அத்தொகையை அன்பளிப்பாக வழங்கியிருந்தார்.

உண்மையில் ராடன் தெரிவித்த கருத்தினை ரெபக்கா முன்னரே செயலில் வைத்து ஆராய்ந்தாள். அவள் தன் கடன் தொல்லைகளைப் பற்றிச் சுற்றிவளைத்துச் சொன்னாள். உடனேயே திருநிறை க்ராலி விழித்துக் கொண்டார். தமக்கிருக்கும் பணத்தொல்லைகளைப் பற்றி நெடுநேரம் ஒரு சொற்பொழிவே நிகழ்த்திவிட்டார். முடிவில் சிறுவனுக்கெனச் சிறுதொகையை வழங்கித் தம்பி மனைவியைத் தேற்றினார்.



க்ராலி பணவுதவி செய்யாதது பற்றி ரெபக்கா வருந்தினாளல்லள். குடும்பத் தலைவராகிய அவர் தன்னைக் குடும்பத்துள் ஒருத்தியாக ஏற்றதுவே போதும்; என்றேனும் ஒரு நாள் அவர் யாதேனும் உதவுவார் என்று நம்பினாள்.

அண்ணனும் தம்பியும் உறவாடியது வீட்டுக்காரருக்கு மனநிறைவு அளித்தது. கையிற் கிடைத்த சிறு பணமும் அவரது வருத்தத்தைக் குறைத்தது. பிரிக்ஸிடம் ரெபக்கா, "எவரிடமும் சொல்லாதே. திருநிறை க்ராலியுடன் உன் சார்பினிற் பேசினேன். உன்னிடமுள்ள பணத்தை அதிகப் பயனுள்ள வழியில் எவ்வாறு முதலீடு செய்யலாமென்று கேட்டேன். நெடுநேரஞ் சிந்தித்தபிறகு அவர் அப்பொறுப்பினை ஏற்றுக்கொள்ள முன் வந்திருக்கிறார். எதற்கும் பணத்தைக் கையிலேயே வைத்திரு" என்றாள். ரெபக்காவின் அன்புச் செயலைக் கேட்டவுடனேயே பிரிக்ஸின் மனம் நன்றியுணர்வால் நிறைந்தது. நன்றியைப் புலப்படுத்தும் வகையில் கடைத் தெருவுக்குப் போய்ச் சிறுவன் ராடிக்கென ஒரு பட்டு அங்கி வாங்கி வந்தாள்.

### ஏற்பாடுகள்

கிருஸ்துமசுக்கு ஓரிரு நாட்கள் முன்பாகவே ரெபக்காவும் ராடனும் மகனும் புறப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர். மகனை இலண்டனில் விட்டுச் செல்லவே ரெபக்கா விரும்பினாள். ஆயின் ஜேன் பெருமாட்டியோ சிறுவனைக் கட்டாயம் அழைத்துவர வேண்டுமென்று எழுதி விட்டாள். அன்றியும் வர வர அவள் மகனைப் புறக்கணிப்பது பற்றி ராடன் முணு முணுக்கலானான். ஆகவே மூவரும் அரசியார் க்ராலிக்குப் பயணப்பட்டனர்.

### திருநிறை க்ராலியின் திறன்

திருநிறை க்ராலி, தம் அறிவுடைமைக்குத் தக, இழந்த குடிப்பெயரை மீட்கப் பாடுபடலானார். தந்தையார் மறைவுக்குப் பின் அவரே பாராளுமன்ற உறுப்பினராகவும், நடுவராகவும், வட்டாரப் பெரும் புள்ளியாகவும் விளங்கினார். உறவினரை அன்போடு நடத்த முடிவு பூண்டார். அறப்பணிகளுக்குப் பொருளுதவி செய்தார். குடியானவரிடையேயும் ஆர்வத்தோடு பழகினார். சூழ்ச்சி வல்ல அவர் கிருஸ்துமசுக்குத் தம் உறவினரை முகமலர வரவேற்றதில் வியப்பில்லை.

### கிருஸ்துமஸ் முன்னும் பின்னும்

குடும்பத்தாரனைவரும் அங்குக் கூடினர். ரெபக்கா மார்த்தாவிடங்கூடக் கனிவாகப் பேசினாள். அவள் என்றென்றும் தன் தோழியாக விளங்கியது போல் பழகினாள். ஆயினும் ஜேனும் ரெபக்காவும் தாம் முன் போல் பழக இயலாதவராயினர். ஜேனின் எளிமையும் நற்பண்பும் ரெபக்காவுக்கு இகழத்தக்கவையாய்த் தோன்றின. ஜேன் ரெபக்காவை இகழப் பல காரணங்கள் இருந்தன. திருநிறை க்ராலி அவளோடு ஓயாமல் உரையாடினார். மனைவியோடு பேச விரும்பாத உயர் பொருளைப் பற்றியெல்லாம் அவளோடு பேசினார். ரெபக்கா தன் மகனை நடாத்திய முறையும் ஜேனுக்குப் பிடிக்கவில்லை.

கிருஸ்துமசுக்குப் பின் ராடனும் மகனும் பிரிய மனமின்றியே க்ராலி இல்லத்தின் நீங்கினர். ரெபக்கா உற்சாகத்தோடேயே கிளம்பினாள். அப்போது திருநிறை க்ராலி எப்படியோ மனத்தைத் திடப்படுத்திக்



கொண்டு தம் தம்பியிடம் நூறு பவுனுக்கான காசோலையை வழங்கினார். கொடுத்தவுடன் அவர் உள்ளத்தில் எழுந்த துன்பம் சொல்லிலடங்காதது. ஆயினும் பின்னாளில் அச்செயலை எண்ணித் தம் வள்ளன்மையைத் தாமே வியந்துகொண்டார், அவர்.

இலண்டனுக்கு மீண்ட பின்னரே இப்படலத் தொடக்கத்திற் கண்டவாறு ரெபக்கா காண்ட் பெரு வீதி இல்லத்தைப் புதுப்பிக்கும் பணியில் ஈடுபட்டாள். பாராளுமன்றக் கூட்டங்களுக்கு இலண்டன் வரும் போது திருநிறை க்ராலி தங்குவதற்கு அவ்வில்லந் தேவைப்பட்டது.

ராடன் நாளுக்கு நாள் தான் தனித்தொதுக்கப் படுவதை உணர்ந்தான். விடுதிகளுக்குச் செல்லவும், மணமாகா இளைஞரோடு இரவுணக் கொள்ளவும் விருப்பப்படி வெளியேசென்று மீளவும்விடப்பட்டான். வினவுவார் எவருமிலாமற் போயினர்.

# 25. முயற்சியின் வெற்றி

**தனிப்பெருஞ் சிறப்பு**

குடும்பத் தலைவருக்கு ரெபக்கா செலுத்திய அன்பும் மதிப்பும் வீண்போகவில்லை. தலைசிறந்த பயனைத் தந்தன. ஒருநாள் அவள் இங்கிலாந்து மன்னர் நான்காம் ஜார்ஜையே பேட்டி காணும் வாய்ப்புப் பெற்றாள். அன்று ஜேன் பெருமாட்டி அவளுக்கு ஞானத் தாயாகத் திகழ்ந்தாள். அப்பொன்னான நிகழ்ச்சிக்காக ரெபக்கா பின்னல் வேலைப்பாடமைந்த உயர்ந்த உடை உடுத்திருந்தாள். ஜேன் பெருமாட்டியே 'ரெபக்காவுக்கிருந்த நாகரிக வுணர்வு தனக்கில்லாது போயிற்று' என்று வருந்துமளவு அவ்வுடை அழகாயிருந்தது. (உண்மையில் பின்னல் வேலைப்பாடுடைய பகுதி காண்ட் பெருவீதி இல்லத்தில் பழைய துணி மணிகள் நடுவே ரெபக்காவுக்குக் கிட்டியதாகும். அவள் அதனைத் தன் வீட்டுக்கு எடுத்துச்சென்றதனைப் பிரிக்ஸ் அறிவாள். பிரிக்ஸ் அவளிடமும் பிறரிடமும் அதுபற்றி ஒன்றுமே பேசிக்கொள்ளவில்லை.) ரெபக்காவின் காதிலும் கழுத்திலும் வைர நகைகள் சுடர் விட்டன. (அவற்றுள் 'வைரக் கொக்கி' திருநிறை க்ராலியின் அன்பளிப்பு. எஞ்சியவற்றை ஒரு நகைக் கடையில் இரவலாகப் பெற்று வந்ததாக ராடனிடம் சொன்னாள். அவை எந்த நகைக்கடைக்கும் திரும்பிச் சென்றில. ரெபக்காவின் சொந்தப் பேழைக்குள்ளேயே ஏனைப் பல விலைமதிப்பரிய பொருள்களோடு அடைக் கலம் புகுந்தன. உண்மையில் அவை ரெபக்காவுக்கு எங்கிருந்து கிடைத்தன என்றும், அவற்றை விலை கொடுத்துக் கடையில் வாங்கியவர் எவர் என்றும்



ஸ்டேயின் பெருமகன் ஒருவர்தாம் அறிவார்.) ரெபக்காவுக்கு மன்னர் பேட்டியளித்த காரணத்தையும் அந்நிலையினையும் எவரே சொல்லவல்லார்! இப்பேட்டிக்குப் பின் ரெபக்காவிலும் சிறந்த நன்றியுணர்வுடையார் எவருமில்லை என்று சொல்லிவிடலாம். அவளது நாவில் அரசரது திருப்பெயர் எப்பொழுதும் தவழ்ந்தது.

**மற்றொரு சிறப்பு**

சில நாட்களுக்குப்பின், பண்பிற் சிறந்த ரெபக்கா மற்றொரு பெருஞ்சிறப்பினையும் எய்தினாள்: ஸ்டேயின் பெருமாட்டி தம் வண்டியில் அவளில்லத்து முன் நின்றார். அவர்தம் பணிமகன் ஓர் அழைப்பினை ரெபக்காவின் இல்லத்திற் சேர்த்தான்.

**பெருமகனும் பெண்ணணங்கும்**

சற்றைக் கெல்லாம் அங்குப் போந்த ஸ்டேயின் பெருமகன், "சமூகத்தில் உயர்நிலை பெற முடிவு கட்டி விட்டாய். உன்னை உயர்த்திக் கொள்வதற்காக வயது முதிர்ந்த என்னை வாட்டியலைக்கிறாய். அப்படியே நீ உயர்நிலை அடைந்தாலும், அதனை உன்னால் காப்பாற்றிக்கொள்ள முடியாது. உன்னிடம் பணம் இல்லை" என்றார்.

ரெபக்கா குறும்பாய்ச் சிரித்து, "நீங்கள் வழங்குவீர்கள்" என்றாள்.

"பணம் இல்லாத நீ இருப்பவரோடு போட்டியிடுகிறாய். பெண்கள் எல்லாரும் ஒன்றுதான். பயனற்றதனைப் பெறவே எந்தப் பெண்ணும் பாடுபடுகிறாள்."

பெண்மை பழிக்கப்படுதலைப் பொறுக்க இயலாதவளைப் போல, உள்ளறையிலிருந்த பிரிக்ஸ் பெருமூச்செறிந்தாள்.

பெருமகன் ரெபக்காவிடம் சொன்னர்: "அவ் வெறுக்கத் தகுந்த நாயை வீட்டினை விட்டுத் துரத்தி விடு. இல்லையேல் அதற்கு நஞ்சூட்டிக் கொல் விப்பேன்."

"நடவாது. என் தட்டிலிருந்தே அதற்கும் உணவு ஊட்டுகிறேன்" என்று சொல்லி ரெபக்கா சிரித்தாள். அவரது எரிச்சலைக் கண்டு சற்று நேரம் மகிழ்ந்தாள். பிறகு பிரிக்சை அழைத்துப் பையனோடு வெளியில் உலவி வருமாறு ஏவினள்.

பிரிக்சும் ராடியும் சென்ற பிறகு துன்பந் தோய்ந்த குரலில் ரெபக்கா, "அவனை அனுப்புவதியலாது" என்றாள்.

"ஏன்? சம்பளம் கொடுபடாமல் உள்ளதா?"

"அதனிலும் கொடுமை........அவளது சொத் தினையே அழித்துவிட்டோம். கழிந்த ஆண்டு நாங்கள் பணமின்றித் தவித்தபோது அவள் தன் பொருள் முழுதும் கொடுத்து உதவினள். இன்றுங்கூட அத னைத் திருப்பிக்கொடுக்கும் நிலையில் நாங்கள் இல்லையே!"

"பாழாய்ப்போக........தொகை எவ்வளவு?"

அவரது செல்வ நிலையையும் வள்ளன்மையையும் நன்கு அறிந்த ரெபக்கா உண்மைத் தொகைக்கு இரு மடங்கான ஒன்றினைச் சொன்னாள்.

பெருமகன் மீண்டும் ஒரு வசவினை உதிர்த்தார்.

"வேறு வழியில்லாமையால் அவ்வாறு செய்தேன். என் கணவரிடங்கூடச் சொல்லவில்லை. நீங்கள்தாம் வற்புறுத்திக் கேட்டுச் செய்தியை வரவழைத்தீர்கள்... என் செய்வேன்!"—ரெபக்கா அழத் தொடங்கினள்.



பெருமகன் சிறிதுநேரம் நகத்தைக் கடித்தார். பின் எழுந்து வெளியேறினர். அதன்பிறகு ரெபக்கா எழுந்தாள். கண்கள் குறும்பொளி வீச, விழுந்து விழுந்து சிரித்தாள். அன்றிரவில் ரெபக்காவுக்கு இரு உறைகள் வந்தன. ஒன்றினில் மறு வெள்ளியன்று காண்ட் மாளிகையில் (ஸ்டேயின் இல்லத்தில்) நடை பெற இருந்த விருந்திற்கான அழைப்பும், மற்றதில் ஆயிரத்து நூற்றைம்பது பவுனுக்கான ஒரு காசோலை யும் இருந்தன. இரவு நேடுநேரம் ரெபக்கா அத்தொகை யால் எவ்வெக் கடன்களை யடைக்கலாம் எனச் சிந்தித் தாள். மறுநாட் காலை ராடன் வெளிக்கிளம்பியவுட னேயே ரெபக்காவும் வங்கிக்குள் சென்றாள். நூற்றைம் பது பவுனைச் சில்லரைத் தாள்களாகவும், ஆயிரம் பவுனை ஒரு முழுத்தாளாகவும் பெற்றுக்கொண்டாள். கடைத் தெருவில் ஐம்பது பவுனுக்கு ஒரு கருநிறப் பட்டுடை வாங்கிப் புன்முறுவலோடு பிரிக்சுக்கு வழங் கினள். வீட்டுக்காரருக்கு ஐம்பதும், குதிரைக்காரர்க்கு ஐம்பதும் கொடுத்தாள். ஆயிரம் பவுன் தாள் அவளது சேமிப்புக் களஞ்சியமான சொந்தப் பேழைக்குள் அடக்கமாகியது.

### ஒப்பற்ற விருந்து

வெள்ளிக்கிழமை காண்ட் மாளிகையில் உயர் குடி மக்கள் பலர் கூடியிருந்தனர். தங்கையின் பள்ளித் தோழிகளை எதிரிற் கண்ட அண்ணன் நாணிக் கோணு வதுபோல அப்பெருமக்களைக் கண்ட ராடன் நாணங் கொண்டான். ரெபக்காவோ ஆடவர் நடுவே கூச்ச மின்றிப் பழகினள். பல் பொருள் பற்றியும் திறம்பட உரையாடினள். மகளிரொடு தனித்திருக்கையில்தான்

'போராட்டம்' தொடங்கி விட்டதென்று அவள் உணர்ந்தாள். (ஸ்டேயின் பெருமாட்டி அவளைக் கண வனது அச்சுறுத்தலாலேயே அழைக்க இணங்கினர். அவளை இழிவுபடுத்த வென்றே தம் தோழியராய பல பெருமாட்டிகளை அழைத்திருந்தார்.) மகளிர் அவளை ஒதுக்கினர். தம் குழந்தைகள்கூட அவளை அணுகாமல் தடுத்தனர். இறுதியில் அவளது தவிப்பினைக் கண்டிரங்கி ஸ்டேயின் பெருமாட்டியே அவளோடு உரையாடத் தலைப்பட்டார்; இசைபாடித் தங்களை மகிழ்விக்குமாறு வேண்டினர். உள்ளபடியே அவளது இசையைக் கேட்டு உருகி நின்றார்.

### பெரிய இடத்துச் சிறப்புக்கள்

ஸ்டேயின் பெருமகனின் விருந்துகளிலெல்லாம் ரெபக்கா கலந்துகொண்ட பிறகு, நாகரிகச் சமூகத்தில் அவளும் ஒருத்தியாக ஏற்கப்பட்டாள். தலைநகரத்துப் பல்வேறு பெரும் பெரும் மாளிகைகளின் கதவெல்லாம் அவளுக்காகத் திறந்தன. நீங்களும் நானும் நினைத்தும் பார்க்க முடியாத பெரிய இடங்கள் அவை.

### விருந்தும் செலவும்

ராடன் தம்பதிகளும் தம் இல்லத்தில் அவ்வப் போது நாகரிகச் சமூகத்தார்க்கு விருந்துகள் அளித் தார்கள். செலவுக்குப் பணம் அவர்களிடம் ஏது? இப் புதிருக்கு விடையாகப் பலர் பலவற்றைச் சொன்னார்கள். 'திருநிறை க்ராலி தம்பிக்கு உதவித் தொகையளிக்கிறார்' என்றனர் சிலர். 'அரசாங்கத்தில் அலுவல் பெற்றுத் தருவதாகக் கூறி அறியாதாரிடமிருந்து பணங் கறக் கிறான்' என்றனர் சிலர். உள்ளபடியே அவ்வளவு பெரும் பணம் அவளிடம் இருந்திருந்தால் அவள் அதனை முதலாக்கி நேர்மையாய் வாழ்ந்திருப்பாள். உண்மைநிலை வேறு. சிக்கனம், திறம்படக் கையாளுதல், ரொக்கப் பணத்தைக் கூடிய மட்டும் பயன்படுத்தாமை, எந்தக் கடனையும் திருப்பிக் கொடாமலிருத்தல்—இத் தகைய முறைகளால் குறைந்த வருவாயாயினும் பெரி தாகப் பகட்டிக்கொள்ள முடியும். ரெபக்கா அளித்த விருந்துகள் சிலவே. இறைச்சி வகைகளும் பழங்களும் ஸ்டேயின் பெருமகனாலும் திருநிறை க்ராலியாலும் ஏராளமாக வழங்கப்பட்டன. முன்னவர் வீட்டிலிருந்து உயர்ந்த மது வகைகள் மிகுதியாய் இறக்குமதியாயின. அவர் தம் சமையற்காரர்கள் ரெபக்காவின் விருந்துகளுக் கெனச் சமைக்கப் போந்தனர். அவ்வப்போது சமைத்த பண்டங்களையும் கொணர்ந்தனர். இத்தகைய சூழ் நிலையில் விருந்துகளால் ரெபக்காவுக்கு அதிகம் செல வில்லை.



### பெருமகனின் அருள்நோக்கம்

ஸ்டேயின் பெருமகன் ஒருவருக்கு உதவுவதெனத் தீர்மானித்து விட்டாரானால், அரைகுறையாகச் செய் யும் பழக்கமுடையவரல்லர். ராடன் குடும்பத்துக்கும் அவ்வாறே முழுதும் உதவ முற்பட்டார். அவரது அன்பு சிறுவன் ராடியின்மீது சென்றது. ராடன் தம்பதிகளிடம் வற்புறுத்திப் பேசிச் சிறுவனைப் பொதுப் பள்ளியிற் சேர்த்து வைத்தார். மகன்தான் ராடனுக்கு ஆறுதலாகவும் தோழனாகவும் விளங்கினன். ஆயினும் சிறுவனது எதிர்கால நலனைக் கருத்திற் கொண்டு ராடன் அவ்வேற்பாட்டிற்கு இணங்கினன். மகன் பள்ளி விடுதியிற் சேர்ந்த பிறகே ராடன் தன் தனிமைத் துன்பத்தை யுணர்ந்தான். மகன்மீது பற்றுக் கொண்டோரிடமெல்லாம் அவன் அன்பு

செலுத்தினான். தன் அண்ணி ஜேனோடு மணிக்கணக்காகத் தன் மகனின் தோற்றம் தன்மைகள் பற்றி உரையாடுவான்.

அடுத்து ஸ்டேயின் பெருமகனின் அருள்நோக்கம் பிரிக்சின் மீது விழுந்தது. 'பிரிக்சை நீக்கினால் வீட்டுச் செலவை மிகுதியாகக் குறைத்து விடலாமே! வீட்டை ரெபக்கா ஒருத்தியே திறம்படப் பேண முடியுமே!' என நினைத்தார். பிரிக்ஸிடம் பட்ட கடனையடைப்பதற்கென இப்பெருமகன் ரெபக்காவுக்குப் பணம் வழங்கியதனை முன்னர்க் கண்டோம். பின்னும் அவள் அவ்வில்லத்தில் தங்கிய காரணம் அவர்க்குப் புலப்படவில்லை. ஒருநாள் ரெபக்கா வீட்டிலில்லாத நேரத்தில் அவர் பிரிக்ஸிடம் கனிவாகப் பேசி உண்மையறிய முனைந்தார். விளைவாக ராடன் அவளிடமிருந்து அறுநூறு பவுனே பெற்றது தெரிய வந்தது.

"பொல்லாத பெண்! என்ன நடிப்பு! நானும் எத்தனையோ பெண்களை என் வாழ்விற் கண்டுள்ளேன். என்னையே முட்டாளாக்கி விட்டாளே! பணங்கறப்பது என்பது எளிய செயல். தேவையைப் போல் இருமடங்கு பணம் பெற்று எவருக்கும் கொடாமற் போவதிருக்கிறதே, இது செயற்கரிய செயல்தான்." அவர் ரெபக்காவின்மீது வைத்திருந்த மதிப்புப் பன்மடங்கு பெருகியது. அதே நேரத்தில் ராடன்தான் இவ்வேமாற்று வேலைக்குக் காரணமென்று எண்ணியதால் அவனை முன்னிலும் அதிகமாக வெறுக்கலானார். கணவனுமறியாமல் ரெபக்கா பணஞ்சேர்த்து வைத்தல் கூடும் என்பதனை அவர் அறியமாட்டார்.

ரெபக்காவைத் தனிமையிற் கண்டவுடனேயே, தேவைக் கதிகமாய்ப் பணம் பெறும் அவளது திறமை



யைப் பாராட்டினார். அவள் திடுக்கிட்டாள். கட்டாயம் நேர்ந்தாலொழியப் பொய் சொல்வது அப்பேதைப் பெண்ணின் பழக்கமன்று. இக்கட்டான நிலையில் முழுப்பொய்யாகச் சொல்லவும் தயங்க மாட்டாள். "பெருமானே! மன்னியுங்கள். என் கணவர் தாம் என்னை அச்சுறுத்திக் கொடுமை செய்து அத்தொகையைத் தங்களிடமிருந்து பெறுமாறு செய்தார். பணத்தை அவரே வாங்கிக்கொண்டார். பிரிக்சுக்குக் கொடுத்துவிட்டதாக என்னிடம் சொன்னார். அவரை நம்பாமலிருக்க முடியுமா? எளியர்! அவரது நிலையெண்ணி இக்குற்றத்தை மன்னித்து விடுங்கள். இவ்வேழைப் பெண்ணிடம் இரக்கம் காட்டுங்கள்" என்று கூறிக் கண்ணீர் வடித்தாள்.

பின் பெட்டி வண்டியில் சுற்றிவந்தபடியே இருவரும் நெடுநேரம் ஏதோ உரையாடினர். பயனாக ரெபக்கா முறுவல் பூத்த முகத்தோடு ஓடிவந்து பிரிக்ஸைத் தழுவிக்கொண்டாள்; "பெருந்தன்மையே உருவான ஸ்டேயின் பெருமகன் தமக்குரிய ஒரு சிற்றூர் மாளிகையில் பிரிக்சுக்கு வேலையளிக்க முன்வந்துளார்" என்றாள்.

பிரிக்ஸின் நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்கச் சொற்களுக்கு வல்லமையேது? அவ்வேழைக் கிழவி சிறுவன் ராடி தன்னைப் பார்க்க அடிக்கடி வருவதானால் மட்டுமே அவ்வேலையை ஏற்க முடியுமென்றாள். அவ்வாறே ரெபக்கா உறுதியளித்தாள். கணவன் வீடு திரும்பியவுடனேயே இம் மகிழ்ச்சிச் செய்தியை அவனிடம் கூறினாள். அவனது ஆறுதலைச் சொல்லவும் வேண்டுமோ? பிரிக்ஸின் கடன் அவன் மனத்தில் சுமை

யாய் இருந்து வந்தது. அவளுக்கு வேலை வாங்கிக் கொடுக்க இயன்றது பற்றி அவன் மகிழ்ந்தான். ஆயி னும் அவன் உள்ளத்தே ஏனோ ஒரு கலக்கம் பிறந்தது.

### அறிவுரைகள்

ஸ்டேயின் பெருமகனின் இவ்வருட் செயல் குறித்து அவன் ஜேனிடம் பேசினான். அவள் முகம் ஏனோ மாறிற்று; துணுக்குற்றவளாய்த் தோன்றினாள். திரு நிறை க்ராலியும் அவ்வாறே தோற்றமளித்தார். இவ் விருவரும், "அவள் நிரம்பப் புத்திசாலி. கேளிக்கையில் ஈடுபாடுடையவள். துணையில்லாமல் எங்கும் அனுப் பாதே. அவள் போகுமிடமெல்லாம் நீயும் போ. அல்லது வேறு துணையனுப்பு" என்றனர்.

### உறவினர் வெறுப்பு

திருநிறை க்ராலியே நேரிற் சென்று, ரெபக்கா விடம், பிரிக்சை அனுப்புவது பற்றியும் வேறு குடும்பச் செய்திகள் பற்றியும் பேசினார். அவள் தன் கணவ னுக்கு ஸ்டேயின் பெருமகனின் உதவி எவ்வளவு தேவை எனவும், பிரிக்சை இவ்வுயர் நிலை எய்த விடா மல் தடுப்பது எவ்வளவு கொடுமையெனவும் எடுத் துரைத்தாள். குடும்பத் தலைவரென்ற முறையில் அவர் அவளிடம் குடிப்பெருமையையும் அதனைக் காக்க அவள் நடக்க வேண்டிய முறையினைப் பற்றியும் சுட்டிக்காட்டினார். ஏற்கெனவே அவளைக் குறித்து ஊரார் இகழ்ச்சியாகவே பேசுகின்றனர் என்றார். ஸ்டேயின் பெருமகன் உயர்வும் திறமையும் உடையவ ராயினும் எந்தப் பெண்ணையும் தடுமாறச் செய்ய வல் லவர் என்றார். அவர் சொல்லியபடியே செய்வதாக அவள் வாக்களித்தாள். ஆயினும் முன்போலவே



ஸ்டேயின்பெருமகன் அவளில்லத்துக்கு அடிக்கடி வர லானார். திருநிறை க்ராலியின் சீற்றம் பெருகியது. தாம் அங்குச் செல்வதை நிறுத்திக் கொண்டார்.

### ராடனின் மாற்றம்

அண்ணனும் அண்ணியும் அறிவுறுத்தியதின் விளை வாக ராடன் வீட்டு நடவடிக்கையில் கண்ணுங் கருத்து முடையவனானான். வெளியிடங்கட்குச் செல்வதை நிறுத்தினான். ரெபக்கா எங்குச் சென்றாலும் உடன் சென்றான். அவளைக் காண ஸ்டேயின் பெருமகன் வரும்போதெல்லாம் அவன் வீட்டில் தவறாமலிருந் தான். ரெபக்காவுக்கு மட்டும் வரும் அழைப்புக்களை யெல்லாம் அவள் ஏற்கக் கூடாதென்று கட்டளையிட் டான். அவனது போக்குக் கண்டு அவள் கட்டளைக் குப் பணிந்தாள். உள்ளதைச் சொல்வதாயின் அவ னது ஆண்மையின் விழிப்பு அவளைக் கவர்ந்தது என லாம்.

### சிறு கூத்து

பிரான்சிலிருந்து இங்கிலாந்திற்குள் அக்காலத்தில் பரவிய பழக்க வழக்கங்கள் பல. அவற்றுள் விருந்து களில் ஒருவகைச் சிறு கூத்தினை நடித்தலும் ஒன்றா கும். நடிப்போரின் உடலழகினையும் உயரறிவினையும் எடுத்துக் காட்ட வல்ல அச் சிறு கூத்திற்கு ஸ்டேயின் பெருமகன் ஏற்பாடு செய்யவேண்டுமென ரெபக்கா தூண்டினாள். அவ்வாறே அவரும் அக்கலை நிகழ்ச்சிக் கும் விருந்திற்கும் பல பெருமக்களை அழைத்தார். ராடனும் ரெபக்காவும் கூத்தில் நடித்தனர். ரெபக்கா வின் நடிப்புத் திறனும் தோற்றமும் கூடியிருந்தோரைக் கவர்ந்தன. அவளது வெற்றி ராடனின் உள்ளத்தே

திகைப்பினை உண்டாக்கியது. தனக்கும் தன் மனைவிக்குமிடையே பிளவு பெருகுவதாக அவன் நினைத்தான். அளவிடற்கரிய அளவு அவள் தன்னினும் உயர்ந்தவள் என்று கருதிய போது அவனுள்ளம் வெந்தது.

**ராடன் சிறைப்படல்**

விருந்து முடிந்த பின் ரெபக்கா தன் வண்டியிலேறினாள். ராடன் நண்பரொருவரோடு நடந்து வரப் போவதாகத் தெரிவிக்கவே வண்டி சென்றது. அந் நண்பர் வென்ஹாம்தாம் "சுருட்டுப் பிடித்துக் கொண்டே நடப்போம்" என்று அவனைத் தூண்டினர். வேறு இருவர் இவர்களைப் பின் தொடரலாயினர். சிறிது தொலைவு சென்றதும், பின் தொடர்ந்தோருள் ஒருவன் முன் விரைந்து ராடனின் தோளைப் பற்றினான். கொடிப் போதில் ராடன் 'நூற்று அறுபத்தாறு பவுன் ஆறு ஷில்லிங் எட்டுப் பென்ஸ்' கடனுக்காகச் சிறையெடுக்கப்பட்டான். "வென்ஹாம்! ஒரு நூறு பவுன் இருந்தால் கொடுங்கள். வீட்டில் எழுபது இருக்கிறது" என்றான் அப்பாவி ராடன்.

"என் கையிருப்பே பத்துப் பவுன்தான்" என்றவாறு வென்ஹாம் நடையைக் கட்டினார்.

---

# 26. வீழ்ச்சி

**மனைவிக்குக் கடிதம்**

மனவலிமையில்லாதவனெனில் சிறைப்பட்ட உடனேயே மனைவிக்குக் கடிதமெழுதியிருப்பான். ராடன் அத்தகையவனல்லன். "அவளது உறக்கத்தைக் கெடுப்பதாற் பயனென்ன? நான் வீட்டிலிருந்தாலும் இல்லாவிட்டாலும் அவள் அறியமாட்டாள். அவளும் உறங்கக்கூடும். யானும் உறங்குவேன். நூற்றெழுபதுதானே! திரட்ட முடியாமலா போகும்?" என்று கருதியவனாய் அவன் தன் மகனைப் பற்றிய நினைவிலேயே உறங்கலானான். மறுநாள் பத்து மணிக்குத்தான் எழுந்தான். "அன்புள்ள பெக்கி-நன்றாக உறங்கினாயா? நேற்றிரவு வீடு திரும்பும்போது ஓர் இக்கட்டினிற் சிக்கிக் கொண்டேன். நதானிடம் பட்ட கடன் நூற்றைம்பது செலவோடு நூற்றெழுபது. பின் என் துணிகளையும் பணப்பையையும் அனுப்பு. அதில் எழுபது இருக்கிறது. நதானிடம் போய் எழுபத்தைந்து உடனே கொடுப்பதாகவும் வேறு பத்திரம் எழுதித் தருவதாகவும் சொல். அவர் ஒப்புக் கொள்ளாவிடில், என் கடிகாரத்தையும் உனக்கு வேண்டாத பொருள்களையும் திரட்டி விற்றுவிடு. இன்றிரவிற்குள் பணம் வேண்டும். நாளை ஞாயிறு. நல்ல வேளை. இந்தச் சனிக்கிழமை பையன் வீட்டுக்கு வரமாட்டான்—ராடன் க்ராலி.

"பி. கு:—விரைந்து வா"

**மனைவியின் விடை**

'அதிகமாய்ப் போனால் மூன்று மணி நேரந்தான் ஆகும். எப்படியும் ரெபக்கா வந்து தன்னை விடுவிப்

பாள்' என்று நம்பியவனாய் ராடன் சுருட்டைப் புகைத்தபடி செய்தித்தாள் படிக்கலானான். பகற்பொழுதும் கழிந்தது. மாலை ஐந்தரை மணியளவில் தான் துணிகளும் பணப்பெட்டியும், ரெபக்காவிடமிருந்து ஒரு கடிதமும் வந்தன. அந்நீண்ட கடிதத்தில் அவள் தெரிவித்த செய்தி இதுதான் :—முதல் நாளிரவு முதல் அவளுக்குத் தலைவலி. முழுத் தொகையும் பெற்றாலொழிய ராடனை விடுவிப்பதற்கு நதான் இணங்க மறுத்துவிட்டான். நகைகள் சிலவே. விற்றாலும் நூறு பவுன் தேறாது. ஸ்டேயினும் வேறு சிலரும் முன்னாளிரவு கலைக்கூத்தில் அவளது நடிப்புப் பற்றிப் பாராட்ட வீடு தேடிப் போந்தனர். ஏனையோர் சென்ற பின், அவள் ஸ்டேயின் பெருமகன் காலில் விழுந்து இருநூறு பவுன் கடனளிக்குமாறு கெஞ்சினாள். தொடக்கத்தில் சீறினாரேனும் இருநூறு பவுன் மறுநாள் காலையில் அனுப்புவதாகத் தெரிவித்துச் சென்றார். இன்னும் தலைவலியோடுதான் படுக்கையிற் கிடக்கிறாள்.

**விடுதலைக்கு உதவியவள்**

கடிதத்தைப் படித்து முடித்தவுடன் ராடனின் கண்கள் சிவந்தன. அவனுள்ளத்தே சீற்றம் பொங்கியது. 'வீடுவிப்பதற்குக் கூட அவள் நகைகளை விற்க மாட்டாளா? கணவன் சிறையிலடைபட்டிருக்கும் நிலையிலும் கூத்தும் நடிப்பும் பற்றிச் சிரித்துப் பேசுகிறாளே! அவனைச் சிறையிலடைத்தார் யாவர்? வென்ஹாம் சொன்னதன் பேரிலேயே அவன் அவரோடு நடக்கலானான். அப்படியானால்...' அவனுக்கு உண்மை விளங்கிற்று. அவன் உடல் துடித்தது. சில வரிகள் எழுதித் திருநிறை க்ராலியிடமோ ஜேனிடமோ கொடுக்குமாறு ஓர் ஆளை அனுப்பினான். ஒரு மணி நேரத்திற்குள் அவ்வாள் திரும்பினால் ஒரு கினி பரிசளிப்பதாகக் கூறினான்.



கடிதத்தில் கடவுள் பெயரால், தன் அன்பான குழந்தையின் பெயரால், மானத்தின் பெயரால் கேட்பதாகவும், உடனே வந்து தன்னை அவ்விக்கட்டிலிருந்து தப்புவிக்க வேண்டுமென்றும், சிறையிலிருப்பதாகவும், விடுதலைக்கு நூறு பவுன் வேண்டுமென்றும் உடனே வருமாறும் எழுதியிருந்தான்.

ஒருமணி நேரங் கழிந்தது. பதற்றத்தோடு ஒரு பெண் அவனெதிரே நின்றாள். "நான்தான், ராடன்.... ஜேன்" என்றாள் அவள். விரைவில் அவன் விடுதலைக்கான ஏற்பாடுகள் முடிந்தன. அவனை வண்டியிலேற்றிக்கொண்டு ஜேன் பெருமாட்டி மகிழ்ச்சியோடு வெளியேறினாள். வழியில், "அவர் பாராளுமன்ற விருந்திற்குப் போய்விட்டார். உங்கள் கடிதம் வந்தவுடன், அதனால் நான்-நானே புறப்பட்டு வந்தேன்" என்றாள், அப்பெருமாட்டி. "உங்களோடும் என் பையனோடும் பழகிய பிறகு நான் ஓரளவு மாறிவிட்டேன். இன்னும் மாறத்தான் விரும்புகிறேன். அதாவது....நான்....நான்...." ராடன் அவளிடம் விடைபெற்று வீட்டிற்கு விரைந்தான்.

சாளரங்களின் வழியே உள்ளே விளக்குகள் எரிந்தது புலனாயிற்று. அவள் தலைவலியோடு படுக்கையிற் கிடப்பதாக எழுதினாளே!

**ராடனும் பெருமகனும்**

வெளிக்கதவைத் தன்னிடமிருந்த சாவியால் திறந்து வீட்டினுட் புகுந்தான். சிரிப்பொலி அவனது



அப்போதுதான் அறைக்குள் போந்த ராடன்...



செவியில் விழுந்தது. படிக்கட்டில் ஓசைப் படாமல் ஏறினான். வீட்டில் வேலைக்காரர் ஒருவருமே இல்லை. இப்போது சிரிப்பும் பாட்டும் செவியிற் பட்டன. பாடியவள் ரெபக்கா. ஒரு கரகரத்த குரல் 'அபாரம்' போட்டது. அது ஸ்டேயின் பெருமகனின் குரல். ராடன் அறையினுட் புகுந்தான். சிறிய மேசை மீது உணவுப் பொருட்கள் படைக்கப் பட்டிருந்தன. அவள் திண்டு நாற்காலியிலமர்ந்திருப்ப அவர் அருகே வளைந்து நின்றார். அவளது கையில் வளையல்களும் விரலில் மோதிரங்களும் கழுத்தில் பெருமகனளித்த வைர மாலையும் மின்னின. அவர் அவளது கையைப் பற்றி முத்தமிடக் குனிந்தார். அப்போதுதான் அறைக்குள் போந்த ராடனின் வெளிறிய முகத்தை அவள் கண்டு திடுக்கிட்டாள். மறுகணமே கணவனை வரவேற்பாள்போல் முறுவலிக்க முயன்றாள். கொடிய முறுவல்! அவர் பற்களை நறநறவெனக் கடித்தவாறு சீற்றத்தோடு எழுந்தார். ராடனைக் கண்டதும், சிரிக்க முயன்றவாறே தம் கையை நீட்டினார். "வந்துவிட்டீர்களா, ராடன்! நலமா?" என்றார்.

ராடனின் முகத்தோற்றம் கண்டு நடுங்கிய அவள் அவனெதிரே முழந்தாளிட்டுப் பணிந்தாள். "நான் களங்கமற்றவள் ராடன்! கடவுள் சாட்சியாக நான் களங்கமற்றவள்" என்றாள். அவனது மேலங்கியையும் கைகளையும் பிடித்துக் கொண்டாள்.

ஸ்டேயின் பெருமகன் தம்மைக் கவிழ்க்கும் சூழ்ச்சி வலையென்று நினைத்தவராய், இப்போது ரெபக்கா மீதும் சீற்றங் கொண்டவராய், "நீயா களங்கமற்றவள்? பாழாய்ப்போக. உன் உடம்பில் கிடக்கிற ஒவ்

வொரு நகையையும் வாங்கிக் கொடுத்தவன், நான். ஆயிரமாயிரம் பவுனை உனக்குக் கொடுத்தேன். அத்தனையும் இந்த ஆள் செலவழித்து விட்டான். அத்தொகைக்காக உன்னை விற்ருன். களங்கமற்றவளாம்.... மற்றவர்களைப் போல் என்னையும் அச்சுறுத்தி அனுப்பி விடலாமென்று நினையாதீர்கள். வழிவிடு, ஐயா, நான் போகிறேன்'' என்ருர். கண்கள் கனற்பொறி சிதற, எதிரியின் முகத்தைக் கடிது நோக்கிய படியே அவனுக்கெதிராய் நடந்தார். அவன் வழிவிட்டு விடுவான் என்றே நம்பினுர்.

ராடன் முன்பாய்ந்து அவரது கழுத்துப்பட்டையைப் பற்றி இழுத்தான். அவர் குரல்வளை நெரிதலால் திணறி வளைந்தார். ''புளுகாதே நாயே. நீ ஒரு கோழை, கொடியவன்'' என்றவாறே ராடன் அவர் முகத்தில் ஓங்கி இருமுறை அறைந்தான். குருதி வழிய அவர் தரையில் விழுந்தார்.

கணவனது வலிமையும் துணிச்சலும் வெற்றியுங் கண்டு அவள் வியந்தாள்.

''வா இங்கே.''

அவள் உடனேயே அவனை யணுகினுள்.

''எல்லாவற்றையும் கழற்று.''

அவள் நடுங்கியவாறே வளையல்களையும் மோதிரங்களையுங் கழற்றி இரு கையிலும் வைத்து நீட்டினுள்.

''போடு கீழே'' அவள் போட்டுவிட்டாள். அவன் அவளது வைர மாலையை இழுத்து அறுத்துக் கீழே கிடந்தவர் மீது வீசியெறிந்தான். அவரது வழுக்கை நெற்றியை அம்மாலை கிழித்தது. சாகும் வரை அத்தழும்பு அவரைவிட்டுப் போகவில்லை.



''மாடிக்கு வா.''

''என்னைக் கொன்று விடாதீர்கள்.''

அவன் பேய்ச் சிரிப்புச் சிரித்தான். பின் சொன்ஞன்: ''என்னைப் பற்றிப் புளுகியது போன்றே அந்த ஆள் பணத்தைப் பற்றியும் புளுகிறு என்றறிய விரும்புகிறேன். உன்னிடம் ஏதேனும் பணம் கொடுத்தானு?''

''இல்லை....அதாவது...''

''சாவிக் கொத்தைக் கொடு''

ரெபக்கா கொடுத்தாள். அவளது சொந்தப் பேழைக்கான சாவி மட்டும் அக்கொத்தினில் இல்லை. ராடன் பெட்டிகள் நிலைப்பேழைகளையெல்லாம் திறந்து உள்ளிருந்தவற்றை வெளியில் வீசினுன். கடைசியில் அந்தப் 'பேழையும்' அவனது பார்வையிற் பட்டு விட்டது. திறப்பது தவிர அவளுக்குப் புகலில்லாது போயிற்று. பழங்காலத் தாள்களும், காதற் கடிதங்களும், பலவகைச் சிற்றணிகளும் உள்ளிருந்தன. அவற்ருேடு ஒரு சிற்றேடும் கிடந்தது. அதனுள் பத்தாண்டுக் காலத்துக்கு முந்தியன முதல் புதியது வரை பல பணத்தாள்கள் இருந்தன. புதிய தாள் ஆயிரம் பவுன் மதிப்புடையது.

''இதை உனக்கு அவன் கொடுத்தானு?''

''ஆம்.''

''இன்றே அவனுக்கு இதனைத் திருப்பி யனுப்பி விடுவேன். பிரிக்ஸின் கடனையும் வேறு சில கடன்களையும் அடைப்பேன். மிஞ்சும் பணத்தை உனக்கு அனுப்புவேன். எங்கிருப்பாய் என்று மட்டும் தகவல்

கொடு... இவ்வளவு தொகையிலிருந்து, என்னை விடுவிப்பதற்கு நீ நூறு பவுன் கொடுத்திருக்க முடியாதா, ரெபக்கா? உனக்கென எல்லாவற்றையும் கொடுத்தேனே!"

"நான் களங்கமற்றவள்" என்றாள் அவள்.

வேறொரு சொல்லும் பேசாமல் அவன் வெளியேறினான்.

அவள் களங்கமற்றவளா? ஆமென்றாள் அவள். அவளுதட்டினின்று வெளிவருஞ் சொற்களுள் உண்மைகாண வல்லவர் யார்! அவள் பொய்யுரைகள், சூழ்ச்சிகள், திட்டங்கள், அறிவு, திறம் எல்லாம் இறுதியில் இந்த முடிவுக்கே வழி செய்தன.

வீட்டினின்று வெளியேறிய ராடன் காண்ட் பெரு வீதிக்குச் சென்றான். காலைவேளையில் அவனைக் கண்ட திருநிறை க்ராலி திகைத்தார். ராடன் நிகழ்ந்தவற்றைச் சொன்னான். ஸ்டேயின் பெருமகனும் ரெபக்காவும் திட்டமிட்டே அவனைச் சிறைக்கு அனுப்பினர் என்றும் அவன் அவரைப் போர்க்கழைக்கக் கருதினான் என்றும் தெரிவித்தான். மூத்தவர் மனமும் உருகியது. தம்பியின் கைபற்றிக் குலுக்கினார். "பையனை நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றார். அவரிடமே பிரிக்சுக்குச் சேர வேண்டிய அறுநூறு பவுன்களையும் கொடுத்து அவளிடம் சேர்ப்பிக்குமாறு வேண்டினான். தனக்கெனச் சிறு தொகையை மட்டுமே எடுத்துக் கொண்டு, எஞ்சியவற்றையும் ரெபக்காவிடம் கொடுத்திடுமாறு தன் அண்ணனிடம் சேர்த்தான். பின் அறைவாயிலில் நின்ற ஜேன் பெருமாட்டியிடமும் கண்ணீர் பெருக விடைபெற்று வெளியேறினான்.



**தூதனுப்பும் முயற்சி**

நடுப் பகலுக்குள் வேலைக்காரர் பலரும் கிடைத்தவற்றைச் சுருட்டிக் கொண்டு ஓடிவிட்டனர். எஞ்சியவர்கள் சம்பளப் பாக்கிக்காகக் கூச்சலிட்டனர். "ராடன் எங்கும் போய்விடவில்லை. நல்லதொரு வேலை அவருக்குக் கிடைத்துளது. அவரை அழைத்து வருகிறேன்" என்றுரைத்து அவள் வெளியேறினாள். திருநிறை க்ராலியிடம் போய் மண்டியிட்டுத் தான் களங்கமற்றவள் என்றும், தன்னைக் கணவனோடு சேர்த்து வைக்க வேண்டுமென்றும் இறைஞ்சினாள். அவரது கையைப் பற்றி நின்ற அந்நிலையில் ஜேன் பெருமாட்டி அங்குத் தோன்றி இரைந்தார்: "இவ்வீட்டில் அடியெடுத்து வைக்க இவளுக்கு என்ன துணிச்சல்? இவள் கொடியவள். குழந்தையிடம் அன்பற்ற தாய். கொண்டவனுக்கிரண்டக மிழைத்த மனைவி. இவள் இவ்வீட்டிலிருந்தால் நான் குழந்தைகளை அழைத்துக் கொண்டு எங்காவது போய் விடுவேன்." ரெபக்கா அது கேட்டு வருந்தினாளல்லள். அமைதியாக வெளியேறினாள். ராடனிடம் தூது செல்லத்தான் திருநிறை க்ராலி இணங்கிவிட்டாரே!

**பழி துடைக்க முயற்சி**

ராடன் தன் நண்பனாய ஒரு படைஞனை (மக்மர்டோவை)க் கண்டான். இருவரும் கூடிப் பேசினர். அப்படைஞன் "ரெபக்கா களங்கமற்றவளாக இருக்கலாம்" என்றான். "அஃதென்னவோ! ஆயிரம் பவுன் பணத்தாள் அவள் எனக்குச் செய்த குற்றத்துக்குத் தக்க சான்று" என்றான் ராடன். ஸ்டேயின் பெருமகனைப் போருக்கழைக்கக் கருதி அவரது இல்லத்துக்

கும் ஓர் ஆளை அனுப்பினான். உணவருந்துகையில் படைநண்பர் வேறு சிலர் அவனுக்குப் பத்திரிகைச் செய்தி ஒன்றினைக் காட்டினர். கவென்ட்ரித் தீவின் ஆளுநராக அவனை அரசு ஏற்படுத்தியுள்ளதென அச் செய்தி கூறியது. சற்றைக்கெல்லாம் வென்ஹாம் அவனைக் காணப் போந்தார். ஸ்டேயின் பெருமகனின் தூதராக அவர் பேசினார். அப்பெருமகன் காரணமாகவே ராடன் அப்பதவிக்கு ஏற்படுத்தப்பட்டதாகவும், ரெபக்காவும் அவரும் முன்னரும் பன்முறை தனித்திருந்தது போன்றதே முதல்நாள் நிகழ்ச்சியென்றும், அவள் களங்கமற்றவள் என்றும் தெரிவித்தார். மக்மர்டோ அவற்றை நம்பினான். இரு தரப்பினரும் முன்னாட் செய்தியை வெளியிடுவதில்லையென்று அந் நண்பனும் வென்ஹாமும் ஒப்புக் கொண்டனர். (செய்தி என்னவோ ஊர்முழுதும் பரவி விட்டது) ஆயிரம் பவுன் பணத்தாளைப் பற்றுச்சீட்டுப் பெற்றுக் கொண்டு மக்மர்டோ வென்ஹாமிடம் கொடுத்தான்.

### "முகத்திலும் விழிக்கமாட்டேன்"

வென்ஹாம் சென்ற சிறிது நேரத்தில் திருநிறை க்ராலி அங்குப் போந்தார். பெருமகனோடு ராடன் போர் செய்யப் போவதில்லை என்றறிந்து அமைதியடைந்தார். பின் தம் நோக்கத்தை மெல்ல வெளியிட்டார். ராடன் மறுத்து விட்டான். "ஸ்டேயினிடமிருந்து பணம் வாங்கவில்லை என்று சத்தியம் செய்தாள். மறுகணமே நான் பெருந்தொகையைக் கண்டேன். அவள் களங்கமற்றவளாய் இருந்தாலும் என்ன? எனக்கு அவ்வளவு கொடுமை செய்தாளே! அவள் முகத்தில் இனி விழிக்க மாட்டேன்" என்றான் அவன்.



### ஆளுநர் மே. த. ராடன்

தொடக்கத்தில் ஆளுநர் பதவியை ஏற்கவும் ராடன் மனமற்றுத் திரிந்தான். திருநிறை க்ராலியும் மக்மர்டோவும் வற்புறுத்தினர். பின்னவன், 'அதன் மூலம் ஸ்டேயினைப் பழிவாங்கலாம்; தம் உதவியால் தம் பகைவன் செழித்து வாழ்கிறான் என்றெண்ணும் போதெல்லாம் அவர் மனம் வருந்துவார்' என்றெடுத்துக் காட்டிய பின்னரே அவன் அப்பதவியை ஏற்றான்.

அத்தீவிலிருந்து ஒழுங்காக ராடன் அண்ணனுக்குப் பணமும், அண்ணிக்குப் பல்வகைப் பண்டங்களும், மகனுக்குக் கடிதமும் அனுப்பி வைத்தான்.

# 27. நண்பர்

காலத்தாழ்ச்சி

படைத் தலைவரிடம் விடுமுறை கேட்டுப் பெற்ற டாபின் சென்னை நகர்க்குப் பயணப்பட்டான். இரவும் பகலுமாகச் சலியாது பயணஞ் செய்ததன் விளைவாகச் சென்னையை அடைந்தபோது கடுமையான காய்ச்சலுக்காளானான். அங்கு ஒரு நண்பரின் இல்லத்தில் பல நாட்கள் தங்கும் நிலை ஏற்பட்டது. தேறுவதும் நோயுறுவதுமாக மாறிமாறித் துன்புற்றான். இறுதியில் கப்பலில் ஏறிய போது மெலிந்து எலும்புக் கூடாகவே யிருந்தான். அதே கப்பலில் ஜோஸப்பும் வரவே இருவரும் தாயகச் செய்தி குறித்து உரையாடியவாறே பயணஞ் செய்தனர். இலண்டனை நெருங்க நெருங்க டாபினின் பரபரப்பு மிகுதியாயிற்று. இலண்டனில் இறங்கியவுடனேயே பிராம்ப்டனுக்குச் செல்லத்துடித்தான். ஒரு நாளேனும் ஓய்வெடுக்காமல் கிளம்ப வியலாதென்று ஜோஸப் சொல்லிவிடவே இருவரும் ஒரு விடுதியில் தங்கினர். மறுநாள் விடியலிலேயே எழுந்து காலைக்கடனை முடித்தபின் டாபின் ஜோஸப்பின் அறைக்குச் சென்றான். அவனோ அப்போதும் துயில்நீங்கி எழுந்திலன். தன்னை எழுப்பிய டாபின்மீது சீறி விழுந்தான். வெளியில் வண்டி காத்து நின்றது. எனவே வேறு வழியின்றி டாபின் மட்டும் பிராம்ப்டனுக்குப் புறப்பட்டான்.

•

எமீலியாவைக் காணுதல்

பிராம்ப்டனை அவனடைந்தபோது எமீலியாவும் அவள் தந்தையும் எங்கோ உலவச் சென்றிருந்தனர். அவள் தாய் காலமாகிச் சிறிதுகாலம் கழிந்திருந்தது. வீட்டுக்காரனின் பெண்ணை வழிகாட்ட அழைத்துக் கொண்டு டாபின் சென்றபோது எதிரே மறைத்திரு பின்னியும் அவர் மனைவியும் போந்தனர். எமீலியா பின்னியை மணந்திலள் என்றறிந்தபோது அவன் அடைந்த மகிழ்ச்சியைச் சொல்லவும் முடியுமோ?

அந்தப்பெண் எமீலியாவிடம் "அவர் வந்து விட்டார். அவர் வந்து விட்டார்" என்றாள்.

"எவர்?" என்றாள் எமீலியா. தன் மகனைப் பற்றிய நினைவுகளில் மூழ்கியிருந்தாள்.

"அங்கே பாருங்கள்."

எமீலியா டாபினின் மெலிந்த உருவத்தைக் கண்டவள் திடுக்கிட்டு நாணியெழுந்தாள். இருகையும் நீட்டியவாறே அவனை நோக்கி யோடினாள். அவள் தோற்றத்தில் மாறுதலில்லை. சற்றே வெளிறியிருந்தாள்.

"இன்னொருவரும் என்னோடு வந்திருக்கிறார்."

"தங்கள் மனைவியா?" என்ற எமீலியா சற்றே பின் வாங்கினாள்.

"இல்லை. உன்னிடம் இத்தகைய பொய்க் கதைகளைக் கூறியவர் யார்? உன் அண்ணன் ஜோஸப்தான் கப்பலில் என்னோடு வந்தான். அவன் உங்களையெல்லாம் இனி நன்கு பேணுவான்"

எமீலியா தன் தந்தையிடம் ஓடி அவ்வின்பச் செய்தியை அறிவித்தாள். அவரது வேண்டுகோட்படி டாபின் அவர்களோடு இல்லஞ்சென்று தேநீர் அருந்த இணங்கினான். ஜோஸப் தன் முதிய தந்தைக்கு உதவ

முடிவு செய்திருப்பதாயும் தந்தையைப் பற்றிக் கப்பலில் அடிக்கடி அவன் பேசியதாயும் டாபின் குறிப்பிட்டான். (உண்மையில் டாபின்தான் வாய்ப்புக்கிட்டிய போதெல்லாம் ஜோஸப்பிடம் அவன் தன் பெற்றோர்க்கும் தங்கைக்கும் செய்ய வேண்டிய கடமைகளை வலியுறுத்திச் சொன்னான்) எமீலியா ஜார்ஜியின் கட்டுரைகளையெல்லாம் டாபினுக்குக் காட்டி மகிழ்ந்தாள்.

**அவள் நெஞ்சம்**

அன்றிரவு எமீலியாவும் வீட்டுக்காரர் பெண்ணும் உரையாடியபோது பின்னி தம்பதிகளைக் கண்டு டாபின் மகிழ்ந்த செய்தியும் அடிபட்டது. அப்பெண் டாபினது காதலை வியந்து போற்றினாள். எமீலியாவோ தன் கணவன் ஓவியத்தைச் சுட்டிக் காட்டி வேறெவரையும் மணப்பது நினைவிலும் கூடாது என்றாள். மேஜரின் காதல் அவள் அறியாததன்று. அவள் அது பற்றி வெறுப்போ காதலோ கொண்டிலள். அவனை நண்பனாகவே மதித்தாள். அவனுக்கு மனைவியாகும் தகுதியினள் எவள்? அவள் அறிந்த எந்தப் பெண்ணும் அவனுக்குத் தக்கவளாய்த் தோன்றவில்லை.

**சிறிய 'பியானோ'**

சில நாட்களுக்குப் பின் ஜோஸப் பிரைட்டானுக்குப் போந்தான். தந்தையும் தங்கையும் வாழ்ந்த எளிய நிலை கண்டு இரங்கியோ என்னவோ அவர்களை இலண்டனிலுள்ள தன் இல்லத்துக்குக் கூட்டிச் செல்ல முடிவு செய்தான். புதிய வீட்டில் சாமான்களெல்லாம் வந்திறங்கியபோது, எமீலியா 'பியானோ'வைத் தன் அறையிலேயே வைக்குமாறு ஏவினாள். அருகில் நின்ற டாபின், உணர்ச்சி நிறைந்த குரலில்,



"இன்னும் அதனை அன்போடு வைத்திருக்கிறாயே! மகிழ்ச்சி. எங்கே அதனைப் புறக்கணித்து விடுவாயோ என்று அஞ்சினேன்" என்றான்.

"உலகிலேயே வேறெந்தப் பொருளும் இதனைவிட உயர்ந்ததன்று."

"அப்படியா!" (அதனை வாங்கிக் கொடுத்தவன் டாபின். அவள் அவ்வுண்மையை அறிந்தே பேசுவதாக அவன் நினைத்தான்.)

"ஆமாம். அவர் எனக்கு வாங்கிக் கொடுத்ததன்றோ?"

"தெரியாதே!" இப்போது டாபினது முகம் தொங்கி விட்டது.

அவனது முகமாற்றத்துக்கான காரணம் அந்தச் சமயத்தில் அவளுக்குத் தோன்றவில்லை. தனிமையில் ஆழ்ந்து சிந்தித்தபோதே அவள் மனத்தில் உண்மை தட்டுப்பட்டது. ஜார்ஜின் பரிசு என்றெண்ணி அவள் அதனைப் பெரிதும் மதித்தாள். அவன் விரும்பிய மெட்டுக்களை வாசித்துக் காட்டினாள்; அவன் நினைவாக அதனைப் பாதுகாத்தாள். இப்போது அது மதிப்பற்ற பொருளாகிவிட்டது. அடுத்த நாள் வாசிக்குமாறு தந்தை வேண்டியபோது அவள் சாக்குப் போக்குச் சொல்லி மறுத்து விட்டாள்.

ஆயினும் எமீலியா தன் வழக்கப்படி தன்னையே கடிந்துகொண்டாள். தன் நன்றி மறந்த செயலையெண்ணி வருந்தினாள். மறுமுறை டாபினைக் கண்டபோது, "உங்களிடம் ஒரு காரியத்துக்காக மன்னிப்பு வேண்டுகிறேன்" என்றாள். அவள் குரலே தடுமாறியது.

"என்ன காரியம்?"

"அந்தச் சிறிய 'பியானோ' தான். பல்லாண்டுகளுக்கு முன் - என் திருமணத்துக்கு முன்னரே - அதனை எனக்கு வழங்கினீர்கள். நான் இதுவரை நன்றி தெரிவித்திலேன். வேறெவரோ கொடுத்ததென்று நம்பியிருந்தேன். நன்றி, வில்லியம்"

"நண்பர்"

டாபின் அதன்மேலும் தன் உள்ளத்தைக் கட்டுப் படுத்த இயலாதவனாய்ப் பேசலானான்: "எமீலியா! நான்தான் அதனை வாங்கினேன். இன்றுபோலவே அன்றும் உன்னைக் காதலித்தேன். ஜார்ஜ் என்னை உன் வீட்டிற்கு அழைத்து வந்தபோது உன்னைக் கண்டேனே, அந்த நிமிடம் முதல் உன்னைக் காதலிக்கிறேன். உன்னையன்றி வேறொரு பெண்ணையும் நினைத்ததுமில்லேன். கழிந்த பன்னிரண்டாண்டுகளில் உன்னை யெண்ணாத நாள் எதுவும் இருந்ததில்லை. இந்தியாவுக்குச் செல்லுமுன்பே இதனை உன்னிடம் சொல்ல எனக்கு மனமெழவில்லை; உனக்கும் கேட்கப் பொறுமையில்லை. நான் இருந்தாலும் பிரிந்தாலும் அப்போது உனக்குக் கவலையில்லாமல் இருந்தது."

"நன்றி கெட்டவளாய் இருந்து விட்டேன்."

"இல்லை. புறக்கணித்தாய். எந்தப் பெண்ணும் மதிக்கக் கூடிய வகையில் என்னிடம் யாதோரியல்பும் இல்லை. இப்போதும் உன் எண்ணம் யாதென அறிவேன். 'பியானோ'வின் உண்மை வெளிப்பட்டதனால் உன்மனம் புண்பட்டுள்ளது. அனுப்பியவன் ஜார்ஜ் அல்லன் என்று உணர்ந்து கவல்கிறாய்....ஏதோ மறதியில் அவ்வாறு பேசிவிட்டேன். நான்தான் மன்னிப்புக் கேட்க வேண்டியவன். இத்தனை ஆண்டுகளாக



நான் செலுத்திய மாறுத அன்பு உன் மனத்தை இரங்கச் செய்யும் என்று எண்ணினேனே! என்ன அறியாமை!"

"இப்போது நீங்கள் தாம் இரக்கமற்றுப் பேசுகிறீர்கள். இவ்வுலகிலும் அவ்வுலகிலும் ஜார்ஜே என் கணவர். வேறெவரையும் எவ்வாறு காதலிப்பேன்? முதன் முறையாக நீங்கள் என்னைக் கண்ணுற்றபோதே நான் அவருடையவள். அவர்தாம் உங்கள் பெருந்தன்மையினையும் உயர் பண்புகளையும் எனக்குப் புலப்படுத்தினர்....எனக்கும் என் மகனுக்கும் நீங்களே எல்லாமாக விளங்கிவருகிறீர்கள். எங்கள் அன்புக்குரிய நண்பரே! நீங்கள் மட்டும் சில திங்கட்கு முன்னரே நாடு திரும்பியிருந்தால், அவனை என்னிடமிருந்து பிரித்திருக்க மாட்டார்கள். எத்தனை சிறந்த பையன்! இனியும், அவனுக்கும் எனக்கும் நண்பராகவே இருங்கள்." அவளது குரல் தடைப்பட்டது. அவனது தோளில் முகத்தைப் புதைத்துக்கொண்டு அழலானாள்.

அவளை ஒரு குழந்தையைப் போல் அணைத்தவாறு அவன் சொன்னான்: "அவ்வாறே ஆகுக. உன் அன்பு தவிர எதனையும் வேண்டுகின்றிலேன். அருகிலேயே உன்னை அடிக்கடி பார்த்திருக்க அனுமதித்தால் அதுவே போதும்."

"தாராளமாக."

ஆகவே, கையிற் காசில்லாத பள்ளிப்பிள்ளை மிட்டாய்க்காரனின் தட்டினைப் பார்த்து ஏங்குதலைப் போன்று, அவனும் அவளைப் பார்த்துப் பார்த்து ஏங்குதற்கு உரிமை பெற்றான்.

---

## 28. புதிய சூழ்நிலை

ஜோஸப் அரசவைப் பெருமக்களுள் ஒருவனாக ஏற்படுத்தப்பட்டான். விளைவாக எமீலியாவின் மதிப்பும் சமூகத்தில் உயர்ந்தது. புதிய சூழ்நிலை காரணமாக அவள் வெளியுலகத் தொடர்பு பெற்றாள். உயர் குடிப் பெண்கள் பலர் நட்புக்கொள்ளும் பொருட்டு அவளைத் தேடி வந்தனர். அவளும் அவ்வப்போது தன் 'தோழி'மாரைக் காணச் சென்றாள்.

சிறுவன் ஜார்ஜி டாபினிடம் எப்போதும் அன்பொடும் மதிப்பொடும் பழகினான். மேஜரின் சிறப்புக்களைத் தன் தாயிடம் எடுத்துரைப்பதில் மகிழ்ச்சி கண்டான்.

### இரு விளக்குகள் அணைதல்

மனைவியின் மறைவுக்குப்பின் செட்லி நோய்வாய்ப் பட்டிருந்தார். தம் மகளிடம் பேரன்பு காட்டினார். அவளும் அலுக்காமல் அவர்க்கு வேண்டும் பணிவிடைகளை யெல்லாம் செய்தாள். ஆயினும் மனைவி மறைந்த ஓராண்டினில், பிரிவுத்துன்பமும் முதுமையும் பிணியும் கூடவே, செட்லியும் அவளைத் தேடிப் போய்விட்டார்.

ஆஸ்போர்ண் தம் நண்பர்கள் வாயிலாக டாபினின் வீரச் செயல்களையும் அரிய பண்புகளையும் கேள்விப்பட்டபோது நம்பினாரல்லர். காலப்போக்கினில் அவனது பெயர் பெருங்குடி மக்களின் விருந்தினர் பட்டியலில் இடம் பெற்றது. அப்போது ஆஸ்போர்ண் தமக்குக் கிடைத்த செய்திகளில் உண்மையிருக்கலாமென நினைத்தார். ஜார்ஜியின் பாதுகாவலன் என்ற நிலையில், டாபின் அவரோடு சில செய்திகளைக்



கலந்து பேச வருவான். அத்தகையதொரு சமயத்தில் தான், வரவு செலவுகளில் கண்ணாயிருப்பவராய ஆஸ்போர்ண், மேஜரின் கணக்குகளைக் காணும் வாய்ப்புப் பெற்றார். அவனது உதவியால்தான் ஜார்ஜியும் அவன் தாயும் வாழ்ந்தார்கள் என்று உணர்ந்தபோது அவர்க்கு வருத்தமும் மகிழ்ச்சியும் ஒருங்கே தோன்றின. டாபினிடம் வற்புறுத்திக் கேட்டார். பொய்யுரைத்துப் பழக்கமில்லாத அந்த மேஜர் முதலில் திணறினாயினும் முடிவில் உண்மையை ஒப்புக் கொண்டான். "ஜார்ஜின் திருமணத்துக்கே நான்தான் காரணமாயிருந்தேன். ஆகவே அவர்களுக்கு உதவுவது என் கடமையென நினைத்தேன்" என்றான். உடனேயே ஆஸ்போர்ண் உளமுருகி அவனது கையைப் பற்றிக் குலுக்கினார்; அவனது நேர்மையை மெச்சினார்.

அவ்வப்போது டாபின் அவரிடம் ஜார்ஜின் பண்புகளை எடுத்துச் சொல்லி அவரது வெறுப்பினை மாற்ற முயன்றான். அவரது மனம் மாறி வந்தது என்பது தெளிவாய்த் தெரிந்தது. பலமுறை அவனிடம் எமீலியாவைப் பற்றி உசாவுவார். அவளைப் பற்றிப் பேசுவதென்றால்தான் அவன் சளைக்க மாட்டானே! கணவன் மறைந்த செய்தி கேட்டதும் அவள் பட்ட துன்பங்களையெல்லாம் விளக்கினான். அவளும் அவரும் பகைமை விடுத்துக் கூடிப்பேசும் நாள் நெருங்கி வந்தது. எமீலியா உள்ளூற அந்நாளையெண்ணி நடுங்கினாள்.

ஆயினும் அந்நாள் வராமலே போய்விட்டது. செட்லியின் மறைவு அக் கூட்டத்தைத் தள்ளிப்

போட்டது. ஆஸ்போர்ணும் முதுமைகாரணமாகத் தளர்ந்திருந்தார். பழங்கால நண்பரது மரணம் அவர்க்கு ஓர் அதிர்ச்சியாகவே அமைந்தது. ஒரு நாட் காலை அவர் வலிப்புக்காளாகி விழுந்தார்; பேசுந்திறனை இழந்தார். நான்கு நாட்களுக்குப் பின் அவருயிரும் பிரிந்தது. அந்நான்கு நாட்களில் ஓரிருமுறை அவர் ஏதோ சொல்ல வாயெடுத்தார். சொற்கள் வரவில்லை. ஒருகால் எமீலியாவைப் பார்க்க விரும்புவதாய்ச் சொன்னாரோ என்னவோ! அவரது சட்டைப்பையில் ஜார்ஜின் கடிதம்—போருக்குப் புறப்படுமுன் கடைசியாக அவனெழுதிய கடிதம்—இருந்தது. ஆஸ்போர்ணின் இறுதிமுறி 'மனமாற்ற'த்தைத் திட்டவட்டமாக அறிவித்தது. சொத்தினிற் பாதியை ஜார்ஜிக்கும், மறுபாதியைத் தம் பெண்மக்கள் இருவர்க்கும் எழுதி வைத்தார். "காலஞ்சென்ற என் அருமை மகன் ஜார்ஜின் மனைவி"க்குப் பேரன் சொத்திலிருந்து ஆண்டு தோறும் 500 பவுன் வழங்குதல் வேண்டுமென்றும், அவளே மீண்டும் தன் மகனுக்குப் பாதுகாவலாக விளங்குதல் வேண்டுமென்றும் குறித்தார். தம் "அருமை மகனின் நண்பர் மேஜர் வில்லியம் டாபினை" முறியை நடத்துவிப்போனாக ஏற்படுத்தினார். "என் மருமகளும் பேரனும் பேணுவாரற்று வருந்திய காலத்தில், அவர் (டாபின்) தம் அன்பாலும் பொருளாலும் உதவினார். அதற்காக அவருக்கு என் நன்றியைத் தெரிவிக்கிறேன். அவர் லெப்டினன்ட் கர்னல் பதவி பெறுதற்குத் தேவையான பணத்தை என் சொத்திலிருந்து பெற்றுக் கொள்ளுமாறு அவரை வேண்டுகிறேன். அவர் விரும்பினால் அத்தொகையை வேறெதற்கும் செலவிடலாம்" என்றும் எழுதினார்.



### நன்றியுணர்வு

மாமனாரது மனமாற்றத்தை அறிந்த எமீலியாவின் நெஞ்சம் நெகிழ்ந்தது. தன் திருமணத்துக்கே காரணமாயிருந்தவனும், வறுமைக் காலத்தில் உண்மையில் பேணியவனும், இப்போது தங்களைச் சேர்த்து வைத்தவனும் டாபின்தான் என்றறிந்தபோது அவள் முழந்தாளிட்டு இறைவனைத் தொழுதாள். அப்போதும் டாபின்மீது நன்றியுணர்வு தோன்றிற்றேயன்றி வேறுணர்வு அவளுள்ளத்தில் எழவில்லை. அப்படியே எழுமாயினும், கல்லறையினின்று ஜார்ஜின் உருவம் வெளிப்பட்டு, 'நீ என்னுடையவள். இன்றும் என்றும் எனக்கு மட்டுமே உரியவள்' எனச் சொல்வதுபோல் தோற்றமளித்தது. அவளுடைய இந்த உணர்வுகளையெல்லாம் டாபின் அறிவான். இத்தனை ஆண்டுகளாக அவளைக் கண்காணித்து வந்த பின்னும் அறியாது போவானோ?

### மதிப்பினில் உயர்தல்

ஆஸ்போர்ணது இறுதி முறியின் செய்திகள் ஊரிற் பரவிய பின், எமீலியாவின் மதிப்பு சமூகத்தில் மேலும் உயர்ந்தது. முன்பெல்லாம் அவளை 'நற்குணமுடைய செல்லாக்காசு' என்றும், அவளுக்கு உணவும் உறையுளும் கொடுத்துதவுவது தன் கடமை என்றுமே மதித்த ஜோஸப்கூட இப்போது 'எத்தனையோ தொல்லைகட்கும் துன்பங்கட்கும் உள்ளாகிவிட்ட தன் தங்கை, நல்ல நல்ல பொழுதுபோக்குகளில் கருத்துச் செலுத்த வேண்டும்' என்றான்; மருமகனிடத்தும் மதிப்பு வைத்தான். அவனுக்கென விளையாட்டுச் சாமான்களும் புத்தகங்களும் வாங்கிக் கொடுத்தான்.

**வெளிநாட்டுச் செலவு**

கோடைக்காலம் வந்தது. இக்காலத்தில் இலண்டன் வாழ்வு இனியதாகாது என்றும், அயல்நாடு செல்வதே தக்கது என்றும் ஜோஸப் வற்புறுத்தவே, எல்லாரும் ஜெர்மனிக்குச் செல்லத் தீர்மானித்தனர். அவர்கள் ஜெர்மனியில் ஒரு நகரத்தை யடைந்தனர். அந்நாளில் அந்நகரமுழுதும் விழாக்கோலம் புனைந்திருந்தது.

---

# 29. ஊர்சுற்றி

**இறுதி முயற்சிகள் தோற்றல்**

கர்ஸான் தெரு 200ஆம் எண் வீட்டினில் நிகழ்ந்த துன்பக் காட்சிக்குப் பின் ரெபக்கா சில நாட்கள் இலண்டனிலேயே தங்கினாள். அவள் திருநிறை க்ராலியைத் தூதனுப்பியது பயனற்றுப் போயிற்றென்று முன் ஓரிடத்திற் கண்டோம். ராடன் ஆளுநர் பதவியை ஏற்கக் கவென்ட்ரி தீவுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தான். ரெபக்கா திருநிறை க்ராலியைத் தனியே கண்டு பேசுங் கருத்தினளாய், அவர் பாராளுமன்றஞ் செல்லும் வழியில் பலமுறை காத்து நின்றாள். பயன் ஏற்பட்டிலது. வென்ஹாம் அவரிடம் ரெபக்காவின் பெற்றோர் யாவர், அவளது மணவாழ்வு எத்தகையது என்பன குறித்து மெய்யும் பொய்யுங் கூட்டியுரைத்த தன் விளைவாக அவரும் அவளைக் கைவிட்டு விட்டார்; வழக்கறிஞர்கள் தாம் ராடனிடம் அவள்சார்பிற் பேச வேண்டுமென்று உணர்த்தினர்.

ஒருபோதும் தன்னைக் காண வாராதிருந்தால் மட்டுமே ஆண்டிற்கு முந்நூறுபவுன் உதவுவது முடியுமென்றான் ராடன். அவளும் இணங்கினாள். ஆயினும் வென்ஹாம், ஸ்டேயின் பெருமகன், ராடன் முதலிய எல்லாருமே பாடுபட்டு அவளை இங்கிலாந்திற்கு வெளியே அனுப்பிவிட்டனர்.

**பிரான்ஸில்**

அவள் முதலில் பிரான்ஸ் நாட்டில் போலோன் எனும் ஊருக்குச் சென்றாள். அங்கிருந்து தன் மகனுக்குக் கடிதம் எழுதினாள். (அவன் அவளுக்கு விடை

யெழுதினானாயினும் முன்னிலும் மிகுதியாக அவனை வெறுத்தான். சில ஆண்டுகளில் ஜேன் பெருமாட்டியின் மகன் இறந்துவிடவே, ராடியை அவள் தத்தெடுத்தாள். அப்போதும் ரெபக்கா தன் மகனுக்கு ஒரு கடிதம் வரைந்தாள். அதனில் 'அன்பு' கனிந்து நின்றது. ராடி ஜேனிடம் 'நீங்கள் தாம் என் தாய்' என்று சொல்லிவிட்டான்.) போலோனில் ரெபக்கா தான் தங்கியிருந்த விடுதியில் அனைவரிடமும் பணிவாக நடந்தாள். ஆயினும் 'அவள் விரும்பத் தகாதவள். பெருமாட்டிகளோடு ஒருங்கிருக்கவும் தகுதியற்றவள்' என்று எவரோ 'கிளப்பிவிட'வே அவள் விடுதியினின்றும் வெளியேற்றப்பட்டாள். ஊருக்கு உழைக்கலானாள். ஏழை மீனவர்க்கு உதவுவது முதலிய பணிகளில் ஈடுபட்டாள். ஒருமுறை அவ்வூர்க்குப் போந்த வென்ஹாம் வைத்த 'வத்தி'யால் அவள் ஊரைவிட்டே வெளியேற வேண்டியவளானாள்.

பின் அவள் ஒவ்வோர் ஊராகச் சென்றாள். ஒவ்வோரிடத்திலும் அதே கதை தான். அரும்பாடுபட்டு அவள் தனக்கென ஒரு கூட்டத்தை-வாழ்வை-க் கட்டியமைப்பாள். திடீரென எவரோ ஒருவர் தோன்றி அத்தனையுஞ் சிதைத்து விடுவர்.

பாரிஸில் அவள் வாழ்வு நன்னிலையில் அமையலாயிற்று. ஓர் அம்மை எதிர்ப்புக்கிடையில் ரெபக்காவை ஆதரித்தாள். அடக்க ஒடுக்கமாக உப்புச் சப்பில்லாத வாழ்க்கை நடாத்துவதில் ரெபக்காவுக்கு அலுப்புத் தட்டியது. அவ்வம்மையின் மகன் படிப்பு முடிந்து வீடு திரும்பினான். அவனுள்ளத்தே ரெபக்கா ஏற்படுத்திய கிளர்ச்சியை உணர்ந்த அவ்வம்மை அவளை வெளியேற்றினாள். பின் அவள் தோழி ஒருத்தியுடன் வாழ முற்பட்டாள். அங்குந் தோல்வியே கண்டாள். பழையபடி விடுதி வாழ்வு தொடங்கிச் சூதாட்டங்களில் ஈடுபட்டாள். திடீரென ஒரு நாள் அவள் பாரிஸிலிருந்து கிளம்பிவிட்டாள். பழைய கடன்காரர் தொல்லை கொடுத்தனரோ என்னவோ!



**பெல்ஜியத்தில்**

பெல்ஜியத் தலைநகரான பிரஸ்ஸெல்ஸை அடைந்த ரெபக்கா அந்நகரோடு தொடர்புடைய தன் முன்னாள் வாழ்க்கையை நினைத்து முறுவலித்தாள். இங்கும் விடுதி வாழ்வுதான்; சூதாட்டந்தான். தொடக்கத்தில் சிறு சிறு தொகை வைத்து ஆடியவள், நாளடைவில் பெரும் பெருந்தொகைகளை இழக்கலானாள். அவள் அவ்வூரிலிருந்து ஓடியபோது, விடுதிச் சொந்தக்காரிக்கு மூன்று திங்கள் வாடகை கொடுபடாமல் நின்றது.

**இத்தாலியில்**

இத்தாலி நாட்டு ஃபிளாரென்ஸில் சிறிது காலந் தங்கியபின் அவள் ரோம் நகரைச் சேர்ந்து ஒரு விடுதியில் தங்கினாள். அங்குக் கயவர் இருவரின் தொடர்பு அவளுக்குக் கிட்டிற்று. ஒருநாள் அவ்விடுதியில் ஸ்டேயின் பெருமகனைக் கண்டாள். பெருமகன் அவளைக் கண்ணுற்ற அளவிலேயே தம்மோடு இருந்த பெண்ணை இழுத்துக்கொண்டு விரைவாக வெளியேறி விட்டார். அவரைக் கண்டு பேசலாமெனும் நம்பிக்கையொடு அவள் பல நாட்கள் தெருக்களிலும் பூங்காவிலும் அலைந்து திரிந்தாள். பெருமகனின் வேலைக்

காரன் ஒருவன் அவளை யணுகிக், கர்ஸான் தெரு நிகழ்ச்சியை அவர் ஒருபோதும் மறந்திலர் என்றும், அவள் உடனே அவ்வூரை விட்டுப் போய்விட வேண்டு மென்றும், இல்லையேல் அவளுயிருக்கே கேடு நேரு மென்றும் எச்சரித்ததோடு, அவர்க்குரிய ஒரு வண்டி யிலேயே அவளை வலுக் கட்டாயமாக ஏற்றி அனுப்பி னான். வெளியேறியது பற்றி அவளுக்கு வருத்தமில்லை. அவர் இன்னும் அந்நிகழ்ச்சியை மறந்திலர் என்பது மகிழ்ச்சியளித்தது.

**ஜெர்மனியில்**

அதன் பிறகு அவள் ஜெர்மனியில் ஊர் ஊராய்த் திரிந்தாள். பணம் கிடைத்தபோது சூதாடினாள். சூதாட்டத்தில் இழந்தபோது வாழ்வது கடினமாய்ப் பட்டது. எவ்வாறு வாழ்ந்தாளென்று எவரே அறிவர்? ரஷ்ய வேவுகாரியாகச் சில ஊர்களில் பணி யாற்றினள் என்றனர் சிலர். ஆயினும் அவ்வூர்களுள் ஒன்றினிலிருந்து அவளை ஊர்காவலர் உடனடியாக வெளியேற்றினர். ஆதலின் வேவு பார்த்த செய்தி உண்மையாயிராது.

---

# 30. பண்டைத் தோழி

**முகமூடிப்பெண்**

ஜோஸப், எமீலியா, டாபின், ஜார்ஜி ஆகிய நால் வரும் அந்த ஜெர்மன் நகரத்தில் ஒரு விடுதியில் தங்கி யிருந்தனர். உள்ளூர் இளவரசர்க்குத் திருமணம் நடைபெற்றதனையொட்டி, ஊரெல்லாம் கொண்டாட் டமும், கேளிக்கைகளும், விருந்துகளும் நிகழ்ந்தன. ஒருநாள் ஜோஸப்பும் டாபினும் எமீலியாவும் அரசவை நிகழ்ச்சிக்குச் சென்றனர். சிறுவன் ஜார்ஜி தன் மாம னின் வேலையாளொடு சூதாடுமிடஞ் செல்ல நேர்ந்தது. அங்குக் கறுப்பு முகமூடியணிந்த பெண்ணொருத்தி கருத்தாய்ச் சூதாடிக் கொண்டிருந்தாள். ஒவ்வொரு முறையும் பொருளைத் தோற்ற அவள் ஒருமுறை சுற்றுமுற்றும் பார்த்தாள். ஜார்ஜியைக் கண்டவுடன் அவனையே உறுத்து நோக்கினாள். அவனிடம், "இது வரை விளையாடியே இருக்கமாட்டாய். எனக்காக ஓர் உதவி செய்வாயா?" என்றாள். ஜார்ஜி வெட்கத் தோடு, "என்ன அது?" என்றான். உடனிருந்த வேலையாள் தன் ஆட்டத்திற் கண்ணாயிருந்தமை யால் ஜார்ஜியைக் கவனித்திலன். அவள் தன் பணப்பையை அவனிடம் கொடுத்து "எனக்காக ஒரு முறை நீ ஆடு" என வேண்டினாள். பணப்பையில் ஒரே ஒரு பொற்காசுதா னிருந்தது. புதிதாக ஆடு வோர்க்கு வெற்றி தவறாமல் கிட்டுமென்பர். ஜார்ஜி யின் ஆட்டத்தைப் பொறுத்தவரை அஃது உண்மை யாயிற்று. வெற்றியாற் கிட்டிய பணத்தை யெல்லாம் அவள் எடுத்துக் கொண்டு நன்றி தெரிவித்தாள்; "உன் பெயர் என்ன?" என்று கேட்டாள்.



"என்னை மறந்து விட்டீர்களா?"



"ஜார்ஜி ஆஸ்போர்ண்" என்றுரைத்தபடியே அவன் தன் சட்டைப் பைக்குள் கைவிட்டான். சொந்தப் பணத்தையெடுத்து விளையாட எண்ணிய அக்கணமே டாபினும் ஜோஸப்பும் அங்குத்தோன்றினர். டாபின் சூதாட்டத்தின் தீமைகளை விளக்கிச் சிறுவனைக் கடிந்தவாறே அழைத்துச் சென்றான். ஜோஸப் தன் வேலையாளனுடன் வருவதாகக் கூறித் தங்கினான். மற்றவர் சூதாடுதலைக் கண்டு மகிழ்வது அவன் பழக்கம். அந்நிலையில்தான் முகமூடிப்பெண் அவனைத் தன் அருகில் வந்து வெற்றி தேடிக்கொடுக்குமாறு அழைத்தாள். "வெற்றிக்காக நீங்கள் ஆடவில்லை. நானும் அப்படியே மறப்பதற்காக ஆடுகிறேன். இருந்தும் பழங்காலத்தை மறக்க முடியவில்லை. உங்கள் மருமகன் அவன் தந்தை சாயலாகவே இருக்கிறான். நீங்களும் மாறியிருக்கிறீர்கள். எல்லோரும் மாறுகிறார்கள். மறக்கிறார்கள். எவர்க்கும் இதயமே இல்லை" என்றாள்.

"அட கடவுளே யார் நீ?"

"தெரியவில்லையா, ஜோஸப்" என்றாள் அவள். குரலில் வருத்தம் தென்பட்டது. முகமூடியைக் கழற்றிவிட்டு அவனை உற்று நோக்கி, "என்னை மறந்து விட்டீர்களா?" என்றாள்.

"கடவுளே! ராடனின் மனைவியா?"

"ரெபக்கா" என்றவாறே அவள் அவன் கையைப் பற்றினாள். விளையாடிக் கொண்டே தொடர்ந்து சொன்னாள்: "'யானை விடுதி'யில் தங்கியிருக்கிறேன். மேடம் டி ராடன் என்று கேளுங்கள். எமீலியாவைப் பார்த்தேன். அழகாய்த் தோன்றினாள். மகிழ்ச்சி

யாய்க் காணப்படுகிறாள். நீங்களும் அப்படியே. என்னைத் தவிர எல்லோருமே மகிழ்கிறார்கள். நான்தான் துன்பத்திலாழ்கிறேன்'' ஆட்டத்தில் அவள் பணம் போய்விட்டது. ''என்னோடு வெளியே வாருங்கள். நாம் பழைய நண்பர்கள். இல்லையா, ஜோஸப்?''

இதற்குள் வேலையாளும் தன் பணமெல்லாம் இழந்தவனாய் ஜோஸப்புடன் கிளம்பினான்.

# 31. கூடலும் ஊடலும்

**அரிய வரவேற்பு**

ஜோஸப் 'யானைவிடுதி'யில் 92ஆம் எண் அறையை அடைந்தபோது எதிரறையாகிய 90 திறந்து கிடந்தது. அவ்வறைக்குள் கல்லூரி மாணவனொருவன் நீண்ட சுருட்டினைப் புகைத்தவாறு கட்டிலிற் கிடந்தான். மற்றொரு மாணவன் முழந்தாளிட்டபடி 92இன் சாவித்துளை வழியே உள்ளிருந்தவளிடம் வேண்டுகோள் விடுத்தான். 92க்குள்ளிருந்து ஜோஸப்புக்குப் பழக்கமான குரல், ''போய்விடு. ஓர் ஆள் இப்போது வருவார். என் தாத்தா வரப் போகிறார். அவர் கண்ணிற் பட்டு விடாதே'' என்றது. குரலைக் கேட்டவுடனேயே ஜோஸப்பின் உடல் புல்லரித்தது.

''இங்கிலாந்து நாட்டின் எழிலணங்கே! எங்கள் மீது இரக்கம் காட்டு. ஒரு நாளேனும் எங்களுடன் விருந்துண்ண வா. இல்லையேல் உயிரை விட்டுவிடுவோம்'' என்றான் முழந்தாளிட்டு நின்றவன்.

''ஆமாம். உயிரை விடுவோம்'' என்றான் படுத்துக் கிடந்த திருவாளன்.

ஜோஸப் பேசமுற்பட்டவுடனே 'முழந்தாள்' 90க்குள் ஓடிக் கதவையடைத்தான். உள்ளே மாணவர் இருவரும்கூடி ஏனோ சிரித்தனர். இந்த வரவேற்பினால் ஜோஸப் மயங்கி நின்றான்.

**உருக்கமான வரலாறு**

நல்லவேளையாக 92இன் கதவைச் சற்றே திறந்து முகத்தை நீட்டினாள் ரெபக்கா. ''நீங்களா! உங்களைத்

தான் இத்தனை நேரமும் எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன். இதோ, ஒரு நிமிடம்...'' என்றபின் கதவை அடைத்தாள். அந்த ஒரு நிமிடத்துக்குள் ஒரு முகப் பூச்சுக் குப்பி, ஒரு 'பிராந்தி'ப் புட்டி, ஓர் இறைச்சித் தட்டு ஆகிய மூன்றும் கட்டிலுக்கடியிற் பதுங்கின. அவளது தலைமயிர் சீப்புக்கஞ்சிப் பணிந்தது. பிறகே ஜோஸப் அறையினுட் புகுந்தான். "நெடுநாட்களுக்குப்பின் பழைய நண்பர் ஒருவரைப் பார்ப்பது எவ்வளவு ஆறுதலாயுள்ளது! உங்களை எந்த இடத்திலும் அடையாளம் கண்டு கொள்வேன்...ஒரு பெண் சிலவற்றை எந்நாளும் மறக்க மாட்டாள்....நீங்கள்தாம் நான் முதன் முதல்...கண்ட ஆடவர்'' என்று தொடங்கினாள்.

"நானா ! .... அப்படியா ! ... உண்மையாகவா? ''

அதன் பிறகு அவள் தன் துன்ப வரலாற்றினை அவனது உள்ளம் உருகும் வகையில் ஓதினாள். (துன்பந்தாளாமல் கட்டிலுக் கடியிலிருந்த மதுப் புட்டியும் இறைச்சித்தட்டுங்கூட ஒன்றோடொன்று முட்டிக் கொண்டன.) ஜோஸப் உணர்ந்தவை இவை தாம்:- "ஜோஸப்பை முதன்முறையாய்க் கண்டது முதல் அவள் அவனை நினைக்க ஒருபோதும் மறந்திலள். ஜார்ஜ் ஒழுக்கமற்ற முறையில் அவளிடம் அன்பு செலுத்தினான். அவள் துளியும் விரும்பியவ ளல்லள். ஆயினும் எமீலியா பொறாமை காரணமாக அவளைப் பகைத்தாள். மனைவி யென்பதற்கேற்ப அவள் ராடனுக்கு எல்லாப்பணிவிடையும் செய்தாள். அவன்தான் தீவினைப்பயனாக அவளை வெறுத்து ஒதுக்கினான். அவள் ஒரு குற்றமுமறியாள். மகனை



உயிரினும் மேலாகப் போற்றினாள்; அவனையும் அவளிடமிருந்து வலியப் பறித்துக் கொண்டார்கள்.''

அங்கிருந்து வெளியேறிய போது, ஜோஸப் பண்பும் அழகுமுடைய பெண் அவளைத் தவிர வேறில்லை என்றும் அவளுக்கு ஏற்பட்ட தீங்குகள் முறையற்றவை யென்றும் அவற்றைப் போக்கும் வகையில் செயலாற்றுவது பற்றி மற்றவர்களிடம் கலந்து பேச வேண்டுமென்றும் கருதினான்.

**தங்கையை மாற்றிய அண்ணன்**

ஜோஸப் கூறியன கேட்ட டாபின் இரக்கங் கொண்டிலன். மாறாக "அந்தக் குட்டிப்பேய் நுழையுமிடமெல்லாம் தீமையே. நல்ல பெண்ணாயின், குடும்பத்திலிருந்து விலகித் தனியே ஏன் வெளிநாட்டுக்கு வருகிறாள்? கணவன் அவளைக் கைவிடுவானேன்? ஏதோ ஊர்ப்பேச்சுக்கூட முன்பு என் காதில் விழுந்தது'' என்றான்.

'அவள் குற்றமற்றவள்; வீணே கொடுமைக் குள்ளானாள்' என்று வலியுறுத்தி ஜோஸப் கூறியனவெல்லாம் செல்லுபடியாகவில்லை. இருவரும் எமீலியாவின் தீர்ப்பினைக் கேட்பதென்று முடிவு செய்தனர்.

"உன் பழைய தோழி ஒருத்தியைக் கண்டேன். நீ போய் அவளைப் பார்க்க வேண்டும்'' என்று தொடங்கினான் ஜோஸப்.

"நான் அறவே வெறுக்கும் ஒருத்தி. நீயும் அவளை வெறுக்கின்றாயென்றே நம்புகிறேன்'' எனத் தொடர்ந்தான் டாபின்.

உடனேயே, "ரெபக்காதானே? அவளைப் பார்க்கவே மாட்டேன்" என்றாள் எமீலியா.

ஜோஸப் வாதாடலானான்: "அவள் ஏழை; ஆதரவற்றவள். கணவனோ பொல்லாதவன்; கை விட்டுவிட்டான்"

"ஐயோ!"

"உலகத்தில் அவளுக்குத் துணையே இல்லை. அவளது வரலாறு என்னை உருகச் செய்தது. கொடுமைகளையெல்லாம் அவளைப்போல் அமைதியாய்ப் பொறுத்தவர் வேறெவருமிலர். அவளது குடும்பமே அவளைக் கொடுமைப் படுத்தியது."

"அளியள்"

"தற்கொலை செய்து கொள்ளப் போவதாகச் சொல்கிறாள். கையில் நஞ்சு எப்போதும் வைத்திருக்கிறாள். மட்டமான ஒரு விடுதியின் மாடியில் குறுகலான அறையில் குடியிருக்கிறாள். போய்ப்பார்த்தேன்."

அது கேட்டும் எமீலியாவின் மனம் இளகவில்லை. அவள் புன்னகை பூத்தாள். ஒருகால் தன் அண்ணன் மூச்சுத்திணறப் படிக்கட்டினில் ஏறிய காட்சியைக் கற்பனை செய்தாளோ என்னவோ!

"கவலையால் உருக்குலைந்து போனாள். அவளுக்கு ஜார்ஜி வயதில் ஒரு பையன்."

"ஆமாம். நினைவிருக்கிறது. அப்புறம்?"

"மிகவும் அழகான பையன். பொல்லாத குடும்பத்தார் அவளிடமிருந்து பையனை அலற அலறப் பிரித்து விட்டார்கள். மறுபடி அவள் அவனைப் பார்க்கவும் இடங் கொடுத்தனரல்லர்."



எமீலியா துள்ளியெழுந்து "இப்போதே போய் அவளைப் பார்ப்போம்" என்றிரைந்தாள். டாபினையும் உடன் வருமாறு பணித்துக் கிளம்பினாள்.

**தோழியர் கூடல்**

மீண்டும் மாடிப்படியேற விரும்பாமலோ என்னவோ, ஜோஸப் கீழேயே நின்று கொண்டு அறை யெண்ணைத் தெரிவித்தான். எமீலியாவும் டாபினும் மாடிக்குச் சென்றனர்.

ரெபக்காவைக் கண்டதும் எமீலியா ஓடோடிச் சென்று தழுவிக் கண்ணீர் பெருக்கினாள். "பையனை அலற அலறப் பிடுங்கிக் கொண்டார்களாமே?" என்றாள். ரெபக்கா தன் துன்பக்கதையை மீண்டும் உருக்கமாய் ஒப்புவித்தாள்:- அவளுக்கும் ராடனுக்கும் நிகழ்ந்த திருமணத்தை அவன் குடும்பத்தினர் விரும்பினரல்லர். ராடனின் அண்ணிதான் அவனது மனத்தைக் கலைத்தாள். அவன் சேராதவர்களோடெல்லாம் சேர்ந்து அவளை வெறுக்கலானான். அவளோ வறுமை, சிறுமை, புறக்கணிப்பு எல்லாவற்றையும் தன் மகனை நினைத்துப் பொறுத்துக் கொண்டாள். கடைசியில் அவளை சீற்றங்கொண்டு பிரிந்து போகும் வகையில் ராடன் ஒரு மானங்கெட்ட செயலைச் செய்யத் தூண்டினான். ஒழுக்கங் கெட்ட ஸ்டேயின் பெருமகனது உதவியால் உயர்பதவி பெறுவதற்காக ராடன் தன் மனைவியின் மானத்தையும் விற்கத் துணிந்தான். அதனாலேயே அவள் அவனை விட்டு விலகினாள்.

எமீலியா கருத்தாய்ச் செவிமடுத்தாள். ராடன் மீதும் ஸ்டேயின் மீதும் சீற்றம் பிறந்தது.

### நண்பனது கவலை

அறைக்குவெளியிற் காத்து நின்ற டாபின், நெடு நேரமாகியும் எமீலியா வராமற் போகவே கீழிறங்கினான். கீழே நம் மாணவ நண்பர்கள் மதுவருந்திய படி ரெபக்கா நடத்தவிருந்த நாடகத்தைப் பற்றியும், அவளது தேர்ச்சியைப் பற்றியும், அவளை விருந்திற் கழைப்பது பற்றியும் உரையாடிக் கொண்டிருந்தனர். உடனேயே டாபின், "இந்தக் குட்டிப்பேய் இன்னும் சூழ்ச்சிவலைதான் விரிக்கிறாளா!" என்றெண்ணினான். அவனுள்ளத்தே பழைய நிகழ்ச்சிகள் விரிந்தன. அடிநாளில் ஜோஸப்புக்கு அவள் வலைவீசியது, ஜார்ஜும் தானும் பலமுறை அதுபற்றி நகைத்தது, ஜார்ஜின் திருமணத்துக்குப் பின் நிகழ்ந்தது முதலியவற்றை நினைத்தான். வாட்டர்லூப்போர் தொடங்கிய நாள் காலையில், களத்தில் வைத்து ஜார்ஜ் டாபினிடம் சொன்னான்: "ஒரு பெண்ணோடு முட்டாள்தனமாக வம்பினில் மாட்டிக் கொண்டேன். நல்லவேளையாகப் படையொடு புறப்பட்டோம். எனக்கு ஏதேனும் நேர்ந்தாலும், எமீலியாவின் காதில் அச்செய்தி விழாதென்று நம்புகிறேன். ஏன்தான் அவ்வம்பினிற் சிக்கினேனோ!" டாபின் அதற்குமேல் அவனிடம் துளைத்துக் கேட்டிலன். பின்பும் அதுபற்றி ஆராய்ந்திலன். "இப்போது அவள் மீண்டும் குழப்பம் விளைவிக்கிறாளே!" எனக் கருதலானான் டாபின்.

எமீலியா கீழிறங்கியதும், தன் அண்ணனை உடனே காண வேண்டுமென்றாள். டாபினுக்குச் சிரிப்பு வந்தது. என்றுமில்லாத திருநாளாக இன்று அண்ணனை உடனே காணவேண்டுமாமே?



### ஊடலின் தொடக்கம்

ஜோஸப் இதற்குள் வீடு திரும்பி விட்டிருந்தான். ஆயினும் எமீலியா வரும் வழியை ஆவலோடு நோக்கி நின்றான். அவள் வந்தவுடன், "என்ன ஆயிற்று?" என ஆர்வத்தோடு வினவினான்.

"அளியள்! எவ்வளவு துன்பப்பட்டுவிட்டாள்!"

"ஆமாம்."

"வேலைக்காரியின் அறையை அவளுக்குக் கொடுப்போம். வேலைக்காரி மாடியில் தங்கிக் கொள்ளலாம்"

டாபின் துள்ளியெழுந்து, "அந்தப் பெண்ணை இந்த வீட்டிற்குள் வைக்கப் போகிறேன் என்கிறாயா?" என்றான்.

"பிறகு?... கணவன் அவளைவிட்டு ஓடி விட்டான். மகனையும் பறித்து விட்டார்கள்... அளியள்! நாலு பிள்ளைகளுக்குப் பாட்டுச் சொல்லிக்கொடுத்து 'வயிற்றைக் கழுவு'கிறாள். அவளை இவ்வீட்டில்தான் வைத்துக் கொள்ள வேண்டும்."

"விரும்பினால் நீயும் பாட்டுக் கற்றுக்கொள். வீட்டிற்குள் மட்டும் விடாதே. மன்றாடிக் கேட்கிறேன்."

"அன்பும் பண்பும் உடைய நீங்களா இப்படிப் பேசுகிறீர்கள்?... துன்பத்தில் உழலும் காலத்தில் அல்லாமல் பின் எப்போது அவளுக்கு உதவுவது? பண்டுமுதல் எனக்குள்ள ஒரே தோழி..."

"அவளை நீ தோழியென மதிக்காத காலமும் இருந்தது, எமீலியா." இப்போது அவனுள்ளத்தே சீற்றம் மிக்கிருந்தது

அவன் இடித்துக் காட்டியதனைப் பொறுக்க இயலாதவளாய், அவள் கனல் கக்கும் விழியுடன், "வெட்கமாயில்லையா இதனைச் சொல்ல?" என்று கூச்சல் போட்டுவிட்டுத் தன் அறைக்குள் புகுந்து கதவைத் தாளிட்டாள். ஜார்ஜின் உருவப்படத்தை நோக்கிப் புலம்பினாள்; "சே! என்ன கொடுமை! நானே அதனை மன்னித்துவிட்டேன். அவர் எப்படி அதனைக் குத்திக் காட்டலாம்? அவர் தாமே தம் வாயால் என் ஐயம் ஆதாரமற்றது என்று எனக்கு விளக்கினார்? நீங்கள் குற்றமற்றவர் என்று சொன்னாரே?.... ஆம். நீங்கள் தூயவர் தாம்."

இளமைப் பருவத்துத் தலைப்பெருங் காதல் நினைவுகள் அவள் உள்ளத்தில் பொங்கின. ஆண்டுகள் பல கழிந்தும் ஆறாத மனப்புண்ணிலிருந்து செங்குருதி பீறிட்டது. தன் எதிரிலேயே கணவனைப் பழித்தலை அவள் தாங்கிக் கொள்வாளோ? ஒருகாலும் மாட்டாள்.

**ஊடல் வளர்கிறது**

டாபின் ஜோஸப்பிடம் ரெபக்காவைப் பற்றி எச்சரித்தான். அவளது உண்மை வரலாற்றை ஆராய்ந்து பார்க்குமாறு வேண்டினான். அவன் வற்புறுத்தியதே ஜோஸப்பின் உள்ளத்தில் மாறான பயனைத் தோற்றுவித்திருக்கவும் கூடும். சில காலமாகவே ஜோஸப், தன்னை டாபின் ஆட்சி செலுத்துவதாக நினைத்து வந்தான். இப்போது அவன் தன் உரிமையை நிலைநாட்டத் துணிந்தான். சற்றைக்கெல்லாம் ரெபக்கா தன் உடைமைகளாய மிகச்சில பொருள்களோடு அவ்வீட்டினிற் புகுந்தாள். எமிலியா அவளைத் தழுவி வர



வேற்றாள். டாபினை எமிலியா பார்த்த பார்வையில் சினம் கொப்புளித்தது. அவன் தன் தோல்விக்கு வருந்தியிலன் எனினும், அவளது போக்குக் கண்டு வருந்தி வெளியே கிளம்பினான்.

கால்சென்ற வழியே ஊருக்குள் அலைந்து திரிந்த டாபின், எதிரே தூதரக அலுவலர் ஒருவரைக் கண்டான். அவர் இலண்டனில் நெடுங்காலங் குடியிருந்தவர். அவரிடம் "ரெபக்கா என்ற பெயருடைய பெண்ணைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அவளும் இலண்டனில் பெரும்பெயர் பெற்றவளாமே?" என வினவினான். அவ்வளவுதான். அவ்வலுவலர் ரெபக்காவின் முழுவரலாற்றினையும் ஒப்புவித்தார். பல செய்திகள் டாபினுக்கு அருவருப்பினைக் கொடுத்தன. அன்றிரவு டாபினும் எமிலியாவும் அரண்மனை விருந்திற்குச் செல்வதென ஏற்கெனவே முடிவாகியிருந்தது. தான் கேள்விப்பட்டவற்றை யெல்லாம் விருந்தின்போது அவளிடம் சொல்லலாம் என்றெண்ணியவனாய் டாபின் விரைவாய்த் தன் வீடு திரும்பி உடுத்துக்கொண்டு அரண்மனை சென்றான். அவள் வரவேயில்லை. இரவு அவன் அவளில்லஞ் சென்றபோது எல்லோரும் உறங்கிவிட்டனர். மறுநாட் காலையிலும் 'உடல்நிலை சரியில்லை. காணவியலாது' என்று, அவனது சீட்டினை ஒதுக்கிவிட்டாள்.

**போராட்டம்**

பிற்பகலில்தான் டாபின் அவளைக் காணப் பெற்றான். அவள் வரவேற்ற முறையோ முற்றிலும் மாறுபட்டதாயிருந்தது. அவளோடிருந்த ரெபக்கா முறுவலுடன் அவனது கையைப் பற்றிக் குலுக்கத் தன்

கையை நீட்டினாள். டாபின் தன்கையைப் பின்னுக்கு இழுத்தபடி, "மன்னியுங்கள். நான் உங்களுக்கு நண்பனாய்த்திகழ இங்கே வந்திலேன்" என்றான்.

"ரெபக்காவுக்கு எதிராக என்னதான் சொல்வாரோ?" என்றாள் எமீலியா.

"என் வீட்டினில் இத்தகைய செயலுக்கு இடங்கொடுக்க மாட்டேன்" என்றான் ஜோஸப்.

"எனக்கெதிராக மேஜர் சொல்லப் போகின்றவற்றைக் கேட்டுத்தான் பாருங்களேன்" என்றாள் ரெபக்கா.

"மாட்டேன்" என்று இரைந்தவாறே ஜோஸப் எழுந்து சென்றான்.

"இரண்டு பெண்கள்தாம் இருக்கிறோம். இப்போது நீங்கள் பேசலாம்" என்றாள் எமீலியா.

"நீ இப்படிப் பேசுவது உன் தகுதிக்கு ஏற்றதன்று. பெண்களைக் கொடுமைப் படுத்துவது என் பழக்கமில்லை. கடமையைச் செய்யும் பொருட்டே வந்தேன்."

"அருள் கூர்ந்து சற்று விரைவாய்ச் சொல்கிறீர்களா, மேஜர் டாபின்?" எமீலியா மிடுக்காய்ப் பேசினாள். டாபினது முகம் மாறிற்று. அவன் சொன்னான்: "ரெபக்கா! உன் முன்னிலையிலேயே சொல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டது. என் நண்பர்கள் குடும்பத்தில் ஒருத்தியாக நீ ஆகக் கூடாது என்கிறேன். கணவனால் விலக்கப்பட்டவள்—சொந்தப்பெயரிலன்றி வெவ்வேறு பெயர்களோடு வெளிநாடுகளில் பயணஞ் செய்பவள்—சூதாடுமிடங்களி



லெல்லாம் காட்சியளிப்பவள், ஜார்ஜின் மனைவிக்கோ மகனுக்கோ தக்க துணையாகமாட்டாள். உன்னையும் உன் நடத்தையையும் நன்கறிந்தவர்கள் பலர் இங்கே இருக்கிறார்கள். அது பற்றியெல்லாம் எமீலியாவின் எதிரில் பேசவும் விரும்புகின்றிலேன்."

ரெபக்கா எழுந்தாள்: "கடைசியில் யாதென்று சுட்டிக் காட்டாமலேயே குற்றம் சுமத்துகிறீர்கள். உங்கள் குற்றச்சாட்டு என்ன? கணவனுக்கு இரண்டகஞ் செய்தேன் என்பதா? அவ்வாறாயின் கவலையில்லை. யாராவது சான்றுகாட்டி நிறுவ முடியுமா? கேட்கிறேன். என் கொடிய பகைவரும்கூட அஃது உண்மையன்று என்றறிவர். பின், எது குற்றம்? வறுமை, சிறுமை, கவலை—இவையா? அவ்வாறாயின் நான் குற்றவாளிதான். ஒவ்வொரு நாளும் அவற்றில்தான் உழல்கின்றேன்.....என்னைவிடு, எமீலியா, நான் போகிறேன். நான் இங்கிருப்பது இவருடைய திட்டங்களுக்கு முட்டுக்கட்டையாயுள்ளது."

"ஆமாம். உண்மைதான். இவ்வீட்டினில் எனக்கு ஏதேனும் அதிகாரம் உண்டென்றால்...."

எமீலியா குறுக்கிட்டாள்: "அதிகாரமா! ஏது அதிகாரம்? ரெபக்கா! நீ என்னோடு இரு. கொடுமைக்குள்ளாயது பற்றி உன்னை விரட்ட மாட்டேன்; இவரைப் போல வேதனைப் படுத்தவும் மாட்டேன். வா, போவோம்."

இருவரும் எழுந்தனர். டாபின் அறைக்கதவைத் திறந்து விட்டான். அவர்கள் வெளியேறிக் கொண்டிருந்தபோது, எமீலியாவின் கையைப் பிடித்து, "ஒரு கணம் நின்று என்னோடு பேசுவாயா?" என்றான்.

ரெபக்கா, 'தியாகக்' குரலில், "என்னைப் பற்றி உன்னோடு தனியாகப் பேசவிரும்புகிறார்" என்றாள்.

"அவளைப்பற்றிப் பேசுதற்கில்லை என உறுதி யளிக்கிறேன். இங்கே வா, எமீலியா" என்றான் டாபின். எமீலியா மீண்டும் அறைக்குட் போந்தாள். டாபின் ரெபக்காவுக்கு வணக்கஞ் செலுத்தியபின் அறைக் கதவை யடைத்தான்.

எமீலியாவின் உதடும் முகமும் வெளிறின.

"சற்றுமுன் பேசியபோது குழம்பிப்போய், அதிகாரம் என்ற சொல்லைத் தவறாகப் பயன்படுத்தி விட்டேன்" என்றான் அவன்.

"ஆமாம்." அவளுடைய பற்கள் அடித்துக் கொண்டன.

"என் கருத்தைச் சொல்வதற்கு உரிமை உண்டு"

"நான் உங்களிடம் பட்ட கடனைப் பெருந்தன்மை யோடு நினைவு படுத்துகிறீர்களே !"

"உரிமையென்றது ஜார்ஜின் தந்தை எனக் களித்த உரிமையை."

"ஆமாம்... அவரை நேற்று இழிவு படுத்தினீர்கள். நீங்களே உணர்வீர்கள். ஒரு போதும் உங்களை மன்னிக்க மாட்டேன்." ஒவ்வொரு தொடரும் சீற்றம், உணர்ச்சி ஆகிய அலைகளாகப் பிறந்தது.

"உண்மையாகவா சொல்கிறாய்? (டாபின் வருத்தத்தோடு பேசலானான்) வாழ்நாளெல்லாம் செலுத்திய அன்பின் பயனைக் கணப்பதற்றத்தில் கூறிய வார்த்தைகள் அழிக்குமென்கிறாயா? நான் நடந்து கொண்ட முறையினால் ஜார்ஜின் பெயரை இழிவுபடுத்தவில்லை. தனித்திருக்கும் போது சிந்தித்துப்பார். உன் குற்றச்சாட்டு முறையற்றதென்று உன் மனச்சான்றே கூறும். இப்போதுகூடக் கூறுகிறது. (எமீலியா தலை கவிழ்ந்தாள்) உன்னை வருத்துவது நேற்றைப் பேச்சன்று. அது வெறும் சாக்குப் போக்குத்தான். பதினைந்து ஆண்டுகளாக உன்னோடு பழகியும் அன்பு செலுத்தியும் உன் மனத்தை அறியேனா! உன் மனம் ஒரு நினைவினை நன்றியோடு பற்றி நிற்கும். ஒரு கற்பனையைச் சுற்றித் தழைக்கும். ஆயினும் என் பற்றிற்கு இணையான பற்றினை யுணராது. வேறெந்தப் பெண்ணிடமிருந்தும் எனக்குத் தாராளமாய்க் கிடைத்திருக்கக் கூடிய அன்பிற்கு உன் மனத்தில் இடமில்லை. உன்மீது நான்கொண்ட உயர்காதலுக்கு நீ தகுதியுடையாயல்லை. பயனற்ற பொருளுக்கு உயிரையே பணயம் வைத்தேன்... இனியும் இப்போராட்டம் வேண்டா. உன்மீது குறைகூறுவதிலேன். நீ நல்லியல்புடையாய். உன்னாலியன்ற மட்டும் முயன்றாய். ஆயினும் உன்மீது நான் கொண்ட பாசத்தை உன்னால் எட்டிப்பிடிக்க முடியவில்லை. வணக்கம், எமீலியா! உன் மனப் போராட்டத்தைக் கவனித்துக் கொண்டுதான் வந்தேன். அதனை நிறுத்திக்கொள். இருவருமே அலுத்து விட்டோம்."



எந்தச் சங்கிலியால் அவனைப் பிணைத்தாளோ, அதனை அவன் திடுமென அறுத்தெறிந்துவிட்டான். அவள் திடுக்கிட்டு நின்றாள். இதுவரை அவள் அவனை மணக்கவும் விரும்பவில்லை; விட்டுவிடவும் விரும்பவில்லை. தான் அவனுக்கு ஒன்றும் வழங்காமலே, அவன் தனக்கு எல்லாவற்றையும் வழங்க வேண்டுமென்று விரும்பினாள்.

"அப்படியானால்....நீங்கள் போகிறீர்களா?"

அவன் சிரித்தான். சிரிப்பில் வருத்தமே நிறைந்திருந்தது. "முன்பொரு முறை போனேன். பன்னிரண்டாண்டுகள் கழித்துத் திரும்பினேன். அப்போது நாம் இளையராயிருந்தோம் எமீலியா. இந்த நாடகத்தில் என் வாழ்க்கையின் பெரும் பகுதியைக் கழித்து விட்டேன். போய் வருகிறேன்."

**ரெபக்காவின் நெஞ்சம்**

அவர்கள் பேசிக்கொண்டிருந்த போதெல்லாம் அறைக்கதவு மிகச் சிறிய அளவு திறந்தேயிருந்தது. டாபின் அடைத்த மறுகணமே ரெபக்கா கதவை மெல்லச் சிறிது திறந்து அவனும் எமீலியாவும் பேசிய ஒவ்வொரு சொல்லையும் உற்றுக்கேட்டு நின்றாள். "என்ன பெருந்தன்மையான மனம் இவருக்கு! இந்தப் பெண் அம்மனத்தொடு சிறுபிள்ளைத் தனமாய் விளையாடுகிறாளே! எனக்கு மட்டும் இத்தகைய ஒரு கணவன்—அறிவும் இதயமும் ஒருங்கே கொண்ட ஒருவர்—வாய்த்திருந்தால்...நான் அவரை இகழ மாட்டேன்" என நினைத்தாள் அவள். டாபின் தனக்கெதிராய்ப் பேசியதுபற்றி அவளுள்ளத்தில் சிறிதளவும் வஞ்சனையில்லை. அவனது நேர்மையை மெச்சவே செய்தாள். தன்னறைக்குள் சென்று, அவனுக்கு ஒரு துண்டுக்கடித மெழுதினாள்: 'சில நாட்கள் பொறுங்கள். புறப்படுவது பற்றி நினையாதீர்கள் எ—வைச் சரிக்கட்டுகிறேன்.'

**ஜார்ஜியும் டாபினும்**

டாபின் மீண்டும் வெளியேறிவிட்டான். அன்று உண்ணும்போது டாபின் இல்லாததை ஜார்ஜி கவனித்தான். அப்போது எவரும் எதுவும் பேசிக் கொள்ளவில்லை. உண்டபின் சாளரம் வழியே வெளிப்புறத்தை நோக்கி நின்ற ஜார்ஜி எதிர் வீட்டினில் (டாபின் இல்லத்தில்) ஏதோ ஆள்நடமாட்டத்தை யறிந்தான். சற்றைக்கெல்லாம் டாபினது வண்டி வீட்டுமுன் நிற்கக் கண்டவனாய், "டாபினது வண்டியைப் பூட்டுகிறார்களே? அவர் எங்கேனும் போகப் போகிறாரா?" என வினவினான்.



"ஆமாம்; பயணஞ்செல்கிறார்" என்றாள் எமீலியா.

"எப்போது திரும்புவார்?"

"அவர்....வரமாட்டார்."

"வரமாட்டாரா!" என்றிரைந்த ஜார்ஜி துள்ளியோடினான். "நில், போகாதே" என்றான் ஜோஸப். "நில் ஜார்ஜி" என்றாள் எமீலியா. கவலை நிறைந்த முகத்தோடு ஜார்ஜி நின்றான். வண்டியில் சாமான்கள் ஏற்றப்பட்டன. டாபின் வெளியே வந்து அவனோடு பழகியவர்களெல்லோரிடமும் விடைபெறலானான்.

"போகத்தான் செய்வேன்" என்றலறியவாறே ஜார்ஜி ஓடினான். ரெபக்கா மகிழ்ந்தவளாய் "அவரிடம் இதைக்கொடு" என்று ஒரு தாளை அவன் கையில் திணித்தாள்.

டாபின் வண்டியிலேறினான். ஜார்ஜி ஓடிச் சென்று வண்டியிலேறி அவன் கழுத்தைத் தன் கைகளாற் சுற்றிக்கொண்டு கேள்விமேற் கேள்வியாகத் தொடுத்தான்; திடீரென ஏதோ நினைத்தவனாய்ச் சட்டைப்பையிலிருந்து தாளை எடுத்துக் கொடுத்தான். டாபின் அதனை ஆர்வத்தோடு பற்றியெடுத்தான்;

கைநடுங்கப் பிரித்தான்; மறுகணமே அவன் முகம் மாறிற்று; கடிதத்தைக் கிழித்து வெளியிலெறிந்தான்; சிறுவனது தலையில் முத்தமிட்டான். வண்டிக் காரனது உதவியால்தான் பையன் வண்டியை விட்டிறங்கினான்; அப்போதும் கண்ணைக் கசக்கிக்கொண்டு நின்றான். வண்டி கிளம்பியது. பையன் அழத்தொடங்கினான். அன்றிரவு உறக்கத்தின் நடுவிலும் விழித்துக் கொண்டு அழுதான். எமீலியா? அவள் தன் கடமையைத் தானே செய்தாள்? அவளுக்கு ஆறுதலளிக்க ஜார்ஜின் உருவப்படம் இல்லையா என்ன?

**புயலுக்குப்பின்**

டாபினது காதல் வெற்றிபெற வேண்டுமென்பது மட்டுந்தானா ரெபக்காவின் கவலை? அவளுடைய சொந்தக்கவலை எத்தனை இருந்தன!

திடீரென அவள் வசதியான வீட்டினையும் நண்பர்களையும் அன்பையும் கண்டாள். நெடுநாட்களாகப் பாலைவனத்தில் பயணஞ் செய்த ஒருவன் நீர்ச்சுனையருகே பேரீச்சமரத்தடியில் ஒட்டகத்தைக் கட்டிப் போட்டுவிட்டு ஓய்வெடுப்பதில்லையா? அவ்வாறே ரெபக்காவும் புதிய வசதிகளில் திளைக்கலானாள். இப்போதெல்லாம் அவளோடு வண்டியில் ஊர்சுற்றினாலொழிய ஜோஸப்புக்கு உறக்கம் வருவதில்லை. எமீலியாவை மகிழ்விக்கவும் ரெபக்கா ஒரு வழி கண்டு வைத்தாள். டாபினைப் புகழ்ந்து பேசுவதே அவ்வழி. இப்படியாக எல்லாரது நல்லெண்ணத்தையும் பெறுவதில் வெற்றி பெற்றாள்.

எமீலியா தன் உயர்ந்த தியாகத்துக்குப் பின் அவ்வளவாக மகிழ்ச்சியோடு காணப் பட்டிலள்.



மெலிந்து வெளிறினாள். இயல்பாக அதிகம் பேச மாட்டாள்; இப்போது ஊமையாகவே நடமாடினாள். சில மாலைவேளைகளில் முன்னறையிலிருந்து சில காதலின்பப் பாட்டுக்களைப் பாடுவாள்(அவை டாபினுக்குப் பிடித்தமானவை என்பது அவள் அறிந்தது) பாதி பாடிய அளவிலேயே பக்கத்தறைக்கு ஓடிப்போய் விடுவாள். (அங்கு ஜார்ஜின் உருவப்படத்திடம் தஞ்சம் புகுந்திருப்பாள் என்பதில் ஐயமில்லை) டாபின் விட்டுச் சென்ற புத்தகங்கள் சிலவற்றை அவள் எடுத்துத் தன் மேசைக்குள் வைத்திருந்தாள். ஒரு முறை தாயின் பெட்டியில் எதனையோ தேடிய ஜார்ஜி அங்கு டாபினின் கையுறை அழகாய் மடித்து வைக்கப் பெற்றிருத்தலைக் கண்டான். (டாபின்விட்டுச் சென்ற பொருள்களுள் இதுவும் ஒன்று) அதன் பின் தாயும் மகனும் டாபினைப் பற்றிப் பேசினர். அவள் பேசிய வகையைக் கேட்டு அந்தச் சிறுவன் ஏனோ புன்னகை பூத்தான்.

டாபின் அடிக்கடி ஜார்ஜிக்குக் கடிதமெழுதி வந்தான். ஓரிரு முறை எமீலியாவுக்கும் எழுதினான். கடிதம் எழுதப்பட்டிருந்த முறையே அவன் அவளுடைய பிடிக்கப்பாற் சென்று விட்டதனைக் காட்டிற்று. இப்போது அவன் லெப்டினென்ட் கர்னலாகப் பதவி பெற்றிருந்தான்.

**கடற்கரை நகரில்**

ஜூன் திங்கள் கழிந்தது. ஜோஸப்பின் மருத்துவர் அவனைக் கடற்கரை நகரம் ஒன்றிற்கு-ஆஸ்டெண்ட் எனும் பட்டினத்துக்குச் செல்லுமாறு ஏவினார். (அப்பருவத்தில் அந்நகரத்தில்தான் அவர்க்கு வருவாய்

பிருதியும் கிட்டும். அதே நேரத்தில் பணங்கறக்கும் பசுவாகத் திகழ்ந்த ஜோஸப்பையும் விட்டுவிட மனமில்லாமலேயே இக் கருத்துரையை வழங்கினார்) மருத்துவர் சொல்லை ஜோஸப் தட்டுவானா?

எமீலியா எங்கிருந்தாலும் ஒன்றுதான் என்று கருதினாள். ஜார்ஜி கடற்கரைப் பட்டினம் என்றவுடன் ஆர்வத்தோடு கிளம்பினான். ரெபக்காவும் உடன் செல்லாதிருப்பாளா?

எமீலியா கடலாடத் தொடங்கியதின் பயனாக அவள் உடல் சற்றே தேறியது. ரோமில் ரெபக்காவுடன் பழகிய இரு கயவரும் இங்கும் தோன்றி விட்டனர். அவர்கள் ஜோஸப் அளித்த விருந்துகளில் கலந்தனர். அவர்கள் உணவருந்தும் போது எமீலியாவிடம் பேசிய பேச்சுக்களும் பல்லிளித்த முறையும் அவளுக்கு அருவருப்பளித்தன. அவர்களுடன் ஓரிடத்திலிருக்கவும் அவள் அஞ்சினாள். எப்போதும் ஜார்ஜியை அருகினில் வைத்துக் கொண்டே அவர்களுடன் பேசுவாள். "இங்கிலாந்துக்குத் திரும்புவோம்" என்று ஜோஸப்பிடம் கெஞ்சினாள். அவன் என்றுமே ஓரிடத்துக்கு எளிதில் கிளம்ப மாட்டான். "இப்போது மருத்துவருக்குக் கட்டுப்பட்டிருக்கிறேன்" என்றான். வேறு சிலர்க்கும் கட்டுப்பட்டிருந்தான்—ரெபக்கா இங்கிலாந்து செல்ல விரும்பவில்லை என்பது மட்டும் உறுதி.

### எமீலியாவின் துணிவு

இறுதியில் எமீலியா ஒரு முடிவுக்கு வந்தாள். துணிந்து இங்கிலாந்திலிருந்த தன் நண்பரொருவர்க்கு ஒரு கடிதம் எழுதினாள். அது பற்றி எவரிடமும்



எதுவும் சொல்லவில்லை. அக்கடிதத்தையும் அவளே தன் சால்வையில் மறைத்துக் கொண்டு சென்று பெட்டியிற் போட்டு வந்தாள். திரும்பியதும் தன் அறையைவிட்டு வெளிவந்திலள். கயவர்க்கு அஞ்சியே அவ்வாறு ஒடுங்கிக் கிடக்கிறாளென்று ரெபக்கா நினைத்தாள். அவள் சிந்திக்கலானாள்:— "அவள் இங்கே தங்கலாகாது, போய்விட வேண்டும். செத்துப் போன பசப்புக்காரக் கணவனை நினைத்து இந்தப் பதினைந்து ஆண்டுகளும் சிணுங்கிக் கொண்டிருக்கிறாளே இந்த போக்கிரிகளிருவரும் அவளுக்குத் தக்கவரல்லர். அவள் டாபினைத்தான் மணக்கவேண்டும். இன்றிரவே அதனை முடித்து விடுகிறேன்."

### தோழியின் தொண்டு

ஆகவே அன்றிரவு தேநீர்க் கோப்பையைத் தூக்கிக் கொண்டு ரெபக்கா தன் தோழியின் சொந்த அறைக்குள் புகுந்தாள். எமீலியா ஜார்ஜின் உருவப் படத்தருகே கவலையேயுருவாய் நின்றாள். ரெபக்கா கோப்பையை வைத்தாள். அவள் நன்றிதெரிவித்தாள்.

"நான் சொல்வதைக் கேள் எமீலியா" என்று பேசத் தொடங்கிய ரெபக்கா அவ்வறையின் குறுக்கும் நெடுக்குமாக நடை போட்டாள். இடையிடையே எமீலியாவை இகழ்ச்சியும் அன்பும் தோன்றப்
எமீலியாவை இகழ்ச்சியும் அன்பும் தொடர்ந்து சொன்னாள்:
பார்த்தாள். இங்கிலேயிலேயே தொடர்ந்து சொன்னாள்:
"உன்னிடம் ஒன்று சொல்ல விரும்புகிறேன். இங்
இருந்து-இந்த ஆட்களின் இமிர்ப்பேச்சுக்களுக்கப்பால்
போய்விடு. இங்கே தங்குவாயானால் அவர்கள் உன்னை
இழிவுபடுத்துவார்கள். அவர்களிருவரும் கொடிய
கயவர்கள். ஜோஸப் உன்னைப் பாதுகாப்பதென்பது

இயலாது. அவர் வலுவற்றவர்; அவரைக் காப்பாற்றவே ஓர் ஆள் தேவை. நீ மணந்து கொள் இல்லையேல் நீயும் உன் அருமை மகனும் கெட்டொழிவீர்கள். பேதைப் பெண்ணே! உன்னைப் பேண ஒரு கணவன் தேவை. யானறிந்த ஆடவருளெல்லாம் தலைசிறந்த ஒருவர் நூறுமுறை உன்னிடம் கெஞ்சினார். உன் பேதைமையால், இதயமில்லாத தன்மையால், நன்றி கெட்ட பண்பால், அவரை ஒதுக்கி விட்டாய்.”

“நான் முயன்றேன்—இயன்ற அளவும் முயன்றேன். உண்மையைச் சொல்கிறேன். என்றால் அவரை மறக்க முடியவில்லை” என்றவாறே ஜார்ஜின் உருவப்படத்தை நோக்கினாள்.

“அவரை மறக்க முடியவில்லையாம்! எவரை? தன்னலப் புரட்டன்-பண்பாடற்ற பகட்டுக்காரன் - பகுத்தறிவோ இதயமோ இல்லாதவன்-அவனை மறக்க முடியவில்லையாம்! அவனையும் டாபினையும் ஒப்பிடுவது உன்னையும் எலிசபெத் அரசியையும் ஒப்பிடுவது போன்றதே. அட, கேள். அவன் உன்னிடத்தில் அலுப்படைந்தான். உன்னையே உதறியிருப்பான். டாபின் தான் சொன்ன சொல்லைக் காப்பாற்றுமாறு அவனிடம் வற்புறுத்தி உன்னை அவன் மணக்குமாறு செய்தார். அவனே என்னிடத்தில் ஒப்புக்கொண்டான். அவன் ஒருபோதும் உன்னைப்பற்றிக் கவலைப்பட்டறியான். ஒவ்வொரு சமயமும் உன்னை இகழ்ந்து என்னிடம் சொல்வான். உன்னை மணந்த ஒரு கிழமைக்குள் என்னிடம் காதற் பேச்சுப் பேசினான்”

“பொய். பொய்” என்றிரைந்தவாறே எமீலியா எழுந்தாள்.



“இதோ பார் முட்டாளே” என்றவாறு ரெபக்கா தன் இடுப்பிற் செருகியிருந்த ஒரு துண்டுக் கடிதத்தை எடுத்து எமீலியாவிடம் வீசினாள். தொடர்ந்து, “அவன் கையெழுத்து நீ அறிந்தது தானே! அவன் எனக்கு எழுதினான்—நான் அவனோடு ஓடிப்போய்விடவேண்டுமென்று எழுதினான்—உனக்கு முன்னாலேயே என்னிடம் கொடுத்தான்—மறுநாள்தான் சுட்டுக் கொல்லப்பட்டான். சரியான தண்டனை கிடைத்தது” என்றாள்.

எமீலியாவின் செவியில் ஒன்றும் விழுந்திலது. அவள் அக் கடிதத்தை நோக்கினாள். மலர்ச் செண்டில் வைத்து, ஜார்ஜ் ரெபக்காவிடம் கொடுத்த துண்டுக் கடிதமே அது. ரெபக்கா சொன்ன செய்திதான் அதிலிருந்தது.

எமீலியாவின் தலை கவிழ்ந்தது. அவள் கைகளால் முகத்தை மறைத்தவாறே கண்ணீர் வடித்தாள். இன்பக் கண்ணீரா, துன்பக் கண்ணீரா? தான் வாழ்வெல்லாம் தொழுதுவந்த சிலை உருண்டு தன் காலடியில் விழுந்தது குறித்து வருந்தினாளா? தன் அன்பு இகழப்பட்டது குறித்துச் சீறினாளா? அவளுக்கும் உண்மைக் காதலுக்குமிடையே நாணம் விதித்த தடை இப்போது நீங்கிற்றென்று மகிழ்ந்தாளா?

‘என்னைத் தடுப்பதற்கு இனி என்ன இருக்கிறது? நான் அவரை முழு மனத்தோடு காதலிப்பேன்—அவர் மட்டும் என்னை மன்னித்து ஏற்றுக்கொண்டால்’—இந்த உணர்வுதான் அவளுள்ளத்தை அலைக்கழித்த உணர்வுகளுளெல்லாம் மேலோங்கி நின்றது என்பது மட்டும் உறுதி.

அவளொன்றும் ரெபக்கா எதிர்பார்த்த அளவு கண்ணீர் பெருக்கினுள்ல்லள். ஒரு குழந்தையைத் தேற்றுவது போன்று ரெபக்கா அவளைத் தேற்றினுள்: அவள் தலையை வருடினுள்; முத்தாடினுள். இறுதியில், "சரி, பேனவை எடுத்து, இந்த நிமிடமே வருமாறு, அவருக்கு எழுது" என்ருள்.

எமீலியா அளவற்ற நாணத்தோடு, "நான்........ நான்........இன்று காலையிலேயே எழுதி விட்டேன்" என்ருள்.

ரெபக்கா உரக்கச் சிரித்தாள்; உச்சத் தொனியில் பாடினுள். வீடே அவளது பாட்டினை எதிரொலித்தது.

---

# 32. பிறப்புக்கள், திருமணங்கள், இறப்புக்கள்

பிரிந்தவர் கூடினர்

இரு நாட்களுக்குப் பின் எமீலியாவும் ஜார்ஜியும் மழையினையோ, காற்றினையோ பொருட்படுத்தாமல் துறைமுகத்தில் காத்து நின்றனர். "இந்தக் கடு மழையில் அவர் எங்கே வரப்போகிருர்?" என்ருள் அவள்.

"பணயம் வைக்கிறேன். கட்டாயம் வருவார்" என்ருன் சிறுவன்.

கப்பலின் புகை தெரிந்தது. 'ஒருவேளை அவர் கப்பலில் இருக்கமாட்டாரோ? கடிதம் கிடைத்திராதோ? கிடைத்தும், வரவேண்டா என முடிவு கட்டியிருப்பாரோ?'

கப்பல் நெருங்கி வந்தது. ஜார்ஜி தொலை நோக்கியாற் பார்த்தவாறே, "தளத்தில் இருவர். ஒருவர் படுத்துக் கிடக்கிருர். இன்னெருவர் நீண்ட மேலங்கியுடன் நிற்கிருர். அட! அவர் டாபின்தான்" என்ருன். தொலை நோக்கியைச் சுருக்கி விட்டுத் தாயைத் தழுவி நின்ருன்.

வில்லியம்தான் என்பது உறுதி. வேறெவராய் இருக்கமுடியும்? வரமாட்டார் என்பதாக அவள் சொல்லியதெல்லாம் அப்பட்டமான பொய். 'அவர் வருவார். அதைவிட அவருக்கு வேறு வேலையென்ன?'

மழை நாளாதலால் துறைமுகத்தில் வேறெவரும் இல்லை. பொல்லாத ஜார்ஜியும் எங்கோ ஓடிவிட்டான். மழையில் சொட்டச் சொட்ட நனைந்துகொண்டே,



அவள் நிலைகுலைந்து விழாதபடி அவன் தழுவி நின்றான்.



இரு கையையும் முன்னே நீட்டியவாறு அவள் அவனை நோக்கி ஓடினாள். மறு நிமிடமே அவனது மேலங்கியில் அவள் மறைந்து விட்டாள். அவள் நிலை குலைந்து விழாதபடி அவன் தழுவி நின்றான். அவளது வாய் "மன்னித்து விடுங்கள், என் அருமை வில்லியம். என் அருமை அருமை அருமை அன்பரே......" என ஏதேதோ முணு முணுத்தது.

அவள் அவனது முகத்தை ஏறெடுத்துப் பார்த்த போது அங்கு வருத்தமும் காதலும் நிறைந்திருப்பக் கண்டாள். அதன் பொருளை யுணர்ந்து தலை குனிந்தாள்.

"இப்போது என்னை அழைத்ததே நல்லதாயிற்று" என்றான் அவன்.

"இனி எப்போதும் என்னைப் பிரியமாட்டீர்களே?"

"மாட்டேன். ஒருபோதும் பிரியேன்."

அவர்களிருவரும் சுங்கச் சாவடியின் எல்லையைக் கடந்தபோது ஜார்ஜி அவர்களை நோக்கி ஓடி வந்தான். வீடு செல்லும்வரை தன் மகிழ்ச்சிப் பெருக்கினைப் பலவாறு இருவரையும் சுற்றி வந்து கூத்தாடினான். வெளிக்காட்டினான்.

டாபின் பதினெட்டாண்டுகளாக ஒவ்வொரு நாளும் விரும்பி எதிர்நோக்கிய பரிசினை இப்போது பெற்று விட்டான்.

**திருமணமும் பின்பும்**

மனச்சான்று உறுத்தியதோ, உணர்ச்சி மிக்க காட்சிகளை வெறுத்தாளோ—ரெபக்கா தன் கடமை

முடிந்ததென்று வெளியூர் சென்று விட்டாள். மறுபடியும் அவள் டாபின் தம்பதிகள் முன் தோன்றினாளல்லள். ஜார்ஜியும் அவனுடைய மாமாவும்தான் திருமண விழாவிற் கலந்துகொண்டனர். ஜோஸப் தனக்கு ஐரோப்பிய வாழ்வே ஒத்ததென்று கூறி விடைபெற்றுச் சென்றான். ஆதரவற்ற அவனுக்குத் தொண்டு செய்ய வென்றே, அவன் சென்ற இடமெல்லாம் ரெபக்காவும் சென்றாள். ஜோஸப் அவளடிமையாகவே மாறிவிட்டான் எனலாம்.

திருமணத்துக்குப்பின் டாபின் படையிலிருந்து விலகி விட்டான். 'அரசியார் க்ராலி'க்கு அருகாமையிலேயே ஒரு மாளிகையைப் பிடித்துக் குடும்பம் நடத்தலானான். ஜேன் பெருமாட்டியும் எமீலியாவும் நெருங்கிய தோழிகளாயினர். டாபினின் மகள் ஜேனிக்கு, அந்த ஜேன் பெருமாட்டியே ஞானத்தாயாக விளங்கினார். இரு குடும்பத்தாரும் ரெபக்காவின் பெயரைக் கூடத் தம் வாயாற் சொல்வதிலர்.

### ஜோஸப்பின் அல்லல்

ஒருநாள் ஜோஸப் பெருந்தொகைக்குத் தன்னைக் 'காப்புறுதி' (இன்ஷியூர்) செய்து கொண்டான் என்று வழக்கறிஞர் வாயிலாக டாபின் அறிந்தான். எமீலியாவின் வற்புறுத்தலால் அவன் ஜோஸப்பைக் காணப் பிரஸ்ஸல்சுக்குச் சென்றான். அங்கு அவனது கையாலாகாத நிலை கண்டு டாபின் வருந்தினான். ஜோஸப் ரெபக்காவுக்குப் பெரிதும் அஞ்சி வாழ்ந்தான். ஆயினும் அவளை ஆர்வத்தோடு புகழ்ந்தான். (எவரும் கேட்டறியாத) பல நோய்களெல்லாம் அவனுக்கு வந்தனவாம். அப்போதெல்லாம் ரெபக்காதான் மகளைப்போல நன்றியுடன் அவனைப் பேணினாளாம். "ஆயினும்.......எனக்கு அருகாமையிலேயே வந்து குடியிருங்கள். என்னைப் பார்க்க அப்போதைக்கப்போது வாருங்கள்" என்று கெஞ்சினான் அவன்.

"முடியாது. இந்தச் சூழ்நிலையில் எமீலியா உன்னைப் பார்க்க வருவது இயலாது."

"விவிலிய நூல் மீது ஆணையாய்ச் சொல்கிறேன். அவள் ஒரு குழந்தையைப்போல் குற்றமற்றவள். உன் மனைவியைப் போல் களங்கமற்றவள்."

"இருக்கலாம். எனினும் எமீலியா இங்கு வர மாட்டாள். இன்னும் நீ சிறு பிள்ளையா? பழிக்கிடமான இத் தொடர்பினை உதறி எறிந்து விட்டு என்னோடு வந்துவிடு .... உன் பண விவகாரம் குழம்பிக் கிடக்கிறதாமே?"

"எவரோ கட்டி விட்ட கதை! என் முதலெல்லாம் மிக்க ஊதியந்தரும் வழியில் முடக்கப்பட்டுள்ளது. ரெபக்கா ... அதாவது .... நான் சொல்வது ... மிக்க ஊதியம் வரும்."

"உனக்குக் கடன் இல்லையே? பின் ஏன் காப்புறுதி செய்து கொண்டாய்?"

"எனக்கு ஏதேனும் நேர்ந்தால்—அவளுக்கு ஒரு சிறு பரிசாக அமையுமென்று கருதினேன். நன்றியுணர்வுதான். வேறெதுவுமில்லை. என் சொத்தையெல்லாம் உனக்குத்தான் எழுதிவைக்கப் போகிறேன்."

உடனே இந்தியாவுக்கோ, அல்லது அவள் பின் தொடர முடியாத எந்த இடத்திற்குமோ ஓடிவிடுமாறு டாபின் அவனை வேண்டினான்.

"இந்தியாவுக்குப் போய்விடுவேன். எதுவும் செய்வேன். ஆனால் நேரம் வேண்டும். ரெபக்காவுக்கு எதுவும் தெரியலாகாது. தெரிந்தால் அவள் என்னைக் கொன்று விடுவாள். எவ்வளவு பொல்லாதவள் என்பதனை நீ அறியாய்."

"அப்படியானால் என்னோடு வந்துவிடேன்"

"துணிச்சல் வரவில்லை. நாளைக் காலையில் பார்ப்போம். இங்கு வந்ததுபற்றி எவரிடமும் சொல்லாதே. இப்போது போய்விடு. அவள் வரும் நேரமாகி விட்டது."

## ஜோஸப்பின் முறி

டாபின் அங்கிருந்து கிளம்பிய போது, ஏதோ கேடு நேரப்போகிறது என்பது அவன் உள்ளத்திற் பட்டது. அதன் பிறகு அவன் ஜோஸப்பை உயிரோடு கண்டதுமிலன். விரைவிலேயே ஜோஸப் இவ்வுலக வாழ்வை நீத்தான். அவனுடைய சொத்துக்களில் எல்லாம் குளறுபடி. உருப்படியாக மீந்தது காப்புறுதித் தொகையான இரண்டாயிரம் பவுன் தான். அதனிற் பாதியைத் தன் தங்கைக்கும், மற்றதனைத் தன் 'நட்புக்குரியவளும்,' 'நோயுற்ற காலத்தில் ஒப்பற்ற தொண்டுகள் செய்தவளு'மாகிய ரெபக்காவுக்கு எழுதிவைத்திருந்தான். காப்புறுதிக் கழகத்தார் அவனது சாவு பற்றி ஐயுற்றனர். உடனேயே ரெபக்காவின் வழக்கறிஞர் இலண்டனுக்குப் போந்து, "வெறுக்கத்தக்க வஞ்சனைத் திட்டத்துக்கு அவளது வாழ்வே பலியாகிவிட்ட" தென்றும், "அவள் குற்றமற்றவள்" என்றும் வாதாடி வென்றனர். அவளுக்குப் பணமும் பெயரும்



கிடைத்தன. ஆயினும் டாபின் தன் பகுதியைக் காப்புறுதிக் கழகத்துக்கே கொடுத்து விட்டான்.

## வேறு சில

ரெபக்கா தன்னை ஒரு பெருமாட்டி என்று கூறிக்கொண்டாள். உண்மையில் அவளுக்கு அப்பட்டம் கிட்டாமலே போயிற்று. கவென்ட்ரி தீவின் ஆளுநராய்த் திகழ்ந்த மேன்மை தங்கிய கர்னல் ராடன் க்ராலி அத் தீவிலேயே நோய்வாய்ப்பட்டு இறந்தான். ஆறு கிழமைகட்குப் பின் அவனுடைய அண்ணன் திருநிறை க்ராலியும் மறைந்தார். சொத்துக்களெல்லாம் ராடிக்கு (திருநிறை ராடன் க்ராலிக்கு)ப் போய்ச் சேர்ந்தன. அவன் ஜேன் பெருமாட்டியோடும் அவ்வம்மையாரின் மகளோடும் 'அரசியார் க்ராலி'யில் வாழ்ந்து வருகிறான். தன் தாயாரைக் கண்ணாற் காணவும் மறுத்தனன். ஆயினும் அவளுக்கு ஆண்டு தோறும் தாராளமாக ஓர் உதவித் தொகையை வழங்குகிறான்.

உயர்குடிமக்கள், பொதுமக்கள் பலர் ரெபக்காவைக் குற்றமற்றவளெனவே மதிக்கிறார்கள். எதிரிகளும் பலர் உள்ளனர். எவருக்குத்தான் எதிரிகள் இல்லை? அவளது வாழ்வே எதிரிகளுக்குத் தக்க விடை சொல்வதாய் அமையும். அவள் ஞாயிறு தோறும் கோயிலுக்குத் தவறாமல் செல்கிறாள்; எப்போதும் ஒரு வேலைக்காரன் துணையுடனேயே வெளியிற் போகிறாள். அறக்கொடையாளிகளின் பட்டியலில் அவளது பெயரும் இடம் பெறுகிறது. மாதர் நலச் செயல்கட்குப் பொருள் திரட்டுவதற்காகப் பொருட் காட்சிகளில் ஒரு கடை நடாத்துகிறாள்.

O111, 3MDC IV



இலண்டனில் அத்தகையதொரு கடையில்தான் ஒரு முறை டாபின் குடும்பத்தார் ரெபக்காவைக் கண்டனர். அவள் அடக்கத்தோடு பார்வையை நிலத்திற் பதித்தாள். எமிலியா தன் மகன் ஜார்ஜி யின் (இப்போது அவன் வளர்ந்து பெரியவனாகி விட்டான்) கையைப் பற்றி விரைந்து அப்பாற் சென்றாள். டாபின் தன் அன்பு மகள் ஜேனியைத் தூக்கிக் கொண்டு நகர்ந்தான். ரெபக்கா புன்னகை பூத்தாள்.

டாபின் ஜேனியிடத்தில் எல்லையற்ற அன்பு செலுத்துகிறான்; தான் எழுதுகிற "பஞ்சாப் வரலாறு" எனும் நூலைவிட அவளை அதிகமாக விரும்புகிறான். எமிலியா தன்னைவிடத் தன்மகளையே அவன் மிகுதியும் அன்பு பாராட்டுவதாக நினைத்துப் பெருமூச்செறிவாள். ஆயினும் அவன் அவளிடம் எந்நேரமும் அன்போடு கலந்த இன்சொற்களையே பேசுகிறான்; அவளது ஒவ்வோர் ஆவலையும் நிறைவேற்ற முயல்கிறான்.

அட, பகட்டுச் சந்தைக்காரர்களே! நம்மில் எவர்தாம் மகிழ்ச்சியோடு உள்ளனர்? எவருடைய ஆவல்களெல்லாம் நிறைவேறுகின்றன? அப்படியே நிறைவேறினாலும் மனநிறைவு அடைகின்றனரோ?

**ஆசிரியன் கூற்று**

சரி, குழந்தைகளே! பாருங்கள். பொம்மைகளை யெல்லாம் உள்ளே போட்டுப், பெட்டியை மூடுங்கள் நம் ஆட்டம் முடிந்து விட்டது.

ARCHIVES LIBRARY ... EGMORE, MADRAS
110343

## பிற தமிழாக்க நூல்கள்

ஆசிரியர்: கு. பரமசிவம், எம். ஏ.

| | | |
|---|---|---|
| ஆலிவர் டுவிஸ்ட் (Oliver Twist) | 3 | 00 |
| ஐவன்கோ (Ivenhoe) | 3 | 00 |
| பவளத்தீவு (Coral Island) | 2 | 50 |
| குவெண்டின் டர்வர்டு (Quentin Durward) | 4 | 50 |
| டேவிட் காப்பர் பீல்ட் (David Copper Field) | 5 | 00 |
| கைமேனரிங் (Guy Mannering) | 3 | 00 |
| கெனில்வொர்த் (Kenilworth) | 4 | 00 |
| இராபின்சன் குரூசோ (Robinson Crusoe) (முருகேச முதலியார், துணையாசிரியர்) | 6 | 25 |

ஆசிரியர்: எஸ். தாசு, பி. ஏ., எல். டி.

| | | |
|---|---|---|
| புதுக்காட்டின் பிள்ளைகள் (Children of the new forest) | 2 | 25 |

ஆசிரியர்: மு. சதாசிவம், எம். ஏ.

| | | |
|---|---|---|
| மருத்துவர் மகள் (Surgeon's Daughter) | 5 | 00 |
| சைலசு மார்னர் (Silas Marner) | 3 | 50 |

ஆசிரியர்: க. வ. முத்தையா, எம். ஏ.

| | | |
|---|---|---|
| டாம் மாமா குடில் (Uncle Tom's Cabin) | 3 | 50 |

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்.
திருநெல்வேலி - 6. சென்னை - 1.